
யாரிவளோ...?
தேவதையோ...?
இன்பா அலோசியஸ்


யாரிவளோ...?
தேவதையோ...?
இன்பா அலோசியஸ்

http://www.pustaka.co.in

# யாரிவளோ...? தேவதையோ...?

# Yaarivalo...? Devathaiyo...?

Author:

## இன்பா அலோசியஸ்

**Infaa Alocious**

For more books

http://www.pustaka.co.in/home/author/infaa-alocious-novels

**Digital/Electronic Copyright © by Pustaka Digital Media Pvt. Ltd.**

**All other copyright © by Author.**

All rights reserved. This book or any portion thereof may not be reproduced or used in any manner whatsoever without the express written permission of the publisher except for the use of brief quotations in a book review.

பொருளடக்கம்

பகுதி - 1
பகுதி - 2
பகுதி - 3
பகுதி - 4
பகுதி - 5
பகுதி - 6
பகுதி - 7
பகுதி - 8
பகுதி - 9
பகுதி - 10
பகுதி - 11
பகுதி - 12
பகுதி - 13.
பகுதி - 14.
பகுதி - 15
பகுதி - 16
பகுதி - 17
பகுதி - 18
பகுதி - 19
பகுதி - 20
பகுதி - 21
பகுதி - 22

# பகுதி - 1

லண்டன் மாநகரம் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்த வேளை..., தன் முன்னால் சடலமாக கிடத்தப் பட்டிருந்த தந்தை, தனையனை இமைக்க மறந்து வெறித்துக் கொண்டிருந்தாள் ஹனி என அனைவராலும் அழைக்கப்படும் ஹேமா அலைஸ் ஹேமாலினி.

கண்கள் சற்று கலங்கி, சிவந்திருந்ததே தவிர, அவளிடம் வேறு எந்தவிதமான வெளிப்பாடும் வெளிப்பார்வைக்கு இருக்கவில்லை. மரண வீட்டுக்கே உரிய மயான அமைதி அங்கே சூழ்ந்திருக்க, அங்கே இருந்த அனைவரும் கருப்பு வர்ண உடையில் இருந்தார்கள்.

ஆண்கள் அனைவரும் புல் கோட் சூட்டில் இருக்க, பெண்களும் கருப்பு டைட்ஸ், ஸ்கர்ட், கவுன்..., என விதமான உடைகளில் இருந்தார்கள். ஹேமாவின் அருகில், அவள் தோளை அணைத்தாற்போல் நின்றிருந்தாள் அவளது தோழி மியா.

அவளால் தோழியின் அமைதியை ஜீரணிக்கவே முடியவில்லை. எப்பொழுதும் குறும்பு புன்னகையும், வாய் ஓயாத பேச்சும், துள்ளல் நடையுமாக இருப்பவள், இறுக்கமாக இருப்பதை எப்படி எடுத்துக்கொள்ள என்றே தெரியாமல் நின்றிருந்தாள்.

"ஹேய்..., ஹனி..., ஜஸ்ட் ட்ரை டூ ரிலாக்ஸ்..." தோழியின் இறுக்கம் அவளை இவ்வாறு சொல்லத் தூண்டியது.

"ம்ச்..." மெல்லியதாக அலுத்தவள், பார்வையை அவர்கள் உடலை விட்டு திருப்பவில்லை.

அவர்களது உடலும் புல் கோட் சூட்டில் இருக்க, அவர்கள் ஆழ்ந்த உறக்கத்தில் இருப்பது போலவே இருந்தது. ஒரு மருத்துவராக ஒவ்வொரு நாளும் ஆயிரம் பிறப்பையும், இறப்பையும் பார்ப்பவள்தான். ஆனால்..., அவை அனைத்தும் தனக்கென வரும்போது அடிபட்டுப் போனது.

நேற்றுவரைக்கும் தன்னோடு இருந்தவர்கள்..., ஒரே நாளில் இல்லாமல் போனதை ஜீரணிக்கவே அவளால் முடியவில்லை. அவர்கள் உடன் இருந்தபொழுது அப்படியொன்றும் பெரிதாக ஒட்டி உறவாடிவிடவில்லை தான்.

ஆனால்..., அவர்களோடு ஒட்டுதலாக இருக்க வேண்டும் என முடிவெடுத்த நேரத்தில், விதி அவர்களை ஒரேயடியாக வாரிச் சுருட்டிச் சென்றதை என்னவென்று சொல்வது?

எல்லாம் இருந்தும் அனாதையாக, ஒரு நொடியில் நிற்கும் அகோரம்..., இத்தனை வருடங்களாக சுதந்திரப் பறவையாக சுற்றித் திரிந்த பொழுதெல்லாம் அவர்களது கண்டிப்பும், பாசமும் புரியவில்லை. அவள் உணரத் துவங்கிய வேளையில்..., அவளை விட்டு அவர்கள் சென்றுவிட்டார்கள். இதைத்தான் விதி என்பதா?

இதை எண்ணுகையில், கண்கள் கலங்கி இரண்டு துளி கண்ணீர் வடிந்தது. இத்தனை வருடங்களில் கண்ணீர் என்ற ஒன்றை அவள் அறிந்ததே இல்லை. முதல் முறையாக அழுகிறாள்.

'இனிமேல் இதுதான் எனக்கு நிரந்தரமா?' எண்ணுகையிலேயே இதயம் கனத்துப் போனது. 'அப்படியென்றால்..., இவ்வளவுநாள் தான் சுதந்திரமாக, சுயநலமாக சுற்றித் திரிந்தது இவர்கள் இருக்கிறார்கள் என்ற மனதின் அடியாழ நம்பிக்கையாலா?' இமைகள் தானாகவே நனைந்தது. தனிமை எப்பொழுதும் பயம் கொடுக்கும் ஒரு உணர்வு தானே...

பத்து வயதில் காலமாகிப்போன தாய்க்குப் பிறகு அவளை கண்டிக்க யாரும் இருக்கவில்லை. அப்பா தன் தொழிலில் கவனமாகிவிட, அண்ணன் தன் நண்பர்களோடு ஐக்கியமாகிவிட்டான்.

அவளுக்கும் பத்து வயதில் கையில் புழங்கிய பணம்..., கணக்கிடாத நண்பர்களை பெற்றுத்தர, டிஸ்க்கோ...,

பார்ட்டி..., ஊர் சுற்றுவது..., என அவளது நாட்கள் வண்ணமயமாகப் போனது.

அதற்கு முட்டுக்கட்டை வந்தது அவளது பாட்டியின் உருவில். திடுமென முளைத்த பாட்டி அவளுக்கு பெரும் தடையாக இருக்க, வீட்டில் இருப்பதையே அறவே தவிர்த்தாள். பாட்டி அதிகப்படியான கெடுபிடியைக் காட்ட அவள் போட்ட ஆர்ப்பாட்டத்தில், அவளது தந்தை, தன் தாயைத்தான் கண்டிக்க வேண்டியதாகப் போயிற்று.

பதினான்கு வயதில் அவள் வயதுக்கு வந்தபோது, வெகு சாதாரணமாக அவள் தன்னை கவனித்துக்கொள்ள, வயதான பாட்டியால் அதை சாதாரணமாக எடுக்க முடியவில்லை.

அவளை வீட்டில் அமர வைத்து, பால், முட்டை என கவனிக்க, அவர் செய்கை அவளுக்கு வித்தியாசமாகத்தான் இருந்தது. அவனது தாய் கனகவல்லிக்கு தமிழ் மட்டுமே தெரியும் என்ற காரணத்தால், வீட்டில் தமிழ் பேசுவது கட்டாயமாக இருக்க, பாட்டியிடம் பேசுவது அவளுக்கு கடினமாக இருக்கவில்லை.

அவள் பள்ளிக்கு செல்லாத காரணத்தால் தோழர், தோழிகள் பட்டாளம் வீட்டுக்கே வர, "ஆண் நண்பர்களை பார்க்காதே..., தொட்டுப் பேசாதே..., அவர்களோடு அமராதே..." எக்கச்சக்க கெடுபிடிகளை பாட்டி விதிக்க, அவளுக்கு சுத்தமாக எதுவும் புரியவில்லை.

அதைவிட, பதினைந்து வயதில் ஒரு தோழன் அவளை, அவள் வீட்டில் வைத்தே இதழில் முத்தமிட, அன்று முதல் முறையாக அடி வாங்கினாள். அதைவிட, அவர் பேசிய பேச்சுக்கள்..., அதில் விளைந்த அதிர்ச்சியை வார்த்தைகளால் வடிக்க முடியாது.

பெண் என்பவள் எப்படி இருக்க வேண்டும்..., மானம், மரியாதை, கற்பு, என அவர் நடத்திய பாடம் அனைத்தும் அந்த நேரம் வெறுப்பையே அளித்தது. ஆனாலும்..., அதை

மீறி ஆண் நண்பர்களோடு தவறு செய்ய அவள் முயன்றது இல்லை.

டேட்டிங்..., கிஸ்ஸிங் என அனைத்தையும் தவிர்த்து விட்டாலும், பாட்டியை வெறுப்பேற்ற, நண்பர்களோடு கொட்டம் அடிப்பதை நிறுத்தவில்லை.

அவளது பதினெட்டு வயதில் பாட்டியும் மரணத்தை தழுவ, முதல் முறையாக ஒரு ஆளை மிஸ் செய்வதாக அவள் உணர்ந்தாள். பாட்டியின் கை மணத்தில் உண்ட உணவுகள்..., பிடிவாதமாக அவளது அறையில் சில நாட்கள் தங்கும் பாட்டி, அதுவும் அவளது மாதாந்திர தேவைகளில் அவள் மறுத்தாலும் பிடிவாதமாக அவளுடன் இருப்பார்.

அவரது மறைவு மனதளவில் சிறு வெறுமையை அவளுக்கு உணர்த்தினாலும், அதற்காக பெரிதாக அவள் அலட்டிக் கொள்ளவில்லை. ஆனால் இது...? வாய்விட்டு கதறவேண்டும் என்ற உணர்வை, தான் இருக்கும் சூழல் கருதி அடக்கிக் கொண்டாள்.

அதைவிட, அவள் வளந்த விதம் அதற்கு அனுமதிக்கவில்லை. அவள் மருத்துவம் படிக்க விளைந்தது கூட, அந்த படிப்பின்மேல் இருந்த பிடிப்பு என்பதை விட, அந்த வேலையில் கிடைக்கும் மதிப்பு, மரியாதைக்காகவே.

அவள் தன் நினைவில் மூழ்கி இருக்க, அவளைக் கலைத்தாள் மியா. "ஹனி..., இட்ஸ் கெட்டிங் லேட்..." அவள் காதில் முணுமுணுக்க, அவர்களது பூத உடலை சுமக்க நெருங்கவே, வேகமாக தந்தை, தனையனது உடலை நெருங்கியவள், அவர்களது நெற்றியில் அழுந்த முத்தமிட்டாள்.

அடுத்த சடங்குகள் நொடியில் நடக்க..., அரைமணி நேரத்தில் அவர்கள் பூத உடலை புதைத்துவிட்டு, தளர்ந்த நடையோடு வீட்டுக்குள் நுழைந்தாள்.

"ஹனி..., டேக் கேர்..." மியாவும் விடைபெற, தனிமை அவளை முழுதாக உள்வாங்கிக் கொண்டது.

வாசல் கதவை அடைத்தவள், விழிகளை அழுந்த மூடி, அதில் ஒரு நிமிடம் சாய்ந்து நின்றாள். 'இவை கனவாக இருக்காதா...?' மனம் பேராசையாய் விரும்பியது.

விழிகளை திறக்க..., பெற்றவரது ஆளுயரப் புகைப்படம் செயற்கை மாலையைத் தாங்கி இருக்க, "டேட்..., ஒய்..., டேய் ஹரீஷ்..., யூ டூ..." வாய்விட்டே கேட்டவள்..., நிச்சயம் அழுகையை அடக்கிக் கொண்டாள்.

அடுத்த இரண்டு நாட்கள்..., சற்று கொடுமையாகத்தான் கழிந்தது. மூன்றாம் நாள் தன் மருத்துவமனைக்குச் செல்ல, அவளை எதிர் கொண்ட மருத்துவர், செவிலியர் தங்கள் அனுதாபங்களை தெரிவிக்க, சின்ன தலையசைப்பில் அதைக் கடந்தவள், தன் அறைக்குள் நுழைந்தாள்.

இதுதான் அயல்நாடு..., தகப்பன், தனையனை இழந்த அவள் மூன்றாம் நாளே தன் அலுவலுக்குத் திரும்பியிருக்க, அதை தவறாக நினைக்க வோ..., ஆறுதல் சொல்கிறேன் என அவள் காயத்தை கிளறவோ இல்லை. அதேபோல்..., அவளை தேற்றவும் யாரும் இருக்கவில்லை என்பதுதான் உண்மை.

அவள் மகப்பேறு சிறப்பு மருத்துவர் என்பதால் அவளுக்கான பேஷண்ட்கள் வெளியே காத்திருக்க, அதற்குமேல் எதையும் யோசிக்க நேரமின்றி தன்னை வேலையில் திணித்துக் கொண்டாள்.

அவள் சற்று ப்ரீ ஆனபொழுது அரை நாள் கடந்திருந்தது. இருக்கையில் சற்று சாய்ந்து அமர, அறைக்கதவு லேசாக தட்டப்பட, பேஷண்டோ என்ற எண்ணத்தில் சற்று நிமிர்ந்து அமர, நுழைந்தவளோ..., அவளது தோழி ஜீவித்யா.

"வா ஜீவி..., நீ எப்போ பேரிஸ்ல இருந்து வந்த...? வா வந்து உட்கார்..." தோழியை அழைக்க,

"ஏண்டி..., ஏன் இப்படி பண்ண? ஒரு வார்த்தை உனக்கு சொல்லணும்னு தோணலை இல்ல. மியா சொல்லித்தான் எனக்கு விஷயமே தெரியும்..., உன்கிட்டே நான் இதை எதிர்பார்க்கலை ஹேமா..." கோபமாகப் பொரிந்தாலும்,

தோழியை நெருங்கி, அவளை இருக்கையில் இருந்து எழுப்பி அவளை கட்டிக் கொண்டாள்.

அதற்காகவே காத்திருந்தவள்போல் அவள் தோளிலேயே அவள் குலுங்க, ஜீவித்யாவின் கோபம் மொத்தமாக வடிந்து போனது.

"ஹேமா..., அழறியா...?" அதிர்ச்சியாக வினவியவள், தன் தோள் சாய்ந்திருந்தவளை பிடிவாதமாக விலக்கி, அவள் முகம் பார்த்தாள்.

"நானும் மனுஷி தாண்டி..., எனக்கும் வலிக்கும்..." அழுகையாய் பதில் கொடுத்தவள், மீண்டும் அவள் தோளில் சாய்ந்து கொண்டாள்.

தன் வார்த்தைகள் அவளை காயப்படுத்தியதை உணர்ந்தவள், "ஹேய் லூசு..., நான் அந்த அர்த்தத்தில் கேக்கலை..." அவளைச் சாடியவள், "வாழ்க்கையை எவ்வளவு ஸ்போட்டிவா எடுத்துப்ப..., அப்படிப்பட்ட நீயே அழறியேன்னு கேட்டேன்..." வேகமாக தன் அதிர்ச்சிக்கு விளக்கம் அளித்தாள்.

ஜீவித்யாவால் ஹேமா அழுகிறாள் என்பதை கொஞ்சம் கூட நம்ப முடியவில்லை. ஜீவிதாவை பொறுத்த வரைக்கும் வாழ்க்கையை மிகவும் சுலபமாக எடுத்துக் கொள்பவள் ஹேமா. அப்படி இருக்கையில், அவள் அழுகிறாள் என்பதே பேரதிர்ச்சிதான்.

"அதெல்லாம், நமக்குன்னு ஆட்கள் இருக்கிறார்கள் என்ற அபார நம்பிக்கையின் பின்னால் ஒளிந்துகொள்ளும் விஷயம் ஜீவி. அது எனக்கு எப்போ புரிஞ்சதுன்னா..., உன்னை பார்த்த பிறகுதான் கொஞ்சம் புரிந்தது. எப்போ அண்ணாவும் அப்பாவும் இனிமேல் இல்லைன்னு தெளிவா புரிஞ்சதோ..., அப்போ மீதியும் புரிந்தது..." வேதனையாக உரைக்க, அதை அதிர்ச்சி குறையாமலே பார்த்திருந்தாள்.

"ஹேமா..., ம்ச்..., இப்போதான் நீ இன்னும் தைரியமா இருக்கணும்..., இந்த நேரத்தில் போய்..., இப்படி உடைஞ்சு போய் பேசற...?" தோழி உடைந்து போயிருப்பது

தெளிவாகத் தெரிய கூடிக்கொண்டு போகும் அதிர்ச்சியை கட்டுக்குள் கொண்டு வரவே அவளால் முடியவில்லை.

"ஜீவி..., நீ இப்படி நினைத்துப்பார்..., இந்த உலகத்தில் கோடிக்கணக்கான பேர் இருக்காங்க..., ஆனா, நமக்குன்னு ஒரு ஆள் கூட இல்லன்னா..., ஐயோ., இது எவ்வளவு பயங்கரம் தெரியுமா...?" அப்பட்டமான பயம் அவளிடம்.

'ஆண்டவா, இவ இந்த அளவுக்கா மனசளவில் ஒடிஞ்சு போயிருக்கா?' பேரதிர்வாய் உள் வாங்கியவள், "ஏண்டி..., உனக்குன்னு நான் இல்லையா...?" அவளைப் பிடித்து உலுக்கினாள்.

"இப்போதைக்கு நீ மட்டும்தாண்டி இருக்க. நீயும் இல்லன்னா..., இப்போ உன்கிட்டே இதை நான் கொட்டலன்னா..., மனசே வெடிச்சுடும் போல..., அதான்..." ஒரு மாதிரி விம்ம, தோழியை இறுக்கமாக அணைத்துக் கொண்டவள்,

"நீ அழுதுடிடி லூசே..." அவள் மனதுக்குள் இருக்கும் துக்கம் வெடித்து வெளியே வந்துவிடட்டும் என எண்ணினாள். அதுவே தாரக மந்திரம்போல் ஏற்றவள் விம்மி வெடிக்க, அவளை ஆதரவாக தாங்கி நின்றாள்.

யாரும் இல்லாத அனாதையாக நிற்கையில், கண்டங்கள் கடந்து, காலங்கள் கடந்து, மொழி கடந்து, கலாச்சாரம் கடந்து மனித உணர்வுகள் ஒன்றாக இருப்பதை எண்ணி அழுவதா சிரிப்பதா என தெரியாத ஒரு நிலையில் இருந்தாள் ஜீவித்யா.

சற்று நேரம் அவளை அழ விட்டவள்..., "போதும் ஹேமா..., முதல்ல கண்ணைத் துடை, வொர்க் அவர்ஸ் முடிஞ்சதா? இல்லன்னா சொல்லு நான் வெயிட் பண்றேன். உன் வீட்டுக்கு தான் வரேன்..." அவளை உலுக்க,

"இன்னைக்கு ஹால்ஃப் டே தான் சொல்லியிருந்தேன்..., சோ..., வீட்டுக்கு போகலாம்..." உரைத்தவள், தன் கைப்பையை எடுத்துக் கொள்ள, தோழியிடமிருந்து கீயை வாங்கியவள் தானே காரை கிளப்பினாள்.

எப்பொழுதும் வாய் ஓயாமல் பேசும் தோழியின் அமைதி மனதைப் பிசைந்தது. 'இவளை வெளியே கொண்டுவந்தே ஆகணும்...' மனம் முழுவதும் யோசனை ஓட, தோழியின்மேல் ஒரு கண்ணும், சாலையில் ஒரு கண்ணுமாக காரை செலுத்தினாள்.

தோழியின் பார்வையை உணர்ந்தாலும் எதுவும் சொல்லாமல் அமைதியாகவே இருந்தாள் ஹேமா.

***கண்ணாடியின் முன்னால் நின்று, படிய மறுத்த சிகையை படிய வைக்கும் முயற்சியில் இறங்கி இருந்தான் பரத். ஆறடி உயர ஆண்மகன்..., தன் வேலைக்கே உரிய கனிவும், கம்பீரமும் போட்டி போட்டது அவன் முகத்தில். கூடவே அறிவுச் சுடர் பளிச்சிட, அதுவே தனி அழகைக் கொடுத்தது.

அவனது அடையாளமே அந்த அடர்ந்த புருவம்தான். மீசையும் மிகவும் அடர்த்தியாகவே இருக்கும்..., அது அவனது முகத்துக்கு சற்று முரட்டுத்தனத்தை கொடுப்பதாக உணர்ந்தவன், மீசையைக் கூட டிரிம் செய்து விட்டிருந்தான்.

நிறம் சற்று புதுநிறம் என்றாலும்..., அவனது ஆளுமையை அது குறைக்கவில்லை. கண்ணாடியில் தன் முகம் பார்த்தாலும், வாசலில் வந்து, இரண்டு மூன்று முறை தன்னை எட்டிப் பார்த்து சென்ற தாயின் வருகையையும் அவன் உணராமல் இல்லை.

'இன்னைக்கு என்ன சொல்லப் போறாங்களோ தெரியலையே...' ஆற்றாமையாக எண்ணிக் கொண்டாலும், முகத்தில் எந்த உணர்வையும் வெளிப்படுத்தவில்லை. அது அவனது வேலையின் காரணமாக ஏற்பட்ட பழக்கம்..., மனதுக்குள் எரிமலையே குமுறினாலும், வெளியே வெகு நிதானமாக தன்னை காட்டிக் கொள்வது.

இதய சிகிச்சை நிபுணனான அவன் இப்படி இல்லை என்றால்தான் ஆச்சரியப்பட வேண்டும். அப்படி இல்லையென்றால்..., ஆப்பரேஷன் சக்சஸ் என்பதையும்,

சாரி என்பதையும் ஒரே விதத்தில் நோயாளிகளின் உறவுகளிடம் பகிர முடியாதே.

அடர் நீல வர்ண பேண்ட், வான் நீல சட்டை அணிந்தவன், நிதானமாக கிளம்பி வெளியே வந்தான்.

"தம்பி..., வாப்பா சாப்பிடு..." அவன் தாய் தனம் அழைக்க, மறுக்காமல் உணவு மேஜையின்மேல் வந்து அமர்ந்தான்.

அவன் தட்டில் இட்லிகளை எடுத்து வைத்தவர், அவனுக்கு பிடித்த தேங்காய் சட்டினியை வைத்துவிட்டு, அவன் இரண்டு இட்லிகளை உண்டு முடிக்கும்வரைக்கும் அமைதியாக இருந்தவர்..., தயக்கமாய் அவனை அழைத்தார்.

"என்னம்மா...?" கேட்டவன் அவர் கண்களை ஏறிட்டான்.

"இல்லப்பா..., என்னோட ஒண்ணுவிட்ட அண்ணா போன் பண்ணார்..., அவரோட சின்ன பொண்ணு படிப்பை முடிச்சுட்டாளாம்..." அவர் வார்த்தைகளை உதிர்க்கும்பொழுதே அவனது பார்வை கூர்மையானது.

அவரது பேச்சை முடிக்கும் முன்பே..., "அவளுக்கு ஏதாவது வேலை வாங்கி கொடுக்கணுமா...?" முழு நக்கலை வெகு சாதாரணமாக கேட்டான்.

"நான் என்ன சொல்ல வரேன்னே கேக்காமல் இப்படிச் சொன்னால் நான் என்னதான் செய்யட்டும் தம்பி. உனக்கும் வயசு ஏறிட்டே போகுதே..." தயக்கமாக இழுத்தார்.

"இந்த சொந்தம்..., பந்தம்..., தூரம்..., கிட்டே..., இந்த பேச்சே வேண்டாம். வெளியவே பாருங்க..." கடினமாகவே உரைத்தான்.

"அன்னைக்கு அந்த புரோக்கர் ஒரு வரன் கொண்டு வந்தப்போ, தெரியாத பொண்ணை எப்படி கட்டிக்கிறதுன்னு கேட்ட..., இப்போ இப்படி சொன்னால் என்னப்பா அர்த்தம்?" வருத்தமாக கேட்டார்.

'இதேபோல் ஆயிரம் காரணம் எனக்கு கிடைக்கும்மா...' மனதுக்குள் எண்ணியவன், "எனக்கு பிடிச்சதை தாம்மா நான் கேக்க முடியும்..., அதுக்கு ஏத்த மாதிரி பொண்ணை கண்டு பிடிக்கிறது உங்க சாமர்த்தியம்..." உணவை முடித்துக் கொண்டவன், இருக்கையில் இருந்து எழுந்து கொண்டான்.

"உன் மனசுக்குள்ளே யாராவது இருக்காங்களாப்பா..., அப்படி இருந்தாலாவது சொல்லு..., அவளையே முடிச்சுடலாம்..." அவரது குரல் அவனைத் தேக்கியது.

"என் மனசுக்குள் என்ன இருக்குன்னு உங்களுக்குத் தெரியாமல் வேற யாருக்கும்மா தெரியும்...?" அவரிடமே திருப்பிக் கேட்க, அவருக்குத்தான் வாய் அடைத்துப் போயிற்று.

தனம்..., பரத் அவரது வயிற்றில் கருவாக உருவான பொழுதே கணவன் மறைந்துவிட, அவளைப் பெற்றவர்களும், உடன் பிறந்தவர்களும், கருவைக் கலைத்துவிட்டு, வேறு ஒருவனுக்கு இரண்டாம் தாரமாக திருமணம் செய்து கொடுக்க முயல, பிடிவாதமாக மறுத்து விட்டார்.

பெற்றவர்கள் மறைய, உடன் பிறந்தவர்களும் அவரது பொறுப்பை ஏற்க தயங்கவே..., இரண்டு வயது மகனை அழைத்துக்கொண்டு, தனக்குத் தெரிந்த சமையல் வேலையை நம்பி வீட்டை விட்டு வெளியேறினார்.

அதன் பிறகு அவரது நாட்கள் அடுப்படியிலேயே கழிந்தது. மண்ணெண்ணெய் ஸ்டவ், கேஸ் ஸ்டவ் எதுவும் இல்லாமல், விறகு அடுப்பில் அவர் தேய..., காலங்கள் உருண்டது. அடுப்பு புகை அவருக்கு பரிசளித்ததோ..., தீராத ஆஸ்மா வியாதியை.

தாயின் கஷ்டம் அறிந்து வளர்ந்தவன், எதற்கும் ஆசைப்பட்டது இல்லை. படிப்பில் கெட்டியான அவனுக்கு மருத்துவ படிப்பிற்கு கவர்மென்ட் கல்லூரியில் இடம் கிடைக்க, மெரிட்டிலே படிப்பை முடித்தான். கல்லூரி

விரிவுரையாளர்கள் சிலர் அவனுக்கு உதவி பெற்று கொடுக்க, இதய சிகிச்சை நிபுணன் ஆனான்.

கல்லூரி நாட்களில் கூட படிப்பை முழு மூச்சாய் நினைத்தவன், ஆர்வமாகவோ, சாதாரணமாகவோ கூட ஒரு பெண்ணை பார்த்ததாக தனத்துக்கு நினைவில்லை. முதலில் சந்தோஷத்தைக் கொடுத்த அந்த விஷயமே..., இப்பொழுது கவலையை அளிக்கத் துவங்கி விட்டது.

"இல்ல தம்பி..., எந்த பொண்ணை காட்டினாலும் ஏதாவது குறை சொல்லுறியே, அதான்..." தயக்கமாக இழுத்தார்.

"அது அப்படி இல்லம்மா..., இதுவரைக்கும் நீங்க எதையாவது சொல்லி நான் மறுத்திருக்கிறேனா...?" ஆதூரமாக கேட்டவன், தாயின் மெலிந்த கரங்களை பற்றிக் கொண்டான்.

"அதுதான் தம்பி எனக்கும் புரியலை..., எதையுமே மறுக்காதவன், இந்த ஒரு விஷயத்தில் பிடிவாதமா இருக்கியே..." மகன் இப்படியே இருந்து விடுவானோ என்ற பயம் அவர் கண்களில் தெரிய, 'தாயை ஏமாற்றுகிறோமோ...?' சற்று தவித்துதான் போனான்.

அவன் மௌனம் அவரை மேலும் பயம் கொள்ளச் செய்ய, "ஏம்ப்பா..., இந்த அம்மா உன் வாழ்க்கைக்கு தடையா இருக்கேனா?" ஒருவேளை அப்படி இருக்குமோ...? முதல் முறையாக சரியாக சிந்தித்தார்.

'இது சரியில்லையே...' வேகமாக யோசித்தவன், "அம்மா..., என் குழந்தைகளை நீங்கதான் வளக்கணும்னு எனக்கு மட்டும் ஆசை இருக்காதா என்ன? சும்மா மனசைப் போட்டு குழப்பிக்காதீங்க..." அவன் வேகமாக உரைக்க, அவனது இந்த பேச்சு அவரை சற்று அமைதி படுத்தியது.

"எனக்கு அது போதுமப்பா..., உன் குழந்தையை கண்ணால பாத்துட்டேன்னா போதும்..., இந்த பிறவியில் எனக்கு வேற என்ன வேணும்..." கலங்கிய தன் கண்களை முந்தானையில் துடைத்துக் கொண்டார்.

'எனக்கு அது மட்டும் போதாதும்மா..., நீங்க என்னோடவே இருக்கணும் எப்பவும்...' நெகிழ்வாக எண்ணியவன் வெளியே எதையும் காட்டிக் கொள்ளவில்லை.

"சரிம்மா..., எனக்கு ஹாஸ்பிடல் போக டைம் ஆகுது, நான் கிளம்பறேன். நீங்க சாப்ட்டுட்டு மாத்திரை எல்லாம் எடுத்து வச்சிருக்கேன், சரியா  போட்டுகோங்க..." அங்கிருந்து அகன்றான்.

பரத்துக்கோ..., தனக்காக தன் வாழ்க்கையையே தியாகம் செய்து, இறுதியில் ஒரு நிரந்தர நோயாளியாகவே மாறிவிட்ட தாய்க்கு, உடன் இருந்து கவனிக்கும் பெண்ணே தனக்கு மனைவியாக வர வேண்டும் என எதிர்பார்த்தான்.

முதலில் அவனுக்கு வந்த வரன்களில், அந்த பெண்களிடம் அதைப்பற்றி பேச, அவருக்கு ஆஸ்மா என்பதையே அவர்களால் ஏற்க முடியவில்லை. கூடவே..., தாங்கள் அவரை கவனிக்க வேண்டும் என்ற விஷயத்தை கேட்ட உடனேயே..., பெரிய மறுப்பை அவர்களின் முகங்களில் அவனால் பார்க்க முடிந்தது.

அதையும் மீறி, சில வரன்கள், டாக்டர் மாப்பிள்ளையை விட மனமின்றி ஒத்துக்கொள்ள முன்வந்தாலும், திருமணத்துக்குப் பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்ற அவர்கள் நிலையை உணர்ந்தவனுக்கு சற்று வெறுத்துத்தான் போனது.

தனம் பெற்ற பையன் வேண்டும்..., அவர் வேண்டாம் என்றால், அதை அவனால் எப்படி இயல்பாக ஏற்க முடியும்? சொந்தங்களோ, தாங்கள் கஷ்டபட்ட காலத்தில் வராதவர்கள் இப்பொழுது வேண்டாம் என அவன் பிடிவாதமாக இருந்தான்.

தாய் மனதுக்குள் எந்த பெண்ணையாவது நினைத்திருக்கிறாயா என கேட்க, அந்த கேள்வியை எண்ணி அவனுக்கு சிரிப்புதான் வந்தது. பள்ளி காலத்தில் கஷ்டம் மட்டுமே துணை இருக்க, வேறு எதைபற்றியும் சிந்தை இருக்கவில்லை.

மருத்துவ கல்லூரியில் சேர்ந்த பொழுதோ..., தாய்க்காக சிறந்த மதிப்பெண்ணில் தேறி, அவருக்கு பெருமை சேர்க்க வேண்டும் என்பதே லட்சியமாக, உடன் படித்த பெண்கள் அனைவரிடமும் ஒரு தோழமையை மீறி, அவனுக்கு எந்த உணர்வும் எழுந்தது இல்லை.

இதய சிகிச்சை நிபுணனாக பயிற்சி பெற்ற பொழுதோ..., ஒரு உயிர் தன் கையில் கொடுக்கப் படப் போகிறது என்ற நிலையே, அதிக கவனத்தோடு இருக்கச் செய்தது. அந்த வயதுக்கே உரிய பொறுப்பு உடன் சேர, சிந்தை அதைத் தாண்டி செல்லவில்லை.

இப்பொழுது அனைத்தையும் எண்ணிப் பார்த்தவனுக்கு..., 'தனக்கு ஒரு ஆண்மகனுக்கான எந்த உணர்வாவது இருக்கிறதா?' தனக்குள்ளாகவே கேள்வி கேட்டவனுக்கு அதற்கான விடை மட்டும் கிடைக்கவில்லை.

மனித உயிர் நாடியான இதயத்தையே கையாளும் அவன் அறியாத ஒன்று உண்டு, அதுதான்..., அவனுக்கானவள் அவன் முன்னால் வரும் வேளையில், அவனது கட்டுப்பாடுகளோ..., கோட்பாடுகளோ..., நிலைப்பாடுகளோ எதுவும் அவன் முன்னால் நிற்க முடியாது என்பதே.

# பகுதி - 2

ஜீவித்யா கிச்சனில் வேலையாக இருக்க, சிந்தை முழுவதையும் ஹேமாவே வியாபித்திருந்தாள். ஒரு வாரத்துக்கு முன்பு கூட, ஹேமா இவ்வளவு அமைதியாக மாறிவிடுவாள் என யாராவது சொல்லியிருந்தால் துளி கூட நம்பியிருக்க மாட்டாள்.

ஆனால் இன்று கண் முன்னால் தோழியை அவ்வாறு பார்க்க மனதில் பெரும் பாரம் அழுத்தியது. ஹேமாவுக்கென உணவை தட்டில் எடுத்தவள் அவளைத் தேடிச் செல்ல, ஹாலில் டிவி ஓடிக் கொண்டிருக்க, அதில் கவனம் பதியாமல், சுவற்றையே வெறித்திருந்த அவளைப் பார்த்தவளுக்கு,

'இவளை எப்படி மாற்றப் போகிறேன்...?' பெரும் வினா எழுந்து ஆக்கிரமித்தது.

முதல் வேலையாக டிவியை நிறுத்தியவள், அவள் அருகில் அமர்ந்தாள். ஜீவித்யா வந்தது கூட தெரியாமல், வெறித்த பார்வையை அவள் மாற்றாமலே போக, அவள் தோளை அழுத்தினாள்.

"ஹங்..., ஜீவி..., வா..." தன் நினைவில் இருந்து கலைந்தவள், தோழியைப் பார்த்து மென்மையாக சிரித்தாள்.

"நான் வரது இருக்கட்டும்..., உனக்கு என்னதான்டி ஆச்சு...?" சற்று கோபமாகவே கேட்டவள், கையில் இருந்த தட்டை அங்கிருந்த டீபாவின்மேல் வைத்தாள்.

'உனக்கு தெரியாதா...?' பார்வை அவளிடம் கேட்க,

"ஏய்..., முதல்ல இப்படி பாக்குறதை நிறுத்துடி..., சகிக்க முடியலை. பிறப்பு இறப்பை நீ பாத்ததே இல்லையா? போன வருஷம் வரைக்கும் அக்மார்க் லண்டன் பொண்ணா தானே இருந்த, இப்போ மட்டும் என்ன புதுசா...?" கடுப்பானாள்.

"என்னை மாத்தியதே நீதானேடி...".

"அதை ஏன் செய்தேன்னு என்னை ரொம்ப பீல் பண்ண வைக்கிற...", அவள் உரைக்க, சற்று அதிர்ச்சியாக அவளைப் பார்த்தாள்.

"ஏன் ஜீவி இப்படி சொல்ற...?" கவலையாகக் கேட்டாள்.

"வேற எப்படி சொல்லச் சொல்ற...? அப்பாவும் அண்ணாவும் இனிமேல் இல்லை. அவங்க வரப் போவதும் இல்லை. அது உனக்கு புரியுது தானே?" அழுத்தமாக கேட்க, ஆமோதிப்பாய் தலை அசைத்தாள்.

"மண்டையை ஆட்டாமல் வாயைத் தொறந்து சொல்லு...".

"ஆமா...".

"சரி..., இப்போ நீ இப்படியே உக்காந்து வெறிச்சு பாத்துட்டு இருந்தால் அவங்க வந்துடுவாங்களா?".

"என்ன ஜீவி, இப்படியெல்லாம் கேக்கற...?", இதுவரை அவளிடம் இப்படி யாரும் கேள்வி கேட்டதில்லை என்பதால் விளங்காமல் கேட்டாள்.

"கேட்டதுக்கு பதில் சொல்லு...?".

"இல்ல..." பதில் கொடுத்தவளுக்கு, தோழி கேட்க வருவது இப்பொழுதும் அவளுக்கு புரியவில்லை.

"அவங்க இனிமேல் வர மாட்டாங்கன்னும் புரியுது. இப்படியே இருந்தாலும் அவங்க வரப் போவதில்லைன்னும் தெரியுது. பிறகு ஏன் இப்படி இருக்க? கொஞ்ச நாள் வரைக்கும், நீ மூட் ஆஃப் ஆகி கூட நான் பாத்ததில்லை. ஆனா ரெண்டு நாளா..., என்னவோ உலகத்தில் இருக்கும் மொத்த துக்கமும் உனக்குத்தான் என்பதுபோல் உக்காந்திருந்தால் என்னதான் அர்த்தம்...?" அவளிடம் சாதாரணமாக பேசினால் வேலைக்கு ஆகாது என்பதால், கோபமாகவே பேசினாள்.

"என்ன ஜீவி..., இப்படி மாத்தி மாத்தி பேசுற...?" புருவம் சுருக்கி, இதழ் குவித்து, அப்பாவியாக அவள் வினவிய

விதமே, ஹேமாவை ஒரு வளர்ந்த குழந்தையாகவே ஜீவித்யாவுக்கு நினைக்கத் தூண்டியது.

"நான் என்னடி மாத்தி பேசினேன்...?" சூடாகவே கேட்டாள்.

"நீதானே அப்போ சொன்ன..., குடும்பம்னா அப்படி இருக்கணும், இப்படி இருக்கணும், ஒருவர் மத்தவங்களை மதிக்கணும், பெரியவங்க பேச்சை கேக்கணும், அவங்க இல்லாமல் நாம இல்லை. நாம தனி மனுஷங்களா வாழ முடியாது..., இரக்கம், அன்பு, பாசம், நேசம்..., இதெல்லாம் இல்லாத நானெல்லாம் வாழ தகுதியே இல்லாதவ...,

"இன்னும்..., வேற என்னவெல்லாமோ கூட சொன்ன..., ஆங்..., நமக்குன்னு இருக்குறவங்களுக்காக வாழ்வது தான் வாழ்க்கை. உன் இஷ்டத்துக்கு இருக்குறதுக்கு பேர் வாழ்க்கை இல்லை. மத்தவங்களுக்காக விட்டுக் கொடுக்க தெரியணும், பாசம் காட்ட தெரியணும், இன்னும்..." அவள் சொல்லிக்கொண்டே போக, திறந்தவாய் மூடாமல் கேட்டுக் கொண்டிருந்தாள் ஜீவித்யா.

"இருக்குறவங்களோட அருமை, அவங்க கூடவே இருக்குறப்போ தெரியாது, அவங்க இனிமேல் இல்லை என்னும்போதுதான் அதோட அருமை தெரியும்னு சொன்னியே..., இப்போ எனக்கு தெரியுது. இந்த உலகத்தில் நான் தனி மனுஷி என்பதை நினைக்கும்போது...".

"ஏய்..., வாய மூடுடி..., அதான் நான் இருக்கேனே..." ஜீவித்யா இடை புக,

"நீயும் இன்னும் ஆறு மாசத்தில் இந்தியா கிளம்பி போய்டுவியே..., பிறகு..." இப்பொழுது இவள் இடை புக, தன் தலையிலேயே அடித்துக் கொண்டாள்.

"ஆண்டவா..." வாய் விட்டே புலம்பியவள், "இப்போ நான் இதையெல்லாம் சொல்லலைன்னு நினைச்சுக்கோ..., அது போதுமா...?" கடுப்பானாள்.

"இதெல்லாம் எனக்கு தெரியாமலே போயிருந்தால் அது ஒரு விதம்..., ஆனா, எனக்கு எல்லாத்தையும் புரிய வச்சுட்டு,

இப்போ பழைய மாதிரி மாறுன்னு சொன்னால்...,
அதெப்படி முடியும்...?" அவளிடமே திருப்பிக் கேட்டாள்.

"அப்போ, உன்னோட இந்த கஷ்டத்துக்கெல்லாம் நான்தான் காரணமா?" ஜீவித்யா வேதனையாகக் கேட்க,

"நீ இல்லன்னா..., இப்படி ஒரு பாண்டிங் இருப்பதே எனக்கு தெரியாமல் போயிருக்கும் ஜீவி. பாட்டி சொன்னப்போ எல்லாம், அதை ஒரு பொருட்டாகவே எடுத்துக்க தெரியலை. அவ்வளவு ஏன்...? டாக்டருக்கு படிச்சப்போ கூட, கடமைக்குதான் அதைச் செய்தேன்.

"வேலை செய்தப்போ கூட, டைம் மட்டுமே குறிக்கோளா இருந்தது. எட்டுமணிநேர வேலைன்னா..., அது முடிந்த பிறகு, எமர்ஜென்சி என்றால் கூட, தட்டிக்கழித்து போயிருக்கேன். எப்போ உன்னை பார்த்தேனோ..., என்னைக்கு உன்னோட நட்பு கிடைத்ததோ..., அப்போதான் எனக்குள் சிறு மாற்றம்.

"காலையில் எழுந்த உடனே வீட்டுக்கு ஒரு போன் கால்..., வெளியே போனா, இங்கே போறேன்..., போகட்டுமான்னு சின்ன பிள்ளை மாதிரி இந்த வயசிலும் பெர்மிஷன் கேக்குற விதம், அண்ணனோட போனிலேயே சண்டை போடுறது..., அவங்களோட அக்கறை, பாசம்..., எதையெல்லாம் நான் இழந்துட்டு இருக்கேன்னு எனக்கு புரிய வச்ச.

"உன்னை பார்த்து நான் மாற முயற்சி செய்யிறப்போ..., ஒரேடியா அவங்க இல்லன்னு தெரிய வந்த அதிர்ச்சி..., நான் ஒண்ணுமே இல்லாமல் நிக்கறேன். அப்பா, அண்ணா கூட ஒரு சந்தோஷமான நிகழ்ச்சி கூட இல்லை. அண்ணாவோட ஒரு சண்டை இல்லை..., அப்பாவோட ஒரு அரவணைப்பு இல்லை, அவங்க பேச்சை கேக்கலை...

"இதையெல்லாம் மாற்றி..., நானும் ஒரு அழகான குடும்ப சூழலை உருவாக்கணும்னு நினைச்ச நேரத்தில், எல்லாம் கை மீறி போய்டுச்சு.

"என் பாட்டி அடிக்கடி ஒரு விஷயம் சொல்லுவாங்க..., கைப்பிடிக்குள் அள்ளிய மணல் மாதிரி, வாழ்க்கை விரல் இடுக்கில் வழிஞ்சிடுச்சு போன பிறகுதான் உனக்கெல்லாம் தெரியும்னு சொல்லுவாங்க..., அப்போ எனக்கு புரியலை, புரிய வந்த பிறகு..." எமோஷனலாக அவள் பேசிக்கொண்டே போக, வாயடைத்துபோய் பார்த்திருந்தாள்.

தன்னை சற்று மீட்டுக் கொண்டவள், "சரி..., அப்போ நான் சொல்லித்தானே மாறினாய்..., இப்பவும் அதே நானே சொல்றேன், ஒரு பொண்ணு நினைத்தால், எந்த இடத்திலும் ஒரு குடும்பத்தை உருவாக்க முடியும். சோ..., உனக்குன்னு ஒருத்தனை கண்டுபிடி..., அவனோட உன் வாழ்க்கையை இணைச்சுக்கோ..." நிதானமாக உரைத்தாள்.

"ஜீவி..., ஆர் யூ ப்ளேயிங் வித் மீ...?" அதிர்ச்சியாக வினவினாள்.

"இந்த நேரத்தில் உன்னோட விளையாடுவேனா?" சீரியசாக கேட்டாள்.

"இந்த நேரத்தில் எனக்கு துணை பத்தி பேசுற..., இதை வேற எப்படி சொல்லுறது?" அவளிடமே திருப்பிக் கேட்டாள்.

"உன் மனசில் கை வைத்து சொல்லு..., இந்த ஒரு வாரமா நீ நீயா இருக்கறியா? இது உன்னோட இயல்பா? உன் தவறான பழக்கம் மாறணும்னுதான் நான் சொன்னேனே தவிர, உன்னோட இயல்பை இல்லை.

"குறும்பு பார்வையும், எதையும் ரொம்ப ஈசியா எடுத்துக்கற உன் அடிப்படை குணம் எங்கே? நீ இப்படியே இருந்தால் உன் வேலையில் உன்னால் எப்படி கவனம் செலுத்த முடியும்? எப்போ நமக்கு சோதனை வருதோ, அப்போதான் இன்னும் பலமானவர்களா நாம மாறணும்.

"இதை நான் உனக்கு சொல்ல வேண்டியது இல்லை. நமக்கு பிரியமானவங்க நம்மளை விட்டு போனா..., நாமளும் அவங்களோடவே போகணும்னு அவசியம்

இல்லை. நமக்கான வேலை என்னன்னு தெரிஞ்சுகிட்டு அதை சரியா செய்யணும்.

"உன்னை பற்றி நீயே திடனாக முடிவெடுக்க வேண்டிய தருணம் இது. நம்ம இயல்பை எப்போ நாம மாத்திக்கறோமோ, அங்கே நாம தோத்து போய்டுவோம். கஷ்டம் எல்லாருக்கும் வரும், அதை விட்டு மீண்டு வருவதில்தான் நம்மளோட பலமே இருக்கு.

"சத்தியமா..., உனக்கு இப்படியெல்லாம் அட்வைஸ் பண்ண வேண்டி வரும்னு நான் கனவில் கூட நினைச்சு பார்த்ததில்லை. அதுக்காக, உனக்கு கஷ்டமா இருக்காதுன்னு நான் சொல்ல வரலை. அதில் மூழ்காம வெளியே வான்னுதான் சொல்றேன்.

"நீயே நல்லா யோசி..., நாளைக்கு காலையில் நான் பழைய ஹேமாவைப் பாக்கணும். நான் சொல்றது புரியுதா? எல்லாத்தையும் மறக்க முயற்சி பண்ணு. கூடவே..., நான் சொன்னதையும் கொஞ்சம் யோசி. ஜான்சன் கண்டிப்பா ஒரு நல்ல சாய்ஸா இருப்பார்ன்னு நினைக்கறேன்..." மெதுவாக உரைக்க,

"ஜீவி..., ஜான்சன்..., உன்கிட்டே பேசினானா?" தோழியை கூர்மையாக பார்த்தாள்.

"அவர் கேட்பதில் தப்பு எதுவும் இல்லையே..., ஒரே ப்ரொபஷன், உன்னையும் நல்லா புரிந்தவர், உன் சுதந்திரத்துக்கும் தடையா இருக்க மாட்டார்..." தான் இந்தியா போகும் முன்னர், தோழியை ஒரு பந்தத்தில் இணைத்து வைக்க அவள் மனம் விரும்பியது.

"இல்ல ஜீவி..., அது சரி வராது..." யோசனையாக உரைத்தாள்.

"ஏன் அப்படி சொல்ற?".

"இனிமேல் நான் சுதந்திரமா இருக்குறதை விட, பாதுகாப்பாய் இருக்கணும்னு நினைக்கறேன். என்னை கட்டி வச்சுக்கற ஒரு உறவுதான் எனக்கு வேணும்.

இவ்வளவு காலம் நான் என் விருப்பத்துக்கு இருந்தது போதும்...".

"அதாவது..., நான் எங்கே போறேன், என்ன பண்றேன்..., இதை செய், அதை செய்யாதே..., இப்படித்தான் இருக்கணும்..., இப்படி நடந்துக்கணும், இந்த மாதிரி உரிமையா, பொசசிவா இருக்குற ஒரு துணை வேணும்னு நினைக்கறேன்..." ஆழ்ந்து உரைக்க, சட்டென ஒரு கவலை தொற்றிக் கொண்டது.

'இவளால் அப்படி இருக்க முடியுமா?' யோசனை ஓட, அதையே ஹேமா கேட்க, சற்று திடுக்கிட்டுத்தான் போனாள்.

"ச்சே..., ச்சே..." வேகமாக மறுத்தாள்.

"எனக்கு மாப்பிள்ளை பாக்கறியே..., ஒரு இந்தியா மாப்பிள்ளையா பார். நானும் உன்னோடவே வந்து செட்டில் ஆயிடுறேன்..., என்ன சொல்ற...?" இமைகளை சட்டென சிமிட்டி, தலை சரித்து வினவ, பழைய தோழி திரும்புவதை எண்ணி நிம்மதி அடைந்தாள்.

"எங்க இந்தியா மாப்பிள்ளை என்னடி பாவம் பண்ணார்...?" அவளோடு இணைய, எங்கே தோழி தவறாக எண்ணிக் கொள்வாளோ என சட்டென அமைதியானாள்.

இப்பொழுதுதான் சற்று இயல்பானாள், அதற்குள் அதை கெடுத்து விட்டோமோ, கவலை கொள்ள, "என்ன கொழுப்பா? லண்டன் பொண்ணு அவருக்கு கசக்குதா? அடிக்கடி நீயே சொல்லுவியே..., உன்னை அப்படியே கடிச்சு திங்கணும்னு எனக்கே தோணுதுடின்னு..., ம்..." அவளை சவாலுக்கு அழைக்க,

"நிச்சயம் இப்படி ஒரு அழகியை திருமணம் செய்பவன் கொடுத்துதான் வைத்திருக்க வேண்டும்..." உடனே ஒத்துக் கொண்டாள்.

"ம்..., அது. முதல்ல எனக்கு மாப்பிள்ளை பார்..., நான் கல்யாணம் பண்ணிக்கிற புல் மூட்ல இருக்கிறேன்..."

குறும்பு கொப்பளித்தது அவள் குரலில்.

"இது..., இது..., இதுதான் ஹேமா. இப்படியே இரு..., இதுதான் உனக்கு சூட் ஆகுது..." அவள் கன்னங்கள் இரண்டையும் பற்றிக் கிள்ளினாள்.

"நான் இப்படியே இருக்கணும்னா, என்னை தனியா விட்டுடாதே ஜீவி. அதென்னவோ தெரியலை, இப்போ தனிமை எனக்கு பிடிக்கவே இல்லை..." அவள் குரலில் சோகம் எட்டிப் பார்த்தது.

'இது எவ்வளவு தூரம் சாத்தியம்னு தெரியலையே...' குழம்பிய ஜீவித்யா, அவளிடம் எதையும் வெளிக்காட்டவில்லை.

"ஏய்..., அதான் என் வாடகை ரூமைக் கூட காலி பண்ணிட்டு உன்னோடவே வந்துட்டேனே பிறகு என்ன..., விடு பாத்துக்கலாம்..." இன்னும் ஆறு மாதம் டைம் இருக்கிறது என்பதால், சிறு ஆறுதல் பட்டுக் கொண்டாள்.

"சரி, முதல்ல சாப்பிடு..., இன்னைக்கு ஹாஸ்பிடல் வரதா போன் பண்ணிட்டேன். சோ கிளம்பலாம்..." தோழிகள் இருவரும் மருத்துவமனைக்கு விரைந்தார்கள்.

# பகுதி - 3

தன் அறைக்குள் நுழைந்த பரத், வெள்ளை கோட்டை எடுத்து அணிந்தவன், தன் மேஜைமேல் இருந்த அழைப்பு மணியை அழுத்தினான்.

"குட் மார்னிங் டாக்டர்..., அவன் முன்னால் புன்னகை முகமாக வந்து நின்றாள் செவிலி கேத்தரின்.

"குட் மார்னிங், வெளியே எத்தனை பேஷண்ட்ஸ் இருக்காங்க?".

"நாலுபேர் இருக்காங்க டாக்டர்..." அவள் உரைக்க, ஒரு நொடி புருவம் சுருக்கியவன்,

"ஓகே, தென்..., அவங்களை முதல்ல பாத்த பிறகு நாம ரவுண்ட்ஸ் போகலாம்" தன் ஸ்டெத்தை கழுத்தில் மாட்டியவன், தன் மேஜையை ஒரு நொடி சரி பார்த்துக் கொண்டான்.

"ஓகே டாக்டர்..." அவள் ஒரு நொடி தயங்க,

"என்னவோ சொல்ல வரீங்க..., என்னன்னு சொல்லுங்க..." பார்வையை அவள் பக்கம் திருப்பினான்.

"எம்டி டாக்டர், நீங்க ப்ரீ ஆன உடனே வந்து பாக்கச் சொன்னார்..." அவள் உரைக்க, 'எதற்காக இருக்கும்...?' மனதில் யோசனை ஓட, அதை விடுத்தவன்,

"நான் ரவுண்ட்ஸ் முடிச்ச பிறகு பாக்கறேன். நீங்க முதல் பேஷண்டை அனுப்ப சொல்லுங்க. அவங்களோட பழைய சாட் எங்கே..., ஆர்டர் பிரகாரம் அனுப்ப சொல்லுங்க. நியூ பேஷன்ட் யாராவது இருக்காங்களா?" தன் முன்னால் வைக்கப்பட்டிருந்த சட்டை கையில் எடுத்தான்.

"நியூ பேஷன்ட் யாரும் இல்லை டாக்டர்..." உரைத்தவள் வெளியேற, அடுத்த ஒரு மணி நேரம், அவர்களோடு ஒன்றி போனான்.

அவன் ரவுண்ட்ஸ் கிளம்ப தயாரான வேளை..., புது சாட்டை கேத்தரின் கொண்டு வந்து வைக்க, "ரவுண்ட்ஸ் முடிச்சுட்டு இவங்களை பாக்கறேன்னு சொல்லுங்க..." இருக்கையில் இருந்து எழ முயன்றான்.

"டாக்டர்..., நியூ சாட்..., ஒரு சின்ன பையனோடது. டாக்டர் மார்த்தாண்டன் அனுப்பி இருக்கறார்..." அவள் உரைக்க, இருக்கையில் அமர்ந்தவன், சாட்டை கையில் எடுத்தான்.

"நீங்க போய் உடனே அவங்களை அனுப்புங்க..." அவள் வெளியே செல்ல, அந்த சாட்டை எடுத்து பார்வையை செலுத்த, யஷ்வந்த் ஏஜ் நான்கு எனப் பார்த்தவனுக்கு, இதயம் பாரமாகிப் போனது.

'ச்சே..., இந்த கடவுள் ஏன் இப்படி பண்றான்...? குழந்தைக்கு போய்...' அவன் யோசனையைக் கலைத்தது சிறுவனின் வருகை.

குண்டு கன்னமும், மிரண்ட பார்வையும், தயக்க நடையுமாக அறைக்குள் தாய் தந்தையோடு நுழைந்தான் குழந்தை.

பெற்றவர்கள் முகங்களில் கவலை அப்பிக் கிடக்க, மருத்துவமனை சூழலை சற்று கலக்கமாக பார்த்துக் கொண்டிருந்தான் யஷ்வந்த்.

"உக்காருங்க..." பரத் இருக்கையை காட்ட, குழந்தையை மடியில் அமர்த்திக்கொண்ட அவனது தந்தை, மனம் உடைந்து போயிருப்பது அவரது பார்வையிலேயே தெரிந்தது.

"சொல்லுங்க..." ஒரு மருத்துவனாக கேட்க,

"டாக்டர் மார்த்தாண்டன் உங்ககிட்டே இதை கொடுக்கச் சொன்னார்..." உரைத்தவன், ஒரு கவரை அவனிடம் கொடுக்க, அதைப் பிரித்து வேகமாக பார்வையிட்டான்.

"டாக்டர்..., உங்களை நம்பித்தான் வந்திருக்கோம்..." அவன் குரல் தடுமாற, குழந்தையின் தாயோ கண்ணீரே விட்டுவிட்டார்.

அதைப் பார்த்த குழந்தை அழுவதற்கு தயாராக, "ப்ளீஸ் டோன்ட் க்ரை இன்ப்ரன்ட் ஆப் யுவர் கிட்..., டோன்ட்..." அழுத்தமாக உரைத்தவன், குழந்தையிடம் தன் பார்வையை திருப்பினான்.

"ஹாய் யஷ்வந்த்..., சாக்லேட் சாப்பிடறீங்களா...?" கேட்டவன், தன் மேஜைமேல் இருந்த பவுலில் இருந்து ஒரு சாக்லேட் எடுத்துக் கொடுக்க, குழந்தையோ பெற்றவர்களின் முகம் பார்த்தான்.

"வாங்கிக்கோ..." அவன் தந்தை உரைக்க, "தேன்க்கியூ..." பெற்றுக் கொண்டவன், உடனே அதை பிரித்து வாயில் போட்டுக் கொண்டான்.

"யஷ்வந்த் எந்த கிளாஸ் படிக்கறீங்க...?".

"யூகேஜி..." வாயில் அதக்கிய சாக்லேட்டோடு பதில் உரைத்தவன், பரத்தின் மேஜைமேல் இருந்த சிறிய பென் ஸ்டேண்டை எடுத்து விளையாட முயன்று கொண்டிருந்தான்.

அவனது தந்தை அதை தடுக்க, கண்களாலேயே 'வேண்டாம்' என மறுத்தவன், குழந்தை அவன் முகம் காணவே, 'எடுத்துக்கோ...' என்பதுபோல் கண்களால் அனுமதி கொடுத்து, தலையை அசைக்க, தயக்கமாக அதை எடுத்துக் கொண்டான்.

"இன்னைக்கு ஸ்கூல் போகலையா? ஸ்கூல்ல உங்க ப்ரண்ட் யாரு...?" அவனிடம் பேச்சு கொடுத்தவாறே, அவன் இதயத் துடிப்பை பரிசோதிக்கத் துவங்கினான்.

"ம்ஹூம்..., அப்பாதான் என்னை ஸ்கூல் போக வேண்டாம்னு சொல்லிட்டாங்களே. சஷ்மிதா என்னை தேடுவா..., அவதான் என் ப்ரண்டு..." தன் கையில் இருந்த பொருளிலேயே கவனமாக இருந்தவன், பதில் கொடுக்க மறக்கவில்லை.

"அப்போ நாளைக்கு ஸ்கூல் போறீங்களா?" அவன் கேட்க,

"நிஜமாவா..., ஐ ஜாலி..." தந்தையின் கரத்திலேயே குதித்தான்.

"நோ..., யஷ்வந்த்..., அப்படி செய்யக் கூடாது..." வேகமாக அவனை அடக்கினான் அவனது தந்தை.

"லெட் ஹிம் டூ..., குழந்தைன்னா அப்படித்தான் இருப்பான்..., விடுங்க..." உரைத்தவன், குழந்தையை ஸ்டெதஸ்கோப்பால் பரிசோதித்தான்.

கவனமாக அவனை பரிசோதித்தவன், "பழைய ரிப்போர்ட் கொடுங்க..." அவற்றையும் வாங்கி நிதானமாக ஆராய்ந்தான்.

"யஷ்வந்த்..., வெளியே ஒரு பிஷ் டேன்க் இருக்கே..., நீங்க பாத்தீங்களா?" ஆர்வத்தை தூண்டும் விதமாக அவன் கேட்க, 'இல்லை' என்பதாக அவன் தலை அசைத்தான்.

மேஜைமேல் இருந்த அழைப்புமணியை அழுத்த, உள்ளே வந்த கேத்தரீனிடம், "குழந்தைக்கு அந்த பிஷ் டேங்கை காட்டுங்க..., அதில் நிறைய கலர் பிஷ் இருக்கு தானே..." பரத் கேட்க, கேத்தரீனும் அவன் சொன்னதை சரியாக புரிந்துகொண்டு அவனை அழைத்துக்கொண்டு வெளியே சென்றாள்.

அவர்கள் செல்லவே..., "உங்க எமோஷனல் எதையும் குழந்தை முன்னாடி காட்டாதீங்க. உங்களை பொறுத்த அளவில் அவனுக்கு இருப்பது மிகப்பெரும் வியாதி. ஆனா..., அவனை பொறுத்த அளவில், அவன் உலகம் குட்டி குட்டி விஷயத்தால், ரொம்ப அழகானது.

"அவனுக்கு இருக்கும் நோயைப் பற்றிய கனம் அவனுக்குத் தெரியாது. அதை புரிந்துகொள்ளும் பக்குவமும் அவனுக்கு கிடையாது. அது அவனுக்கு அவசியமும் கிடையாது. அவன் உங்க முகம் பார்த்து வளருகிறான். நீங்க தைரியமா இருந்தால்தான், அவனும் இயல்பா இருப்பான்.

"நீங்க உடைந்து போய்ட்டா..., அவன் பேனிக் ஆயிடுவான். அது அவனோட உடல் நிலையை இன்னும் அதிகமா

பாதிக்கும். சோ..., இனிமேல் அவன் முன்னாடி சந்தோஷமா இருங்க..., இதுதான் நான் உங்களுக்கு முதல்ல சொல்லும் விஷயம்.

"என்ன நான் சொல்றது புரியுதா?" அவன் கேட்க, கலங்கிய மனநிலையோடு ஏற்றுக் கொண்டார்கள்.

"டாக்டர், எங்க பையன் எங்களுக்கு முழுசா கிடைப்பானா?" குழந்தையின் தாய் கேட்க,

"இப்போ இருக்குற மருத்துவ முன்னேற்றத்துக்கு..., இதெல்லாம் ஒரு பெரிய விஷயமே இல்லை. இதயத்தில் ஒரு ஓட்டை..., அதை கண்டிப்பா அடைத்து விடலாம். அதற்கு முதல்ல உங்களோட ஒத்துழைப்புதான் வேணும், நீங்க முதல்ல தைரியமா இருங்க, மற்றதெல்லாம் நான் பாத்துக்கறேன். நான் சொல்ல வரது உங்களுக்கு புரியுதா?" பரத் கேட்க, தலை அசைத்தார்கள்.

"டாக்டர்..., அவனோட ஹெல்த் இப்போ எப்படி இருக்கு? இப்படி இருப்பதால் அவனை ஸ்கூல்க்கு அனுப்ப கூட ரொம்ப பயமா இருக்கு. இதுக்கு ஆப்பரேஷன்தான் தீர்வா? வேற வழியே இல்லையா?" யஷ்வந்த்தின் தந்தையின் குரலில் கவலையும் பயமும் அப்பிக் கிடந்தது.

"ஆப்பரேஷன் மட்டும்தான் தீர்வான்னு கேட்டால்..., நீங்க இதுவரைக்கும் எடுத்திருக்கும் எல்லா டெஸ்டும் ஆப்பரேஷன் செய்துதான் ஆகணும்னு சொல்லுது. எவ்வளவு சீக்கிரம் அதை செய்யிறோமோ..., அவ்வளவு நல்லது. முதல்ல மெடிசின் கொடுத்து அவனை பலமாக்கணும், அதுக்கு பிறகு நாம முடிவு பண்ணலாம்..." பொறுமையாக விளக்கினான்.

"ஆப்பரேஷன்க்கு எவ்வளவு செலவாகும் டாக்டர்...?" அவன் தயக்கமாய் வினவ,

"த்ரீ டு போர் லேக்ஸ் ஆகும். அவன் இப்போ கொஞ்சம் வீக்கா இருக்கான். சோ, உடனே நாம எதையும் செய்ய முடியாது. ஒரு மூணு மாசம் என்னோட கண்காணிப்பில் இருக்கட்டும். இடையில், மயக்கம், வாந்தி, மூச்சுவிட சிரமம்,

இப்படி எதுவும் இல்லாமல் போனால்..., ஆப்பரேஷனை இன்னும் கூட தள்ளி வைக்கலாம்.

"முதல் வேலையா, அவனை ஸ்கூல்க்கு அனுப்புங்க. பிடி பீரியட் விளையாட அனுப்ப வேண்டாம்னு சொல்லிடுங்க. அவங்க டீச்சர் கிட்டே அவன் ஹெல்த் கண்டிஷன் பத்தி சொல்லி, மத்த பசங்க கிட்டே இருந்து கவனமா பாத்துக்க சொல்லுங்க..., அவனோட இயல்பை நாம மாத்த வேண்டாம்.

"நான் எழுதி கொடுக்கும் மெடிசின் எல்லாம் கரெக்ட்டா பாலோ பண்ணுங்க. ஒரு மாசம் போன பிறகு, பர்தர் டெஸ்ட் எடுத்துட்டு நாம டிசைட் பண்ணலாம்..." பிரிஷ்கிரிப்ஷன் எழுதி அவன் கையில் கொடுத்துவிட்டு, அழைப்பு மணியை ஒலிக்க விட்டான்.

"டாக்டர், நாங்க உங்களைத்தான் மலைபோல் நம்பி இருக்கிறோம்..., எங்களுக்கு எங்க பையனை முழுசா திருப்பி கொடுத்துடுங்க..." குழந்தையின் தாய் கையெடுத்து கும்பிட,

"என் கையில் எதுவும் இல்லை..., எல்லாம் அந்த கடவுள் பாத்துப்பான். நீங்க நம்பிக்கையா போயிட்டு வாங்க..." அவர்களுக்கு விடை கொடுத்தவன், யஷ்வந்த் வரவே...,

"யஷ்வந்த், குட் பாயா, மெடிசின் எல்லாம் சாப்பிடனும் சரியா? அப்படி சாப்ட்டா, இங்கே எல்லாம் வர வேண்டியே இருக்காது..." அவன் கன்னம் தட்டினான்.

"நீங்க ஊசி போட மாட்டீங்களா?" திடுமென அவன் கேட்க,

"யஷ்வந்த் தான் சமத்து பையன் ஆச்சே..., அதனால் இன்னைக்கு ஊசி இல்லை..." அவனுக்கு இணையாக பேச, பரத்திடம் சட்டென ஒட்டிக் கொண்டான்.

அவர்கள் செல்லவே..., ரவுண்ட் முடித்தவன், எம்டி ப்ரீயாக இருக்கிறாரா என கேட்டு தெரிந்து கொண்டு, அவரைக் காணச் சென்றான்.

'டாக்டர் விஷ்வேஷ் எம்டி...' என்ற பெயர்ப்பலகையை தாங்கியிருந்த கதவை மெல்லியதாக விரலால் தட்டியவன், "மே ஐ..." கேள்வியோடு கதவைத் திறக்க,

"கெட் இன் யங் மேன்..., ஐ'ம் வெய்டிங் பார் யூ. டேக் யுவர் சீட்..." தன் எதிரில் இருந்த இருக்கையை காட்டினார்.

அதில் அமர்ந்தவன், "சார்..., என்னை பாக்கணும்னு சொன்னீங்களாம்..." தயக்கமாக இழுத்தான்.

"ஆமா, ஒரு மிக்கியமான விஷயத்தை உன்கிட்டே கலந்து பேசிட்டு முடிவு பண்ணலாம்னு நினைத்தேன்..." அவர் உரைக்க, திகைப்பாய் அவரைப் பார்த்திருந்தான்.

"சார், சொல்லுங்க..." அப்படி இல்லை என்றால் தன்னை நேரில் அழைக்க மாட்டாரே என்பதால் கேட்டான்.

"உங்களுக்கே தெரியும்..., இன்னும் ரெண்டு மாசத்தில் நம்ம ஹாஸ்பிடல்ல ரெண்டு பேர் ரிலீவ் ஆகறாங்க. ஒரு கைனகாலஜிஸ்ட், ஒரு ஜெனரல் டாக்டர்..., ஏற்கனவே நீ சொல்லி அப்பாயின் பண்ண ரெண்டுபேர் ரொம்ப திறமையானவங்க, சோ..., உன் ரெபாரன்ஸ்ல யாராவது இருக்காங்களான்னு கேக்கத்தான் கூப்ட்டேன்" அவர் உரைக்க, சற்று நேரம் யோசித்தவன்,

"சார், என்னோட தங்கை ஜீவித்யான்னு..., இப்போ லண்டன்ல இருக்கா. ஆறு மாசத்தில் இந்தியா வரதா சொன்னா. ஜெனரல் செக்ஷன்க்கு அவ ஓகேன்னு நினைக்கறேன். ஆனா, கைனகாலஜிஸ்ட்..., நான் யோசிச்சு சொல்றேன்".

"டேக் யுவர் ஓன் டைம்..., அப்படி இல்லன்னா, நாம ஆட் கொடுக்கலாம்" விஷயம் அவ்வளவுதான் என்பதாக நிறுத்த, தன் இருக்கையில் இருந்து எழுந்து கொண்டான்.

"சார், சிக்ஸ் மந்த்ஸ் உங்களுக்கு ஓகேவா..., இல்லன்னா, அவளை சீக்கிரம் வர முடியுமான்னு நான் கேக்கணும் அதான்...".

"லண்டன் ரிட்டர்ன் டாக்டன்னா நமக்கும்  வேல்யூ தான். அதனால் இந்த டைம் ஓகே தான். கொஞ்ச நாள் இருக்குற டாக்டர்ஸ், பிராக்டிஸ் டாக்டர்ஸ், டிரெயினி டாக்டர்ஸ் வச்சு நாம மேனேஜ் பண்ணிக்கலாம். அது ஒரு பிரச்சனையே இல்லை..." அவனுக்கு விடை கொடுத்தார்.

"தென் ஓகே சார்..." அவர் அறையை விட்டு வெளியேறினான்.

தன் மணிக்கட்டை திருப்பி நேரம் பார்த்தவன், அது பன்னிரண்டு முப்பதைக் காட்ட, லண்டனில் இப்பொழுது அதிகாலை என்பதால், ஜீவித்யாவிற்கு அழைக்க நினைத்ததை தள்ளி போட்டு விட்டு, தன் வேலைக்கு திரும்பினான்.

மதிய வேளை கடக்க, தன் உணவுக்காக வீட்டுக்குச் சென்றவன், உணவை முடித்துவிட்டு, சற்று இளைப்பாறியவன், குட்டி தூக்கம் போட்டுவிட்டு, ஜீவித்யாவிற்கு அழைத்தான்.

ஜீவித்யா தன் அறையில் அமர்ந்து நோயாளிகளை பார்த்துக் கொண்டிருக்க, அவளது அலைபேசி இசைத்து, அவள் கவனத்தை திருப்பியது.

உடனடியாக அதை அட்டன் செய்ய முடியாமல், தன்னைக் காண வந்த ஹேமாவிடம், "ஹேமா, கொஞ்சம் யார்ன்னு பாரேன்..." அவள் உரைக்க, அவளது அலைபேசியை எடுத்துக் கொண்டு வெளியே சென்றாள்.

"ஹல்லோ..., திஸ் இஸ் ஹனி..., மே ஐ நோ ஹூ இஸ் ஆன் தி லைன்?" நுனி நாக்கு ஆங்கிலத்தில் தன் செவிகளைத் தீண்டிய குரலில், ஒரு நொடி தயங்கினான். அவன் தயக்கத்துக்கு காரணம், அவள் தன் பெயரை ஹனி என உச்சரித்ததாலேயே.

"ஐ'ம் பரத். இஸ் தேர் ஜீவித்யா? ஐ வாட் டூ டால்க் டு ஹெர்..." தன் தயக்கத்தை உதறியவன், வேகமாக கேட்டான்.

"ஷி இஸ் லிட்டில் பிஸி..., கேன் யூ கால் லேட்டர்?" அவள் கேட்க,

"ஓகே..."உரைத்தவன், அலைபேசியை வைக்கப் போகையில், நிஜமாகவே தான் கேட்டது சரிதானா என உறுதி செய்து கொள்ள, "சாரி..., யூ..." அவசரமாக குரல் கொடுத்தான்.

அவன் எதையோ கேட்பதை, காதில் இருந்து அலைபேசியை எடுத்த பிறகே உணர்ந்தவள், வேகமாக என்னவென்று கேட்கும் முன்னர், "ஹனி..., ஆர் யூ ஹியர்..." ஒரு குரல் இடை புக, தன் சந்தேகம் நிவர்த்தியான திருப்தியில் அலைபேசியை வைக்கப் போனான்.

அதை சட்டென செய்ய முடியாமல், அவள் குரலை இன்னும் கேட்க மனம் எண்ணியது. அந்த குரலில் இருந்த ஒரு குழந்தைத்தனம், நளினம், ரசிக்கத் தூண்டியது.

"ஹேய் ஜான்..., ஒய்..., டிட் யூ வென்ட் மை ரூம்...?" அவர்கள் பேச்சு தொடர, அதற்குமேல் கேட்பது நாகரீகம் இல்லை என்பதால் அலைபேசியை அணைத்தான்.

'திஸ் இஸ் ஹனி...' இந்த சொல் அவன் காதில் எதிரொலிப்பது போன்ற பிரம்மை ஏற்பட, வேகமாக தலையை உதறியவன், மருத்துவமனைக்கு கிளம்பிச் சென்றான்.

ஜீவித்யாவின் வேலை நேரம் முடிய, "ஜீவி..., அது யார் பரத்? உனக்கு கால் பண்ணியிருந்தான். சச் ய பெக்கூலியர் வாய்ஸ்..." தன் போக்கில் உரைத்தவள், வெளியே வேடிக்கை பார்க்கத் துவங்க,

"என்ன சொன்ன? பரத் அண்ணாவா? ச்சே..., யார் கால் பண்ணான்னு கேக்கவே மறந்துட்டேன் பாரேன். கண்டிப்பா என் வேலை விஷயமாகத்தான் இருக்கும். உடனே கால் பண்ணு..., இப்பவே பேசிடலாம்..." அவள் அவசரப்படுத்த, அவள் அலைபேசியை இயக்கி, பரத்தின் எண்ணுக்கு அழைத்தாள்.

ப்ளூடூத் வழியாக கால் கனெக்ட் ஆக, "ஜீவித்யா..., எப்படிம்மா இருக்க? ஹாஸ்பிடல் எப்படி போகுது? வீட்டில் இருந்து எல்லோரும் போன் பண்றாங்களா? அம்மா அப்பா எப்படி இருக்காங்க? அண்ணா என்ன சொல்றான்? இப்போ ப்ரீ ஆயிட்டியா?" அக்கறை தொனித்தது அவன் குரலில்.

"அண்ணா..., நான் ரொம்ப நல்லா இருக்கேன். அம்மா அப்பா அண்ணா எல்லாரும் வாரம் தவறாமல் போன் பண்ணிடுவாங்க. அண்ணாங்க எல்லாமே ஒரே மாதிரிதான்" மெல்லியதாக சிரித்தவள், "நீங்க எப்படி இருக்கீங்க? அம்மா ஹெல்த் இப்போ எப்படி இருக்கு?".

"எல்லோரும் நல்லா இருக்கோம். உன்னை தனியா அனுப்பி வச்சுட்டு நாங்க எப்படி இங்கே நிம்மதியா இருக்குறது? எங்களுக்கு இருக்குறது நீ ஒரே தங்கசி..., அதான்..." உரைத்தவன்,

"உன் ஜாப் விஷயமாத்தான் கால் பண்ணியிருந்தேன். இங்கே, நான் வொர்க் பண்ற ஹாஸ்பிடல்லேயே ஒரு வேக்கன்சி வருது. உனக்கு ஓகேன்னா..., நீ ஜாயிண்ட் பண்ணிக்கலாம். இல்ல வேற ஹாஸ்பிடல்தான் வேணும்னா..." அவன் இழுக்க,

"ஹையோ அண்ணா..., உங்களோட வொர்க் பண்றதை விட வேற என்ன வேணும். ஐ'ம் ரெடி..." உற்சாகம் கொப்பளித்தது அவள் குரலில்.

"ஹேய்..., உடனே டிசைட் பண்ணிடாதே..., லண்டன் டாக்டர்க்கு சேலரி கொடுக்குற அளவுக்கு எங்க ஹாஸ்பிடல் பெருசு இல்லை..." அவன் குரலில் குறும்பு வழிய,

"அண்ணா..., ஓட்றீங்களா...?" அவள் சிணுங்க, அவன் அந்த பக்கம் ஆர்ப்பாட்டமாக சிரிப்பது இவர்களை எட்டியது.

அதை ஒருவித ஏக்கத்தோடு பார்த்துக் கொண்டிருந்தாள் ஹேமா. அவளும் அவளது அண்ணனோடு பேசியிருக்கிறாள் தான். அவை அனைத்தும் சில வார்த்தைகளில் முடிந்துவிடும்.

'என்ன...? அப்படியா...? பணம் வேண்டுமா? சரி...' இதை தவிர அதிகம் உரையாடிய நினைவு அவளுக்கு இல்லை.

"ஜீவித்யா..., நீ எப்போ வர? இங்கே கரெக்ட் டேட் சொல்லிட்டா நல்லா இருக்கும். தென்..., இன்னொரு விஷயம்..., உனக்கு தெரிந்த கைனகாலஜிஸ்ட் யாராவது இருக்காங்களா? இங்கே அந்த வேக்கன்சியும் இருக்கு..." அவன் குரல் ஹேமாவை நடப்புக்கு இழுக்க, வேகமாக தோழியின் கரத்தை அழுத்தினாள்.

'என்ன...?' கேள்வியோடு ஹேமாவை ஏறிட, எதிர்பார்ப்பை சுமந்திருந்த அவள் விழிகளைக் கண்ட ஜீவித்யாவுக்கு புருவங்கள் வியப்பில் விரிய, நம்ப முடியாமல் அவளை வெறித்தாள்.

"ஜீவித்யா..., கேக்குதா...? ஹல்லோ..." பரத் குரல் கொடுக்க, அப்பொழுதுதான் தான் அவனுக்கு பதில் கொடுக்கவில்லை என்பதே உறைத்தது.

"ஹாங்..., அண்ணா..., என்ன கேட்டீங்க...?" விழிகளால் தோழியிடம் வேண்டாம் என்று கெஞ்சியவள், அவனிடம் கேட்டாள்.

"அதாம்மா..., உனக்கு தெரிந்த கைனகாலஜிஸ்ட் யாராவது இருக்காங்களான்னு கேட்டேன். குட் பே..., அக்காமடேஷன் வேண்ணாலும் பண்ணிக் கொடுப்பாங்க. உன் ரெபாரன்ஸ்ல யாராவது இருக்காங்களா?" மீண்டுமாக கேட்டான்.

"அண்ணா..., நான் நாளைக்கு சொல்லவா...?" அவள் குரலில் இருந்த சிறு தடுமாற்றத்தை கண்டுகொண்டவன்,

"சரிம்மா..., நீ யோசிச்சு சொல்லு. அப்படியே..., உன்னோட ரெசியூம் ரெனிவல் பண்ணி எனக்கு பார்வேர்ட் பண்ணு. ஹெல்த்தை பாத்துக்கோ... எப்போ என்ன ஹெல்ப் வேண்ணாலும் எனக்கு கால் பண்ணு சரியா?"

"கண்டிப்பாண்ணா..., உங்களை எல்லாம் எப்போ பாப்போம்னு இருக்கு. ரெண்டு வருஷம் ஆயிடுச்சு..."

மிகப்பெரும் ஆவல் அவளிடம்.

"இன்னும் கொஞ்ச நாள்தாம்மா..., இனிமேல் உன்னை எங்கேயும் அனுப்புறதா இல்லை. உன்னை எங்களோடவே வச்சுக்க போறோம்..." அவ்வளவு நேரமும் சாதாரணமாக உரையாடியவன்,

"நீ நல்லா இருக்கணும் ஜீவித்யா. உன்னை மாதிரி பொறுப்பான பொண்ணை நான் பாத்ததே இல்லை..." கனிவாய் ஒலித்தது அவன் குரல். அமைதியாக கேட்டுக் கொண்டவள், அதற்கு எந்த பதிலும் கொடுக்கவில்லை.

மேலும் சில வார்த்தைகள் அவளிடம் பேசியவன், வைக்கப் போகையில், "ஜீவித்யா..., ஹனிங்குறது உன்னோட கூட வொர்க் பண்ற டாக்டரா?" அவன் கேட்க, அவள் அதிர்வாய் தன் அலைபேசியை வெறிக்க, ஹெமாவோ..., ஆர்வமாக பார்த்தாள்.

# பகுதி - 4

ஜீவித்யாவுக்கு தன் காதுகளையே நம்ப முடியவில்லை. பரத்தை பொறுத்த அளவில், எந்த பெண்ணின் பெயரையும் சுருக்கி அழைக்கவோ, அவர்களது செல்ல பெயரைச் சொல்லி அழைக்கவோ மாட்டான்.

அவளே கூட, தன்னை வித்யா எனவோ, ஜீவி எனவோ அழைக்கச் சொல்லி ஒரு முறை சொன்ன பொழுது கூட, எனக்கு உன்னை இப்படி அழைப்பதுதான் பிடித்திருக்கிறது என மறுத்தவன் அவன். அப்படி இருக்கையில், ஹேமாவை ஹனி என உரைத்ததை அவள் எப்படி சாதாரணமாக எடுக்க?

"ஜீவித்யா..., லைன்ல இருக்கியா...?" அவன் அழைத்த பிறகே, தான் தன் யோசனையில் மூழ்கியது புரிய, ஹேமா அவளை தோள் தொட்டு உலுக்கினாள்.

"அண்ணா..., ஹனி..., ஆமா..., நான் அவளோடதான் வொர்க் பண்றேன். என்னண்ணா திடீர்ன்னு...?" தடுமாறி உரைத்தவள், என்னவென்று கேட்டாள்.

"இல்லம்மா..., சும்மாதான்..." தன் அலைபேசியை வைத்து விட்டான். பரத்துக்கு ஹேமாவின் குரலை கேட்டது முதல், மதராசபட்டினம் படத்தில் வரும் எமி ஜாக்ஸனின் குரலும், உருவமும் கண்களுக்குள் உலா போவதை தடுக்க முடியவில்லை.

அலைபேசியை வைத்தவனும் சரி, அவன் பேச்சை கேட்டுக் கொண்டிருந்தவளும் சரி, ஒரே விஷயத்தை தான் யோசித்தார்கள். 'சும்மாதான் கேட்டேனா...' என அவனும், 'சும்மாவா கேட்டாங்க...?' என அவளும் சிந்தித்தார்கள்.

கார் ஹேமாவின் வீட்டின் முன்னால் நிற்க, காரில் இருந்து இறங்கியவள், யோசனையோடு வீட்டுக்குள் சென்றாள்.

"ஜீவி..., உங்க அண்ணா வாய்ஸ் செம மேன்லி..." ஹேமா சிலாகிக்க, சட்டென நின்றவளுக்கு, நிச்சயம் அதை ரசிக்க முடியவில்லை.

"ஹேய்..., நீ சந்திக்காத ஆண்களா..., ஜஸ்ட் லீவ் இட்..." சாதாரணமாகவே உரைக்க முயன்றாள்.

"தட்ஸ் ட்ரூ..., பட் திஸ்..., சம்திங் ஸ்பெஷல்..., உன் அண்ணா..., ஹேய்..., யூ ஹேவ் ஒன்லி ஒன் ப்ரதர் னோ..., தென் திஸ்..." அவ்வளவு நேரமாக தோன்றாத விஷயம் அப்பொழுதுதான் தோன்றியது.

"பரத் அண்ணா, என் காலேஜ் சீனியர்..." அவள் உரைக்க,

"அப்போ அண்ணா...?" அவளுக்கு புரியவில்லை.

"அது உனக்கு புரியாது ஹேமா..." அந்த பேச்சை அத்தோடு முடிக்கவே அவளுக்குத் தோன்றியது. எல்லா ஆண்களையும் ஒன்று நண்பன், இல்லையா கொலீக்..., இல்லையா ஒரு ஆண்மகன்..., இப்படியான மனநிலையில் இருப்பவளிடம், ஒவ்வொன்றையும் எப்படி விளக்குவது?

"நீ சொல்லு நான் புரிஞ்சுக்கறேன்..." வெகு சாதாரணமாக உரைக்க, சிக்கலாகிக் கொண்டு போகும் விஷயத்தை என்ன செய்ய என இயலாமையாகப் பார்த்திருந்தாள்.

தோழி இயலாமையாய் தன்னை நோக்க, "ஜீவி..., ஓகே லீவ் இட். உன் அண்ணா கைனகாலஜிஸ்ட் வேணும்னு சொன்னானே..., இதைவிட பெட்டர் சான்ஸ் கிடைக்காது. நானும் உன்னோடவே வரேன்..." சில நாட்களாகவே ஹேமாவின் புலம்பலை கேட்டுக் கொண்டிருந்தவளுக்கு, அவளது இந்த பேச்சு பயத்தையே கொடுத்தது.

'இதை இப்பொழுதே முடிக்க வேண்டும்...' ஜீவித்யாவின் உள்ளுணர்வு உந்த,

"நோ ஹேமா..., நீ என்னோட வரலை..." அழுத்தமாகவே உரைத்தாள்.

"ஓய்..." சற்று கோபமாகவே கேட்டாள் ஹேமா.

"என்ன ஓய்..., புரிஞ்சுதான் பேசறியா? உன்னோட வாழ்க்கை, அடையாளம், வேர்..., எல்லாம் இங்கேதான் இருக்கு ஹேமா. உன்னை வேரோட பிடுங்கி இந்தியாவில்

நட்டால் நீ வாடி போய்டுவ. உன்னால் தழைக்க முடியாது..." நடைமுறை சிக்கல்களை உணராமல் பேசுகிறாளே என அலுப்பாக இருந்தது.

ஹேமா ஒரு இந்திய பெற்றோருக்குப் பிறந்திருந்தாலும், அவளது வளர்ப்பு ஒரு அக்மார்க் லண்டன் வளர்ப்புதான். கற்பு விஷயத்தில் மட்டும் அவள் விதி விலக்காக இருந்தாலும், அவளது பேச்சு, நடத்தை, மனநிலை..., அனைத்தும் லண்டன் பெண்களை ஒத்தே இருக்கும்.

அப்படி இருக்கையில், இந்திய மண்ணில் தன் வேரை ஊன்ற அவள் நினைத்தால் எப்படி முடியும்? அவள் வாழ்நாள் முழுவதும் ஒன்று நடிக்க வேண்டி இருக்கும், இல்லையா..., நிம்மதியை இழக்க வேண்டி இருக்கும். இதில் எது நடந்தாலும், ஒரு தோழியாக அதை அவளால் தாங்கிக்கொள்ள முடியாது.

அதை வெளிப்படையாக சொல்ல முடியாமல் திணறித்தான் போனாள். "தட் ஐ வில் டிசைட்..." சிறு வயது முதல் அவளுடன் பிறந்த பிடிவாத குணம், இவ்வாறு பேசத் தூண்டியது.

"ஹேமா, நான் சொல்ல வரதை ஏன் புரிஞ்சுக்க மாட்டேங்கற?" கெஞ்சலாக கேட்டாள்.

இப்பொழுது ஹேமாவை பற்றி யோசிப்பதை விட, பரத் தான் அவள் மூளையை பெரிதும் ஆக்கிரமித்தான். ஹேமாவை பற்றிய அவனது விசாரிப்பு, அவனைப் பற்றி அனைத்தும் அறிந்தவளால், அதை ஒரு சாதாரண கேள்வியாக அவளால் நினைக்க முடியவில்லை.

சப்போஸ்..., தான் ஹேமாவை இந்தியாவிற்கு அழைத்துச் சென்று, இருவரின் மனதிலும் காதல் என்ற ஒன்று அரும்பி விட்டால்..., நினைக்கையிலேயே தலையை வலிப்பதுபோல் இருந்தது.

"சோ..., யூ வோன்ட் ஹெல்ப் மீ. தட்ஸ் ஃபைன்..., ஐ வில் அப்பளை பார் தட் ஜாப்..." ஹேமா சாதாரணமாக உரைக்க, ஜீவித்யாவுக்கு தலையை சுற்றிக்கொண்டு வந்தது.

"ஏய்..., என்ன விளையாடுறியா? நான் இவ்வளவு தூரம் சொல்லிட்டு இருக்கேன்..." அவளுக்கு அலுப்பாக இருந்தது.

"ப்ளீஸ் டெல் தி ட்ரூத் ஜீவி. யூ ஆர் ஹைடிங் சம்திங் ப்ரம் மீ..., வாட்...?" தோழியின் கை பிடித்து நிறுத்தியவள், அவள் கண்களை கூர்மையாக ஏறிட்டாள்.

சட்டென தன் கண்கள் கலங்க, "ஹேமா..., இதை எப்படி உன்கிட்டே சொல்லி புரிய வைக்கன்னு எனக்கு சத்தியமா தெரியலை. அதே நேரம்..., உன்னை தனியா இங்கே விட்டு போகவும் முடியலை. நான் என்ன செய்ய...?" சில விஷயங்களை வார்த்தையில் வடிக்க முடியாதே.

"ஜீவி..., ஏன் இவ்வளவு எமோஷனல் ஆகற? சாரி..., எதையுமே நான் ஒரு முறைக்கு மேல் கேக்க மாட்டேன்னு உனக்கே தெரியும். பட்..., பஸ்ட் டைம்..., உன்கிட்டே கேட்டேன். ஓகே லீவ் இட்..., நான் உன்கிட்டே இதை கேக்கவே இல்லைன்னு நினைச்சுக்கோ..." உரைத்தவள் தன் அறைக்குச் செல்லத் திரும்ப, சட்டென அவளை தாவி அணைத்துக் கொண்டாள்.

"ப்ளீஸ் ஹேமா, இப்படி பேசாதே..." ஜீவித்யாவின் அணைப்பு இறுக, அவளால் சொல்ல முடியாத காரணம் இருப்பதை ஹேமா உணர்ந்து கொண்டாள்.

"ஏய்..., உன்னை நான் தப்பா நினைக்கவே இல்லை. உன்னால் காரணத்தை சொல்ல முடியலன்னு எனக்குத் தெரியுது. நீ சொன்னால் அது சரியாதான் இருக்கும்..." அவளது இந்த பேச்சு, ஜீவித்யாவை இன்னும் அதிகம் வேதனைப் படுத்தியது.

"ஹனி..., நீ அங்கே வந்தால் ரொம்ப கஷ்ட படுவ..., என்னால் அதை பாத்துட்டு சும்மா இருக்க முடியாது..." ஜீவித்யா அதிகமாக உணர்ச்சிவசப் பட்டால் மட்டுமே ஹேமாவை ஹனி என அழைப்பாள். அதை உணர்ந்தவள், தானும் வருந்தினாள்.

"ஜீவி..., ப்ளீஸ் டோன்ட் க்ரை..." தோழியை தேற்றினாள்.

"ஓகே..., வேண்ணா இப்படி பண்ணலாமா...?" தோழியை சற்று விலகி கேட்க,

"எப்படி...? இப்போ ஹக் பண்ணிட்டு இருந்தியே அப்படியா...?" இமை சிமிட்டி குறும்பு புன்னகையில் ஹேமா வினவ, "போடி லூசு..., இது வேற..." வேகமாக அவளை விட்டு விலகி நின்றாள்.

ஜீவித்யா சொல்ல வருவதற்கு முன்பே..., "ஜீவி, நான் ஒரு வருஷத்துக்கு வேண்ணா உன்னோட வந்து இருக்கட்டுமா? அதுக்குப் பிறகு நான் லண்டன் வந்துடறேன்..., என்ன சொல்ற...?" ஒருவித ஆர்வம் கொப்பளிக்க அவள் கேட்க, சத்தியமாக அதை ஜீவித்யாவால் மறுக்கவே முடியவில்லை.

கடவுள் ஒரு விஷயத்தை முடிவு செய்த பிறகு, அதை யாரால் தடுக்க முடியும்? பெண்களைப் பற்றியே பேச தயங்கும் பரத், ஹேமாவைப் பற்றி விசாரிப்பதும், லட்சம் ஆண்களுக்கு மத்தியில் வெகு சாதாரணமாக உலாவும் ஹேமா, பரத்தின் குரலைப் பற்றி விமர்சிப்பதும்..., எதுவோ நடக்கப் போகிறது என்பதை மட்டும் அவளுக்கு தெளிவாக உணர்த்தியது.

உள்ளுக்குள் எழுந்த பெருமூச்சை அடக்கியவள், "சரி..., நான் அண்ணாகிட்டே பேசறேன். அப்படியே உன்னோட சிவியை ரெடி பண்ணி என்கிட்டே கொடு..." மனதுக்குள் எழுந்த போராட்டத்தோடு உரைத்தாள்.

கூடவே..., "ஹேமா..., உங்க அப்பாவோட பிசினஸ்..., அதை என்ன பண்றதா இருக்க?" யோசனையாகவே கேட்டாள்.

"அது ஏற்கனவே பிராங்கிளின் அங்கிள் கேட்டுட்டு இருந்தார். அவரும் அதில் பாட்னர் தானே..., சோ, அவருக்கே கொடுத்துடலாம்னு இருக்கேன். பட் லீகல் எல்லாம் முடிய கொஞ்ச நாள் ஆகும். இந்தியா கிளம்ப முன்னாடி முடிஞ்சுடும்னு நினைக்கறேன்..." அவள் பேச்சில் இருந்தே, இது ஏற்கனவே எடுத்த முடிவு என்பதை ஜீவித்யா புரிந்து கொண்டாள்.

அவள் தந்தையின் தொழிலில் பெரிதாக அவளுக்கு ஈடுபாடு இல்லை என்பது ஜீவித்யாவிற்கு முன்பே தெரிந்ததுதான். எனவே அவளது இந்த முடிவில் அவளுக்கு ஆச்சரியம் எதுவும் இருக்கவில்லை.

"அப்போ சரி..., நீ அதை முதல்ல முடி. நான் நாளைக்கு அண்ணாகிட்டே பேசறேன்..." அவளிடம் சொல்லிவிட்டு தன் அறைக்குள் புகுந்து கொண்டாள்.

அதன் பிறகு அவளுக்கு வேறு யோசிக்க எதுவும் இருக்கவில்லை. நாட்கள் மின்னல் வேகத்தில் கடக்க, ஹேமாவின் வேலையும் சென்னையில் உறுதியானது. பரத் அந்த நாட்களில் சிறுவன் யஷ்வந்தின் கேசில் சற்று பிஸியாகிவிட, கூடவே, டெல்லியில் ஒரு கான்பிரன்ஸ்க்கு செல்ல வேண்டி இருக்கவே, ஜீவித்யா அனுப்பிய ஹேமாவின் சிவியை ஓப்பன் செய்து கூட பார்க்காமல் எம்டிக்கு அனுப்பி வைத்திருந்தான்.

அவர்கள் சென்னைக்கு கிளம்பும் நாளும் வர, ஜீவித்யாவை அழைத்துச் செல்ல அவளது மொத்த குடும்பமும் ஏர்போட்டில் ஆஜர் ஆனார்கள்.

ஜீவித்யாவுக்கு தாய்நாடு திரும்பும் ஆர்வமும், பெற்றவர்களை காணப்போகும் ஆசையும் பரபரப்புமாக காத்திருக்க, ஹேமாவோ, புதிய இடத்தை ஆராயும் குழந்தையின் மனநிலையில் இருந்தாள்.

தங்கள் லக்கேஜை கலெக்ட் செய்தவர்கள் வெளியே வர, ஜீவித்யாவின் பார்வை பெற்றவர்களை தேடியது.

அவர்களைக் கண்டவுடன்..., "அம்மா..." பெற்றவர்களை கண்ட குஷியில் அது ஒரு பொதுவிடம் என்பதையும் மறந்து ஓடி வந்தவள், தாயின் கழுத்தை கட்டிக் கொண்டாள்.

"ஜீவி..." தானும் அவளை அணைத்துக் கொண்டவர், "அம்மாடி..., எப்படி இருக்க? என்னம்மா இப்படி இளைச்சு போய்ட்ட..." அவளை கண்ட சந்தோஷத்தில் அவர் கண்கள் மெல்லியதாக கலங்கியது.

"நான் இளைச்சுட்டேனா...? போங்கம்மா..., நீங்க எப்படிம்மா இருக்கீங்க? அப்பா..." தந்தையின் கரத்தை பற்றிக் கொண்டவள், "அண்ணா எங்கேம்மா...?" பார்வை அவனைத் தேடியது.

"வணக்கம் டாக்டரம்மா. எப்படி இருக்கீங்க? லண்டன் இப்போதான் நிம்மதியா இருக்கும்னு நினைக்கறேன்..." அவள் தலையில் மெல்லியதாக குட்டியவன், தோளோடு அணைக்க, "அண்ணா..." செல்லமாக சிணுங்கியவள், அவன் அணைப்பில் பாந்தமாக ஒடுங்கிக் கொண்டாள்.

அவர்களுக்கு சற்று தூரத்தில், அவர்களது பாச பிணைப்பை பார்த்தவாறு நின்றிருந்தாள் ஹேமா. தானும், தங்கள் வீட்டு ஆட்களும் ஒரு நாள் கூட இப்படி இருந்தது இல்லை..., என எண்ணிய அதே நேரம்..., நீ எப்பொழுது அவர்களோடு உரையாடினாய்..., மனசாட்சி குரல் கொடுக்க, சட்டென தன்னை மீட்டுக் கொண்டாள்.

"ஜீவி..., உன் ப்ரண்ட் வரதா சொன்ன...?" அவளது தாய் மீனாட்சி கேட்க, அப்பொழுதுதான் தோழியின் நினைவு வந்தவளாக,

"அச்சோ..., உங்களை பார்த்த சந்தோஷத்தில் அவளை மறந்தே போயிட்டேன்..." தன் அண்ணனின் அணைப்பில் இருந்து விலகியவள், சற்று தள்ளி நின்ற ஹேமாவிடம் விரைந்தாள்.

"ஏண்டி இங்கேயே நின்னுட்ட..., வா..." அவள் கை பிடித்து அழைத்து வந்தாள்.

"அம்மா..., இவதான் என் ப்ரண்ட். ஹேமா..., அம்மா..., அப்பா..., அண்ணா..." அனைவரையும் அறிமுகப் படுத்தினாள்.

"ஹல்லோ ஆண்ட்டி..., அங்கிள்..., ஹாய்..." வெகு இயல்பாக மூவரையும் எதிர்கொண்டவள், மெல்லிய புன்னகையை சிந்தினாள்.

"எப்படிம்மா இருக்க...?" மீனாட்சி அவளை தன் அருகில் இழுத்துக் கொண்டார்.

"நல்லா இருக்கேன்..." அவளது தமிழ் புதிதாக கேட்பவர்க்கு, சற்று வித்தியாசமாகத்தான் இருக்கும். முழு நேர ஆங்கிலமும், பகுதி நேர தமிழும் பேசும் அவளது தமிழ், ஒரு குழந்தை தெளிவாக தமிழ் பேசினால் எப்படி இருக்குமோ அதை ஒத்தே இருக்கும்.

"தமிழ் அழகா பேசுறம்மா..." மீனாட்சி சிலாகிக்க, "அம்மா..., அவங்க பேமிலி தமிழ் பேமிலிதான்..." ஜீவித்யா உரைத்தாள்.

"அம்மாடி..., ஜீவி சொன்னா..." மீனாட்சி ஹேமாவின் தந்தை, தனையனின் இறப்பை பற்றி விசாரிக்கத் துவங்க,

"அம்மா..., வீட்டுக்கு போய் பேசிக்கலாம்..." ஜீவித்யா வேகமாக இடையிட்டாள்.

"அப்படியே பொம்மையாட்டம் இருக்க..., உன்னை விட்டுட்டு போக அவங்களுக்கு எப்படி மனசு வந்துதோ..." அவர் விடாமல் புலம்ப, மானசீகமாக தன் தலையிலேயே அடித்துக் கொண்டாள் ஜீவித்யா.

ஹேமா அவர் சொல்ல வருவதை புரிந்தும் புரியாமல் கிரகிக்க முயல,

ஜீவித்யா வேகமாக தன் தந்தையும், அண்ணனையும் பார்வையால் கெஞ்சினாள். அதை புரிந்தவர்கள், "மீனா..., அவங்க நம்ம வீட்டுக்குத்தான் வராங்க. எதுவா இருந்தாலும் வீட்டுக்கு போய் பேசிக்கலாம்..." மனைவியை நாயகம் அடக்க, அவரோ கணவனை முறைத்தார்.

சரவணனோ, "அம்மா..., அவங்களே டயடா இருப்பாங்க, பசிக்கும்..., அதெல்லாம் ஞாபகம் இருக்கா இல்லையா?" ஒரு தாய்க்கு குழந்தையின் பசியை விட வேறு என்ன முக்கியமாக இருக்கும்?

"ஆமாடா..., மறந்தே போயிட்டேன் பாரேன். வாங்க..., வீட்டுக்கு போகலாம்..." உடனே கிளம்பிவிட்டார்.

நாயகத்துக்கோ..., 'இவனுக்கு மட்டும் எப்படித்தான் சரியா பேச வருதோ?' வழக்கம்போல் மனதுக்குள் எண்ணியவர், ஹேமாவின் லக்கேஜை அவள் மறுக்க மறுக்க கேட்காமல் வாங்கிக் கொண்டார்.

வீட்டுக்கு வரும் வழியில், "ஜீவி, என்னை, எனக்கு அலாக்கட் பண்ணியிருக்கும் வீட்டிலேயே டிராப் பண்ணிடுங்க..., ஐ வில் டேக் கேர்..." தோழியின் காதில் கிசுகிசுக்க, அவளை முறைத்தாள்.

அவள் முறைப்புக்கான காரணம் புரியாமல், "என்ன...?" அவளிடமே கேட்டாள்.

"அதெல்லாம் நான் பாத்துக்கறேன் நீ கொஞ்சம் பேசாமல் வா..." அவளிடம் அடிக்குரலில் சாடினாள்.

"என்ன ஜீவி..., ஏன் அவகிட்டே கோபமா பேசற?" மீனாட்சி இடையிட,

"அம்மணி இப்படியே கிளம்பறாளாம்..., நீங்களே என்னன்னு கேளுங்க...".

"என்னது..., இப்படியே கிளம்பறதா? நீ எங்கேயும் போகப் போறது இல்லை... அவ்வளவுதான்..." மீனாட்சி உரைக்க, திகைப்பாய் அவர்களை பார்த்திருந்தாள்.

லண்டனில் ஒருவர் வீட்டுக்கு செல்வதாக இருந்தாலே அலைபேசியில் அழைத்து அனுமதி கேட்காமல் போக முடியாது. அப்படி இருக்கையில், ஒருவர் வீட்டில் தங்குவதாக இருந்தால், கேட்கவே வேண்டாம். ஆனால் இங்கே, இன்றுதான் முதல் முறையாக பார்க்கும் தன்னை, அவர்கள் வீட்டில் ஒருத்தியாக ஏற்கும் விதம்..., சிலிர்ப்பாய் உணர்ந்தாள்.

வீட்டுக்கு வந்தவுடன், ஆரத்தி சுற்றி அவர்களை வரவேற்க, புதிதாய் பார்த்திருந்தாள். அவள் வயதுக்கு வந்த பொழுது அவளது பாட்டி ஒரு முறை இதை செய்திருக்கிறார்..., அவள் நினைவு கிளறப்பட, பாட்டியை முதல் முறையாக மிஸ் செய்தாள்.

"உள்ளே போய் குளிச்சுட்டு வந்து முதல்ல சாப்பிடுங்க. பிறகு ரெஸ்ட் எடுக்கலாம்..." அவர்களை உள்ளே போகச் சொன்னார்.

சரவணன் அவர்களது லக்கேஜை கொண்டுவந்து கொடுத்தவன், "ஜீவி, ஹேமாவை உன் ரூமிலேயே தங்க வச்சுக்கோ..., ஏதாவது வேணும்னா கேளு. டவ்வல் எல்லாம் இருக்கா? இல்லன்னா அவங்களுக்கு ஒண்ணு எடுத்துட்டு வரவா?" அவன் கேட்க,

"டவ்வல் வேணும்ண்ணா..." அவள் கேட்கவே, வேகமாகச் சென்று அதை எடுத்து வந்து கொடுத்தான்.

ஹேமாவுக்கு ஏனோ சிறு தயக்கமாக இருந்தது. அதை அவள் முகத்திலிருந்தே உணர்ந்தவன், "ஹேமா..., பீல் ப்ரீ..., உங்க வீடு மாதிரி நினைச்சுக்கோங்க. எந்த ஹெல்ப் வேண்ணாலும் கேளுங்க. நான் உங்களுக்கும் அண்ணாதான்..., சரி..., நீங்க போய் ரெடி ஆகிட்டு வாங்க..., சேர்ந்தே சாப்பிடலாம்..." அங்கிருந்து அகன்றான்.

அவனது பன்மை அழைப்பை உணர்ந்தவளுக்கு, அது ஏன் என்பது புரியவில்லை. பெரியவங்களை மரியாதையா கூப்பிடு..., பாட்டி இப்படி சொல்லித்தான் கேள்வி பட்டிருக்கிறாள். ஆனால் இது...?

ஜீவித்யா பரத்தை தன் அண்ணா என உரைத்தபொழுது புரியாத விஷயம், சரவணன் உரைக்கையில் புரிய, நெகிழ்ந்துதான் போனாள்.

"அண்ணா..." சட்டென அழைக்க, திரும்பிச் சென்றவன், வேகமாய் அவள் அருகில் வந்தான். ஹேமா தன் அண்ணனை கூட, அண்ணா என அழைத்த ஞாபகம் அவளுக்கு இல்லை.

"என்னம்மா..., ஏதாவது வேணுமா?" ஒரு கனிவு அவன் குரலில்.

"தேங்க்ஸ்..." உணர்ந்து உரைத்தாள்.

"நல்ல பொண்ணும்மா..., போ..., ஜீவி..." தங்கையை அழைத்தவன், அவளை அழைத்துப் போகச் சொன்னான்.

"வா ஹேமா..." அறையை பூட்டியவள், "அதுதான் ரெஸ்ட் ரூம்..., ரூம் கொஞ்சம் சின்னதுதான் அட்ஜஸ் பண்ணிக்கோ..." சற்று சங்கடமாகவே உரைத்தாள்.

"ரூம் பெருசா இருந்தால் மட்டும் போதாது ஜீவி. மனசுதான் பெருசா இருக்கணும்னு புரியுது. ஐ லைக் யுவர் பேமிலி..., ரியல்லி கிரேட்..." இப்படி ஒரு குடும்பம் தனக்கு இல்லையே என முதல் முறையாக ஒரு ஏக்கம் எட்டிப் பார்த்தது.

"ஹேமா..., போதும்..., முதல்ல போய் குளிச்சுட்டு வா..., எல்லாரும் நமக்காக காத்துட்டு இருப்பாங்க..." அடுத்த அரைமணி நேரத்தில் இருவரும் குளித்துவிட்டு வந்தார்கள்.

அவர்கள் வீட்டில் ஒரு விருந்துக்கே ஏற்பாடு செய்யப் பட்டிருக்க, இட்லியும், சிக்கன் குழம்பும், சட்டினியும், சாம்பாரும், தோசையும்..., தேவாமிர்தமாகத்தான் இருந்தது.

சிக்கன் காரம் அவளுக்கு ஒத்துக் கொள்ளாமல், முழுவதும் வியர்த்து ஊத்த, முகமோ சிவந்து போனது. ஐஸ் வாட்டர் குடித்தும் காரம் அடங்க மறுக்க, மீனாட்சி வேகமாக வெல்லம் கொண்டு வந்து அவள் வாயில் திணிக்க, அந்த பாசம் நெஞ்சை தொட்டது.

அதைவிட, குடும்பமாக அமர்ந்து அவர்கள் உண்ட விதம்..., வாய் ஓயாத பேச்சு, கலாட்டா..., மீனாட்சி ஒவ்வொருவரையும் பார்த்து பார்த்து கவனித்த விதம், 'அம்மா இருந்திருந்தால் எங்கள் வீடும் இப்படித்தான் இருந்திருக்குமோ' ஏக்கம் எழுவதை தடுக்க முடியவில்லை.

"ஜீவி..., இன்னைக்கு ஏதாவது ப்ளான் இருக்கா? எங்கேயாவது வெளியே போகணுமா?" சரவணன் கேட்க,

"இன்னைக்கு எந்த ப்ளானும் இல்லண்ணா..., நாளைக்குதான் கொஞ்சம் பர்ச்சேஸ் போகணும். ஹேமாவுக்கு கொஞ்சம் ட்ரெஸ் வாங்கணும்..., நீங்க டிராப்

பண்ணா போதும். நாங்க பாத்துப்போம்..." உணவை உண்டவாறே உரைத்தாள்.

"டிராப் மட்டும்தான் பண்ணுவேன். மத்தபடி உங்களோட கடை கடையா அலைய என்னால் முடியாதுடா சாமி..." அவன் போலியாக அலற, "போடா..." கோபமாக உரைத்தாள்.

"அதானே..., என்னடா வந்தது முதல் மரியாதை தூள் பறக்குதேன்னு நினைத்தேன். ஆரம்பிச்சுட்டியா...?" அவன் அவளை வார,

"குழந்தை இன்னைக்குதான் ஊர்ல இருந்து வந்திருக்கா..., அவகிட்டே ஏண்டா வம்புக்கு போற...?" நாயகம்தான் வேகமாக இடையிட்டார்.

"யாரு..., இவ குழந்தையா...?" அவன் சண்டைக்கு வர,

"சாப்பிடுற இடத்தில் என்ன பேச்சு..., முதல்ல சாப்பிடுங்க. டேய்..., ரெண்டுபேரும் ஆள் தான் வளந்திருக்கீங்க. இன்னும் சின்ன பசங்கன்னு நினைப்பு..." மீனாட்சி கையில் சுடச் சுட தோசையோடு அங்கே வர, கப்பென அனைவரும் வாயை மூடிக் கொண்டார்கள்.

மீனாட்சியின் அந்த ஆளுமையை கூட ரசித்தாள் ஹேமா.

"வெளியே எங்கே போக முன்னாடியும், முதல்ல கோயிலுக்கு போயிட்டு போங்க சரியா...?" மீனாட்சி அவர்களிடம் உரைத்தார்.

"சரிம்மா..." ஜீவி உடனே அதை ஏற்றுக் கொள்ள, அனைத்தும் புதுமையாகத்தான் இருந்தது.

"ஜீவி..., என்னைக்கு டியூட்டியில் ஜாயிண்ட் பண்ற...?" சரவணன் கேட்க,

"அம்மா வர புதன் கிழமை போனால் போதும்னு சொன்னாங்கண்ணா..., சோ, அன்னைக்குதான் போறோம்...".

"அப்போ சரி..., நான் அன்னைக்கு லீவ் போடறேன். இன்னைக்கு ஹாப் டே தான் லீவ் சொல்லியிருக்கேன். ஈவினிங் வந்துட்டு சேர்ந்தே கோயிலுக்கு போகலாம். அப்படியே பீச்சுக்கு போகலாமா?" தங்கையிடம் கேட்க,

"கோவிலுக்கு வேண்ணா போகலாம்ணா..., பீச் இன்னொரு நாள் போகலாம்..." ஜீவி உரைக்க, அதை அவன் அப்படியே ஏற்றுக் கொண்டான்.

'இதுதான் ஜீவி சொன்ன விட்டுக் கொடுப்பதா? பகிர்தலா? புரிதலா?' ஹேமாவுக்கு இந்த சூழலில் தானும் ஒரு அங்கமாக வேண்டிய தவிப்பு கிளர்ந்தது. இப்படி ஒரு சூழல்..., விட்டுக்கொடுத்தல்..., கேட்டுக் கொள்ளல்..., அனைத்தும் வேண்டும்...' மனம் ஏக்கமாய் எண்ணியது.

# பகுதி - 5

கண்ணாடியில் தெரிந்த தன் பிம்பத்தை நம்ப முடியாமல் மீண்டும் மீண்டுமாக பார்த்துக் கொண்டிருந்தாள் ஹேமா. முதல் முறையாக அவள் அணிந்த சுடிதார்..., அதுவும் இளம் சிவப்பு நிறத்தில், அவளது நிறத்தை மேலும் எடுத்துக் காட்டும் விதத்தில் இருக்க, நிஜமாகவே தான்தனா இது..., தனக்குத் தானே கேட்டுக் கொண்டாள்.

"ஜீவி..., இந்த ட்ரெஸ் எனக்கு வித்தியாசமா இருக்கு இல்ல..." தன்னை ஒரு சுற்று சுற்றியவளாக வினவ, தோழியை சந்தோஷமாக பார்த்திருந்தாள் ஜீவித்யா.

"சூப்பரா இருக்கடி..., பக்கா சென்னை பொண்ணாயிட்ட..., அப்படியே ஒரு நாலு புடவை எடுத்து வச்சுக்கோன்னு சொன்னால் நீதான் கேக்கவே இல்லை..." அவளை நெட்டி முறித்தவள், மெல்லியதாக குறை பட்டாள்.

"சுடிதார்ன்னா ஓகே..., எனக்கு புடவையோட நீளத்தை பாத்தாலே பயமா இருக்கு. இதில் அதை கட்டுறதை நினைச்சாலே பயமா இருக்கு. எனக்கு வேண்டாம்ப்பா..." தன் கூந்தலை மெல்லிய கிளிப்பில் அடக்கிக் கொண்டாள்.

"கட்றதுக்கு நான்தான் ஹெல்ப் பண்றேன்னு சொன்னேனே..., நீயும் புடவை கட்டியிருந்தால் நல்லா இருந்திருக்கும்..."

"புடவை கட்றதுக்கு நீ ஹெல்ப் பண்ணுவ சரி. அது இங்கே இறங்கும், அங்கே இறங்கும், அதையெல்லாம் என்னால் கேர் பண்ணிட்டு இருக்க முடியாது. சுடிதாருக்கே ஏகப்பட்ட கண்டிஷன் போடுற..., இதில் புடவை வேறையா..., வேண்டாம்..." நிஜமாகவே அலறினாள்.

"சரி பிழைச்சு போ..., ரெடி ஆயிட்டியா? கிளம்பலாமா...? கண்ணாடி முன்னாடி இருந்து நகரவே மாட்டேங்குற..., ஹாஸ்பிடலுக்கு போற முதல் நாளே லேட்டா போனால்

நல்லா இருக்காது..." தன் ஃபயிலை கையில் எடுத்துக் கொண்டாள்.

"நான் ரெடி..." தானும் கைப்பையும், ஃபயிலுமாக கிளம்பி வெளியே வர, அவர்களை எதிர்கொண்டார் மீனாட்சி.

"என் கண்ணே பட்டுடும் போல இருக்கு..., முதல்ல பூஜை ரூமில் போய் சாமி கும்பிட்டு கிளம்புங்க..." அவர் உரைக்க, தாயின் காலில் விழுந்து எழுந்தாள் ஜீவித்யா. அதை வியப்பாய் பார்த்து நிற்க, தோழியை அழைத்துக்கொண்டு பூஜை அறைக்குச் சென்றாள்.

சரவணன் காரோடு வெளியே காத்திருக்க, அவனோடு மருத்துவமனைக்கு சென்றார்கள். "அண்ணா..., நீ வெயிட் பண்ண வேண்டாம். நாங்களே வீட்டுக்கு வந்துடறோம்..., நீ கிளம்பு..." அவள் உரைக்க, அவன் கிளம்பிவிட்டான்.

ரிசப்ஷன் சென்றவர்கள், அங்கே இருந்த செவிலியிடம், "டாக்டர் பரத் இருக்காங்களா?" ஜீவித்யா கேட்க,

"டாக்டர் இப்போதான் வந்தாங்க..., ரவுண்ட்ஸ் போயிருப்பாங்க. நீங்க வேண்ணா பாஸ்ட் ப்ளோர்ல இருக்க அவரோட ரூம்ல வெயிட் பண்ணுங்க" அவள் உரைக்க, யோசனையாக தோழியை திரும்பிப் பார்த்தாள்.

"எம்டி இருக்காரான்னு கேளு..." ஹேமா உரைக்க, செவிலியோ..., "எம்டி ரூம்லதான் இருக்காங்க. ஒரு நிமிஷம்..., நீங்க...?" அவள் கேள்வியாக இழுக்க,

"இன்டர்வியூக்கு வந்திருக்கோம்னு சொல்லுங்க..., அவருக்குத் தெரியும்..." ஜீவித்யா உரைக்கவே, வேகமாக இன்டர்காமில் அவரை அழைக்க முயன்றாள்.

அதே நேரம்..., மிகவும் பரபரப்பாக வந்த ஒரு செவிலி..., "அனி..., டாக்டர் இந்திராக்கு உடனே கால் பண்ணி வரச் சொல்லு..., ஒரு எமர்ஜன்சி கேஸ்..." உச்ச பரபரப்பில் உரைக்க, தொலைபேசியை அதன் இடத்தில் வைத்த அனி, குழப்பமாக அவளை ஏறிட்டாள்.

"ஏய்..., அவங்களே இப்போதான் நைட் டியூட்டி முடிச்சு வீட்டுக்கு கிளம்பி போனாங்க. அதான் டாக்டர் பரிமளா வந்தாங்களே..., அவங்களையே அட்டன் பண்ணச் சொல்லு. அதைவிட, இன்னும் மூணு டாக்டர் இருப்பாங்களே..." நிலைமையின் தீவிரம் புரியாமல் உரைத்தாள்.

"எனக்கு அது தெரியாதா...? பரிமளா டாக்டர் அங்கேதான் இருக்காங்க. நார்மல் டெலிவரி ஆக வேண்டிய கேஸ்..., திடீர்ன்னு அந்த லேடிக்கு பிபி ஹை ஆயிடுச்சு..., கூடவே குழந்தை வேற தலை திரும்பிடுச்சு. சிசேரியன் பண்ண வேண்டி இருக்கலாம்..., இந்திரா மேம் வந்தால்தான் சரியா இருக்கும்னு அவங்கதான் சொன்னாங்க..., முதல்ல கால் பண்ணு..." படபடப்பாகவே உரைத்தாள்.

"இப்போ அவங்களுக்கு கால் பண்ணா கூட, அவங்க வர அரைமணி நேரம் ஆகுமே..." தன் போக்கில் புலம்பியவள், தொலைபேசியை கையில் எடுத்தாள்.

"எக்ஸ்கியூஸ்மீ..., நான் வேண்ணா பாக்கவா...?" ஹேமா இடையிட, அனிதாவும், வேணியும் அவளை ஏறிட்டார்கள்.

"இவளும் கைனகாலஜிஸ்ட் தான்..." ஜீவித்யா உரைக்க,

"ஓ..., இன்னைக்கு புதுசா வர டாக்டர்ன்னு சொன்னாங்களே..., அது நீங்க தானா...?" கேட்ட வேணி..., என்ன செய்வது எனத் தெரியாமல் ஒரு நொடி தடுமாறிப் போனாள்.

அங்கே சட்டென முடிவெடுக்கும் அதிகாரம் அவர்களுக்கு கிடையாதே. அதே நேரம்..., "சிஸ்டர், போன் பண்ணிட்டீங்களா? டாக்டர் வராங்களா? எனக்கு என் பொண்டாட்டி வேணும்..., ப்ளீஸ் ஏதாவது பண்ணுங்க..." அந்த பெண்ணின் கணவன் கலங்கிய விழிகளோடு புலம்பினான்.

"ஜீவி..., நீ எம்டியைப் பார்..., நான் கேசை அட்டன் பண்றேன்..." சிஸ்டர், லேபர் ரூம் எங்கே...?" சட்டென முடிவெடுத்தவள், வேணியோடு நடந்தாள்.

அடுத்த ஒரு மணி நேரத்தில்..., பேஷண்டின் பிபியை சற்று சீராக்கி, குழந்தையையும் நார்மலாக பிறக்க வைத்தாள் ஹேமா. உடன் இருந்த பரிமளாவுக்கே ஒரு நொடி சிறு தடுமாற்றம் இருந்தது என்றால், ஹேமாவோ, சிறு பதட்டம் கூட இல்லாமல் நிலைமையை கையாண்ட விதம் கண்டு அசந்துதான் போனாள்.

அங்கே சிசேரியன் செய்வது இந்திரா டாக்டர் தான்..., எனவேதான் பரிமளா அவளை அழைக்கச் சொன்னாள். ஆனால்..., ஹேமா அதை தவிர்த்த விதம், சற்று அசந்துதான் போனாள்.

"ரியல்லி யூ ஹேவ் டன் ய ஒண்டர்புல் ஜாப்..." மனம் திறந்து பாராட்டினாள்.

"நான் வர முன்னாடி நீங்களே மெடிசின் கொடுத்து பேஷண்டை கொஞ்சம் நார்மல் பண்ணிட்டீங்களே..., நான் ஜஸ்ட் அசஸ்ட் தான் பண்ணேன்..." பெருந்தன்மையாகவே நடந்து கொண்டாள். அந்த நிமிடம் பரிமளா வீழ்ந்துதான் போனாள்.

ஹேமா அறையை விட்டு வெளியே வர..., "டாக்டர்..., நீங்க என் உயிரையே எனக்கு காப்பாத்தி கொடுத்திருக்கீங்க..., உங்களுக்கு எப்படி நன்றி சொல்றதுன்னே தெரியலை..." பேஷண்டின் கணவன் நன்றியோடு உரைக்க,

"இட்ஸ் மை டியூட்டி..." அவள் விலகி நடக்க முயன்றாள்.

"டாக்டர்..., உங்க நேம்..." அவன் குரல் பின்னால் ஒலிக்க,

"ஹ..., ஹேமா..." அவள் உரைக்க, "என் பொண்ணுக்கு உங்க நேம் தான் வைக்கப் போறேன்..." அவன் உரைக்க, திகைத்துப் போனாள்.

"வாட்..., ஒய்..." அதை வார்த்தையில் வெளியிட, அந்த நேரம் அங்கே வந்தாள் ஜீவித்யா.

"ஹேமா..., டெலிவரி நல்லபடியா முடிஞ்சதா?" கேட்டவாறு அவளை நெருங்க, "தேங்க்ஸ் டாக்டர்..." அவன் விடை பெற்றுச் சென்றான்.

"ஜீவி..., அவனோட பேபிக்கு என் நேம் வைக்க போறேன்னு சொல்றான்..., வாட்'ஸ் ஹேப்பனிங் ஹியர்...?" அவளால் அதை விட்டு வெளியே வர முடியவில்லை.

"டாக்டர்..., அவர் இருந்த மன நிலையில், உங்களுக்கு கோயிலே கட்டியிருப்பார்..., நீங்க நேம் வைக்கிறதுக்கு இவ்வளவு ஆச்சரியப்படறீங்க..." சொன்ன வேணி தன் வேலையை பார்க்கச் செல்ல, ஒரு நிமிடம் அங்கே நடப்பது எதுவும் அவளுக்கு புரியவில்லை.

"ஜீவி..., என்னடி இது...?" இப்படியான சூழல் அவளுக்கு புதிதாகவும், ஆச்சரியமாகவும் இருந்தது.

"இங்கே எல்லாம் அப்படித்தான்..., விடு..., பட்..., வந்த அன்னைக்கே ரெண்டு உயிரை காப்பாத்தி இருக்க... , எனக்கு எவ்வளவு பெருமையா இருக்கு தெரியுமா...? சிசேரியன் ஆகியிருக்க வேண்டிய கேஸ்..., நீ நார்மல் டெலிவரி பண்ணியிருக்க..." தோழியை அழைத்துக்கொண்டு நடந்தாள்.

"அது என் டியூட்டி..." .

"சரி விடு..., உனக்கு இதெல்லாம் புதுசாதான் இருக்கும். போகப் போக பழகிடும்..." வராண்டாவில் நடந்தார்கள்.

"எம்டி என்ன சொன்னார்...? நீ ஜாயிண்ட் பண்ணிட்டியா? உன்னோட வொர்க் பிளேஸ் எங்கே...?" அவளுடன் நடந்தவாறே கேட்டாள்.

"ஜாயிண்ட் பண்ணிட்டேன்... இந்த காரிடார் லாஸ்ட்ல திரும்பி, லெப்ட்ல போனால் ஓபி வார்ட்..., அங்கேதான் நான் இருப்பேன். இந்த காரிடார்ல நீ இருப்ப. முதல் மாடியில் பரத் அண்ணா இருப்பாங்க..." ஒவ்வொன்றாக உரைத்தவள், எம்டி அறைக்கு அவளை அழைத்து சென்றாள்.

"எம்டி உனக்காகத்தான் வெயிட் பண்ணிட்டு இருக்கார்..., நீ போ..." அவளை உள்ளே அனுப்பிவிட்டு, வெளியே இருந்த இருக்கையில் அமர்ந்து கொண்டாள்.

"எக்ஸ்கியூஸ் மீ..." அனுமதி வேண்டியவள் அறைக்குள் நுழைய, விஷ்வேஷ் அவளை புன்னகை முகமாக எதிர்கொண்டார். மருத்துவருக்கே உரிய கனிவு அவர் முகத்தில் கொட்டிக் கிடந்தது.

அவளைப் பார்த்த அவரது கண்களில் சிறு வியப்பும், மெச்சுதலும், பாராட்டுதலும் தெரிய, அது எதனால் என்பதை உணர்ந்தவள், அலட்டல் இல்லாத ஏற்போடு அவர் எதிரில் அமர்ந்தாள்.

அவர்களது உரையாடல் அனைத்தும் ஆங்கிலத்திலேயே இருந்தது. அவை உங்களுக்காக தமிழில்...,

"முதல் நாளே அசத்தலான ஒரு ஆரம்பம்..., உங்ககிட்டே கேள்வி கேட்கவே தேவையில்லை என்னும் அளவிலான பெர்பார்மென்ஸ்..., பரத்தின் தேர்வு எப்பொழுதும் சோடை போகாதுன்னு இன்னொரு முறை நிரூபிச்சிருக்கான்..., வெல்க்கம் டூ அவர் கிங்டம்..." அவள் கைகளை குலுக்கி வாழ்த்தினார்.

பரத்தின் பெயரை கேட்டவளுக்கு, அவனை இவ்வளவு நேரமாகியும் பார்க்க முடியவில்லையே...' என்ற எண்ணம் மனதில் ஓடினாலும், அதை அடக்கியவள், இவ்வளவு சுலபமான ஒரு நேர்முகத்தேர்வை எதிர்பார்க்காதவள், சற்று திகைத்து, சட்டென தெளிந்தாள்.

"தேங்கியு..." அவரது வாழ்த்தை இன்முகத்தோடு ஏற்றுக் கொண்டாள்.

"உங்களுக்கு தனி ரூம் அலாக்கட் பண்ணியிருக்கேன். உங்களோடவே ரெண்டு டிரெயினி டாக்டர்ஸ் எப்பவும் இருப்பாங்க. நீங்க சிசேரியனும் பண்ணுவீங்கன்னு நினைக்கறேன். டைம் மேனேஜ் பண்றதை பத்தி நீங்களே டிசைட் பண்ணிகோங்க.

"சிசேரியன் டைம் எப்பவும் மார்னிங் இருக்குற மாதிரி பாத்துக்கோங்க. ஏதாவது எமர்ஜென்சி என்றால் மட்டும் மேனேஜ் பண்ணிக்கலாம்..." அவர் உரைக்க அனைத்தையும் அமைதியாகவே கேட்டுக் கொண்டாள்.

'அவ்வளவு சிசேரியன் இருக்குமா என்ன...?' அவள் யோசனையை கலைத்தது அவரது குரல்.

"எனி அதர் கிளாரிபிகேஷன்...?" கேள்வியோடு அவளை ஏறிட்டார்.

"என்னோட அக்காமடேஷன்..., டியூட்டி டைம்..." அவள் இழுக்க,

"நம்ம ஹாஸ்பிட்டலுக்கு பின்னாடி ரெண்டு கெஸ்ட் ஹவுஸ் இருக்கு. அதில் ஒன்றை நீங்க யூஸ் பண்ணிக்கலாம். உங்களோட விசிட்டிங் கார்ட் நாளைக்கே வந்துடும்..., சோ ஃபர்தர் யூஸ்க்கு நீங்க அதை உபயோகப் படுத்தலாம்..." அவள் கேட்காததர்க்கும் சேர்த்தே அவர் விளக்கம் அளிக்க, திருப்தியாக புன்னகைத்தாள்.

"டியூட்டி டைம்..., முதல்ல கொஞ்ச நாள் உங்களுக்கு டே டியூட்டி மட்டும்தான் இருக்கும். ஏதாவது எமர்ஜன்சி என்றால் மட்டும் நைட் வர வேண்டி இருக்கலாம்..." உரைத்தவர், மேலும் சில விதிமுறைகளை உரைக்க, அனைத்தையும் கேட்டுக் கொண்டாள்.

அதன் பிறகு அவரிடம் விடை பெற்றவள்..., நாளைக்கு வந்து டியூட்டியில் ஜாயிண்ட் செய்வதாக சொல்லிவிட்டு கிளம்பினாள்.

அவள் வெளியே வர, "ஹேமா..., என்ன..., எல்லாம் ஓகேயா?" ஜீவித்யா கேட்க, தன் கட்டை விரலை உயர்த்தி காட்டினாள்.

"சரி..., வீட்டுக்கு கிளம்பலாம். அம்மா ஏற்கனவே ரெண்டு முறை கால் பண்ணிட்டாங்க..." அவள் உரைக்க, அவள் கை பிடித்து தடுத்தாள்.

"என்னடி...?" கேள்வியாக அவளை ஏறிட,

"பரத்தை பார்க்காமலே போகலாம்னு சொல்ற..., ஜஸ்ட் ஒரு தேங்க்ஸ்சாவது சொல்ல வேண்டாமா...?" சிறு எதிர்பார்ப்பும், மெல்லிய கோபமும் அவள் குரலில் வெளிப்பட்டது.

"ம்ச்..., அண்ணா அதெல்லாம் எதிர்பார்க்க மாட்டாங்க. எப்படியும் நாம இங்கேதானே இருக்கப் போகிறோம்..., பிறகு பாத்துக்கலாம்..." ஏனோ அவர்களது சந்திப்பை அவள் தாமதிக்க விரும்பினாள்.

அவள் உள்ளுணர்வு அவளுக்கு உணர்த்தியது..., அவர்கள் சந்திப்பு ஒரு சாதாரண சந்திப்பாக இருக்கப் போவதில்லை என்று. அவளது கவலை எல்லாம் ஒன்றுதான்..., பரத்தின் குணத்துக்கும், எதிர்பார்ப்புக்கும், ஹேமாவால் ஈடுகொடுக்க முடியாது என்பதே.

"என்ன விளையாடுறியா? தட்ஸ் நாட் ஃபேர்..., வி ஷுட் மீட் ஹிம்..." அழுத்தி உரைக்க, அதற்குமேல் அவளால் தவிர்க்க முடியவில்லை.

"சரி வா போகலாம்..." அவளை அழைத்துக்கொண்டு படிகளில் விரைந்தாள்.

முதல் தளத்தில் இருந்த ரிசப்ஷனில் கேட்டு, அவனது அறையை நெருங்க, அவர்களை எதிர்கொண்டாள் கேத்தரின்.

"டாக்டர் பரத் இருக்காங்களா...?" அவளிடம் கேட்க,

"டாக்டர் ஓபி முடிச்சுட்டு இப்போதான் கேண்டீன் கிளம்பினாங்க. இப்போ வர நேரம்தான். வெயிட் பண்ணுங்க..." அங்கிருந்த இருக்கையை காட்டினாள்.

"ஓகே தேங்க்ஸ்..." இருவரும் வெளியே அமர்ந்தார்கள்.

அதே நேரம்..., "வித்யா..." மெல்லிய அழைப்பு அவளைத் தீண்ட, தன் செவிகளைத் தீண்டிய குரலை நம்ப முடியாத திகைப்பில் இருக்கையில் இருந்து சட்டென எழுந்துவிட்டாள் ஜீவித்யா.

"நட்ராஜ்..." அவள் இதழ்கள் சன்னமாய் முணுமுணுக்க, தன் எதிரில் நின்றவனை ஆச்சரியம் விலகாமல் வெறித்தாள்.

கல்லூரிக் காலத்தில் தன்னிடம் காதலை உரைத்தவன்..., தனக்கு விருப்பமில்லை, அப்படி ஒரு எண்ணமே இல்லை

எனச் சொன்னவுடன், மேலே தொல்லை செய்யாமல் கண்ணியமாக விலகிச் சென்றவன். அதன் பிறகு எத்தனையோ சந்தர்ப்பங்களில், கல்லூரியில் எதிரே கண்டாலும், மெல்லிய புன்னகையோடு தன்னை கடந்து சென்றவன்.

கல்லூரியை விட்டு சென்றபொழுது கூட, இறுதியாக என சொல்லிக்கொண்டு கூட தன் எதிரில் வந்து நிற்காதவன், தன்னை மறந்துவிட்டான் என எண்ணியிருக்க, அப்படி இல்லை என சொல்லும் விதமாக, கண்களில் காதலை நிரப்பிக்கொண்டு தன் எதிரில் நிற்க, அவள் திகைக்காமல் என்ன செய்வதாம்?

'நான் வருவது இவருக்கு முன்னாடியே தெரியுமா? இல்லையென்றால் எதிர்பாராத சந்திப்பா?' அவள் மனதின் கேள்வியை தெளிவாக்கியது அவனது கேள்வி.

"ஹப்பா..., எங்கே என்னை அடையாளம் தெரியலைன்னு சொல்லிடுவியோன்னு ரொம்ப பயந்துட்டே வந்தேன்..." இதழ் ஓரம் சிறு புன்னகை இருந்தாலும், அவனது பயத்தை அவனது கண்கள் வெளிப்படுத்த, இத்தனை வருடங்களாக இரும்பாக இருந்த அவள் இதயம் சற்று உருகித்தான் போயிற்று.

"நட்ராஜ்..." இப்பொழுது அவன் பெயரை உரக்க அழைக்க,

"என் பெயர் கூட ஞாபகம் இருக்கா...? தேன்க் காட்..." தன் சிகையை அழுத்தமாக கோதிக் கொண்டான். அதுவே உரைத்தது..., அவன் எவ்வளவு டென்ஷனாக இருக்கிறான் என்று.

அவளுக்கோ..., அவனிடம் என்ன பேசுவது? எப்படி பேசுவது எனத் தெரியாத தயக்கம். வார்த்தைகள் கிடைக்காத தடுமாற்றத்தில் அவள் இருக்க, "எப்படி இருக்க வித்யா...?" அவன் குரலில் இருந்த பாவனை, கண்களை இமைக்க கூட மறுத்து, அவளை விழிகளில் சிறைபிடித்த விதம், ஒரு பெண்ணாக அவளுக்கு சட்டென மூச்சடைத்தது.

'இல்லை..., இது எதேச்சையான சந்திப்பு இல்லை. அவன் கண்களில் திகைப்பை விட, அதிகமாக வழிந்த எதிர்பார்ப்பும், ஏக்கமும், அவளை தீண்டிச் சென்றது.

"ம்..., ரொம்ப நல்லா இருக்கேன். நீங்க...?" தன்னை முயன்று சீராக்கியவள், அவனிடம் கேட்டாள்.

"நீ சொன்ன அதே பதிலைத்தான் நானும் சொல்லணும்னு நினைக்கறேன்..., பட்..." அவன் விழிகள், அவள் விழிகளுக்குள் ஊடுருவ முயன்றது.

சட்டென தன் விழியை திருப்பிக் கொண்டவள், "நீங்களும் இங்கேதான் வொர்க் பண்றீங்களா...?" அவள் இதயம் காரணமே இல்லாமல் தடதடத்தது.

"இங்கேதான் வொர்க் பண்றேன்னு தெரிந்திருந்தால் இங்கே வந்திருக்கவே மாட்டியா...?" ஒரு மாதிரி ஏக்கமாக ஒலித்தது அவன் குரல்.

இதற்கு என்ன பதில் சொல்வதாம்...? "இது ஒரு காமன் ஹாஸ்பிடல்..., இங்கே நீங்க வொர்க் பண்ணக் கூடாதுன்னு சொல்ல நான் யார்...?" தன் உணர்வுகளை மறைத்து சொன்னாள்.

'ஸ்டில்..., ஐ'ம் வெயிட்டிங் பார் யூ...' நுனி நாக்குவரை வந்த வார்த்தைகளை சிரமப்பட்டு விழுங்கிக் கொண்டான். அவளைப் பார்த்த முதல் நாளே அவளை தொல்லை செய்ய அவனுக்கு விருப்பம் இருக்கவில்லை.

"வித்யா..." அவன் அழைக்க, சட்டென அவன் விழி நோக்கினாள். அவன் உரைக்காத வார்த்தைகளை, அவன் விழிகள் அவளுக்கு உரைக்க, அதை எதிர்கொள்ள முடியாமல் திணறித்தான் போனாள்.

"ஜாயிண்ட் பண்ணிட்டியா...?" இனிமேல் தினமும் அவளைப் பார்க்கலாம் என அவன் உணர்வுகள் ஒவ்வொன்றும் குதியாட்டம் போட்டது. அதை அவனது மலர்ந்த முகம் வெளிப்படுத்த, தன்னை இயல்பாக இருப்பதுபோல் காட்ட மிகவும் சிரமப்பட்டாள் ஜீவித்யா.

"ம்..." மெல்லியதாக முனக,

"இங்கே லெப்ட்ல தான் என்னோட ரூம்..." அந்த செய்தியில், அறைக்கு வாயேன் என்ற அழைப்பு தொங்கி நிற்க, அவன் சொல்ல வருவது புரியாதவள்போல் நடித்தாள்.

"ஓ..., நைஸ்..." அவள் சாதாரணமாக கேட்டுக் கொள்ள, அவன் முகம் சற்று வாடித்தான் போயிற்று.

"தென்..." அவன் இழுக்க, அப்பொழுதுதான்..., உடன் இருந்த தோழி அவள் நினைவிற்கு வந்தாள்.

வேகமாக தன் அருகில் இருந்த இருக்கையை திரும்பிப் பார்க்க, "அவங்க அப்போவே போய்ட்டாங்க..." அவள் தேடலுக்கான பதிலை அவன் கொடுத்தான்.

ஹேமாவிடம் இருக்கும் மிகப்பெரும் நல்ல விஷயம்..., அடுத்தவர் விஷயத்தில் அளவுக்கு அதிகமாகவும் சரி, அவசியமாகவும் சரி மூக்கை நுழைக்க மாட்டாள். இப்பொழுது அவளைச் சென்று பார்த்தால் கூட, 'உன்னோடு பேசியவர் உனக்குத் தெரிந்தவரா?' என்ற கேள்வியைக் கூட அவள் கேட்க மாட்டாள் என்பது அவளுக்குத் தெரியும்.

"ஹையோ..., அவளுக்கு இந்த இடம் புதுசு..., நான் அவளைப் போய் பாக்கறேன்..." அவனிடம் விடை பெற்றாள்.

சட்டென அவனிடம் ஒருவித இறுக்கம் தென்பட, மனதுக்குள் சற்று மறுகிப் போனாள். ஆனால்..., அவனிடம் ஏற்கனவே சொன்ன காரணங்கள் அனைத்தும் அப்படியே இருக்கையில், அவன் காதலை ஏற்றுகொள்வது அவளுக்கு இப்பொழுதும் இயலாத காரியமே.

அப்படி இருக்கையில் அவன் மனதில் பொய்யான நம்பிக்கையை அவள் விதைக்க தயாராக இருக்கவில்லை.

"ஓகே பாய்..." அவன் தன்னை சீராக்கிக் கொண்டான்.

தான் இருந்த இடத்தில் இருந்து படி இருக்கும் பக்கம் நடக்க, அவன் பார்வை தன் முதுகை துளைப்பதை உணர்ந்தாலும்,

மறந்தும் கூட அவனை திரும்பி பார்க்கவில்லை.

முனையில் திரும்பும் வேளையில், தன்னை திரும்பி பார்ப்பாளா? அவன் இதயம் எதிர்பார்ப்பில் விம்ம, 'திரும்பிவிடாதே...' தனக்குத் தானே அறிவுறுத்தியவளாக, காரிடாரில் சட்டென திரும்பி படிகளில் இறங்கினாள்.

நட்ராஜின் முகத்தில் அப்பட்டமான ஏமாற்றம் கவிழ, 'இன்னும் அவள் அதே மனநிலையில்தான் இருக்கிறாளா? என் காதலை ஏற்க மாட்டாளா? என் காத்திருப்புக்கு பயன் இல்லையா...?' அவன் இதயம் வேதனையைச் சுவைத்தது.

படிகளில் இறங்கியவளது நிலைமையும் அவனை ஒத்தே இருந்தது. அதை உணர்ந்தவள்..., 'அப்படின்னா..., என் மனதில் அவனுக்கு இடம் கொடுத்திருக்கிறேனா?' தன் நினைப்பையே அவளால் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

முயன்று அதை ஒதுக்கியவள்..., 'ஆண்டவா..., இவ பரத் அண்ணாவை பாக்க கேண்டீனே போயிட்டாளா?' அங்கே வந்த செவிலியிடம் கேட்டுக் கொண்டு கேண்டீன் விரைந்தாள்.

அவள் கேண்டீனுக்குச் சென்று பார்வையை சுழற்ற, அங்கே இருந்த கூட்டத்தின் மத்தியில் அவளைத் தேடுவது சற்று சிரமமாகத்தான் இருந்தது.

'காணோமே...' எண்ணியவள், அங்கிருந்து மறு பக்கம் செல்ல முயல, பரத் ஒரு மேஜையின் முன்னால் இருந்து எழுவது அவள் பார்வையில் விழுந்தது.

'அண்ணா, இங்கே இருக்காங்க..., இவ...' பார்வையை சற்று நகர்த்த, டோக்கன் வாங்கும் இடத்தில் ஹேமா நிற்பதைப் பார்த்தாள்.

அவள் அருகில் செல்லப் போனால், பரத்தின் பார்வையில் தான் பட்டுவிடுவோம் என்பதால், சற்று ஒதுங்கினாள்.

அதே நேரம்..., தானும் எதையோ வாங்க வேண்டி டோக்கன் வாங்கும் இடத்துக்கு சென்றவன், "அண்ணே..., ஒரு

டோக்கன் கொடுங்க..." ஹேமாவின் அருகில் நின்றவன் குரல் கொடுக்க, சட்டென அவனைத் திரும்பிப் பார்த்தாள்.

அவனோ..., தன் பர்சில் இருந்து பணம் எடுப்பதில் கவனமாக இருக்க, "பரத்..." அவன்தான் என்ற நம்பிக்கையில் அழைத்தாள் ஹேமா.

அவள் குரலை தினமும் அலைவரிசை இல்லாமலே கேட்டுக் கொண்டிருந்தவனுக்கு, எதிரிலேயே ஒலிபரப்பப்பட, "ஹனி..." அவனும் அதே நம்பிக்கையில் அழைத்தான்.

தான் அறிமுகப்படுத்தாமலேயே..., விதி அவர்கள் இணைப்பதை திகைப்பாய் பார்த்துக் கொண்டிருந்தாள் ஜீவித்யா.

# பகுதி - 6

சுற்றிலும் இருக்கும் இயக்கம் அனைத்தும் ஒரு நொடி உறைந்து போனது போல் இருந்தது. தன் கற்பனைக்கு அப்பாற்பட்டு, எதிரில், ஆண்மையின் இலக்கணமாக நின்ற பரத்தை ஆவலாக பார்த்துக் கொண்டிருந்தாள் ஹேமா.

பரத்தோ..., எமி ஜாக்சனின் குரல் மட்டும்தான் இருக்கும் என எண்ணினால், கிட்டத்தட்ட அவளையே ஒத்திருந்த உருவத்தை அவன் நிச்சயம் எதிர்பார்க்கவில்லை. நொடியில் அவள் உடையையும் அவன் பார்வை ஸ்கேன் செய்ய, 'சுடிதார் அணிந்த எமி...' மனம் அதன் போக்கில் எண்ணியது.

அதைவிட, ஹேமாவின் அழகு..., சுற்றி இருந்த ஆட்களில், பெண்களே கூட சற்று ஆவலாக பார்க்கும் அளவுக்கு, கவர்ந்து இழுக்கும் விதத்தில் இருந்தாள் என்றால், ஆண்களைப் பற்றி கேட்கவா வேண்டும்?

டோக்கன் கொடுக்கும் அவனே..., செய்ய வேண்டிய வேலையை ஒரு நிமிடம் மறந்து நிற்க, "எப்பா..., டோக்கன் போடறியா இல்லையா?" வயதான பெண்மணியின் குரலே அனைவரையும் நடப்புக்கு திருப்பியது எனலாம்.

பரத்தால், அவள் முகத்தில் இருந்து பார்வையை திருப்பவே முடியவில்லை.

"பரத்..., டூ யூ ரிமம்பர் மீ...?" அவளது டிரேட்மார்க் கண் சிமிட்டலில், தலை சரித்து, ஆச்சரியமாக வினவினாள்.

என்னவோ அவள் செய்கையில் இடறி விழுந்து மூழ்கும் உணர்வு. அந்த நிமிடம், சந்தேகமே இல்லாமல், ஒரு விடலைப் பையனின் மனநிலையில் இருந்தான்.

சுற்றி இருந்த சில வயது பையன்களின் பொறாமைக்கு ஆளானான் பரத். அவனையும் மீறி..., சிறு குறுகுறுப்பும் மனதுக்குள் எட்டிப் பார்த்தது. அவனுக்கே தன்னைக் குறித்து ஆச்சரியமாக இருக்க, பிரிய மறுத்த தன் பார்வையை பிடிவாதமாக விலக்கினான்.

ஒரு நாள் மட்டுமே பேசிய தன்னை, தன் குரலை வைத்தே அடையாளம் கண்ட விதம்..., 'அப்படியென்றால் இவனும் என்னை எண்ணிக் கொண்டிருந்தானா?' மனதுக்குள் இனம் புரியாத சந்தோசம்.

"ஏன் நீ மட்டும்தான் என்னை ஞாபகம் வைத்திருப்பாயா?" தன்னை மீறி தமிழில் உரைத்தவன், அவளுக்கு தமிழ் தெரியாது என ஆசுவாசப்பட,

"ரியல்லி இட்ஸ் எ ப்ளசன்ட் சர்ப்ரைஸ். நான் உன்னைத் தேடித்தான் இங்கே வந்தேன். பட்..., இந்த கிரவுட்ல உன்னை கண்டு பிடிக்க முடியலை. சோ..., வந்ததுக்கு ஒரு ஜூஸ் குடிக்கலாம்னு வந்தேன்..." ஆங்கிலமும் தமிழும் கலந்து அவள் உரைக்க, ஒரு ஆனந்த அதிர்ச்சியில் ஒரு நொடி திணறிப் போனான்.

அவளது பிள்ளைத்தமிழ் அவன் காதில் தேன்மாரி பொழிய, "ஹனி..., நீ தமிழ் பேசுவியா...?" நம்ப முடியாத ஆச்சரியம் அவனிடம்.

"யா..., என் பேரன்ட்ஸ் தமிழ் தான்..., தமிழ் ரொம்ப நல்லாவே பேசுவேன்..." அவர்களை சுற்றி நின்றவர்கள் அவர்களது உரையாடலையும், அவளையும் ஆவலாக திரும்பிப் பார்க்க, அப்பொழுது சற்று சங்கடமாக உணர்ந்தான்.

"ஷெல் வீ மூவ் தேர்...?" அவளிடம் கேட்க, "sure..." தாங்கள் வாங்க வேண்டிய டீ டோக்கனை மறந்து அங்கிருந்து நகர்ந்தார்கள்.

"ஜீவித்யா எங்கே...? உன்னோடதானே இருந்திருப்பா...?" அவன் பார்வை சுழல, இதற்குமேல் மறைவில் நிற்பது சரியாக இருக்காது என அங்கிருந்து அவர்களை நோக்கி வந்தாள் ஜீவித்யா.

"அண்ணா..., எப்படி இருக்கீங்க...?" அவன் முன்னால் நின்றாள்.

"ஹேய்..., ஜீவித்யா..., ரொம்ப நல்லா இருக்கேண்டா. ரொம்ப பெரிய மனுஷி ஆகிட்ட. ரெண்டு வருஷம் உன்னை ரொம்ப மாத்திடுச்சு..." பாசமாக வருடியது அவன் பார்வை.

"நீங்களும் இன்னும் ஜெம்மா மாறிட்டீங்க போங்க. டியூட்டியில் ஜாயிண்ட் பண்ணிட்டோம்ண்ணா. நாளையில் இருந்து இங்கேதான்..., ரொம்ப தேங்க்ஸ்ண்ணா..., நீங்க இல்லன்னா கொஞ்சம் கஷ்டமா போயிருக்கும். அதென்னமோ இக்கட்டான நேரத்தில் எல்லாம் நீங்கதான் ஹெல்ப் பண்றீங்க...".

"அன்னைக்கு சொன்னதேதான் இன்னைக்கும். இது ஒரு அண்ணனோட கடமைம்மா..." செல்லமாக அவள் தலையைப் பிடித்து ஆட்டினான்.

அவள் நினைவு கல்லூரி நாளில் அவனை சந்தித்ததை எண்ணிப் பார்த்தது. கல்லூரியின் முதல் நாள்..., ரேகிங்க்கு பயந்து, சிறு நடுக்கத்தோடே கல்லூரிக்குள் அடி எடுத்து வைத்தாள். அவளது தந்தைக்கு கூட அதே பயம்தான்.

மகள் விரும்பினாள் என்பதற்காக மட்டுமே அவளை மருத்துவம் படிக்க சம்மதித்தார். அதுவும் மெரிட்டில் சீட் கிடைத்திருக்க, அதை தவிர்க்க வைக்கவும் அவருக்கு மனமில்லை.

"அம்மாடி..., பாத்தும்மா..., எதுவா இருந்தாலும் அப்பாகிட்டே சொல்லணும், இங்கே நடப்பதை சொன்னால், அப்பா படிக்க விட மாட்டாங்கன்னு மறைக்க கூடாது..." ஆயிரம் பத்திரங்கள் சொல்லி உள்ளே அனுப்பினார்.

தந்தையிடம் தைரியமாக காட்டிக் கொண்டாலும், அவளுக்கு உள்ளுக்குள் உதறலாகவே இருந்தது. கவர்மெண்ட் காலேஜ் என்பதால், மாணவர்களுக்கான கெடுபிடி சற்று குறைவாகவே இருக்க, முதல்நாள் அந்த வளாகமே சற்று களேபாரமாகத்தான் இருந்தது.

தன் பயந்த முகமே மற்றவர்களுக்கு தன்னை காட்டிக் கொடுத்துவிடும் என்பது புரிய, முயன்று முகத்தை சீராக்கிக் கொண்டாள். ஆனாலும், அவள் நடையில் இருந்த

தயக்கம், கண்களில் தெரிந்த மிரட்சி, அவளை புதியவளாக பறைசாற்ற, அங்கே கூடியிருந்த கும்பலில் இருந்த ஒருவனின் பார்வை அவள்மேல் பதிந்தது.

"ஏய் பிங்க் சுடிதார்..., இங்கே வா..." குரல் உயர்த்தி அழைக்க, அவள் இதயம் திக்கென அதிர்ந்தது.

நிற்காமல் நடந்தால் விளைவுகள் விபரீதமாக இருக்கும் என அவளது அண்ணன் சொல்லி அனுப்பியிருக்க, சட்டென நின்றுவிட்டாள். அதென்னவோ அங்கே செல்லவே முடியாமல், கால்கள் அசைய மறுத்தன, அதே நேரம்..., அவளுக்கு எதிரில், வெள்ளை 'கோட்'டை தோளில் போட்டுக் கொண்டு, கையில் தடிமனான இரண்டு புத்தகங்களை சுமந்துகொண்டு வெகு இயல்பாக அங்கே வந்தான் பரத்.

அவனது செய்கையே..., அவன் சீனியர் மாணவன் என அவளுக்கு உணர்த்த, கூடவே..., அவன் கண்களில் தெரிந்த தீட்சண்யமும், சுற்றிலும் நடப்பவற்றை பார்த்து சற்று கோபம் கொண்ட அவன் முக பாவனையும், அவன் நல்லவன் என்பதை அவளுக்கு பறை சாற்ற, "அண்ணா..." தன்னை தாண்டி செல்லப் போனவனை தைரியமாக அழைத்து விட்டாள்.

அவள் யாரையோ அழைக்கிறாள் என எண்ணி, அவளைத் தாண்டிச் செல்ல முயன்றவன், எதற்கும் உறுதிபடுத்திக் கொள்ள, அவளை ஏறிட்டான்.

அவள் அவனையே பார்க்க, "அண்ணா..., சீனியர் எல்லாம் ரேகிங் பண்ண கூப்பிடுறாங்க. நீங்க அதை தடுத்து சண்டையெல்லாம் போட வேண்டாம். ஜஸ்ட், இவ என்னோட தங்கச்சின்னு மட்டும் சொல்லிட்டு போய்டுங்க..., கொஞ்சம் கன்சிடர் பண்ணுவாங்க..., ப்ளீஸ்..." விழிகளால் கெஞ்சினாள்.

அவன் அதிகம் யோசிக்கவெல்லாம் இல்லை, "என்னோட நேம் பரத்..." உரைத்தவன், அவளோடு அவர்கள் அருகில் சென்றான்.

அந்த கூட்டத்தில் இருந்தவர்களோ..., "என்ன சீனியர் நீங்க வரீங்க..., நீங்க போங்க..., நாங்க இந்த பாப்பாவைதான் கூப்பிட்டோம்..." அவளை அழைத்தவன் உரைக்க,

"எனக்கும் அது தெரியுது ஜூனியர்..., இவ என்னோட தங்கை..., அதை சொல்லி விட்டுட்டு போகலாம்னுதான் வந்தேன்..." அவனும் அதே விதத்தில் உரைக்க, அனைவரின் பார்வையும் அவர்களை நம்ப முடியாமல் ஏறிட்டது.

அந்த கூட்டத்தில் ஒருவன்..., "தங்கச்சி..., அண்ணனோட பேரை மட்டும் சரியா சொல்லிடு பார்ப்போம்..." உன் பேச்சை நான் நம்பவில்லை என மறைமுகமாக உணர்த்த, பரத் தன் பெயரை உரைத்ததன் காரணம் புரிய, அவனுக்கு மனதுக்குள் நன்றி உரைத்துக் கொண்டாள்.

"பரத் அண்ணா..." அவள் நடுங்கும் குரலை மறைக்க முடியாமல் உரைக்க, சட்டென அங்கே ஒருவித அமைதி நிலவியது.

"இவ என்னோட தூரத்து சொந்தம்..., வேற ஏதாவது இருந்தால் நீங்களே கேட்டுக்கோங்க..., நான் போகட்டுமா...?" அவன் கேட்க, எங்கே விட்டுவிட்டு போய்விடுவானோ என ஜீவித்யா ஒரு நொடி நடுங்கிப் போனாள்.

"சீனியர்..., தங்கச்சியை கையோட கூட்டி போய்டுங்க. என்ன..., பேரை மட்டும் சொல்லச் சொல்லுங்க..." மற்றொருவன் உரைக்க,

"நீயே சொல்லும்மா..." அவளிடம் பரத் உரைக்க, "ஜீவித்யா..." இப்பொழுது சற்று தைரியமாகவே உரைத்தாள்.

"ஓகே கைஸ்..., தேங்க்ஸ்..." அவர்களுக்கு கை கொடுத்தவன், "வாம்மா..." அவளை அழைத்துக்கொண்டு சென்றான்.

"ரொம்ப தேங்க்ஸ்ண்ணா..., இந்த ஹெல்ப்பை நான் மறக்கவே மாட்டேன்..." அவள் உணர்ந்து உரைத்தாள்.

"ஒரு அண்ணனோட கடமைம்மா இது. இதுதான்..., இந்த ஹால்லதான் இன்னைக்கு உங்க மீட் இருக்கும். உங்க கிளாஸ் எங்கேன்னு அவங்களே சொல்லுவாங்க. ஆல் தி பெஸ்ட்..." வாழ்த்திவிட்டு விடை பெற்றான்.

அதன் பிறகு ஒரு வாரத்தில் மீண்டும் அவர்கள் எதேச்சையாக சந்திக்க, ஜீவித்யாவே அவனை நெருங்கி பேசினாள். பழைய நோட்ஸ், புக்ஸ் என அவள் கேட்க, படித்துவிட்டு கொடுக்கச் சொல்லி அவன் உரைக்க, புக்ஸ் வாங்கும் செலவு கூட அவளுக்கு இருக்கவில்லை.

அவள் குடும்ப சூழல், அவன் வீட்டு நிலை, பெற்றவர்கள், அவளது அண்ணன் என இறுதியில் அவனும் சரி, அவளும் சரி இரு வீட்டுக்கும் மற்றொரு பிள்ளையாகவே மாறிப் போனார்கள்.

பரத்துக்கு ஒரு வருட ஜூனியர் தான் நட்ராஜ். அன்று அவளை ரேகிங் செய்ய இருந்த கூட்டத்தில் அவனும் ஒருவன். பரத்தைப் பற்றி அவனுக்கு நன்றாகவே தெரியும். ஜூனியர் என பரத் அழைத்தது கூட அவனைத்தான். 'எதுவும் சொல்லிவிடாதே...' என அவன் கண்கள் காட்டிய செய்தியைப் படித்து அமைதியாக அமர்ந்து கொண்டான்.

ஏனோ அவளை பார்த்த நொடியிலேயே அவள்மேல் மெல்லிய ஈர்ப்பு கொண்டான். அவனும் தன் வீட்டு பொறுப்பை உணர்ந்த மகன் ஆகையால், இரண்டு வருடங்கள் அமைதியாகவே இருந்தான். ஐந்தாம் வருடம், அவளிடம் தன் காதலை வெளிப்படுத்த,

"சாரி..., எனக்கு இன்ட்ரெஸ்ட் இல்லை..." அப்பொழுதே தன் மறுப்பை வெளியிட்டாள். அவளுக்கு, அவன் காதலை சொன்ன நொடி நினைவிற்கு வந்தது அவளது குடும்பம்தான்.

ஒரு சாதாரண கிளார்க்கான அவளது தந்தைக்கு தன் மகளை ஒரு பிஎஸ்சி படிக்க வைத்து, ஒருவனின் கரத்தில்

பிடித்து கொடுக்க வேண்டும் என்பது மட்டுமே எண்ணமாக இருக்க, மகளோ மருத்துவர் ஆகவேண்டும் என சொன்னதை எண்ணி சற்று கலங்கித்தான் போனார்.

மெரிட் சீட் என்பதால் பீஸ் குறைவாக இருந்தாலும், அதன் பிறகு..., அவளுக்கு சமமான வரனை தேடுவது, அதற்கு இணையான சீர் கொடுப்பது என அடுக்கடுக்காக எண்ணுகையிலேயே தலை சுற்றிப் போனது.

அவர்கள் வீட்டில் எந்த முடிவாக இருந்தாலும் அனைவரும் சேர்ந்தே எடுப்பார்கள் என்பதால், வீட்டில் இதைப் பற்றிய பேச்சு எழ, அவர்கள் பார்க்கும் எந்த வரனுக்கும் தயக்கமே இல்லாமல் சம்மதம் சொல்வேன் என உரைத்தவள், எந்த காலத்திலும் மருத்துவம் படித்தவன்தான் மணாளனாக வேண்டும் என கேட்க மாட்டேன் என உறுதி கொடுத்த பிறகே சற்று நிம்மதியாக மூச்சு விட்டார்கள்.

அன்று தனிமையில் அவளது அண்ணன் சரவணன் பேசியது இன்றும் அவளுக்கு நினைவில் இருக்கிறது.

"ஜீவி..., உன் ஆசைக்கு குறுக்கே நிற்க வேண்டாம்னு தான் அம்மாவும் அப்பாவும், நானும் இதற்கு சம்மதிக்கிறோம். எந்த காலத்திலும் எங்க நம்பிக்கைக்கு துரோகம் மட்டும் பண்ணிட கூடாது. கல்லூரி காலத்தை ரொம்ப சந்தோஷமா அனுபவி. அதே நேரம்..., மனசை அலைபாய விடாதே.

"சப்போஸ்..., அப்படி ஏதாவது இருந்தால், தயவு செய்து இந்த அண்ணாகிட்டே மட்டுமாவது உண்மையை சொல்லிடணும்" ஒரு அண்ணனாக அவனது பயம் புரியவே செய்தது.

"நீங்க பார்த்து சொல்லும் மாப்பிள்ளைக்கு நான் மறுக்காமல் சம்மதம் சொல்லுவேண்ணா..." அவள் உரைத்த பிறகே சற்று நிம்மதியானான். ஒரு மிடில் கிளாஸ் ஃபேமிலிக்கே உரிய பயம் அது. சில நடைமுறை சிக்கல்களை அவர்களால் எந்த நேரத்திலும் யோசிக்காமல் இருக்க முடியாதே.

கூடவே..., வீட்டின் நிலையும் புரிய, தான் படித்து முடித்த பிறகு, அவர்கள் செலவழித்த தொகையை, அவர்களுக்கு சம்பாதித்து கொடுத்த பிறகே தன் திருமணத்தை பற்றி யோசிக்க வேண்டும் என முடிவெடுத்தவள், அதை இப்பொழுது செயல்படுத்தியும் காட்டிவிட்டாள்.

லண்டன் வேலைக்கு அவள் பிடிவாதமாக செல்லக் காரணமே பெற்றவர்களின் பாரத்தை தன்னால் முடிந்த அளவு குறைக்க வேண்டும் என்பதற்காகவே. அதை உணர்ந்துகொண்ட சரவணன்..., அவள் வெளிநாடு கிளம்பும் முன்னர், அவள் கைகளை பற்றிக்கொண்டு நெகிழ்ந்துதான் போனான்.

பரத்துக்கும் அவள் வெளிநாடு செல்வதன் காரணம் புரிய, வாழ்த்தி அனுப்பி வைத்தான். அவளுக்கு மேலே படிக்க ஆசை இருந்தாலும், பெற்றவர்களை கஷ்டபடுத்த விரும்பாமல், ஜெனரல் டாக்டராகவே இருந்து கொண்டாள்.

"ஜீவித்யா..., இந்த டேபிள்ள உக்காருங்க..., நான் டீ வாங்கிட்டு வரேன். வேற ஏதாவது சாப்பிடறியா?" அவள் நினைவுகளை கலைத்தவன், முயன்று தன் பார்வையை ஹேமாவின் பக்கம் செல்வதை தவிர்த்தான்.

"டீ மட்டுமே போதும்ண்ணா..., லஞ்ச் சாப்பிடுறதுக்கு வீட்டுக்கு கிளம்பணும்" அவள் உரைக்க, அவன் விலகிச் சென்றான்.

அவன் செல்லவே..., "ஏய் லூசு..., சொல்லாம கொள்ளாம இப்படித்தான் கிளம்பி வருவியா? இதென்ன லண்டனா? உன்னை காணோம்னு திகைச்சு போயிட்டேன்..." தோழியிடம் பொரிந்தாள்.

"உனக்கு தெரிஞ்சவங்க வந்தாங்க..., அங்கே டிஸ்டப்பா இருக்க வேண்டாம்னு வந்தேன். அண்ட் ஆல்சோ..., பரத்தை தேடலாம்னு ஒரு தாட்..., அதான்..." அவள் பார்வை தூரத்தில் இருந்த பரத்தை பார்வையால் தொடர்ந்தது.

'இவகிட்டே அண்ணாவை பத்தி சொன்னது தப்பா போச்சு...' காலம் கடந்த நினைவு.

"பரத் ரொம்ப கேர் இல்ல..." திடுமென அவள் கேட்க, "ஆமா..." அமைதியாகவே உரைத்தாள்.

பரத் கையில் ஏந்திய தட்டோடு வர, ஆளுக்கு ஒன்றாக எடுத்துக் கொண்டார்கள். ஜீவித்யாவின் எதிர் இருக்கையில் அமர்ந்தவன், "ஜீவித்யா, அம்மா உன்னை பாக்கணும்னு சொன்னாங்க. ஒரு நாள் வீட்டுக்கு வாம்மா" அழைப்பு விடுத்தான்.

"கண்டிப்பா நெக்ஸ்ட் வீக் எண்டு வரேண்ணா..., இந்த வாரம் இங்கே..., அதாவது கெஸ்ட் ஹவுஸ்ல இவளுக்கு கொஞ்சம் ஹெல்ப் பண்ண வேண்டி இருக்கு..." அவள் உரைக்க,

"கெஸ்ட் ஹவுஸ் ஓக்கேயா? போய் பாத்தீங்களா?".

"இல்லண்ணா..., அதான் நீங்களே ஓகேன்னு தானே சொன்னீங்க. புட் தான் என்ன பண்றதுன்னு தெரியலை. இவளுக்கு இங்கே இருக்க சாப்பாட்டில் சில காய் ஒத்துக்கலை..." கவலையாக உரைத்தாள். கூடவே தோழியை கோபமாக ஒரு பார்வை பார்த்தாள்.

அவள் பார்வைக்கான அர்த்தம் புரிய, "ஜீவி, அதான் ஏற்கனவே சொன்னேனே, வீக் எண்டு உங்க வீட்டுக்கு வந்துடறேன். பட்..., தனியா இருக்குறதுதான் பெட்டர்..." நான்கு நாட்களாகவே தோழிகளுக்கு நடுவில் இந்த விவாதம்தான் ஓடிக் கொண்டிருக்கிறது.

மீனாட்சியும் எவ்வளவோ உரைத்தும், தனியாக செல்வதில் ஹேமா பிடிவாதமாகவே இருந்தாள்.

"அவ சொல்றதும் சரிதான்..., விடு..." பரத்தும் உரைக்க, ஜீவித்யா அமைதியாக இருந்து விட்டாள்.

ஜீவித்யாவின் மனதுக்குள், நட்ராஜுக்கு தான் இங்கே வருவது எப்படி தெரியும்? என்ற எண்ணம் ஓட, ஒரு வேளை பரத் சொல்லியிருப்பானோ? என்ற எண்ணம் எழ, அதை அவனிடம் எப்படி கேட்பது எனத் தெரியாமல் தடுமாறிப் போனாள்.

ஹேமாவோ பரத்தையே ஆர்வமாக பார்த்துக் கொண்டிருக்க, அதையெல்லாம் கவனிக்கும் நிலையில் ஜீவித்யா இருக்கவில்லை.

அதென்னவோ அவள் சிந்தை முழுவதையும் நட்ராஜே ஆக்கிரமித்தான். 'இது நல்லதுக்கே இல்லை...' தனக்குத் தானே அறிவுறுத்திக் கொள்ள, முதல் முறையாக அவள் மனம் அவள் பேச்சை கேட்க மறுத்தது.

'இங்கிருந்து முதலில் செல்ல வேண்டும்...' எண்ணியவள், "சரிண்ணா..., அப்போ நாங்க கிளம்பறோம். நாளைக்கு பார்க்கலாம்..." அவள் இருக்கையில் இருந்து எழ, ஹேமா அவளை வித்தியாசமாகப் பார்த்தாள்.

'சம்திங் இஸ் டிஸ்டப்பிங் ஹெர்...' சரியாக உணர்ந்து கொண்டாள்.

"ஜீவி..., ஆர் யூ ஓகே..." அதை வார்த்தையிலும் வெளிப்படுத்த, பரத் அவளை ஏறிட்டான்.

"எனக்கென்ன...? அம்மா வெய்ட் பண்ணிட்டு இருப்பாங்க அதான்..." எதையோ சொல்லி சம்மாளிக்க முயன்றாள்.

"அப்போ கிளம்புங்க..." அவனும் எழுந்து கொண்டான்.

"எப்படிம்மா போவீங்க? நான் டிராப் பண்ணவா?" அவன் கேட்க, "இல்லண்ணா, ஏற்கனவே கால் டேக்சி புக் பண்ணிட்டேன், வெயிடிங்..." அவள் முன்னால் நடந்தாள்.

பரத்தோ ஹேமாவை அதன் பிறகு பார்ப்பதை முழுதாக தவிர்க்க, அவளுக்கு 'ஏன்...?' என்ற எண்ணம் எழுந்தது.

பார்க்கிங் ஏரியாவுக்கு அவர்கள் செல்ல, பரத்தோடு உடன் நடந்த ஹேமா சட்டென அவன் கரத்தைப் பற்றி நிறுத்தினாள். அதை எதிர்பாராத பரத் திகைக்க, "வாட் ஹேப்பண்ட்...?" அவளை தவிர்ப்பதை உணர்ந்து கொண்டு, இப்படி அதிரடியாக தன்னிடம் கேட்பாள் என்பதை எதிர்பாராதவன், மேலும் திகைத்தான்.

# பகுதி - 7

பரத்தால் நடப்பது எதையும் நம்பவும் முடியவில்லை, நம்பாமல் இருக்கவும் முடியவில்லை. வெளிநாட்டில் ஒரு பெண் ஆணின் கையைப் பிடித்தால் சாதரணமாக இருக்கலாம். அதுவே, இந்தியாவில் ஒரு பெண் ஆணின் கரத்தை பிடித்து இருந்தால், இயல்பாக ஏற்கும் மனப்பான்மை அனைவருக்கும் இருப்பதில்லையே.

அதிலும், பரத் அங்கே அனைவராலும் அறியப்படும் ஒரு பிரபலமான மருத்துவன். அப்படி இருக்கையில், ஹேமாவின் செய்கையை சட்டென அவளால் உதறித் தள்ளவும் முடியவில்லை, சாதாரணமாக இருக்கவும் முடியவில்லை.

"ஜீவித்யா..." பரத் அவளை அழைக்க, முன்னால் நடந்துகொண்டிருந்தவள், சட்டென திரும்பிப் பார்த்தாள்.

பரத்தின் கரம் ஹேமாவின் கைகளுக்குள் சிக்கியிருக்க, பதறிப் போனவள், "ஏய் லூசு..., முதல்ல அவர் கையை விடு..." ஜீவித்யாவின் பேச்சை அவள் மதிக்காமல் போக, அவள்தான் ஹேமாவின் கரத்தை பிடித்து விலக்கினாள்.

அதே நேரம், பார்வையால் அவனிடம் கெஞ்சியவள், "ஹாஸ்பிடல்ல வச்சு என்னடி இது...?" அடிக்குரலில் அவளைக் கடிந்தவள், "இங்கே இப்படியெல்லாம் தொட்டு பேசக் கூடாது புரியுதா...?" சின்னக் குரலிலேயே உரைத்தாள்.

"என்ன நீ..., என் பாட்டி மாதிரியே பேசுற...?" அவளிடம் திருப்பிக் கேட்க, தன் தலையிலேயே அடித்துக் கொள்ளலாம் போல் இருந்தது.

"ஆண்டவா..." வாய்விட்டே புலம்பியவள், "உனக்கு இந்த விளக்கமெல்லாம் வீட்டுக்கு போய் கொடுக்கறேன். முதல்ல நீ கார்ல ஏறுடி..." தோழியை கைபிடித்து இழுத்துச் சென்று காரில் ஏற்றினாள்.

அதன் பிறகு பரத்திடம் வந்தவள், "சாரிண்ணா..., அவளுக்கு இதெல்லாம் அவ்வளவா தெரியாது அதான். ப்ளீஸ்..., அவளை தப்பா மட்டும் நினைச்சுடாதீங்க..." பரத்தின் மனதில் ஹேமாவைப் பற்றிய தவறான கணிப்புகள் பதிவதை அவள் விரும்பவில்லை.

"இல்லம்மா..., எனக்கு புரியுது..., நீ குழப்பிக்காதே..., பாத்து போ..." அவளை அனுப்பியவன், ஹேமாவிடம் ஒரு தலையசைப்பை கொடுத்தான். அவளோ, சிறு குழப்பத்தோடு அவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவள் செய்கைகள் அனைத்தும் ஒரு குழந்தையின் செய்கையை ஒத்திருக்க, பரத் தன்னை மீறி அதை ரசிக்கவே செய்தான்.

ஜீவித்யா காரில் ஏற, "பரத் முதல்ல ஒருமாதிரி நடந்துகிட்டார்..., பிறகு ஒரு மாதிரி நடந்துகிட்டார்..., அதான் ஏன்னு கேட்டேன். நீ ஏன் என்னை தடுத்த?" குழப்பமும், சிறு கோபமும் கலந்து கேட்டாள்.

"ஹேமா..., எதுவா இருந்தாலும் வீட்டுக்கு போய் பேசிக்கலாம்..." டிரைவரை பார்வையால் சுட்டி, ஆங்கிலத்தில் உரைக்க, "ஹெல் வித் யுவர் பார்மாலிட்டீஸ்..." ஆத்திரமாக உரைத்துவிட்டு அமர்ந்து கொண்டாள்.

வீட்டுக்குப் போய், மதிய உணவு உண்டு முடிக்கும் வரைக்கும் இருவருக்கும் நடுவில் எந்த பேச்சும் இருக்கவில்லை.

"என்னம்மா..., வெளியே போயிட்டு வந்தது டயடா இருக்கா என்ன? ரெண்டுபேரும் பேசாமலே இருக்கீங்க..." மீனாட்சியே அவர்கள் அமைதியைக் கண்டு வினவினார்.

"அப்படியெல்லாம் எதுவும் இல்லை. நாங்க கொஞ்சம் ரெஸ்ட் எடுக்கறோம்..." தோழியை அழைத்துக்கொண்டு தன் அறைக்குள் நுழைந்தாள்.

ஹேமா அப்பொழுதும் அமைதியாகவே இருக்க, "இப்போ எதுக்கு மூஞ்சை தூக்கி வச்சுட்டு இருக்க? இன்னைக்குதான் பாக்குற ஒரு ஆம்பளையோட கையை பிடிச்சு யாராவது இழுப்பாங்களா? பாக்குறவங்க என்ன நினைப்பாங்க? அதுவும் அவர் அங்கே வொர்க் பண்றவர்..." அவளுக்கு எப்படி புரிய வைக்க எனத் தெரியாமல் புலம்பினாள்.

"ஹி இஸ் மை மேன்..." ஹேமா பட்டென உரைக்க, திக்கென அதிர்ந்தவள் வாயடைத்துப் போனாள்.

"ஏய்..., என்னடி இது...?" தன் அதிர்ச்சியை ஜீரணிக்க முடியாமல் கேட்டாள்.

"எஸ்..., ஐ மீன் இட்..." ஹேமா உறுதியாக உரைக்க, தன் நெற்றியை அழுத்தி பிடித்துக் கொண்டாள்.

"ஹேமா..., நீ புரிஞ்சுதான் பேசறியா? அவரைப் பற்றி உனக்கு என்ன தெரியும்? அவர் அம்மா..., அவரோட சூழல், ஓ மை காட்..." இது எப்படி சரிவரும் என்ற நினைப்பே அவள் மனதுக்குள் ஓடியது.

"ஜீவி..., ஐ லவ் ஹிம்..." அவள் அதிலேயே நின்றாள்.

"ஹேமா ப்ளீஸ்..., உன்னோட இந்த வேகம்..., எனக்கு பயமா இருக்கு".

"ஏன் ஜீவி..., பரத்தை காதலிக்கும் தகுதியோ, அவனை திருமணம் செய்யும் தகுதியோ எனக்கு இல்லைன்னு நினைக்கறியா? ஸ்டில் ஐ'ம் எ வெர்ஜின்..." அவள் பாட்டி உரைத்த கற்பு விஷயத்தை நினைவில் வைத்துக்கொண்டு அவள் உரைக்க,

"லூசு மாதிரி பேசாதே ஹேமா. உன்னைப்பற்றி எனக்குத் தெரியாதா. இது அது இல்லடி. உனக்கு எப்படி சொல்லி புரிய வைக்கன்னு எனக்குத் தெரியலை. நீ எவ்வளவு ஒப்பனா  இருக்கறியோ..., இங்கே எல்லோரும் அதற்கு எதிரா இருப்பாங்க.

"உன்னோட இயல்பான நடத்தையே..., ஆயிரம் கேள்விகளையும், ஆயிரம் கற்பனைகளையும் மற்றவர்களை நினைக்கத் தூண்டும். ஆண் எப்படி வேண்ணாலும் இருக்கலாம்..., ஆனா ஒரு பெண் இப்படித்தான் இருக்கணும்னு கட்டுப்பாடு விதிக்கும்.

"ஆசைப்பட்டது எல்லாத்தையும் இங்கே அடைய முடியாது. மனசுக்குள் கோடி ஆசை இருந்தாலும், மத்தவங்களுக்காக அதை தியாகம் செய்ய வேண்டி வந்தால், நொடியில் அதையெல்லாம் மனசுக்குள் போட்டு புதைச்சுப்பாங்க.

"அப்படி ஒரு சூழல்ல நீ சிக்க வேண்டி வந்தால்..., நீ அடையப்போகும் வேதனையைப் என்னால் நினைத்தே பார்க்க முடியலை, என்னால் அதைப் பாத்துட்டு சும்மா இருக்க முடியாதுடி. புரிஞ்சுக்கோ..." கிட்டத்தட்ட கெஞ்சினாள்.

அவள் சொல்ல வருவதை, சொன்னதை முழு அர்த்தத்தில் ஹேமாவால் புரிந்துகொள்ள முடியவில்லை. அதே நேரம்..., ஜீவித்யா இவ்வளவு சொல்கிறாள் என்றால், நிச்சயம் அதில் ஏதோ விஷயம் இருக்கும் என்பதை அவளால் புரிந்துகொள்ள முடிந்தது.

"இப்போ நான் என்ன செய்யட்டும்...? அதை மட்டும் சொல்..." ஒரு குழப்பமான மனநிலையில், தாயிடம் தீர்வு கேட்கும் ஒரு குழந்தையின் பாவனையில் கேட்க, ஜீவித்யாவுக்கு உருகிப் போயிற்று.

ஹேமாவைப் பொறுத்த வரைக்கும், பரத்தை தன் துணை என முடிவு செய்துவிட்டாள். அதை அவனிடம் வெளிப்படுத்த அவளுக்கு எந்த தயக்கமும் இருக்கவில்லை. அவளது வளர்ந்த சூழல், நேரடியாக எதையும் செய்ய கற்றுக் கொடுத்திருந்தது.

ஆனால்..., ஜீவித்யா சொல்வதைக் கேட்ட பிறகு, தன் முடிவை மறு பரிசீலனை செய்ய முடிவெடுத்தாள்.

"நீ நீயாகவே இரு..., பட்..., இந்த லவ் மட்டும்..., கொஞ்ச நாளைக்கு வேண்டாம். முதல்ல இங்கே இருக்கும்

நிலையை நீ ஸ்டடி பண்ணு..., பிறகு நீ என்ன முடிவு எடுக்கிறாயோ..., அதற்கு நான் துணை நிற்கிறேன். பட் ப்ளீஸ்..., எதையும் ரொம்ப சீரியஸா மனசுக்குள் பதிய வைக்காதே..." அவள் கரத்தை பற்றிக் கொண்டாள்.

"ஓகே..., ஸ்டடி பண்ணணும்..., அவ்வளவு தானே..., பட்..., பரத்தை என்னால் விட முடியாது..." அவள் உரைக்க, சம்மதமாக தலை அசைத்தாள். ஆனால், மனதுக்குள் சிறு கலக்கம்.

மாலையில் கோவிலுக்குச் செல்ல, அந்த குடும்ப சூழலை மிகவும் ரசித்தாள். அவர்களுக்கு துணை வந்த சரவணன், எங்கே இருந்தாலும் மகள்மேல் ஒரு கண் வைத்திருக்கும் மீனாட்சி, என் மகளை எனக்குத் தெரியாதா என்ற பூரிப்பும், மகளை மகாராணியாக நடத்தும் நாயகம்.

இப்படியான ஒரு குடும்பம் தனக்கு வேண்டும் என்ற தாக்கம் அவளுக்கு அதிகரித்துக் கொண்டே சென்றது. தன்னையும் மற்றுமொரு மகளாக நடத்தும் அவர்களது பாசம், கோவில் பிரகாரத்தில் அமர்ந்தவர்கள், தேங்காய், பழம் போன்றவற்றை உடைத்து, பகிர்ந்து உண்ண, அவர்களோடு தானும் கலந்து கொண்டாள்.

'இப்போ பரத் இருந்தால் நல்லா இருக்கும் இல்ல...' மனம் எண்ண, அந்த நினைப்பு தித்திப்பாகவே இருந்தது. ஜீவித்யாவோ..., 'இவர்களின் நம்பிக்கைக்கு நான் துரோகம் செய்ய முடியுமா?' தன் குடும்பத்தவரின் அன்பை எண்ணி, நட்ராஜின் நினைப்பை ஒத்தி வைத்தாள்.

காற்றை எவ்வளவுதான் தண்ணிக்குள் அமிழ்த்தினாலும், அது வெடித்துக் கொண்டு வெளியே வரத் துடிப்பதுபோல், மனதுக்குள் புகுந்த காதல் வெளியேறவே துடிக்கும் என்பதை அவள் அந்த நேரம் உணராமல் போனாள்.

இரவு உணவை உண்டு, படுக்கையில் விழுந்த இருவரும் மறுநாள் விடியலை ஒருவர் ஆர்வமாகவும், ஒருவர் பயமாகவும் எதிர்கொள்ள தயார் ஆகினர்.

மறுநாள் மருத்துவமனைக்குச் செல்ல, ஹேமாவின் அறையை பரத்தின் ப்ளோரில் ஒதுக்கி இருப்பதாக உரைக்க, சந்தோஷமாகவே அதை ஏற்றுக் கொண்டாள். அங்கே அவள் புதியவள் என்பதால், பேஷண்டுகளின் வரவு அவளுக்கு அவ்வளவாக இல்லை.

பரிமளம், இந்திரா இருவரையும் பார்க்க முடியாதவர்கள் மட்டுமே அவளை நாட, அவர்களை மட்டும் கவனித்தாள். அவளது உதவியாளர்களான டிரெயினி மருத்துவர்கள் மித்ரா, ஹரிணி இருவரிடமும் உரையாடியவாறு நேரத்தை கடத்தினாள்.

அவர்கள் இருவரும் வெளியே செல்வதாக உரைத்துச் செல்ல, அறைக்குள் அடைந்து கிடக்க முடியாமல், மருத்துவமனையை சுற்றிப் பார்க்க கிளம்பினாள்.

முதல் மாடிக்குச் செல்ல, அங்கே பரத்தின் அறை இருப்பதைப் பார்த்தவள், வேலை நேரத்தில் அவனை தொல்லை செய்ய விரும்பாமல், அங்கிருந்து நகர்ந்து இரண்டாம் மாடிக்குச் செல்ல, அங்கே இருந்த வார்டில், பரத்தின் குரல் கேட்க, வேகமாக அங்கே சென்றாள்.

"யஷ்வந்த் குட் பாயாச்சே..., கொஞ்ச நாள் ஐஸ்கிரீம், சாக்லேட் எல்லாம் சாப்பிட மாட்டீங்க தானே..." படுக்கையில் கிடந்த சிறுவனின் தலையை பாசமாக கோதியவன், கனிவு கொஞ்சும் குரலில் கேட்க, அந்த சிறுவனும் சமத்தாக தலை ஆட்டிக் கொண்டிருந்தான்.

தன்னை மீறி அங்கேயே இருக்க, அறையில் இருந்து வெளியே வந்தவன், அவனது பெற்றவர்களிடம், "ஒரு சிக்ஸ் மந்த்ஸ்க்கு அவனுக்கு கோல்ட், பீவர் எதுவும் வராமல் பாத்துக்கணும். அந்த சிக்ஸ் மந்த்ஸ் அவன் தாண்டிட்டா, அதற்கு பிறகு எதைப் பற்றியும் கவலைப்படவே வேண்டாம். பாத்துக்கங்க..." அவர்களிடம் ஒரு மருத்துவனாக உரைத்தவன், அடுத்த அறைக்கு நடந்தான்.

தானும் சற்று நகர்ந்தவள், அறையைப் பார்க்க, "மிஸ்டர் தேவன்..., ஆயில் ஐட்டம் தொடவே கூடாது. இட்ஸ் மை

ஸ்ட்ரிக்ட் ஆர்டர்..., அப்படி சாப்டீங்கன்னா..., இனிமேல் வீட்டுக்கே அனுப்ப மாட்டேன். இங்கேயே பெட் ரிசர்வ் பண்ணிடுவேன்..." கண்டிப்பு கலந்து உரைக்க,

"இல்ல டாக்டர்..., இனிமேல் கவனமா இருக்கறேன்..." அவர் பதில் கொடுக்க,

"இதையேதான் லாஸ்ட் டைமும் சொன்னீங்க..." கண்டிப்பு மாறாமல் உரைத்தவன், அவரது மருந்துகளை குறித்துக் கொடுக்க, அதை பெற்றுக் கொண்டார்.

அடுத்த அறையில் ஒரு நடுத்தர வயது ஆண்மகனிடம், நம்பிக்கை அளிக்கும் விதமாக உரையாட, ஒவ்வொருவரின் தன்மைக்கு ஏற்ப மாறும் அவனது குரல், உடல்மொழி, கனிவு, நம்பிக்கை அளிக்கும் விதம், என அனைத்தையும் பிரமிப்பாக பார்த்திருந்தாள்.

அவனது வார்ட் விசிட் முடியும்வரைக்கும், அவன் நிழலாகவே தொடர்ந்தாள். அவன் வேலை முடிய, அறைக்குத் திரும்புகையில், "ஹாய் பரத்..." அவன் முதுகின் பின்னால் அழைக்க,

சட்டென திரும்பியவன், "ஹாய் ஹனி..., டியூட்டி இல்லையா...?" அவளிடம் கேட்டவன், "கேத்தரின் நீங்க போங்க..." சற்று ஆர்வமாக அவர்களைப் பார்த்த செவிலியை அனுப்பினான்.

"நாலு பேஷண்ட் தான் இருந்தாங்க..., சோ..." இரு புருவம் உயர்த்தி சிரிக்க, அவளது புன்னகை அவனையும் தொற்றிக் கொண்டது.

"இப்போ தானே ஸ்டார்ட் பண்ணியிருக்க..., ஒன் மந்த போனால், எல்லாம் சரியா போய்டும்...".

"மே பி..." அதை ஆமோதித்தவள், "கேண்டீன் போலாமா..., பீல் ஹங்கிரி..." அவள் உரைக்க, பசி என்று சொன்ன பிறகு அவனால் மறுக்க முடியுமா என்ன?

ஆனாலும்..., ஒரு பெண்ணோடு முதல் முறையாக தன்னை சேர்த்து பார்ப்பவர்கள் என்ன நினைப்பார்கள்? என்ற

எண்ணம் எழுந்தாலும், அதை கண்டுகொள்ளும் நிலையில் அவன் இல்லை.

அவளுக்காக அவன் வாங்கிக் கொடுத்த கட்லட், காபியை ரசித்தே உண்டாள்.

நாசூக்காக அவள் கட்லட்டை உண்ணும் விதம், காபி கப்பை சிறு தயக்கத்தோடு பார்த்தது, பட்டும் படாமல் வாய் வைத்து அதை உறிஞ்சிய விதம், என அனைத்திலும் ஒரு நாசூக்கும், நளினமும் இருப்பதை உணர்ந்து கொண்டான்.

சுடிதார் அணிந்திருந்தாலும், அதன் விலையை அவனால் யூகிக்க முடிந்தது.

"பரத்..., உன்னைப் பத்தி சொல்லேன்..." வாயில் அதக்கிய கட்லட்டோடு அவள் வினவ, அவள் குரலை கேட்ட பிறகுதான், தான் அவளையே பார்த்துக் கொண்டிருப்பதையே அவன் உணர்ந்தான்.

"என்னைப் பத்தி..., என் அம்மா, நான்..., இதுதான் என் குடும்பம். அப்பா நான் பிறக்க முன்னாடியே தவறிட்டாங்க. ஸ்காலர்ஷிப், மெரிட் சீட்..., இப்படித்தான் நான் படித்தேன். ஹையர் ஸ்டடிக்கு என்னோட பரொபசர் ஹெல்ப் பண்ணார்.

"படிப்பு முடிந்தவுடன், இங்கே வேலையில் ஜாயிண்ட் பண்ணிட்டேன். அவ்வளவுதான்..." சுருக்கமாக சொல்ல அனைத்தையும் அமைதியாக கேட்டுக் கொண்டாள்.

"வேற ஏதாவது சாப்பிடறியா...?" அவள் கட்லட்டை உண்ட வேகத்தைப் பார்த்து கேட்டான்.

"நோ..., இட்ஸ் எனஃப்..." அவள் பேசிக் கொண்டிருக்கையிலேயே அலைபேசியில் பேஷண்ட் வந்திருப்பதாக அழைக்க,

"ஷெல் வீ மூவ்...?".

"நோ..., யூ கேரியான்..." அவனிடம் விடை பெற்றுக் கொண்டு கிளம்பினாள்.

சற்று தூரம் சென்றவள்..., சட்டென நினைவுக்கு வந்தவளாக, "இங்கே பக்கத்தில் ஆடி கார் ஷோரூம் எங்கே இருக்கு...?" அவனிடம் கேட்க,

"சென்னையில் ஒரே ஷோரூம் தான்..., நந்தனத்தில் இருக்கு..." அவன் உரைக்க,

"தேங்க்ஸ்..., கார் ஒண்ணு புக் பண்ணணும் அதான்..., ஓகே பாய்..." அவள் செல்ல, ஆடி கார் என்பதிலேயே திகைத்துபோய் அமர்ந்திருந்தான்.

ஆடி கார் ஸ்டாட்டிங் மாடலே இருபத்தைந்து லட்சம்..., அப்படி இருக்கையில் அவன் திகைக்காமல் என்ன செய்வான்? அவனது கார் மாருதி ஸ்விப்ட் ஆறு லட்சம் ரூபாய்..., அதுவும் டியூவில் வாங்கியது.

அவன் மனதில் முதல் முறையாக ஒரு சிறு நெருடல்..., 'இது சரியாக வருமா...?' இன்னதென்று தீர்மானிக்கும் முன்பாகவே, சிறு பயம்.

தன் மனம் அவளைப் பார்த்தால் தடுமாறுகிறது என்பதை புரியாத அளவுக்கு அவன் ஒன்றும் சிறுவன் இல்லையே. அதேபோல்..., அவள் பார்வைகள் தன்மேல் ஆர்வமாக படிவதும், இயல்பாக தன்னை அழைத்து பேசுவதும் அவனுக்கு புரியாமல் போகுமா?

கூடவே..., அவளது வளர்ப்பில் ஆண்களோடு பேசுவதும், பழகுவதும் காதலால் மட்டும் இருக்காது..., என்பதையும் அவன் மனம் அவனுக்கு உரைக்காமல் இல்லை. மனதை கட்டுப்படுத்தவும், கட்டுக்குள் வைக்கவும் அவனுக்கு நன்றாகவே தெரியும் என்பதால், 'எதுவாக இருந்தாலும் அவளிடம் இருந்தே வரட்டும்...' எண்ணியவன் அங்கிருந்து எழுந்து சென்றான்.

மதிய இடைவேளை வரைக்கும் ஜீவித்யா பிசியாக இருக்க, அவள் வரவுக்காக காத்திருந்தாள் ஹேமா.

ஒருமணிக்குப் பிறகு, மாலையில் ஐந்து முப்பது மணிக்குதான் ஓபி என்பதால், இருவரும் வீட்டுக்குச்

சென்று, உணவு அருந்தி, ஓய்வு எடுத்துவிட்டு வரலாம் என ஏற்கனவே பேசியிருந்ததால், தன் 'கோட்'டை எடுத்துக் கொண்டவள், ஹேமாவை தேடிச் சென்றாள்.

"ஜீவி, ரொம்ப பிஸியா...?" கேட்டவள், இருக்கையில் இருந்து எழுந்து கொள்ள,

"ஓபி எப்பவும் பிசி தான்..., வா..." அவளை அழைத்துக்கொண்டு சென்றாள்.

ஹேமாவை அழைத்துக்கொண்டு ஆட்டோவில் செல்ல முடியாது என்பதால், கால் டேக்சிக்கு அழைக்க, அது பத்து நிமிடத்தில் வந்துவிடும் என்பதால், மருத்துவமனையின் முன்பகுதிக்கு விரைந்தார்கள்.

அந்த நேரம்..., வீட்டுக்குச் செல்ல வேண்டி காரை எடுத்துக்கொண்டு வந்த நட்ராஜ், அவளைப் பார்த்துவிட்டு, காரை சற்று ஓரமாக நிறுத்திவிட்டு அவளை நெருங்கினான்.

"வித்யா..., ஃபஸ்ட் டே..., எப்படிப் போச்சு...?" ஆழமான பார்வையாய் அவளையே வெறித்தான். மதிய நேரம் என்பதால் சற்று பரபரப்பு குறைவாகவே இருந்தது. எனவே..., அவர்கள் நின்று பேசுவதை யாரும் கவனிக்கவில்லை.

அவனைக் காணும் வரைக்கும் உறுதியாக இருந்த அவள் மனம், சட்டென தடுமாற, அதை மறைத்தவள், "ம்..., ஓகே..." அதற்குமேல் அவனிடம் எதையும் உரைக்கவில்லை.

அவன் மேலே எதையோ சொல்ல வருவதுபோல் இருக்க, ஹேமா அங்கிருந்து விலக முயன்றாள். அதை உணர்ந்தவள் போன்று, சட்டென அவள் கரத்தைப் பிடித்து தடுத்தவள், "ஹேமா..., திஸ் இஸ் நட்ராஜ்..., என் காலேஜ் சீனியர். நட்ராஜ்..., ஹேமா..., என்னோட பெஸ்ட் ப்ரண்ட்..." அறிமுகப்படுத்தும் சாக்கில் அவளை நிறுத்த, "ஹாய்..." என இருவரும் அறிமுகமாகிக் கொண்டார்கள்.

சட்டென அங்கே ஒரு அமைதி நிலவ, "வீட்டுக்கா..., நான் வேண்ணா டிராப் பண்ணவா...?" அவனே அதைக் கலைத்தான்.

"தேங்க்ஸ்..., நான் டேக்சி புக் பண்ணிட்டேன். இப்போ வந்துடும்..." அப்பொழுது அவளது அலைபேசி இசைக்க, "வந்துடுச்சு..., பாய்..." அலைபேசியை இயக்கியவாறே அங்கிருந்து நகர்ந்தாள்.

அவள் அவனை தவிர்ப்பது அப்பட்டமாகத் தெரிய, அது ஹேமாவுக்கே புரிந்தது என்றால், நட்ராஜுக்கு புரியாதா என்ன? ஹேமா அவனைப் பார்த்து சிறு புன்னகையை உதிர்த்தவள், "பாய்..." ஒரு மன்னிப்பு வேண்டல் தொனியில் உரைத்துவிட்டு, தோழியின் பின்னால் விரைந்தாள்.

"ஜீவி..., ஐ திங் ஹி லவ்ஸ் யூ..." காரில் ஏறியவாறே அவள் உரைக்க,

"ம்ச்..., சும்மா இரு ஹேமா..." தான் கேட்டதற்கு இது பதில் இல்லையே என்ற ரேஞ்சில் அவளைப் பார்த்திருந்தாள் ஹேமா.

# பகுதி - 8

அடுத்த ஒரு வாரம் மின்னல் வேகத்தில் கடந்தது என்றுதான் சொல்ல வேண்டும். ஹேமா கெஸ்ட் ஹவுசுக்கு குடியேறி இருக்க, அவள் புக் செய்திருந்த ஆடி A7 கார் அந்த வீட்டின் முன்னால் கம்பீரமாக நின்றிருந்தது.

அதை முதல்நாள் அவள் ஓட்டி வந்தபொழுது பரத்தின் முகத்தில் அப்பட்டமான அதிர்ச்சி பிரதிபலித்தது என்றால் அது மிகையில்லை. அவனது வீடே அவள் கார் விலைக்கு இல்லை என்பதை எண்ணிப் பார்த்தவனுக்கு, மனதுக்குள் ஒரு வேதனை வந்து போனது.

அது எதனால் என்பதை உணர்ந்தவனுக்கு, கிடைத்த பதிலால் மகிழ முடியவில்லை. அவள் தன் மனதுக்குள் நுழைந்துவிட்டாள் என்பதை எண்ணி அவன் எப்படி சந்தொஷப்படுவதாம்?

இப்பொழுது அவன் இருக்கும் வீடு, சிட்டிக்கு சற்று வெளியே ஒரு பங்களா டைப் வீடுதான். இரண்டாம் மாடியில் அவனது விருப்பத்துக்காக, சுவிம்மிங் பூல் கூட அங்கே உண்டு. அந்த வீடு இருக்கும் இடம், தனம் தன் உழைப்பில் மகனுக்காக என்று சிறுக, சிறுக சேர்த்து, அவனது சிறு வயதில் வாங்கிப் போட்டது.

அப்பொழுது பொட்டால் காடாக இருந்த இடம், இருபது வருடத்தில் சற்று முன்னேறிவிட்டது என்றே சொல்லலாம். இப்பொழுது ரியல் எஸ்டேட் ஆட்கள் ப்ளாட் போட்டு விற்கும் அளவுக்கு முன்னேறி இருந்தது.

சிட்டிக்குள் அவன் அந்த வீட்டை வாங்குவது என்றால், பல கோடிகளை அவன் செலவழித்திருக்க வேண்டும். ஆனால்..., அவனது சொந்த இடம், கட்டிடம் மட்டுமே அவன் கட்டவேண்டி இருந்ததால்..., எண்பது லட்சத்தில் தன் கனவு இல்லத்தை அவன் கட்டி முடித்திருந்தான்.

அவனது இரண்டுலட்ச ரூபாய் வருமானத்தில், ஒன்றரை லட்சம் EMI செலுத்தி வருகிறான். கூடவே..., ஒவ்வொரு ஆப்பரேஷனுக்கும் கிடைக்கும் அவனது எக்ஸ்ட்ரா வருமானம் கூட அதற்குதான் செல்கிறது. கடன் இல்லாத வாழ்க்கை வாழ வேண்டும் என தனம் கற்றுக் கொடுத்த பாடம், சீக்கிரமே அதில் இருந்து வெளிவர போராடிக் கொண்டிருக்கிறான்.

அதுவும் ஆறு மாதங்களாகத்தான் புது வீட்டில் இருந்து வேலைக்கு வருகிறான். அது வரைக்கும் ஒற்றை அறை கொண்ட வீடுதான் அவர்களது மாளிகையாக இருந்தது.

ஹேமாவோடு காரில் இருந்து இறங்கிய ஜீவித்யா, பரத்தின் முகத்தை ஏறிட, அதில் விரவியிருந்த பாவனையில் ஒருநொடி வருத்தப்பட்டாலும், 'அண்ணாவின் மனசிலும் இவ இருக்காளா...?' மறு பக்கம் சந்தோஷமாகவே உணர்ந்தாள்.இன்னொரு மனதிலோ பெரும் பயம்.

பரத்தையும் சரி, ஹேமாவையும் சரி..., ஆதி முதல் அந்தமாக அவளுக்கு நன்றாகவே தெரியும். இப்படித்தான் வாழவேண்டும் என்ற கோட்பாட்டில் இருக்கும் அவன், அடக்குமுறை என்றால், அதை மீறத் துடிக்கும் அவள்.

மனதில் இருப்பதை ஆயிரம் முறை ஆராய்ந்து பேசவும், முடிவெடுக்கவும் நினைக்கும் அவன். மனதில் இருப்பதை பட்டென போட்டுடைத்து வெளிப்படையாக இருக்கும் அவள். பணம் என்றால் அவசியத்துக்கு என நினைக்கும் அவன், பணம் என்பதை கணக்கு பார்க்காமல் செலவழிக்கும் அவள்..., இது எப்படி ஒத்துப் போகும்?

பரத்தின் மனதுக்குள் இருக்கும் காதலால் அவர்கள் வாழ்வில் இணைந்தாலும், நூறில் ஒரு பங்காக, அவன் மனதுக்குள் தாழ்வு மனப்பான்மை வந்துவிட்டால், அது அவர்கள் வாழ்க்கையையே நரகமாக்கிவிடும் என்ற பயம் அவளை தொற்றிக் கொண்டது.

ஒரு ஆண்மகனின் மனநிலை எப்பொழுது எப்படி மாறும் என சொல்ல முடியாதே. ஆனால்..., ஹேமாவைப் பொறுத்த வரைக்கும், பரத்தை ஒரு சதவீதம் கூட கீழாக அவள் நினைக்க மாட்டாள் என்பது அவளுக்கு உறுதியே.

பரத்தை அவளுக்கு பிடித்திருக்கிறது என்றால்..., அவன் வெகு சாதாரண வேலையில் இருந்தால் கூட அவனோடு சந்தோஷமாக வாழ்வாள் என்பது அவளுக்குத் தெரியும். ஆனால், இங்கே அவள் பயப்பட்டது, பரத் என்ற ஒரு இந்திய குடிமகனை எண்ணித்தான்.

பெண்கள் அனைவரும் தனக்கு ஒரு படி கீழே இருக்க வேண்டும் என்ற மனநிலையில் இருக்கும் ஆண்களுக்கு மத்தியில், அவன் மட்டும் எப்படி விதிவிலக்காக இருப்பான்? என்பதே பெரும் சந்தேகமாகவே இருந்தது.

அவள் ஒன்றை மறந்துவிட்டாள்..., தனம் போன்ற ஒரு தாய்க்கு மகனாகப் பிறந்தவன், எப்பொழுதும் மற்றொரு பெண்ணை தனக்கு கீழாக இருக்க வேண்டும் என எண்ண மாட்டான் என்பதை. மற்றவர் மனதுக்குள் இருப்பதை தெரிந்துகொள்ளும் வல்லமையை கடவுள் யாருக்கும் கொடுக்கவில்லையே..., என்ன செய்ய?

காரிலிருந்து இறங்கிய ஹேமா, தன் காரைப் பற்றி பெருமையாக எதையாவது சொல்லியிருந்தால் எப்படி உணர்ந்திருப்பானோ? ஆனால் அவள், "பரத்..., நீயும் இப்போதான் வரியா...? இன்னைக்கு ஸ்பெஷல் கேஸ் எதுவும் இல்லையா...?" சாதாரணமாக உரையாடியவாறு நடக்க, அவன் மனதுக்கு அவ்வளவு ஆறுதல்.

"ஹனி..., புது கார் வாங்கியிருக்க..., டிரீட் இல்லையா...?" அவன்தான் ஆர்வம் தாங்காமல் வினவினான். அவனது ஹனி என்ற அழைப்பை நம்பவே முடியாமல் பார்த்தாள். அவளுக்குத் தெரியாதே..., பரத்துக்கு இன்னுமே அவளது பெயர் ஹேமா என்று அவனுக்குத் தெரியாது என்று.

"அதான் அன்னைக்கே கேட்டேனே..., ஷோரூம்க்கு கால் பண்ணேன்..., நான் கேட்ட மாடல், கலர் இருந்தது...,

அவங்களே டெலிவரி கொடுத்துட்டாங்க. டிரீட்..., நான் எதுவும் அச்சீவ் பண்ணவே இல்லையே..." அவளுக்கு சுத்தமாக புரியவில்லை.

அவளது பதிலில் ஜீவித்யா களுக்கென சிரித்துவிட, 'ஏன்...?' என்ற பாவனையில் அவளை ஏறிட்டாள்.

பரத்தோ..., நம்ப முடியாத திகைப்பில் ஹேமாவை ஏறிட்டவன், "அவ சும்மா சிரிக்கறா..., விடு..." அவளை சமாதானப் படுத்தினான்.

"ஹேய்..., யூ போத் கிட்டிங் மீ..." அவனது இதழ்களில் தவழ்ந்த குறும்பு புன்னகையைக் கண்டவள், செல்லமாக அவன் தோளை குத்திவிட்டு, தோழியை ஒரு அடி போட்டாள்.

இருவரின் புன்னகையும் பெரிதாக விரிய, அதே புன்னகையோடு அவரவர் அறைக்குச் சென்றார்கள். தொடர்ந்த நாட்களில், ஹேமா, தன் ஓய்வு நேரங்களை பரத்துடனேயே கழித்தாள். பரத்திற்கு அது பிடித்திருந்தாலும், அவளது உயரத்துக்கு, இது சரிப்படுமா என்ற பயம் அதிகம் இருந்தது.

மதிய உணவுக்கான இடைவேளையில் கூட, அவனோடு அமர்ந்து உணவு அருந்துவதையே விரும்பினாள். "ப்ளீஸ் பரத்..., பீ வித் மீ..." அவள் கெஞ்சலாக கேட்கையில், அவனால் எவ்வாறு விலகிச் செல்ல முடியும்?

ஒரு கட்டத்தில், அவளோடு இருப்பதை அவனது மனமும் நாட, இதை தவிர்த்தே ஆக வேண்டும். மனதுக்குள் எண்ணிக் கொண்டான். அதற்கான சந்தர்ப்பம் அவனுக்கு அன்றே கிடைத்தது.

அவன் மாலையில் வீட்டுக்கு கிளம்பிக் கொண்டிருக்க, அவனை எதிர்கொண்டாள் ஹேமா. அவளோடு மித்ராவும், ஹரினியும் உடன் இருக்க, சற்று பரபரப்பாகவே காணப்பட்டாள்.

ஒரு எமர்ஜெசி ஆப்பரேஷன் என்பதால் சற்று வேக நடையாய் போய்க்கொண்டிருந்தாள். "ஹனி..., பீ கூல்..."

அவளது திறமை தெரிந்தாலும், சில நேரங்களில் அளிக்கப்படும் வார்த்தைகளுக்கு மதிப்பு அதிகம் என்பது அவனுக்குத் தெரியுமே.

அவனது ஹனி என்ற அழைப்பை கேட்டவர்கள்..., "டாக்டர்..., அதென்ன ஹேமா டாக்டர் மட்டும் ஸ்பெஷல்..., செல்ல பேர் எல்லாம் தூள் பறக்குது. புரிஞ்சு போச்சு..., புரிஞ்சு போச்சு..." இருவரும் கிளுக்கிச் சிரிக்க, திடுக்கிட்டான்.

"ஹேமா...?" கேள்வியாய் அவளை ஏறிட, "யா..., தட்ஸ் மை நேம்..." அந்த பரபரப்பிலும், அவனது கோபக் கண்களைப் பார்த்து அப்படியே நின்றுவிட்டாள்.

சூழ்நிலையைக் கண்டு தன் கோபத்தை மறைத்தவன், "யூ கோ..." அவளை அனுப்ப முயன்றான். அவளைக் கடந்து அவன் செல்ல, வேகமாக அவன் கரத்தைப் பற்றி தடுத்தவள், "பரத்..., ஆர் யூ ஆங்கிரி...?" அதுதான் முக்கியம் என்பதுபோல் அவள் நிற்க,

"ஹனி..., டூ யூவர் டியூட்டி ஃபஸ்ட்..." அவள் கேள்விக்கு பதில் அளிக்காமல் விலகிச் செல்லும் அவனை, ஒரு இயலாமையாய் பார்த்துக் கொண்டிருந்தவள், அங்கே துடிக்கும் உயிரின் நினைவு வர, வேகமாக விரைந்தாள்.

அவன் கோபத்துக்கான காரணம் அவளுக்கு சத்தியமாக புரியவில்லை. தன் கேசை முடித்தவள் அவனுக்கு அழைக்க, 'ஹனி' என தன் அலைபேசியில் ஒளிர்ந்த அழைப்பை இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தவன், அழைப்பை எடுக்கவே இல்லை.

'அப்படியென்றால் வேண்டுமென்றே என்னை முட்டாளாக்கிவிட்டாளா?' ஒருவித கோபம்..., மனதை அழுத்தியது. இதுவரை யார் பெயரையும் சுருக்கி கூட அழைக்காத தான்..., அவளை ஹனி என அழைத்த விதம்..., அவனால் அதை சாதாரணமாக ஏற்க முடியவில்லை.

அன்று இரவு உணவை அவன் உண்ண அமர, தாய் மிகவும் சோர்வாக இருப்பதைப் பார்த்து திடுக்கிட்டான். "என்னம்மா பண்ணுது...?" கேட்டவன், அவரது சிவந்த கண்களைப்

பார்த்து, வேகமாக அவர் நெற்றியை தொட்டுப் பார்க்க, அதுவோ நெருப்பாய் தகித்தது.

கூடவே..., ஆஸ்மாவின் தீவிரமும் சேர, அவரால் அவன் அருகில் அமர்ந்திருக்க கூட முடியவில்லை. அவரது அறைக்கு அழைத்துச் சென்றவன், ஊசி போட்டு, டிரிப் போட்டு, அவருடனே அமர்ந்து கொண்டான்.

ஹேமாவோ, அவன் தன் அழைப்பை எடுக்கவில்லை என்பதால், 'கால் மீ ஒன்ஸ் யூ ஆர் ப்ரீ...' குறுஞ்செய்தியை அனுப்பிவிட்டு, அவனது அழைப்புக்காக காத்திருந்தாள்.

அன்று மட்டுமில்லை..., அடுத்த நான்கு நாட்களும் அவன் அவளுக்கு அழைக்கவும் இல்லை. மருத்துவமனைக்கு வரவும் இல்லை. அவனைக் காணாமல் நிச்சயமாய் ஏங்கித்தான் போனாள்.

ஆனால்..., அதே நான்கு நாட்களில், ஆண் என்பவனின் மறு பக்கம் எப்படி இருக்கும் என்பதை அவள் நன்கு உணர்ந்து கொண்டாள். அன்று அவள் டியூட்டி பார்த்துக் கொண்டிருக்க, ஒரு தாயும், பெண்ணுமாக அவளைக் காண வந்தார்கள்.

அந்த பெண் கல்லூரியில் அடியெடுத்து வைத்திருப்பாள் என்பது போன்ற தோற்றம். அந்த பெண் பயத்திலும், தடுமாற்றத்திலும் அமர்ந்திருக்க, அவளது தாயோ..., கோபமாக அமர்ந்திருந்தார்.

"என்ன சொல்லுங்க...?" அவள் கேட்கவே..., "சொல்லுடி..., ஏன் வாயை மூடிட்டு இருக்க...? என் வயித்தை கழுவணும்னு சொல்லு..." ஆத்திரமாக உரைத்தாலும், அவர் கண்களில் பட்டென கண்ணீர் வழிந்தது.

அவர் சொல்ல வருவது அவளுக்கு சுத்தமாக புரியாமல் போக, "இங்கே பாருங்க..., சொல்றதை தெளிவா சொல்லுங்க. அப்போதான் என்னால் ஏதாவது செய்ய முடியும்..." தன்மையாகவே கேட்டாள்.

அந்த பெண்ணோ குலுங்கி அழ, "இப்போ அழுது என்னடி பண்றது..., இந்த புத்தி முதலிலேயே இருந்திருக்கணும்..." மகளை அங்கேயே அடித்தார்.

அதைப் பார்த்து திகைத்தவள், "நோ..., அடிக்காதீங்க..., என்னன்னு சொல்லுங்க..." எழுந்து வந்து தடுத்தாள்.

"என்னன்னும்மா சொல்லுவேன்..., காலேஜுக்கு போறேன்னு போனவ, நாள் தள்ளி போயிருக்குன்னு குண்டை தூக்கி போட்டா. விசாரிச்சா..., எங்க வீட்டு பக்கத்து தெரு பையனோட பழகி..., இதை சுத்தம் பண்ணிடுங்கம்மா..." கையெடுத்து கும்பிட்டார்.

கூடவே..., "எப்படியோ..., அவங்க கைல கால்ல விழுந்து கல்யாணத்துக்கு சம்மதிக்க வச்சுட்டோம். இப்போ மூணு மாசம்..., ஆனா..., இதை சுத்தம் பண்ணிட்டு வந்தால்தான் கல்யாணம்னு உறுதியா சொல்லிட்டாங்க. என்ன செய்யன்னே தெரியாமல்..., சுத்தம் பண்ணிடுங்கம்மா..." அழுகையோடு அவர் குலுங்க, அந்த பெண்ணோ, முகத்தை மூடிக்கொண்டு குமுறினாள்.

அவளுக்கு இதை எப்படி எடுத்துக்கொள்ள என்றே தெரியவில்லை. அவளைப் பொறுத்த வரைக்கும் அவர்கள் சொல்லும் காரணம் மிகவும் சில்லியாகத் தெரிந்தது. அதைவிட, அவள் அந்த பாவத்தை, அத்தியாவசியம் என்பதைத் தவிர வேறு எதற்காகவும் அவள் செய்வது இல்லை.

அதைவிட, அவள் இருந்த நாட்டில் அதைச் செய்ய மிகப்பெரும் ப்ரோசீஜர் இருந்தது.

"நீங்க அவரை வரச் சொல்லுங்க..., நான் பேசிப் பாத்துட்டு சொல்றேன்..." அவள் உரைக்க,

"அதுக்கெல்லாம் அவங்க வர மாட்டாங்கம்மா..." அவர் உரைக்க, திடுக்கிட்டாள்.

"ஜஸ்ட் பாக்கணும்னு மட்டும் சொல்லுங்க..." அவர்களை சமாதானப்படுத்தி அனுப்பினாள்.

மறுநாள் வந்தவனோ..., "எங்க வீட்ல இவ்வளவு இறங்கி வந்ததே பெருசு. பேசாமல் அவ கேக்கறதை செய்ங்க..." என்னவோ அவனுக்கும் அதற்கும் சம்பந்தமே இல்லாததுபோல் பேச, தன் கோபத்தை முயன்று அடக்கினாள்.

"வீட்ல கேட்டுட்டுதான் இவகூட செக்ஸ் வச்சுகிட்டீங்களா?" அவள் தடாலடியாக கேட்க, அவள் இப்படி கேட்பாள் என்பதை எதிர்பாராதவன் திகைத்தான்.

அதை சம்மாளித்துக் கொண்டு..., "உங்களுக்கு எதுக்கு அதெல்லாம்..., உங்களால் முடியாதுன்னா சொல்லிட்டு போங்க..., அதை விட்டுட்டு..., ஏய்..., எந்திரிடி..., உன் பேச்சை கேட்டு வந்தேன் பார்..." அவன் கோபமாக கத்த, அவனை அற்ப புழுவைப்போல் பார்த்தாள்.

ஹேமா அந்த பெண்ணைப் பார்த்து..., "இவனைத்தான் உனக்கு கல்யாணம் பண்ணியே ஆகணுமா...?" கேட்க, அவளோ குருகிபோய் நின்றிருந்தாள்.

"எங்கே..., வேண்டாம்னு சொல்லச் சொல்லுங்க பாப்போம்..., என் பின்னாடியே சுத்தி வந்து காதலைச் சொன்னவ இவதான். அது மட்டும் இல்லை..., இன்னும் அவன் பேச..., ஹேமாவுக்கோ பேரதிர்ச்சி.

"ப்ளீஸ் டாக்டர்..., வேண்டாம்..." அவள் கரத்தை அந்த பெண் பற்றிக்கொள்ள, அவனது பேச்சு விளைவித்த தாக்கத்தை ஜீரணிக்க முடியாமல் நின்றிருந்தாள்.

"நீ பரிமளா டாக்ட்டரை போய் பார்..." ஒரு கடிதத்தை எழுதி அவள் கரத்தில் கொடுக்க, அவர்கள் அங்கிருந்து அகன்றார்கள்.

ஹேமாவுக்கோ..., 'அவதான் காதலைச் சொன்னா..., சுத்தி வந்தா..., தொட்டப்போ...' பட்டென தன் காதை மூடிக் கொண்டாள். முதல் வேலையாக ஜீவிதாவை அழைக்க, வேலை நேரத்தில் அழைக்க மாட்டாள் என்பதால், வேகமாக அவளது அழைப்பை ஏற்றாள்.

"சொல்லுடி..." "ஜீவி..., உடனே என் ரூமுக்கு வா..." அவள் குரலில் இருந்த நடுக்கம், மேலே கேள்வி கேட்காமல் அதை செய்யத் தூண்டியது.

செவிலியிடம் உரைத்துவிட்டு, அவளைக் காண விரைந்தாள். "ஹேமா..., என்னடி ஆச்சு...?" அவள் அமர்ந்திருந்த கோலம், ஜீவித்யாவுக்கு பயத்தை கொடுத்தது.

"ஜீவி..., உங்க நாட்ல பொண்ணுங்க பையன் கிட்டே காதலைச் சொல்ல மாட்டாங்களா இல்ல கூடாதா...?" எதையோ அறிந்துகொள்ளும் வேகம்.

"இப்போ எதுக்குடி அது...?"

"சொல்லு..." கிட்டத்தட்ட அவளை உலுக்கினாள்.

நிச்சயம் ஹேமாவின் மனதுக்கு பயத்தை கொடுக்கும் படியாக எதுவோ நடந்திருக்கிறது என்பதை உணர்ந்தவள், "அது..., நாம யார்கிட்டே சொல்லுகிறோம் என்பதைப் பொறுத்தது..." சம்மாளிப்பாக பதில் கொடுத்தாள்.

"நேரடியா பதில் சொல்லு ஜீவி..." அவள் இதயம் தாறுமாறாக துடித்தது.

"முதல்ல நீ வா..., உக்கார்..., இந்த தண்ணியை குடி..." அவள் தண்ணீர் குடித்து முடிக்கும் வரைக்கும் பொறுமையாக இருந்தவள், "இப்போ என்னன்னு சொல்லு..." அவள் எதிரில் அமர்ந்தாள்.

நடந்த விஷயத்தை உரைத்தவள், "இப்போ சொல்லு..., நான் கேட்டதுக்கு பதில் என்ன...?".

சற்று நேரம் அமைதியாக இருந்தவள், "சில உரிமைகள்... இங்கே பெண் என்பதற்காகவே கிடையாது ஹேமா..." நிறுத்தியவள், "பெண்ணை தெய்வமா மதிக்கும் ஆண்களும் இங்கே இருக்கத்தான் செய்யிறாங்க. அதேபோல்..., பெண்ணை வெறும் சதையா பாக்குற ஆண்களும் இங்கே தான் இருக்காங்க.

"காதல் என்பதை புனிதமாவும் நினைக்கும் ஆண்கள் இருக்காங்க, அதே காதலை ஜஸ்ட் செக்ஸ்க்கு ஒரு கீயா உபயோகிக்கும் ஆண்களும் இருக்காங்க. நீ பார்த்தது இரண்டாம் ராகம்..., முதல் ரக ஆண்மகனிடம் நீ காதலைச் சொன்னால்...,

"எந்த சூழ்நிலையிலும்..., தன்னை நம்பிய பெண்ணோட கற்புக்கு காவலா இருப்பாங்க. சோ..., நான் முதல்ல சொன்னதுதான்..., 'அது... நாம யார்கிட்டே சொல்கிறோம் என்பதைப் பொறுத்தது. தேர்ந்தெடுக்க வேண்டியது நம்மளோட கடமை..." அவள் கண் முன்னால் நட்ராஜ் வந்து போனான்.

ஹேமாவோ..., "என் பரத் அப்படிப்பட்டவன் இல்லை தானே..." அவள் கரத்தை உலுக்க, "ஏய்..., பரத் அண்ணாவை நீ என்னன்னு நினைச்சுட்டு இருக்க? இன்னைக்கு வரைக்கும் என் பெயரை கூட சுருக்கி கூப்பிடாதவர்..." பட்டென உரைக்க, ஹேமாவின் முகத்தில் மெல்லிய பிரகாசம்.

நொடியில் அது மறைய, "பரத் என்மேல் கோபமா இருக்கான்..." தன் அலைபேசியை பார்த்தவாறே உரைத்தாள்.

"என்னடி பண்ணித் தொலைச்ச...?" படபடத்தாள்.

"ம்ச்..., என் நேம் ஹேமான்னு அவனுக்கு தெரியாதா...? அன்னைக்கு இந்த மித்ராவும், ஹரினியும் அவன்கிட்டே சொல்லிட்டாங்க..., டென்ஷன் ஆகிட்டான்..." .

"ஹையோ..., அண்ணாகிட்டே நானும் சொல்லணும்னு நினைத்தேன்..., ஆனா மறந்துட்டேன்..., சரி விடு..., சரி பண்ணிடலாம்..." அவளுக்கு நம்பிக்கை அளித்தாள்.

"திரீ டேஸ் ஆச்சு..., அவன் ஹாஸ்பிடல் கூட வரலை..." கவலையாக உரைக்க, "அதான் பாத்துக்கலாம்னு சொல்றேன் தானே..., விடு..." அவளை சமாதானப் படுத்தினாள்.

"உனக்கு டியூட்டி முடிஞ்சதா...?" ஹேமா கேட்க,

"பிசாசே..., வேலை நேரத்தில் கூப்ட்டு, கேள்வியைப் பார். அதை பாதியில் விட்டுட்டு வந்திருக்கேன். உன் சந்தேகமும் நீயும்..., ஓன் அவர்ல வரேன்..." பாதியில் விட்ட வேலையை தொடரப் போனாள்.

மனதுக்குள், பரத் கோபமாக இருக்கிறான் என அவள் சொன்னதே உலா போனது. 'இதற்கு ஏதாவது செய்ய வேண்டும்...' மனதுக்குள் குறித்துக் கொண்டாள்.

நான்குநாள் முடிவில் அவன் மருத்துவமனைக்கு வர, அவனைக் காண சந்தர்ப்பம் வேண்டி காத்திருந்தாள் ஹேமா. ஆனால் அப்படி ஒரு சந்தர்ப்பத்தை அவன் வழங்க மறுக்கவே, தன் வீட்டுக்கு ஜீவித்யாவோடு சென்றவள், பரத்தை அழைக்கச் சொன்னாள்.

ஜீவித்யாவுக்குமே அவன் வராததன் காரணம் தெரிய வேண்டி இருந்ததால், அவனை அலைபேசியில் அழைத்தாள். எவ்வளவு நாள் ஹேமாவை பார்க்காமல் தவிர்க்க முடியும் என்பதால், அவனும் வருவதாக ஒத்துக் கொண்டான்.

அவன் வருவதாக சொல்லியிருந்ததாலோ என்னவோ..., வீட்டு கதவு திறந்தே இருக்க, உள்ளே நுழைந்தான். அங்கே., ஹாலில் அமர்ந்திருந்த ஹேமாவும், ஜீவித்யாவும் ஒன்றாக அமர்ந்து பேசிக் கொண்டிருப்பது தெரிந்தது.

"ஜீவித்யா...?" அவன் அவர்கள் முதுகின் பின்னால் குரல் கொடுக்க, சட்டென திரும்பிப் பார்த்த பெண்கள் இருவரும், தாங்கள் செய்துகொண்டிருந்த செய்கையில் கவனம் கலைந்தார்கள்.

அப்பொழுது..., ஹேமாவின் கையில் இருந்த அலைபேசியில் இருந்து, "ஹனி, ஒன் டே ஐ வில் கம் டு சென்னை..." சொல்லிக் கொண்டிருந்தவளுக்கு, இவர்கள் பதில் அளிக்காமல் போகவே..., "ஹனி..., ஹனி..., ஆர் யூ தேர்? ஜீவி, வாட் ஹேப்பண்ட்..." மியாவின் குரல் அந்த அறையை நிறைத்தது.

ஹேமா பரத்தையே வெறிக்க, சட்டென தெளிந்த ஜீவித்யா, "மியா, வில் டாக் டு யூ லேட்டர்..." ஹேமாவின் கையில் இருந்த அலைபேசியை வாங்கி அணைத்து வைத்தாள்.

மியா ஹேமாவை ஹனி என அழைத்ததை கேட்டுக் கொண்டிருந்தவன், 'அப்போ லண்டன்ல ஹேமாவை இப்படித்தான் அழைப்பார்கள் போல...' என்ற முடிவிற்கு வந்தவன், சற்று தெளிந்தான். அதைவிட, அவளைக் காணாத இந்த நான்கு நாட்களில், அவளை தவிர்க்க வேண்டும் என நினைக்கையிலேயே அதிகம் நினைத்ததை எண்ணிப் பார்த்தவனுக்கு தன் மனம் முழுதாக புரிந்தே இருந்தது.

"உள்ளே வாங்கண்ணா..., ஏன் அங்கேயே நின்னுட்டீங்க?", ஜீவித்யா பரத்தை உள்ளே அழைத்தாள்.

பரத்தைப் பார்த்த ஹேமா..., சற்றும் யோசிக்காமல், தாமதியாமல், "ராஸ்கல் இவ்வளவு நாளா எங்கடா போயிருந்த, சொல்லிட்டு போகணும்னு தெரியாது. நாலு நாள், நாலு நாளா உன்னை தேடிட்டு இருக்கேன். ஜஸ்ட் கால் பண்ணா..., ஒரு கர்ட்டசிக்கு திருப்பி கூப்பிட மாட்ட? மெஸ்சேஜ்க்கு கூடவா ரிப்ளை பண்ண தெரியாது.", அவன் சட்டை காலரை பிடித்து இழுத்த வாறு கேட்டாள்.

அங்கிருந்த ஜீவித்யா அதிர்ந்தாலும் அவள் உள்மனம் புரிந்ததால் அமைதியாக அடுத்து நடப்பதை வேடிக்கை பார்த்தாள்.பரத் இதற்கு எப்படி ரியாக்ட் செய்கிறான் என்பதை பார்ப்பது மட்டுமே அவளது எண்ணமாக இருந்தது.

பரத் அதிர்ந்து விழித்து இமைக்க மறந்து, சுவாசிக்க மறந்து அவளையே பார்த்தவாறு நின்றான்.

# பகுதி - 9

பரத்தின் சட்டை காலரை பிடித்து இழுத்து அவன் வராததன் காரணத்தை அவள் கேட்டுக் கொண்டிருக்க, பரத்தோ இமைக்க மறந்து அவளைப் பார்த்தான்.

நொடியில் தன்னை நிலை படுத்திக் கொண்டாலும், அவளை விலக்கி தள்ள மனம் முரண்டினாலும் கைகள் அவளை விலக்க எந்த முயற்சியும் எடுக்கவில்லை. மனம் முழுக்க அவள் வாசம் செய்கையில், அதை எப்படிச் செய்வதாம்?

'நான் ஏன் உன்னிடம் சொல்லிவிட்டு போகவேண்டும்', என்ற கேள்வி அவளை கட்டுப்படுத்த என்பதற்காக கூட அவளிடம் கேட்க முடியவில்லை.

"பதில் சொல்லுடா..., என்னை அவாய்ட் பண்றியா...?" நேரடியாகவே கேட்டாள்.

பரிதாபமாக அவன் ஜீவித்யாவைப் பார்க்க, 'நீங்களே சம்மாளிங்க' என்பது போல் இதழில் மெல்லிய புன்னகையுடன் அவர்களை பார்த்துக் கொண்டிருந்தாள்.

MBBS முடித்து, மகப்பேறு சிறப்பு மருத்துவமும் முடித்து மருத்துவராக வேலை பார்க்கும் ஹேமா என்னமோ கல்லூரி படிக்கும் மாணவியாக மாறி, செல்ல சிணுங்கலுடன் முழு ஆண்மகனின் அருகில் நிற்கிறோம், அவனை தொட்டு பேசுகிறோம் என்ற உணர்வு கூட இல்லாமல் இருப்பதை பார்த்தவள்  தனக்குள் சிரித்துக் கொண்டாள்.

இது அவளது இயல்பு இல்லை என்பது புரியாத அளவுக்கு ஜீவித்யாவுக்கு அவளைப் பற்றி தெரியாமல் இல்லையே.

காதல் ஒருவரை எந்த அளவு மாற்றி விடுகின்றது. படிப்பு, அந்தஸ்த்து, வேலை எதுவுமே இடையில் நுழைய முடியாது. அங்கு இரண்டு மனங்களுக்கு மட்டுமே இடம்.

அவைகளே உறவாட முடியும். பரத்தோ, இப்பொழுது அவளிடம் கோபப் பட்டால் நொறுங்கிவிடுவாள் என்பது புரிந்து அமைதியாக அவளைப் பார்த்தான்.

மெதுவாக தன் சட்டை காலரில் இருந்து அவள் கைகளைப் பிரித்தான். நெருங்கி நின்ற அவளிடமிருந்து கொஞ்சம் விலகி நின்றான். அவனது இந்த செயல்களால் ஹேமாவும் கொஞ்சம் தன்னிலை அடைந்தாள்.

"ஹனி..., அழைத்தவன், வேகமாக அதைத் திருத்தி, ஹேமா இப்போ என்ன ஆச்சு, என் அம்மாவுக்கு கொஞ்சம் உடம்பு சரியில்லை.அவங்க கூடவே இருந்து கவனிக்க வேண்டியதா இருந்தது. அதனால் தான் நாலு நாளா வர முடியலை..."  விளக்கினான்.

'அடப்பாவி அண்ணா..., நீ ஏன் என்னை தேடுனீங்கன்னு கேட்டானா பாரேன். அப்படி மட்டும் அவர் கேட்டு இருக்கணும், உடனே ஹேமா எதையாவது சொல்லி இருப்பாள். பையன் சாமர்த்தியமா பேசி தப்பிச்சுட்டாரே', சுவாரசியம் குறைய அவர்களையே பார்த்தாள்.

"அம்மாவுக்கு உடம்பு சரியில்லையா, இப்போ பரவாயில்லையா, இங்கே ஹாஸ்பிட்டலில் தான் இருக்காங்களா", கேள்விகளை அடுக்கினாள்.

"அம்மாவுக்கு கொஞ்சம் காய்ச்சல் வேற ஒண்ணும் இல்லை. அம்மா ஹாஸ்பிட்டல் எல்லாம் வர மாட்டாங்க. அதனால்தான் நான் வீட்டில் இருந்து கவனிக்க வேண்டியதா போச்சு".

"அதுக்கு நீங்க எதுக்கு வீட்டில் இருக்கணும். அவங்களை கவனிக்க ஆள் வைக்க வேண்டியதுதானே", அவள் சாதாரணமாக கேட்டாள்.

"அவங்க என் அம்மா, அவங்கஒண்ணும் அனாதை இல்லை. ஆள் வச்சு கவனிக்க, அவங்க பிள்ளை நான் இருக்கேன்", கோபமாகவே சொல்லிவிட்டான்.

பேச்சு அபாய திசையில் போவதை தடுக்க முயன்றாள் ஜீவித்யா. "அண்ணா..., என்கிட்டே ஒரு வார்த்தை சொல்லியிருக்கலாமே..., நான் வந்து பார்த்திருப்பேனே..." அவனை தன் புறம் திருப்ப முயன்றாள்.

அவன் கோபம் புரியாமல், "பரத் நான் கேட்டதுக்கும் நீ சொன்னதுக்கும் என்ன சம்பந்தம்", அவள் விடாமல் கேட்கவும் ஜீவித்யா மானசீகமாக தன் தலையிலேயே அடித்துக் கொண்டாள்.

'இவ தேரை இழுத்து தெருவில் விடாமல் அடங்க மாட்டா போல இருக்கே, ஏற்கனவே இவருக்கு அம்மா பாசம் அதிகம் இதை புரிஞ்சுக்காம', அவளை 'ஏண்டீ உனக்கு' என்ற பார்வை பார்த்தாள் ஜீவித்யா.

அவள்  பார்வையில் என்ன கண்டாளோ, அதைவிட பரத்தின் கண்களில் தெரிந்த கோபம் தான் எதையோ தவறாக பேசிவிட்டது புரிந்தது.

என்னவென்றுதான் புரியவில்லை. "சாரி பரத் நான் ஏதோ தப்பா சொல்லிட்டேன்னு புரியுது ஆனால் என்னன்னு தெரியலை", சின்ன குரலில் சொல்லிவிட்டு வெளியேறினாள்.

அவள் செல்லவே..., "அண்ணா..., அவ எதையும் மீன் பண்ணி சொல்லலை..." ஜீவித்யா அவனிடம் உரைக்க,

"எனக்குத் தெரியும்மா..., அவ வாழ்ந்த கல்ச்சர் அப்படி..." அவன் புரிதலில் நிம்மதி கொண்டாலும், அவனது குரலில் இருந்த கவலையில், நெஞ்சம் கனத்துப் போனது.

அதை மறைத்தவள்..., "அண்ணா..., சொல்லிக் கொடுத்தால் அவ புரிஞ்சுப்பா..." இருவரின் மனமும் புரிந்த பிறகு, கடவுளின் சித்தம் இதுவாக இருக்கையில், தான் இடையில் என்ன தடுத்தாலும் முடியாது என்பது அவளுக்குப் புரிந்து போனது.

எனவே..., ஒருவரை மற்றவர் புரிந்து கொள்ளவாவது உதவலாம் என முடிவெடுத்தாள். ஆனால்..., அவளைப் பற்றி

நொடியில் புரிந்துகொள்ளும் பரத், தன் மன உணர்வுகளை அவளிடம் வெளிப்படுத்துவானா என்பதே அவளது இப்போதைய கவலையாக போயிற்று.

"இல்லம்மா..., அவ இப்படியே இருக்குறதுதான் எனக்கு பிடிச்சிருக்கு..." தன்னை மீறி உரைத்தவன், "தட் மீன்ஸ்..., அவ அவளாகவே இருக்கட்டும்னு சொல்ல வந்தேன். சரிம்மா..., அம்மா வீட்ல தனியா இருப்பாங்க, நான் கிளம்பறேன்..." அவளிடம் விடைபெற்றுவிட்டு சென்றுவிட்டான்.

ஹேமாவுக்கோ..., மனம் முழுவதும் பரத்தின் கோப முகமே வந்து போனது.அவன் கோபத்துக்கு ஆளாகும் இரண்டாம் விஷயம் என்பதால், அதைப் பற்றி ஆராய்ந்தாள். அவன் தாயைப் பற்றி அப்படி பேசியிருக்கக் கூடாது என்பது புரிய, தன்னை திருத்திக் கொள்ள முயன்றாள்.

அதே நேரம்..., தன் உரிமையான கேள்விக்கு, அவனது விலகலான பதில்..., மனதின் ஓரம் சிறு வலியை தோற்றுவித்தது. அத்தோடு..., ஹனி என்ற அழைப்பை, அவன் ஹேமா என மாற்றிய விதம்..., மனதுக்குள் எழும் வலியின் காரணம் அவளுக்கு புரியவே இல்லை.

தான் இந்த அளவுக்கு அவனை விரும்புகிறோம் என்பதையே உணராமல் இருந்தாள். ஜீவித்யா சொன்ன, 'சுற்றி நடப்பதை கவனி...' என்பதற்கான அர்த்தம் புரிய, கொஞ்ச நாள், தான் பழைய ஹேமாவாக இருப்பதே சிறந்தது எனத் தோன்றியது. முடிவெடுத்தவள், ஜீவிதாவை தேடிச் சென்றாள்.

அதன் பிறகு..., மருத்துவமனையில் ஹேமா தனது வேலையை கவனித்துக் கொண்டு தன் பாட்டுக்கு இருந்தாள். அவளது செய்கைகள், தவிப்பு, அணைப்பு, கண்ணை சிமிட்டி சிரிக்கும் அழகு அனைத்தையுமே ரகசியமாக ரசித்தது என்னமோ பரத் தான்.

அன்று தன்னை பார்த்ததும் ஓடிவந்து தன்னை அணைத்தது. தன் சட்டை காலரை பிடித்து உரிமையாக

அதட்டியது, அனைத்தையும் உள்ளுக்குள் உருகி உருகி ரசித்தவன், இறுதியாக அவள் தாயை கவனிக்க ஆள் வைக்க வேண்டியதுதானே என்று கேட்டதை நினைத்தவுடன் அந்த இனிய நினைவுகள் அனைத்துமே அழிந்து ஒரு இறுக்கம் குடிகொண்டது.

அவன் மனமே அவன் காதலுக்கு எதிரியாக இருந்தது. அவளது வசதிக்கு அவள் தன் வீட்டில் தன் தாயை கவனிக்க மாட்டாள் என்று எண்ணினான். வசதியானவர்களுக்கு இருக்கும் திமிரும் ஆணவமும் அவளுக்கு இருக்கும். இவள் தன் வீட்டுக்கு சரி வர மாட்டாள்.

தாயை கவனிக்க மாட்டாள், மதிக்க மாட்டாள் என்று தனக்கு தானே கற்பனை செய்து கொண்டான். இவளை நெருங்க கூடாது. அவளை விட்டு விலகியே இருக்க வேண்டும். முடிவை தவறாக எடுத்தனா சரியாக எடுத்தானா தெரியவில்லை.

அவனுக்கு இந்த இனிய நினைவுகளை கொடுத்தவளோ, தன்னை ஒருவன் உருகி உருகி நினைப்பதை அறியாமல், பரத்தை தினமும் பார்த்தால் போதும், அவன் தன்னுடன் இங்கே மருத்துவமனையில் இருக்கிறான் அது போதும் என்ற திருப்தியில் இருந்தாள்.

இவை அனைத்தையுவிட, சில நேரங்களில், அவன் இருப்பை தான் உணர்கிறோம், எதிர்பார்க்கிறோம் என்ற சிந்தை கூட இல்லாமல் இருந்தாள். தினமும் காலையில் அவனை பார்க்க வேண்டும்.அவனுடன் தான் உணவருந்த வேண்டும். அதையும் அவன் வந்து அழைக்க வேண்டும், என விரும்பினாள்.

சில நாள், பரத் கூட அவளுக்காக என்று சொல்லிக் கொண்டு வீட்டிலிருந்து சாப்பாட்டை எடுத்துவந்து அவளுடன் கான்டீனில் அமர்ந்து சாப்பிட்டான். சில வேளைகளில் தன்னால் வர முடியாது என்பதை தகவலாகவாவது சொல்லி விடுவான்.

பரத் அவளை எவ்வளவு விரும்பினானோ, அதே அளவு அதை அவளிடமிருந்து மறைத்தான். ஆனால்..., அவனது பொசசிவ் குணத்தை, அவள்மேல் தனக்கிருக்கும் உரிமையை அவனே உணர ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது.

அன்று அப்படித்தான்..., இருவரும் சேர்ந்து கேண்டீன் செல்ல, அவர்களை எதிர்கொண்டான் மருத்துவர் தானேஷ். "ஹாய் ஹேமா..., ஐ'ம் தானேஷ்..., ரொம்ப நாளா உங்களை மீட் பண்ணணும்னு நினைச்சுட்டே இருந்தேன்..." உரைத்தவன், அவள் பக்கமாக கையை நீட்ட, "ஹாய்... தானேஷ்..." தானும் அவன் கையைப் பிடித்து குலுக்கினாள்.

தானேஷை பொறுத்த மட்டில், அங்கே வேலை செய்யும் செவிலிகளுக்கு மத்தியில் கூட அவனுக்கு நல்ல பெயர் கிடையாது. எல்லா பெண்களிடமும், தன் மனதின் அழுக்கையும், குப்பையையும் கொட்ட துடிப்பவன். சந்தர்ப்பம் கிடைத்தால் எல்லா பெண்களும் வழிக்கு வருவார்கள் என்பது அவனது கூற்று.

அப்படிப் பட்டவன், ஹேமாவிடம் சாதாரணமாக உரையாட வந்தாலே அவனால் பொறுக்க முடியாது. அப்படி இருக்கையில், அவள் கையைப் பற்றி குலுக்குவது என்றால்..., அவனுக்கு பற்றிக்கொண்டு வந்தது. அதைவிட, பற்றிய கையை அவன் விடாமலே போக, ஹேமா என்னவோ அதை சாதாரணமாகத்தான் எடுத்துக் கொண்டாள்.

பரத்துக்குத்தான் ஆத்திரமாக வந்தது. அவனிடம் எதையும் சொல்ல முடியாமல், ஹேமாவையும் தடுக்க முடியாமல், தன் கோபத்தை கட்டுப்படுத்திக் கொண்டு நின்றிருந்தான்.

அதைப் பார்த்த தானேஷ்..., உள்ளுக்குள் சிரித்தவனாக, "ஹேமா..., நான் கேண்டீன் தான் போறேன்..., வாங்களேன்..., நாம சேர்ந்தே போகலாம்..." பரத்தை ஓர விழியில் கவனித்தவனாக அழைக்க, அவன் முகத்தில் ஓங்கி குத்த எழுந்த ஆத்திரத்தை அடக்கிக் கொண்டான்.

ஹேமா என்ன பதில் சொல்வாள்...? அவளை ஏறிட, "ஓ..., சாரி..., இன்னொரு நாள் பார்க்கலாம். நான் இப்போ பரத்தோட போறேன்..., வில் யூ ப்ளீஸ்..." தன் கரத்தை அவனிடமிருந்து உருவிக் கொள்ளாமல், பார்வையால் சுட்டியவள், அவனை நேர் பார்வை பார்த்தாள்.

அவனோ, அப்பொழுதுதான் அதை கவனித்தவன் போன்று..., "சாரி..., நான் கவனிக்கலை..." வேகமாக தன் கரத்தை விலக்கிக் கொண்டான்.

"இட்ஸ் ஓகே..." உரைத்தவள், "பரத்..." அவனைப் பார்க்க, அவளோடு நடந்தான். அவன் மனமோ..., அவள் கரத்தை தனக்குள் பொதிந்து கொள்ள வேண்டும் என்ற வேட்கை அவனை ஆட்டிப் படைத்தது. கூடவே..., 'அவனிடமிருந்து விலகி இரு...' எழுந்த வார்த்தைகளை, சிரமப்பட்டு விழுங்கிக் கொண்டான்.

அதைவிட..., தானேஷிடம் இருந்து கைகளை உருவிக் கொள்ளாமல், அவனை விலக வைத்த விதம், அவனுக்கு மிகவும் பிடித்தது. அப்படியே, அவளை ஒரு நொடி இறுக கட்டிக்கொள்ள வேண்டும் போல் இருக்க, தன் நினைப்பு போகும் விதத்தைக் கண்டு, தானே திடுக்கிட்டான்.

அவர்கள் கேண்டீனுக்குள் நுழைய, அங்கே ஜீவித்யா அமர்ந்திருப்பதைப் பார்த்தாள். சட்டென முகம் பிரகாசமாக, "ஜீவி..., நீ இங்கேதான் இருக்கறியா? சொல்லிட்டு வர மாட்ட..." அவளை தோள் தட்டியவள்,

"உனக்கு ஒரு கிப்ட் வாங்கி ரெண்டு நாளா கையில் வச்சுட்டே சுத்திட்டு இருக்கேன்..., இரு..." தன் கோட் பாக்கெட்டில் கை விட்டவள், ஒரு கீயை அவள் கரத்தில் திணிக்க, அதைப் பார்த்தவள், சற்று அதிர்ந்துதான் போனாள்.

"ஏய்..., என்னடி இது...? என்ன விளையாடுறியா...? முதல்ல இதை பிடி..." அதை அவள் கரத்திலேயே திருப்பிக் கொடுத்தாள்.

"அட்வான்ஸ் ஹேப்பி பர்த்டே..., இட்ஸ் மை  பர்த்டே கிப்ட்..., தட்ஸ் இட்..." அவளை இறுக்கி அணைத்தவள், அவள் கன்னத்தில் அழுந்த முத்தமிட, அந்த அன்புக்கு முன்னால் அவளால் மறுக்க முடியவில்லை.

"கார் தான் வாங்க நினைத்தேன்..., கண்டிப்பா நீ அதை அக்சப்ட் பண்ணிக்கவே மாட்டன்னு தெரியும்..., அதான்..., வெஸ்பா வாங்கினேன். உனக்கு பிடித்த பிங்க் கலர்..., வா வா..., முதல்ல ஒரு ரைட் போயிட்டு வரலாம்..." அவள் கைபிடித்து இழுத்துச் சென்றாள்.

அங்கே இருந்த பரத்திடம், ஒரு தலையசைப்பு மட்டுமே கொடுத்தாள். அவனுக்கோ..., தன் சிந்தை போன விதம், அவளது பிறந்தநாள் பரிசு, அதன் விலை..., என சிந்தை போக, அவளது தலையசைப்பிற்கு பதில் கொடுக்கும் நிலையில் கூட அவன் இல்லை.

பார்க்கிங் ஏரியா கடந்து, தன் வீட்டுக்கு அவளை அழைத்துச் சென்றவள், அங்கே நின்ற வெஸ்பாவை கை காட்டினாள்.

"புடிச்சிருக்கா...?" தோழியின் தோளில் தன் தாடையை பதிக்க, "ரொம்ப..., பட்..." அவள் கன்னம் தடவியவளுக்கு, அதை வாங்கிக் கொள்ள பெரும் தயக்கமாக இருந்தது.

"நீ என் ப்ரண்ட்டை விட ஒரு படி மேலே ஜீவி. ப்ளீஸ்..., டோன்ட்..." எதையும் சொல்லிவிடாதே என்ற தொனியில் உரைக்க, சட்டென அமைதியானாள்.

"டிரைவ்..., ஐ வான்ட் டூ சீ..." அவள் ஓட்டும் அழகை ரசிக்க தயார் ஆனாள். ஹேமாவுக்கு டூ வீலர் ஓட்டத் தெரியாது. எனவே..., அப்படி ஓட்டுபவர்களைக் கண்டால், ஒரு பரவசம்.

"நீயும் உக்கார்..." ஜீவித்யா அழைக்க, மறுக்காமல் ஏறிக் கொண்டாள்.

"யா ஹூ..." ஜீவித்யா ஓட்ட, குழந்தையென குதூகலித்தவள், கைகளை மேலே தூக்கி, தன் துப்பட்டாவை காற்றில் அசைத்தாள். அவளது சந்தோசம்,

ஜீவித்யாவை தோன்றிக் கொள்ள, வீட்டை இரண்டு மூன்று சுற்றுக்கள் வலம் வந்தாள்.

"போதும் ஹேமா..., ஹாஸ்பிடல் போகலாம்..., தேடப் போறாங்க..." வண்டியை வீட்டின் முன்னால் நிறுத்த, "ஹாஸ்பிடல்க்கு எடுத்துட்டு போய்டலாம்..." அவள் உரைக்கவே..., வண்டியைத் திருப்ப, அவர்களை எதிர்கொண்டான் நட்ராஜ்.

அவனைப் பார்த்தவுடன், சட்டென பின் இருக்கையில் இருந்து இறங்கிய ஹேமா, "ஜீவி..., ப்ராப்ளத்தை பாத்து ஓடக் கூடாது..., ஜஸ்ட் கிளியர் இட்..." சின்னக் குரலில் உரைத்தவள், நட்ராஜைப் பார்த்து புன்னகைத்துவிட்டு, அவனைத் தாண்டி நடந்தாள்.

"தேங்க்ஸ் ஹேமா..." அவன் உரைக்க, மெல்லிய சிரிப்பையே அவனுக்கு பதிலாக்கினாள்.

"ஏய்..., நில்லுடி..." ஜீவித்யாவின் அழைப்பை அவள் கண்டுகொள்ளவே இல்லை. அதில் கோபம் கொண்டவள், அந்த கோபம் குறையாமலே அவனை ஏறிட்டாள்.

அவள் கோபத்தை கொஞ்சம் கூட கண்டு கொள்ளாமல், நிதானமாக அவளை நெருங்கினான். அவன் நெருங்கவே..., வெஸ்பாவில் இருந்து இறங்க முயல, "சிட்..." உரைத்தவன், வண்டியில் இருந்த மிரரை கைகளால் பற்றிக் கொண்டான்.

அவள் முகத்தையே பார்த்தவன், "ஸ்டில்... ஐ லவ் யூ வித்யா..., நீ என் வாழ்க்கையில் வந்தா, நான் சந்தோஷமா இருப்பேன். அதே நேரம்..., உனக்கும் நான் நல்ல கணவனா நிச்சயம் இருப்பேன்..." ஆழமான குரலில் உரைக்க, உள்ளுக்குள் தவித்துப் போனாள்.

அதை மறைத்தவள், "எனக்கு விருப்பம் இல்லைன்னு அன்னைக்கே சொல்லிட்டேனே..." அவன் முகம் பார்க்காமல் அவள் உரைக்க,

"இப்போ சொன்னதை என் கண்ணைப் பாத்துச் சொல்..., நான் போய்டறேன்" சவால் விட்டான்.

"ஏன் உங்களுக்கு காது கேக்காதா...?" வீம்புக்கு கேட்டாள்.

"கேட்கும்..., பட்..., எனக்கு உறுதியா தெரியணும்..." முதல் முறையாக அவன் முகம் சற்று சீரியசாக மாறியது.

அவளுக்கோ..., தன் மனதுக்குள் எடுத்த உறுதி அனைத்தும் எந்த நேரம் வேண்டுமானாலும் நொறுங்கிவிடும் என்பது புரிய, "ஏன் இப்படி என் நிம்மதியை கெடுக்கறீங்க...? உங்களுக்கு ஒரு முறை சொன்னால் புரியாதா? இப்பொழுதும் நான் அதே ஜீவித்யாதான்..., அதில் எந்த மாற்றமும் இல்லை..." அடித்துப் பேச, அவன் முகம் வெயிலில் வீசப்பட்ட மல்லிகைப் பூவாய் நொடியில் வாடிப் போனது.

அதை முயன்று சகித்தவன், "என் ஐந்து வருட காத்திருப்புக்கு இதுதான் பதிலா வித்யா...?" வலி மிகுந்த குரலில் கேட்க, அவளுக்கு உள்ளுக்குள் சர்வமும் ஒடுங்கிப் போனது. இன்னுமே அவனது காத்திருப்புக்கு நியாயம் செய்ய முடியும் என்ற நம்பிக்கை அவளுக்கு இல்லையே..., அவள் என்ன செய்ய?

"நான் காத்திருக்க சொல்லவே இல்லையே..." வெடுக்கென உரைக்க, மேலும் அதிகம் காயப்பட்டான்.

"என்...என்.னை பிடிக்கலையா வித்யா...?" இதைக் கேட்கும் முன்பே, அவன் சற்று திணறித்தான் போனான்.

"ஏன்..., அதையும் நானே..." அவள் வார்த்தைகளை முடிக்கும் முன்பே, சட்டென திரும்பியவன், விடு விடுவென நடக்கத் துவங்கினான். அந்த இடத்திலேயே உறைந்துபோய், உடைந்துபோய் நின்றிருந்தாள் ஜீவித்யா.

# பகுதி - 10

அன்றைக்கு டாக்டர்ஸ் மீட்டிங் இருக்க, அனைவரும் அங்கே குழுமி இருந்தார்கள். மருத்துவமனையின் வளர்ச்சி, செய்ய வேண்டிய திட்டங்கள், ஏதாவது குறை..., என அனைத்தும் விவாதிக்கப்பட, புதிய மருத்துவர்கள், டிரெயினி மருத்துவர்கள் அனைவரும் தங்களது சில கருத்துக்களை உரைத்தார்கள்.

அந்த மீட்டிங் கிட்டத்தட்ட இரண்டு மணி நேரங்கள் நடக்க, ஒரு வழியாக மீட்டிங் முடித்து அனைவரும் வெளியே வந்தார்கள்.

பரத் தன் வீட்டுக்குச் செல்லவேண்டும் என கிளம்பிவிட, அவன் தன்னை கண்டுகொள்ளாமல் செல்லவே, வெதும்பிய ஹேமா, தானும் வீட்டுக்குச் செல்வதாக சொல்லிவிட்டு கிளம்பிவிட்டாள்.

ஜீவிதாவும் வீட்டுக்குச் செல்லக் கிளம்பவே..., "வித்யா..., ஒரு நிமிஷம்..." நட்ராஜின் குரல் தன் முதுகின் பின்னால் கேட்க, சட்டென திரும்பிப் பார்த்தாள்.

"உன்கிட்டே கொஞ்சம் பேசணும்..., என் ரூம் இங்கேதான்..., சோ..." சாதாரணமாகவே அழைத்தான். மறுக்கச் சொல்லி மனம் முரண்டினாலும், தன்னை மீறி அவள் கால்கள் அங்கேயே தேங்கியது.

அன்றைய சம்பவத்துக்குப் பிறகு, இன்றைக்குத்தான் அவனைப் பார்க்கிறாள். அவன் மனதில் தன்னைப்பற்றிய நினைப்பை அழிக்க வேண்டும் என கோபமாய் பேசி விட்டவளுக்கு, அவனது விலகல் ஒருவித வலியைக் கொடுப்பதை அதிர்வாய் உள் வாங்கினாள்.

அந்த நேரத்திலும், பொய்யாக கூட, 'உன்னை எனக்கு பிடிக்கவில்லை...' என அவளால் சொல்ல முடியவில்லையே..., அப்படியென்றால், அவள் மனதில் அவன் இருக்கிறான் என்பது தானே அர்த்தம்.

அவளுக்கோ..., வீட்டில் இருப்பவர்களிடம், தன் காதலைச் சொல்லவே பெரும் தயக்கம். எங்கள் நம்பிக்கையை பொய்யாக்கிவிட்டாயே..., என சொல்லிவிட்டால்..., அந்த வார்த்தைகளை அவளால் தாங்கிக்கொள்ள முடியாது.

நம்பிக்கை துரோகி என்ற வார்த்தையை தாங்குவதற்கு பதிலாக, காதல் வலியை தாங்கிக் கொள்வது சுலபம் என அவள் கருதினாள். ஆனால்..., அனைத்தையும் விட, காதல் வலிதான் மிகுந்தது என அவளுக்கு யார் சொல்லி புரிய வைக்க?

அவள் தன் யோசனையில் மூழ்கிவிட, "வித்யா..., இதுதான் என் ரூம்..., உள்ளே வா..." அவன் அழைத்த பிறகுதான், யோசனையிலேயே அவன் பின்னால் வந்துவிட்டது புரிந்தது.

"உட்கார்..." இருக்கையை காட்டியவன், அவள் அருகில் இருந்த இருக்கையில் அமர்ந்து கொண்டான்.

அவள் அறையை சுற்றிலும் தன் கண்களை சுழற்ற, ஒரு நிமிடம் அங்கே நிலவிய மௌனத்தை அவனே கலைத்தான். "சாரி..., அன்னைக்கு பேசிட்டு இருக்கும்போதே பாதியில் கட் பண்ணிட்டு போயிட்டேன். அதான்..., சாரி கேட்கத்தான் உன்னை இங்கே கூப்ட்டேன்..." ஒரு மாதிரி மரத்த குரலில் உரைக்க, அவன் முகத்தை ஏறிட்டாள்.

முகம் பாறைபோல் இறுகிக் கிடக்க, அவன் தேகமும் ஒருவித விரைப்பில் இருப்பதை உணர்ந்து கொண்டாள். அதாவது, நமக்குப் பிடிக்காத ஒரு விஷயத்தை, ஒருவரின் கட்டாயத்துக்காகச் செய்தால் ஏற்படும் ஒருவித தன்மை அவனிடம்.

சற்று நேரம் அசாத்திய மௌனம் அங்கே நிறைய, டேபிள் வெயிட்டை உருட்டியவாறு, அதிலேயே பார்வையை நிலைக்கவிட்ட அவன் தோற்றம், கல்வெட்டாய் அவள் மனதில் பதிந்தது.

"உன்னை மறந்துட்டேன்..., இனிமேல் உன்னை டிஸ்டப் பண்ண மாட்டேன்., இப்படியெல்லாம் நான் சொன்னால்..., அது அப்பட்டமான பொய்யாகத்தான் இருக்கும். ஏன்னா..., உன்கிட்டே மன்னிப்பு கேட்கணும்னு வரச் சொல்லி, நீ இங்கே இருக்கும் இந்த நிமிஷம் கூட...,

"நான் உன்னோட இருக்கிறேன் என்ற நினைப்பே கோடி சந்தோஷத்தை எனக்கு கொடுக்குது. இந்த நிமிஷம்..., அப்படியே உறைஞ்சு போய்டாதா..., கடிகாரம் அதனோட இயக்கத்தை நிறுத்திடக் கூடாதான்னு..., மனசுக்குள் ஒரு ஏக்கம்..., பட்..., அது நடக்காதுன்னு எனக்குத் தெரியும்..., ஆனாலும்..." தன் பார்வையை ஒரு நிமிடம் அவள் முகத்தில் நிலைக்க விட்டான்.

அதில் ஒரு நொடி தெரிந்த பரவசம்..., அதையும் மீறிய ஒரு சோகம்..., எப்பொழுதும் தன்னைப் பார்க்கும் வேளைகளில், அவன் கண்கள் தன்னை சிறை பிடிக்கும், ஊடுருவும், விடை தேடும்..., ஆனால் இந்த பார்வை..., அவன் பார்வையை தன் விழியால் கவ்விக் கொண்டாள்.

தன் பார்வையை மௌனமாக விலக்கிக் கொண்டவன், "சாரி டு சே திஸ்..., அஞ்சு வருஷமா..., மனசுக்குள் உன்னோடு வாழ்ந்து..., ஒரு பையன், ஒரு பொண்ணுன்னு கற்பனை குழந்தைகளோடு..., கூடவே..., நிழலாகவும் உன்னோட வாழ்ந்துட்டு இருக்கேன்.

"இப்போ..., அதையெல்லாம் மொத்தமா அழிக்கணும்னா..., ரொம்ப..., ரொம்ப கஷ்டமா இருக்கு..." அவன் சொல்லிக்கொண்டே போக, விதிர்த்துப் போனாள். நினைவுகளில் உன்னோடு வாழ்கிறேன் அவன் சொன்ன விஷயம்..., சாதாரணமாக அவளால் எடுக்க முடியவில்லை.

ஏனோ..., தொண்டை அடைக்க, அழுகை வெடிக்க தயாரானது. 'இவனது இந்த காதலுக்கு நான் தகுதியானவள் இல்லை...' மனம் ஊமையாய் கதறியது.

'இதையெல்லாம் ஏன் என்னிடம் சொல்லுகிறாய்...?' கேட்க நினைத்த கேள்வி தொண்டைக்குழியில் சதிராட, அவள்

எண்ணம் உணர்ந்தவன் போன்று,

"கடைசியா ஒரு முறை..., உன்கிட்டே எல்லாத்தையும் சொல்லணும்னு தோணிச்சு..., அதான் உன்னை வரச் சொன்னேன். என் காதல் உனக்கு தெரியாமலே போய்டக் கூடாதுன்னு ஒரு எண்ணம். பட்..., கண்டிப்பா இனிமேல் உன்னை டிஸ்டப் பண்ண மாட்டேன். அந்த ப்ராமிஸ் மட்டும் பண்றேன்" அதை உரைக்கையில், அவன் குரல் சற்று இடறித்தான் போனது.

"பிடிக்காதவங்களை தொல்லை செய்வது சரியில்லையே..." அவள் கண்களை ஊடுருவியவன், "என்னை நேசிக்கும் ஒரு ஜீவன், இந்த உலகத்தில் ஏதாவது ஒரு மூலையில் பிறக்காமலா போயிருக்கும்... தேடணும்..." தன் வலி மறைத்து, மென்மையாக புன்னகை சிந்தினான்.

அவ்வளவு நேரமாக அவன் சொன்னதை எல்லாம் கேட்டுக் கொண்டிருந்தவளுக்கு, இறுதியாக, அவன் உரைத்ததை தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. 'அவனை வேறு ஒருத்திக்கு விட்டுக் கொடுப்பதா?' எண்ணியவள், தன் எண்ணம் போகும் விதத்தில் விதிர்த்துப் போனாள்.

அதன் கனம் தாளாமல், சட்டென இருக்கையில் இருந்து எழுந்துவிட்டாள். "நான் கிளம்பணும்..." தன் கைப்பையை எடுத்துக் கொண்டவள், அவனை கண்டுகொள்ளாமல், பார்க்கிங் சென்றாள். தன் வெஸ்பாவில் கீயை போட்டவளுக்கு, அதை ஓட்டிக்கொண்டு செல்லும் மனப் பக்குவம் இருக்கவில்லை.

இப்படியே வீட்டுக்குச் செல்வதும் முடியாது எனத் தோன்ற, கீயை எடுத்துக் கொண்டு, ஹேமாவை தேடிச் சென்றாள்.

"ஜீவி, நீ இன்னுமா கிளம்பலை..., கம்..." அவளுக்கு வழி விட்டவள், அவளது கவனம் இங்கே இல்லை என்பதை உணர்ந்து, அமைதியானாள்.

உள்ளே நுழைந்தவள், சாப்பாட்டு மேஜைமேல் இருந்த தண்ணீரை எடுத்து வாயில் சரித்துக் கொண்டு, தலையில்

கை வைத்து அமர்ந்துவிட்டாள்.

சற்று நேரம் அவளை தொல்லை செய்யாமல் பார்த்துக் கொண்டிருந்தவள், "உங்க நாட்ல காதலிக்கிறது அவ்வளவு பெரிய 'சின்'னா(பாவம்)..., பிடிச்சவங்களை பிடிச்சிருக்குன்னு சொல்ல எதுக்குடி இப்படி தயங்கறீங்க? அவங்க மனசு எவ்வளவு காயப்படும்னு யோசிக்கவே மாட்டீங்களா? முடிவு தெரிந்த பிறகுதான் ஆரம்பிப்பேன்னா..., எந்த விஷயத்தையும் செய்ய முடியாது..." கோபமாக கத்தினாள்.

ஹேமாவின் கோபத்தில் கலைந்தவள், பரிதாபமாக அவளை ஏறிட்டாள். "ஒய் யூ ஆர் ஸ்டேரிங் மீ..., ஐ'ம் டெல்லிங் தி ட்ரூத்..., நட்ராஜ் என்ன சொல்ல வரான்னு உனக்குப் புரியலன்னு சொல்லு பாப்போம்? ஹவ் மெனி டேஸ்..., ஓ மை காட்..., பாஸ்ட் பிப்டீன் டேஸ் ஹி இஸ் லாங்கிங் யூ..., இடியட்..., ஹி வாட்ஸ் டு ப்ரொப்போஸ் யூ..." அவளைப் பிடித்து உலுக்கினாள்.

பரத்தின் மேலிருந்த கோபமும் அவள் பக்கம் திரும்பியது.

அவளை அமைதியாக ஏறிட்டவள்..., "அவர் ஐந்து வருஷத்துக்கு முன்னாடியே என்கிட்டே ப்ரொப்போஸ் பண்ணிட்டார்..., நான்தான் முடியாதுன்னு சொல்லி விலகிட்டேன். இப்போ..., திரும்பவும்..." முகத்தை மூடிக்கொண்டு அழ,

"வாட்..., பைவ் இயர்ஸ் பேக்..., காட்., ஸ்டில் ஹி இஸ் வெயிட்டிங் போர் யூ..." கிட்டத்தட்ட அலறினாள். நம்பவே முடியாத திகைப்பு அவளிடம்.

"வாட் இஸ் யுவர் ப்ரோபளம் ஜீவி. ஐ நோ..., யூ லவ் ஹிம். தென் வாட்...?" அவள் அருகில் இருந்து எழுந்தவள், தன் தலைமுடியை அழுத்தமாக பற்றிக் கொண்டாள்.

என்னவென்று சொல்வாள்...? வீட்டில் நட்ராஜைப் பற்றி சொல்லும் தைரியம் ஒரு சதவீதம் கூட அவளுக்கு வரவில்லையே. உன்மேல் நம்பிக்கை இருக்கிறது எனச் சொன்ன அவளது குடும்பம், எங்கள் நம்பிக்கையை

நாசமாக்கி விட்டாயே எனத் தன்னைப் பார்த்து சொன்னால்..., நினைப்பே வலியைக் கொடுக்க, இமை மூடி, சோபாவின் பின்னால் சாய, கடைவிழியோரம் கண்ணீர் வடிந்தது.

அதைப் பார்த்த ஹேமா..., தன் கோபத்தை கைவிட்டு, வேகமாக அவள் அருகில் வந்தாள். "ப்ளீஸ் ஜீவி..., ஜஸ்ட் திங்..., உன் மனசுக்குள் இருப்பதை வெளியே சொன்னால் தானே மத்தவங்களுக்குப் புரியும். உன் பேரன்ஸ் பத்தி யோசிக்கிறியா?

"ஐ'ம் டெத் sure..., தே வில் அக்செப்ட் யுவர் விஷ்..., ப்ளீஸ் டெல் டூ தெம். பேரன்ஸ் ட்ட சொல்ல முடியலன்னா..., சரவணா கிட்டே சொல்..., அவன் புரிஞ்சுப்பான். சொல்லாமலே இருந்தால்..., உன்னை நீயே ஏமாத்திக்கிறதுக்கு  ஈக்வல் ஜீவி. ப்ளீஸ்..." அவள் கரத்தை பற்றிக் கொண்டாள்.

"உன்னோட இந்த கண்ணீரே சொல்லுதே..., நீ அவனை எவ்வளவு விரும்பறன்னு. உன்னை நீயே ஏமாத்திட்டு..., இன்னொரு லைஃப்பை உன்னால் வாழ முடியுமா?" குரல் இறக்கி வினவ, அருகில் இருந்த தோழியை தாவி அணைத்துக் கொண்டாள்.

சற்று நேரம் அழுதவள், "டெபனட்லி ஐ வில் ட்ரை..." உறுதி கொடுத்தாள்.

ஆனாலும் அதை எப்படி செய்யப் போகிறோம் என்பது அவளுக்குத் தெரியவில்லை.

"ரியலி ஜீவி..., இட் வில் ஹெர்ட் எ லாட். அதுவும்..., பிடிக்கலை என்பது வேறு..., ஆனா..., அவங்களுக்கு பிடிச்சிருக்கு..., ஆனா ஒத்துக்க மாட்டேங்காங்கன்னு தெரியும்போது..., ஐ பீல் இட் ஜீவி. பரத் வாயை மூடிட்டு, விலகிப் போகும் போது..., அவன் சட்டையைப் பிடித்து கேள்வி கேக்க ஆத்திரமா வருது.

"ஆனா..., அதைச் செய்ய முடியாமல்..., இட்ஸ் நாட் மை கேரெக்ட்டர்..., ஜான்சன் என்கிட்டே லவ்வை

சொன்னப்போ..., ஒரு பெர்சன்ட் கூட அவன் என் மனசை அட்ராக்ட் பண்ணலை. அப்படி பண்ணியிருந்தால், அந்த நிமிஷமே அதை நான் அக்சப்ட் பண்ணியிருப்பேன்.

"தட் சேம் டைம்..., எனக்கு அவனைப் பிடித்து, அவன் மறுத்திருந்தால், அந்த நிமிஷமே அதை மறந்துட்டு என் வேலையைப் பார்க்கப் போயிருப்பேன். ஆனா இங்கே..., ஹி லவ்ஸ் மீ..., ஐ நோ..., ஐ நோ..., பட் ஹி இஸ் அவாய்டிங் மீ ஒய்...?

"சில நேரம், நான் தவறா நினைக்கிறேனோ..., என் மனதின் விருப்பம் அப்படி நினைக்க வைக்கிறதோ என்று பயமா இருக்கு. திரும்பி லண்டன் போகணும்னு நினைக்கறேன். பட்..., உன்னை விட்டு, உங்க அம்மா, அப்பா, அண்ணா..., இந்த ஊர்..., இதையெல்லாம் விட்டு போக மனசில்லை. பார்ப்போம்..." அவள் இதைப்பற்றி நிறைய யோசித்திருக்கிறாள் என்பதை அவளது பேச்சு உணர்த்தியது.

ஹேமா ஒரு விஷயத்தை வேண்டாம் என முடிவு செய்துவிட்டால், அவளால் முடியவில்லை என்றாலும் அதில் உறுதியாக இருப்பாள். எனவே, அவளது லண்டன் செல்லும் யோசனையும், பரத்துக்கு பிடிக்கவில்லையோ..., என்ற கேள்வியும், ஜீவித்யாவை திகைக்க வைத்தது.

"ஏய்..., அதெல்லாம் பிறகு யோசிக்கலாம்..., முதல்ல நான் சொன்னதை மட்டும் செய்..., புரியுதா?" வேகமாக தன்னை மீட்டுக் கொண்டாள்.

கூடவே..., அவளையும் மாற்ற வேண்டி, "ஹேமா..., ஹோட்டல் போகலாம்னு சொன்னல்லா..., நாளைக்கு எனக்கு ஆஃப் தான்..., லஞ்சுக்கு போகலாமா...?" ஹேமாவிடம் கேட்டாள்.

இங்கே வந்தது முதல், சில வெரைட்டி உணவு வகைகளை சுவைக்க வேண்டும் என கேட்டிருந்தாள். எனவே அவளிடம் கேட்டாள். கூடவே..., தன் பிறந்த நாளுக்கு டிரீட் கொடுப்பதாக சொல்லியிருந்தாள்.

"எனக்கு லீவ் தான்..., சோ..., ஐ'ம் ரெடி..." உற்சாகமானாள்.

மறுநாள்..., வேலை நேரம் முடிய, தன் வெஸ்பாவை ஹேமாவின் வீட்டின் முன்னால் நிறுத்தியவள், சற்று ப்ரெஷ் ஆகிவிட்டு ஹேமாவின் காரை அவளே ஓட்டிக்கொண்டு அவளோடு ஹோட்டலுக்குச் சென்றாள். நேரம் அப்பொழுதே இரண்டு முப்பதை கடந்திருந்தது.

கூட்டம் சற்று குறைவாகவே இருந்தது. ஏற்கனவே டேபிள் புக் செய்திருந்ததால், அவர்களுக்கான டேபிள் ரெடியாக இருக்க, பப்பட் லஞ்ச் ஆர்டர் செய்தார்கள். ஸ்டார்ட்டர் அயிட்டங்கள் ஒவ்வொன்றாய் வர, அனைத்தையும் சுவை பார்க்கத் துவங்கினர்.

"ஹேமா..., இது வேண்டாம்..., இது நல்லா இருக்கும்..., இது காரம்..., உனக்கு ஒத்துக்காது..." ஜீவித்யா அவள் அருகில் அமர்ந்து ஒவ்வொன்றையும் அவளுக்கு உரைத்துக் கொண்டிருந்தாள்.

"டெலிஷியஸ்..., ஸ்..., டூ ஸ்பைசி..., டெஸ்ட்டி..." ஒவ்வொரு கமெண்ட்ஸ் கொடுத்தவள், உணவை ருசித்து புசித்தாள்.

கிட்டத்தட்ட அரைமணி நேரத்துக்கு மேலாக ஸ்டாட்டர் உணவை சுவைக்க, மெயின் டிஷ்ஷை அவர்களே சென்று எடுத்துக்கொள்ள வேண்டி இருந்தது. உணவை எடுத்துக்கொண்டு வந்து அமர்ந்தவர்கள், உணவில் கவனமாக, அவர்களுக்கு இடப்பக்கம் இருந்த கேபினில் இருந்து ஒரு பெண்மணியின் குரல் சற்று உரக்கக் கேட்டது.

"பப்ளிக் பிளேஸ்ல எப்படி பிஹேவ் பண்ணணும்னு தெரியாதாம்மா..., சுத்தி ஆட்கள் இருக்காங்க..., கொஞ்சம் மெதுவா பேசுங்க..." ஒரு ஆண்மகனின் குரல், அடிக்குரலில் அவரை கண்டிப்பது கேட்டது.

அந்த குரலைக் கேட்ட ஜீவித்யா குழம்பிப் போனாள். 'இது நட்ராஜ் குரல் மாதிரி இருக்கே...' யோசனையானவள், தன் காதை தீட்டிக் கொண்டாள்.

சுத்தி யார் இருந்தா எனக்கு என்னடா...? நான் கேட்டதுக்கு பதில் சொல்லு. ரெண்டு மாசத்துக்கு முன்னாடி வரைக்கும், இன்னும் ரெண்டே மாசத்தில் அவ இங்கே வந்துடுவா..., உடனே போய் பொண்ணு கேட்டு கல்யாணம் பண்ணிக்கறேன்னு சொல்லிட்டு இருந்த. இப்போ என்னன்னா..., இன்னும் ஒரு வருஷம் டைம் வேணும்னு கேக்கற..., என்ன விளையாடுறியா?

"உனக்கு தங்கச்சி..., அவளுக்கு ரெண்டாவது பிரசவத்துக்கு நான் போக வேண்டி இருக்கு. நீ என்ன செய்வியோ தெரியாது. இன்னும் ஆறு மாசத்துக்குள்ளே உனக்கு கல்யாணம் பண்ணி ஆகணும். அப்போதான் என்னால் நிம்மதியா அமெரிக்காவில் போய் இருக்க முடியும்..." தன் கோபத்தை குறைக்காமலேயே உரைத்தார்.

"அப்பா..., உங்களை இங்கே சாப்பிடவா கூட்டி வந்தேன்...?" தாயிடம் பதில் பேச முடியாது என்பதால், தந்தையை துணைக்கு அழைத்தான்.

"ஹோட்டலுக்கு வேற எதுக்குப்பா வருவாங்க...?" அப்பாவியாக கேட்டவர் உணவைத் தொடர, அவரை கொலைவெறியில் முறைத்தான்.

"என்னங்க..., இவனை என்னன்னு கேளுங்க..." கிருபா உரைக்க,

"என்னப்பா...?" அவர் கேட்ட பாவனையில், நட்ராஜே பக்கென சிரித்துவிட, கிருபா தன் தலையிலேயே அடித்துக் கொண்டார்.

"இதுதான் நீங்க கேக்குற லச்சணமா...?" கணவனிடம் சாட,

"நீதானே என்னன்னு கேக்கச் சொன்ன..., அதான் கேட்டேன்..." அவர் உரைக்க,

"வேண்டாம் சாமி..., நீங்க சாப்பாட்டை முழுங்குங்க..., நானே பாத்துக்கறேன்..." கணவனிடம் சிடு சிடுத்தவர், மகனை ஏறிட்டார்.

"கடைசியா என்னதான் சொல்ல வர..., இப்போ நீ லவ் பண்ண பொண்ணை பாக்க போறோமா...? இல்ல..., நான் பாக்க வரதா சொன்ன பொண்ணை பாக்குறோமா...? ரெண்டில் ஒன்று எனக்கு தெரிந்தாகணும்..." அவர் பிடியில் உறுதியாக இருக்க, அவனுக்கு தலை சுற்றிப் போனது.

வீட்டில் இதைப் பற்றி பேசினால், தாயின் கெடுபிடி அதிகமாக இருக்கும் என்பதால் தான், ஒரு பொதுவிடத்துக்கு கூட்டி வந்தான். இங்கேயும் அவரது பிடிவாதம் சற்றும் தளராமல் போக, தலை சுற்றிப் போனான்.

"அம்மா..., நான் சொல்றதை கொஞ்சம் பொறுமையா கேளுங்க..." கிட்டத்தட்ட கெஞ்சினான்.

"என்னடா கேக்க சொல்ற...? ரெண்டு வருஷமா நீ சொல்றதை மட்டும்தான் கேட்டுட்டு இருக்கேன். லவ் பண்றேன்னு சொன்ன..., சரின்னு சொன்னேன். அவ லண்டன் போயிருக்கா..., ரெண்டு வருஷத்தில் வந்துடுவான்ன..., அதையும் கேட்டுகிட்டேன்.

"இப்போ..., இன்னும் ஒரு வருஷம் டைம் கேக்கற..., நிஜமாவே நீ லவ் பண்றியா இல்லையான்னே எனக்கு சந்தேகமா இருக்குடா. போட்டோ கேட்ட இல்லைன்னு சொல்ற..., சரி அவ வீட்டிலாவது போய் பேசலாம்னா வேண்டாம்னு தடுக்கற..., எனக்கு உண்மையான பதில் வேணும்" தன் முன்னால் இருந்த உணவை அவர் தொட மறுத்தார்.

"அவ என் காதலை அக்சப்ட் பண்ணிக்கலம்மா..." ஒரு வழியாக உரைத்து விட்டான்.

"என்னப்பா சொல்ற...?" அவ்வளவு நேரமாக சாப்பாட்டில் மட்டுமே கவனமாக இருந்த காத்தவராயன் அவனை ஏறிட்டார்.

"அப்போ..., விருப்பமே இல்லாத பொண்ணு பின்னாடியா இத்தனை வருஷமா சுத்திட்டு இருந்த...?" கிருபாவின் குரலில் கோபம் கொப்பளித்தது.

"அப்பவும் சரி..., இப்பவும் சரி..., அவளோட பேமிலிக்கு வேண்டி என்னை வேண்டாம்னு சொல்றா. ஆனா எனக்குத் தெரியும்..., கண்டிப்பா அவ மனசில் நான் இருக்கேன்..." அவன் குரலில் அவ்வளவு நம்பிக்கை.

"இவன் என்னங்க சொல்றான்...?" தன் கணவனிடம் திரும்பினார்.

"இரு நான் கேக்கறேன்..." மனைவியை தடுத்தவர், "சரிப்பா..., அப்போ நேரடியா அவங்க வீட்டிலேயே பேசலாமே. ஏன் மறுக்கற...?" புரியாமல் கேட்டார்.

"நேரடியா அவங்க வீட்டில் பேசுவதாக இருந்தால்..., ரெண்டு வருஷத்துக்கு முன்னாடியே அதை செய்திருப்பேன்ப்பா..., என் காதலுக்கு ஒரு அங்கீகாரம் வேண்டும்னு நான் நினைக்கிறது தப்பா...? இல்ல..., காதலிக்கிற அளவுக்கு உங்க பையனுக்கு தகுதி இல்லைன்னு நீங்களும் நினைக்கறீங்களா...?" அவன் கேட்க, அனைத்தயும் கேட்டுக் கொண்டிருந்த ஜீவித்யாவின் கையில் இருந்த ஸ்பூன் கீழே விழுந்து சிதறியது.

தன் உணவில் கவனமாக இருந்த ஹேமா, "லீவ் இட்..., வேற ஸ்பூன் எடுத்துக்கோ..." உரைக்க, கண்கள் குளமாக அவளை ஏறிட மறுத்தவள்,

"ஒண்ணுமில்லை..., சாப்பிடு..." அங்கே இருந்த டிஷ்யூ பேப்பரால் கண்களை நாசூக்காக ஒற்றிக் கொண்டாள். ஹேமாவுக்காக, அங்கே இருந்த மற்றொரு ஸ்பூனை எடுத்து, சாப்பாட்டை வாயில் திணித்துக் கொண்டாள்.

"கண்ணா..., என்ன இது...?" கிருபா பதறியவராக..., அவன் அருகில் சென்று அமர்வது ஜீவித்யாவுக்குத் தெரிந்தது.

"இல்லம்மா..., அவ என்னை காதலிக்கலன்னா கூட பரவாயில்லை. ஆனா..., அவளுக்கு என்னை பிடிச்சிருக்கு அதை என்கிட்டே மறைக்கிறாம்மா. ஆமா..., உன்னை லவ் பண்றேன்..., என்னால் வீட்டில் சொல்ல முடியாது..., நீயே..., வீட்டில் வந்து பேசுன்னு சொன்னா..., எல்லாத்தையும் நான் பாத்துப்பேம்மா...,

"அதை விட்டுட்டு..., என்னை அவாய்ட் பண்ணணும்னு மட்டுமே நினைக்கறா. இதை எப்படி என்னால் தாங்கிக்க முடியும்? இந்த நிமிஷம் கூட, உங்களை அவளோட வீட்டுக்கு அழைச்சுட்டு போக முடியும். ஆனா..., அதை நான் செய்ய விரும்பலை.

"இந்த ஒரு வருஷ டைம் கூட..., அவ மனசு மாறணும் என்பதுக்காக இல்லை. என் மனசை நான் மாத்திக்கதான் கேக்கறேன். எப்படியும் இந்த வருஷம் அவளுக்கு மேரேஜ் பண்ணிடுவாங்க..., அதுக்குப் பிறகு, அடுத்தவன் மனைவியை நினைக்கும் அளவுக்கு நான் கீழ இறங்க மாட்டேன்" தெளிவாக உரைத்தாலும், அதில் விரவியிருந்த வலியை அனைவரும் உணர்ந்து கொண்டார்கள்.

கிருபாவுக்கோ..., அவன் சொல்லாமல் விட்ட விஷயம் புரியாமல் இல்லை. அதை உணர்ந்தவர், "அவ கல்யாணம் முடியிற வரைக்கும் நீ ஏம்ப்பா காத்திருக்கணும்? அதான் மனசை மாத்திக்கிறதா முடிவு பண்ணிட்டியே, பிறகு ஏன் அதை தள்ளிப் போடணும்?" மகனது மனம் புரிந்தவராக, அது அவன் வாயிலிருந்தே வரட்டும் எனக் கேட்டார்.

சில நொடிகள் அமைதியில் கழிய, அவன் பதிலுக்காக காத்திருந்த நொடிகள் அவளுக்கு யுகங்களாகக் கடந்தது.

"அவ கழுத்தில் தாலி ஏறும் அந்த கடைசி நிமிடம், அவ மனசு மாறிட்டா...? அவ என்னைத் தேடி வரப்போ..., அவளுக்காக நான் இருக்கணும்மா. அது எவ்வளவு பெரிய கொடுமைன்னு எனக்குத் தெரியும். ஆனா..., அதை நான் செய்யத் தயார் ஆகிட்டேன்..." அவன் சொல்லி முடிக்க, வாய்க்குள் இருந்த உணவை விழுங்க கூட முடியாமல் திணறிப் போனாள் ஜீவித்யா.

'இப்படி ஒரு காதலனுக்கு, அவனது காதலுக்கு, அவனது காத்திருப்புக்கு தான் செய்யும் மரியாதை என்ன?' தன்னைத் தானே கேட்டுக் கொண்டாள்.

தனக்காக இல்லை என்றாலும், அவனுக்காக..., வீட்டில் விஷயத்தை சொல்ல வேண்டும் என முடிவெடுத்தாள்.

ஆனால்..., அது தாமதமாகி விட்டது என்பதை, வீட்டுக்குப் போனவுடன் உணர்ந்து கொண்டாள்.

# பகுதி - 11

ஹேமாவோடு ஹோட்டலில் நேரத்தை செலவழித்தவள், அவளது விருப்பத்துக்காக, அவளை அழைத்துக் கொண்டு அருகில் இருந்த மாலுக்குச் சென்றாள். ஹேமா ஒரு கடை விடாமல் ஏறி இறங்க, அவளோடு அலைந்ததில் நட்ராஜின் நினைவுகள் கூட சற்று பின்னுக்குப் போய்விட்டது.

ஒரு கட்டத்தில், கால்கள் ஓய்ந்து போக, "ஹேமா, இதென்னடி..., இன்னைக்கே மொத்த பர்ச்சேசையும் முடிக்கப் போறியா? நெக்ஸ்ட் மந்த எதையும் வாங்கப் போவது இல்லையா? ஏன் இப்படி பண்ற...? என்னால் இதுக்கு மேலே ஒரு அடி கூட நகர முடியாது..." உரைத்தவள், அங்கே போடப்பட்டிருந்த இருக்கையில் அமர்ந்து கொண்டாள்.

"ஒரே ஒரு டிஷர்ட் மட்டும் எடுத்துட்டு வரேன்..., ப்ளீஸ்..." உரைத்தவள், அவளது பதிலை எதிர் பாராமல், கையில் இருந்த கவர்களை அவள் அருகில் வைத்துவிட்டு விரைந்தாள்.

ஒரு வழியாக அனைத்தையும் முடித்து, ஜீவித்யா வீட்டுக்குச் செல்கையில், இரவு டின்னர் டைம் நெருங்கி இருந்தது. ஹேமாவும் அவளோடு சென்றிருக்க, அவளைப் பார்த்த மீனாட்சி, "அம்மாடி..., இங்கே வர இன்னைக்குதான் பாதை தெரிந்ததா? ரெண்டு வாரமா வரவே இல்லையே..." பாசமாக கடிந்து கொண்டார்.

"அதான் இன்னைக்கு வந்துட்டேனே..." உரைத்தவள், தன் கையில் இருந்த கவர்களை ஒவ்வொன்றாக அனைவரிடமும் கொடுத்தாள்.

"எதுக்கும்மா இதெல்லாம்...? ஏற்கனவே சொல்லச் சொல்ல கேக்காமல் அவளுக்கு வண்டி வாங்கி கொடுத்திருக்க. இப்போ இது..., காசை இப்படி வேஸ்ட் பண்ணக் கூடாதும்மா..." வாங்கிக் கொள்ளவும் முடியாமல், மறுக்கவும் முடியாமல் அவளை கடிந்து கொண்டார்.

"காசை கையிலேயே வைத்திருந்து என்ன பண்ண? யாருக்கும் உபயோகம் இல்லாத பணம் இருந்தால் என்ன? இல்லாமல் போனால்தான் என்ன...? அதான்..., எனக்கு தெரிஞ்ச விதத்தில் அதை செலவு பண்றேன்..., அதை ஏன் நீங்க தடுக்கறீங்க..." உரிமையாக கேட்டவள், ஜீவித்யாவின் அறைக்குள் சென்று மறைந்தாள்.

"என்னடி இது...?" ஜீவித்யாவிடம் அடிக்குரலில் அவர் கேட்க,

"ஹையோ அம்மா..., அவ உங்க எல்லாருக்கும்தான் வாங்கறான்னு எனக்கு சுத்தமா தெரியாது. தெரிந்திருந்தால் நான் விட்டிருக்கவே மாட்டேன்..." பரிதாபமாக கெஞ்சினாள்.

"சரி சரி..., போய் குளிச்சுட்டு வா..., சாப்பாடு எடுத்து வைக்கறேன். உன்கிட்டே ஒரு முக்கியமான விஷயம் பேசணும்..." அவளை அனுப்பினார்.

"ஏண்டி லூசே..., வீட்ல இருக்குறவங்களுக்குதான் பர்சேஸ் பண்றேன்னு ஒரு வார்த்தை சொல்ல மாட்ட..., இப்போ எதுக்குடி இதெல்லாம்..." நிஜமாகவே கோபமானாள்.

"ஒய்..., மம்மி ரொம்ப திட்டிட்டாங்களா...?" அவள் சாதாரணமாக கேட்க, கொலைவெறியானாள். ஆனால் ஹேமாவோ அதை கண்டு கொள்ளாமல், தான் கொண்டுவந்த கவரில் இருந்து ஒரு லெஹங்கா சுடிதாரை எடுத்தவள், "திஸ் இஸ் பார் யூ..." அவள் கரத்தில் கொடுத்தாள்.

"ஏண்டி..., என்னை உயிரோட புதைக்கணும்னு முடிவே  பண்ணிட்டியா?" அப்பாவியாக விழிக்க,

"சேம் ட்ரெஸ்..., சேம் கலர்..., போர் மீ டூ..." டட்டடைங்..., என்ற ரிதத்தில் ஹேமா உரைக்க, என்ன சொல்வது எனத் தெரியாமல் விழித்தாள்.

"டுமாரோ ஹாஸ்பிடல்க்கு இதை போட்டுட்டு வர..., நானும் போடறேன்..." கடந்த வாரத்தில் மருத்துவமனையில் ஒரு செவிலிக்கு திருமணம் என்பதால், அவளோடு பணி புரியும்

செவிலிகள் அனைவரும் ஒரே விதத்தில் உடை அணிந்து சென்றதின் பாதிப்பு இது என்பதை ஜீவித்யாவால் புரிந்துகொள்ள முடிந்தது.

"ஆண்டவா..." தன் தலையிலேயே அடித்துக் கொண்டவள், "அப்படியே சின்ன பிள்ளை மாதிரி பண்ணு. சரி போய் குளிச்சுட்டு வா..., அம்மா டின்னர்க்காக வெயிட்டிங்..." அவள் சொல்லவே, அடுத்த அரைமணி நேரத்தில் இருவரும் கிளம்பி வெளியே வந்தார்கள்.

அன்று ஞாயிற்றுக்கிழமை என்பதால், ஆப்பமும், மட்டன் கிரேவியும் இருக்க, ஹேமாவுக்காக காரம், மசாலா சற்று குறைவாக போட்டு மீனாட்சி செய்திருந்த குழம்பை ரசித்து உண்டாள்.

"ஜீவி..., ஐ திங் ஐ'ம் கெட்டிங் ஃபேட்...(fat)" கண்களைச் சிமிட்டி, பளீர் புன்னகையில் அவள் உரைக்க,

"அம்மா..., உங்க சாப்பாட்டை சாப்ட்டு அவ குண்டாயிட்டாளாம்..., சொல்றா..." தாயிடம் அவளை போட்டுக் கொடுக்க..., "யா..., இட்ஸ் ட்ரூ..." அவள் தன்னை கேலி செய்வது கூட தெரியாமல் ஹேமா ஒத்துக்கொள்ள, குடும்பமே அதிர்வெடியாய் சிரித்தது.

"ஒய் லாஃபிங்..." ஹேமா புரியாமல் கேட்க, "நீ இம்புட்டு பச்ச புள்ளையான்னு தான்..." ஜீவித்யா கலாய்க்க..., "பச்ச..., யூ மீன் கிரீன்..., மீ..." வேகமாக தன் கரத்தை திருப்பிப் பார்த்துக் கொள்ள, அதற்கும் சிரித்தார்கள்.

"ஏய்..., சும்மா இருடி..., அம்மாடி..., உன்னை கேலி பண்றாங்க..., நீ சாப்பிடு..." அவள் தலையை வருடினார்.

அனைவரும் சாப்பாட்டை முடிக்கும் வேளை..., ஜீவி..., உன் விருப்பப்படி கிட்டத்தட்ட ஏழு வருஷம் நாங்க அமைதியா இருந்தாச்சு. இப்போ..., உனக்கு மட்டுமில்லை..., உங்க அண்ணாவுக்கும் வயசாகுது..., சோ..., முதல்ல உன்னோட கல்யாணத்தை முடிச்சுடலாம்னு நினைக்கறோம்..., நீ என்னம்மா சொல்ற...?" நாயகம் நேரடியாக கேட்க,

அவ்வளவு நேரமாக இருந்த இதமான சூழல் மறைய, சட்டென அமைதியானாள்.

'சொல்லிடு..., ஜீவி..., சொல்லு..., நட்ராஜ் பத்தி சொல்லு...' தைரியத்தை வரவழைக்க,

"அவ என்னப்பா சொல்றது..., நீங்க தாராளமா பாருங்க..., தங்கச்சி மறுக்கவா போறா...?" சரவணன் இடைபுக, கொஞ்சம் நஞ்சம் ஒட்டிகொண்டிருந்த தைரியமும் விடை பெற்றது.

ஹேமா தோழியைப் பார்த்தவள், 'சொல்...' என்பதுபோல் ஜாடை செய்ய, அவளால் அது முடியவில்லை. ஜீவித்யா அமைதியாக இருக்கவே..., கோபம் கொண்ட ஹேமா..., "கோ டு ஹெல்..." ஆத்திரமாக கத்திவிட்டு, அங்கிருந்து எழுந்து சென்றாள்.

அங்கே இருந்த அனைவரும் திகைத்துப் போக, "ஹேமா..., என்னம்மா...? ஏன் இவ்வளவு கோபம்...?" மீனாட்சி அவளைத் தடுத்தார்.

"ஆஸ்க் ஹெர்..., ஷி வில் எக்ஸ்ப்ளெயின் யூ..." தன் கையை கழுவச் சென்றாள்.

"என்னடி இது...? எவனையாவது மனசில் நினைச்சுட்டு இருக்கியா?" மீனாட்சி மகளைத் துளைத்தார்.

ஆண்கள் இருவரும் அமைதியாக நடப்பதை வேடிக்கை பார்க்க, "ப்ளீஸ்ம்மா..., ஒரே ஒரு நிமிஷம்..., நான் சொன்னதை கேட்ட பிறகு, நீங்க என்ன முடிவு எடுத்தாலும் அதற்கு நான் கட்டுப்படறேன்..." ஜீவித்யா ஆழமாக மூச்செடுத்தாள்.

அவள் பேசத் துவங்கவே..., தன் அலைபேசியை எடுத்த சரவணன், சில எங்களை அழுத்திவிட்டு மறுபடியும் பாக்கெட்டில் போட்டுக் கொண்டான்.

அவ்வளவு நேரமாக கோபமாக இருந்த ஹேமா..., வேகமாக தோழியின் அருகில் வந்து நின்றாள். அவள் தோளை ஆதரவாக பற்றிக் கொள்ள, தோழியின் கரத்தில் தன்

கன்னத்தை அழுத்தியவள், "அப்பா..., அஞ்சு வருஷத்துக்கு முன்னாடி..., நட்ராஜ்ன்னு ஒருத்தர் என்கிட்டே தன் காதலை சொன்னார்.

"அப்போ..., எனக்கு படிப்புதான் முக்கியம், காதலில் விருப்பம் இல்லைன்னு சொன்னதும் விலகிப் போய்ட்டார். அதை அப்போவே நான் மறந்துட்டேன். ஆனா..., இப்போ..., லண்டன்ல இருந்து நான் வந்த அன்னைக்கு..., மறுபடியும் என் முன்னால் வந்து நின்னப்போ..., சாரிப்பா..., என் மனசு கொஞ்சம் தடுமாறிடுச்சு..." அவள் குரல் கலங்கி..., கண்ணீர் கன்னத்தில் வழியத் துவங்கியது.

"நானும் எவ்வளவோ அவரை அவாய்ட் பண்ண முயற்சி பண்ணேன். ஆனா..., என்னால் முடியலப்பா. அதுவும், அஞ்சு வருஷமா என்னோட மானசீகமா வாழ்ந்துட்டு இருக்கேன்னு அவர் சொன்னப்போ..., ப்ளீஸ்ப்பா, என்னை அவர்கிட்டேயே கொடுத்திடுங்களேன்...

"அவரோட காதலுக்கும், காத்திருப்புக்கும் இதைத்தவிர என்னால் வேற எதையும் கொடுக்க முடியாது. எனக்கு அவர் வேணும்ப்பா..., தயவு செய்து உங்க நம்பிக்கைக்கு துரோகம் பண்ணிட்டேன்னு மட்டும் நினைக்காதீங்கப்பா. உங்க பொண்ணு உங்க வார்த்தையை மீற மாட்டாப்பா.

"அண்ணா..., ஏதாவது சொல்லுண்ணா..., ஏன் இப்படி அமைதியா இருக்க?" கண்ணீர் விழிகளோடு அவனை ஏறிட்டாள்.

அவனோ..., அவளிடம் எதையும் சொல்லாமல்..., தன் பாக்கெட்டில் இருந்த அலைபேசியை எடுத்தவன், "மாப்ளை லைன்ல இருக்கார்..., நீயே உன் முடிவைச் சொல்லிடு..." அவள் கரத்தில் அலைபேசியை திணித்தான்.

"அண்ணா..., நான் இவ்வளவு சொல்றேன்..." வேதனையாக முனக,

"முதல்ல பேசு..., பிறகு நாம முடிவு பண்ணலாம்..." நடப்பதை ஹேமாவால் நம்பவே முடியவில்லை.

ஜீவித்யா தன் விருப்பத்தை சொன்ன பிறகு, கொஞ்சமாவது கன்சிடர் செய்வார்கள் என அவள் எதிர்பார்க்க, அதற்கு மாறாக அவர்களது செய்கை, "அண்ணா..., இட்ஸ் நாட் ஃபேர்..., இட்ஸ் ஹெர் லைப்..." தோழிக்காக வாதாட, மீனாட்சி அவளை அமைதியாக இருக்கச் சொல்லி கண்ஜாடை காட்டினார்.

அது அவளுக்குப் புரிய, குழப்பமான மனநிலையோடு தோழியை அணைத்துக் கொண்டு நின்றிருந்தாள்.

"பேசு ஜீவி..." சரவணன் அழுத்தமாக உரைக்க,

கெஞ்சலான பார்வையோடு பெற்றவர்களை அவள் நோக்க, அவர்கள் முகங்களில் இருந்த சந்தோஷத்தை வலியாய் பார்த்தவள், 'என் மனசுக்கு இங்கே இவ்வளவுதான் மதிப்பா...?' வேதனையாக எண்ணிக் கொண்டவள், அலைபேசியை காதுக்கு கொடுத்தாள்.

"ஹ...ல்...லோ..." காற்றுக்கு கூட கேட்காத விதத்தில் அவள் உரைக்க, "தேங்க்ஸ் வித்யா..., உம்மா..., ஐ லவ் யூ..." நட்ராஜின் உற்சாகமான குரலும், அழுத்தமான ஒரு முத்த சத்தமும்..., அவனது உல்லாசமான குரலும் அவள் செவிகளைத் தீண்ட, நம்ப முடியாமல் அலைபேசியை வெறித்தாள்.

"ந...ந...ந...ட்ராஜ்..." சராலென ஹேமாவின் அணைப்பில் இருந்து எழுந்தவள், பெற்றவர்களையும், சரவணனையும் நம்ப முடியாத ஆச்சரியம், திகைப்பு, சந்தோசம்..., என கலவையான உணர்வுகளில் வெறித்தவள், தன் எதிரில் நின்ற மூவரையும் தாவி அணைத்துக் கொண்டாள்.

"அம்மா..., அப்பா..., அண்ணா..., உங்களுக்கு..." வார்த்தைகள் திணற,

"முதல்ல மாப்பிள்ளை கிட்டே பேசு..., எங்ககிட்டே பிறகு பேசிக்கலாம்..." மீனாட்சிதான் நினைவு படுத்தினார்.

ஹேமாவோ என்னவோ திரில்லிங் மூவி பார்க்கும் எபெக்டில் நின்று கொண்டிருந்தாள். 'என்னங்கடா இது...?'

அவள் மனதின் யோசனை இதுவாகத்தான் இருந்தது.

ஜீவித்யாவோ..., அலைபேசியை அணைத்தவள், சரவணனின் கையில் கொடுத்தாள்.

"ஜீவி..., அதான் பேசுன்னு சொன்னோமே..." அவன் உரைக்க, அவளோ மறுப்பாக தலை அசைத்தாள்.

"உங்களுக்கு முன்னாடியே அவரைத் தெரியுமா...?" அனைவரையும் நிற்க வைத்து கேட்டாள்.

"எனக்கு ரெண்டு வருஷத்துக்கு முன்னாடியே தெரியும். அம்மா அப்பாவுக்கு ஆறு மாசத்துக்கு முன்னாடி தெரியும். அவரை அறிமுகப் படுத்தியது பரத்..." சரவணன் உரைக்க, "என்ன...?" அதிர்ந்துபோய் கேட்டாள்.

"அப்போ..., இதெல்லாம் பரத் அண்ணாவோட வேலையா? நட்ராஜ் முதல்நாள் என் முன்னாடி வந்து நின்னப்போவே எனக்கு டவுட் தான். ஆனா, பரத் அண்ணா இப்படி செய்யக்கூடிய ஆள் இல்லையேன்னு நினைத்தால், எல்லா வேலையும் அவர்தான் செய்தாரா?" அவள் குரலில் சந்தோஷமும், நிம்மதியும் குமிழியிட்டது.

அப்படியே காற்றில் மிதப்பதுபோல், புதிதாக பிறந்தது போல்..., உடலும் மனமும் லேசாக, இத்தனை நாள் நெஞ்சை அடைத்துக் கொண்டிருந்த எதில் இருந்தோ விடுதலை அடைந்ததுபோல்..., தன் பின்னால் நின்ற ஹேமாவை கட்டிக் கொண்டாள்.

ஹேமாவோ..., "இங்கே என்ன நடக்குதுன்னு எனக்கு கொஞ்சம் சொல்றீங்களா?" தான் நார்மலாக இருக்கிறோமா, இல்லையா என்ற சந்தேகம் அவளிடம்.

"அம்மாடி..., இங்கே வா..." மீனாட்சி அவளை அழைத்து சோபாவில் அமர வைத்தவர், "சரவணா..., இவங்களுக்கு புரியிற மாதிரி சொல்லுடா..." அவள் அருகில் அமர்ந்தார். ஜீவித்யாவும் தோழியின் அருகில் அமர,

"நட்ராஜ், இவகிட்டே லவ் சொன்னதோட இல்லாமல், பரத் கிட்டே ரெண்டு மூணு முறை, அவளைப் பத்தி, வீட்டைப்

பத்தி விசாரிக்கவே, டவுட் பட்டு அவன்கிட்டே கோபமா கேட்டிருக்கான். அப்போ..., அவளை லவ் பண்றதா சொல்லவே..., முதல்ல கோபப் பட்டாலும், அவர் தொடர்ந்து ஜீவியை தொல்லை செய்யாமல் ஒதுங்கி போகவே, பரத்துக்கு ஒரு சின்ன நம்பிக்கை.

"அவரோட பிஜி முடிஞ்சு போற அன்னைக்கு, பரத் கிட்டே..., அவதான் என்னோட மனைவி..., எத்தனை வருஷம் ஆனாலும் அவளுக்காக காத்திருப்பேன்னு சொல்லிட்டு கிளம்பி போயிருக்கார். கூடவே..., மாசத்துக்கு ஒரு முறை போன் பண்ணி, ஜீவியைப் பத்தி விசாரிப்பாராம்.

"அவளோட காலேஜ் முடிந்தப்போ..., உடனே வந்து கல்யாணம் முடிக்கத்தான் விரும்பினார். ஆனா..., ஜீவி லண்டன் போகணும்னு முடிவு எடுக்கவே..., ரெண்டு பேரும் என்னை வந்து பாத்தாங்க. பரத் சொன்ன பிறகு, வேற அப்பீலே கிடையாதே.

"நான் வீட்டில் பேசி கல்யாணத்தை முடிக்கத்தான் ஆசைப் பட்டேன். பரத்துக்கும் அதே எண்ணம்தான். ஆனா..., நட்ராஜ் தான், அவ இஷ்டத்துக்கு விடுங்கன்னு சொல்லி, எங்களை கன்வின்ஸ் பண்ணார். பரத் கூட, அவ வெளிநாட்டில் வேற ஒருத்தனை லவ் பண்ணா என்னடா பண்றதுன்னு கேட்டதுக்கு...,

"என் காதல் மேலே எனக்கு நம்பிக்கை இருக்குன்னு சொன்னார் பார்..., ரியலி ஐ'ம் இம்ப்ரெஸ்ட்..., நான் கூட, அவளுக்கு ஒரு மாப்பிள்ளை பாத்திருக்கேன்னு லைட்டா சொல்லவான்னு கேட்டேன். அதுக்கும்..., அவ மனசை குழப்ப வேண்டாம்னு பிடிவாதமா சொல்லிட்டார்.

"நீ இந்தியா வர ஆறு மாசம் இருக்கும்போது..., அப்பா அம்மா உனக்கு வரன் பார்க்க ஆரம்பிச்சாங்க. அப்போ..., நட்ராஜை நான் வீட்டுக்கே கூட்டி வந்தேன். பரத்தும் சேர..., இவங்களும் ஒரு கேள்வி கூட கேக்கலை. அரேஞ் மேரேஜ் மாதிரி பண்ணிடலாம்னு பாத்தா..., நட்ராஜுக்கு உன்னை லவ் பண்ணிதான் கல்யாணம் பண்ணிக்கணுமாம்.

"உன்கிட்டே காதலைச் சொல்லி..., நீயும் அதை ஏத்துகிட்டு..., பிறகுதான் வீட்டுக்கு பொண்ணு கேட்டு வருவேன்னு பிடிவாதம். நீயும் இந்தியா வந்து..., அதுக்குப் பிறகு நடந்ததெல்லாம் உனக்கே தெரியுமே. உன் மனசுக்குள் அவர் இருக்கார்ன்னு தெரிந்த பிறகும், நீ பேமிலியை நினைத்து தயங்கவே ரொம்ப டென்ஷன் ஆகிட்டார்.

"உன் வாயில் இருந்து, உனக்கு அவரை பிடிச்சிருக்குன்னு கேக்காமல், நீ வீட்டில் பேசாமல், இந்த கல்யாணம் வேண்டாம்னு ஒரே அடம். ஒரு ஆண்மகனா அவர் நினைப்பது எனக்கு சரின்னுதான் பட்டது. அதான்..., ரெண்டே நாள்ல உன் வாயாலேயே ஒத்துக்க வைக்கறேன்னு சொல்லி,

"அவங்க பேரன்ஸை கூட வர சொன்னோம். நீ இன்னைக்கு ஹோட்டல்க்கு போறதை நான் தான் அவருக்கு சொன்னேன். அங்கே வந்து என்ன பேசினாங்கன்னு எனக்கு தெரியாது. அதே மாதிரி, அவங்க அம்மாவுக்கு நீதான் பொண்ணுன்னும் தெரியாது...

"வீட்டுக்கு வரும்போதே உன் முகமே சரியில்லை..., அதான்..., அப்பாகிட்டே பேசி, விஷயத்தை சுபமா முடிச்சாச்சு. நாளைக்கே அவங்களை பொண்ணு பாக்க வரச் சொல்லப் போறோம்..., கல்யாணம் எப்போ வைக்கணும்னு அவங்க சொல்றாங்களோ அப்படி..." சொல்லி முடித்து விட்டு, வேகமாக அங்கே இருந்த தண்ணீரை எடுத்துக் குடித்தான்.

ஜீவித்யாவோ..., நட்ராஜின் காதலின் அளவில், அவன் நம்பிக்கையில் சிலிர்த்துப்போய் அமர்ந்திருந்தாள். இப்பொழுதே அவனைக் காண வேண்டும் என்ற வேகம்..., கூடவே..., அவனது முத்தச் சத்தம் இன்னும் காதில் ஒலிப்பது போன்ற பிரம்மை.

"ஜீவி..., நீ என்னம்மா சொல்ற...?" அவளது தந்தை அவள் தலையை வருடினார். கூடவே..., "இப்படி ஒரு பொண்ணை பெத்ததுக்கு நிஜமாவே நான் ரொம்ப சந்தோஷப்

படுறேம்மா. அம்மா அப்பாவோட கஷ்டம் தெரிஞ்சு, புரிஞ்சு நடந்துக்கற குழந்தைகள் கிடைப்பது வரம்...

"அந்த விதத்தில், நாங்க கொடுத்து வச்சவங்க. உன்மேல் நம்பிக்கை வைத்திருக்கிறோம் எனச் சொன்னது..., எந்த நேரத்திலும் நீ எங்களுக்கு உண்மையா இருக்கணும்னு சொன்னது தானே தவிர, உன் மனசுக்கே நீ துரோகம் செய்யணும்னு சொன்னது இல்லை கண்ணா...

"படிக்கும் வயசில் சரியானவனை தேர்ந்தெடுக்க முடியாது. அது இனக் கவர்ச்சியா, உண்மை காதலான்னு புரிஞ்சுக்க முடியாது. ஆனா..., இந்த வயசில் சரியானவனை தேர்ந்து எடுப்பாய் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கு. நட்ராஜ் மாதிரி ஒரு பையனை மிஸ் பண்ண நாங்களும் விரும்பலை..." அவள் நெற்றியில் பாசமாய் இதழ் ஒற்றினார்.

சலுகையாக அவர் தோளில் சாய்ந்தவள், "தேங்க்ஸ்ப்பா..." உணர்ந்து உரைத்தாள். ஹேமா அனைத்தையும் பூரிப்பாய், புன்னகை முகமாய் பார்த்திருந்தாள்.

கூடவே..., 'அடுத்தவங்க லவ் எல்லாம் சேத்து வைக்கத் தெரியுது. தன்னோட காதலை சொல்லக் கூட தைரியம் இல்லை. இதற்குமேல் என்னால் அவன் பின்னால் ஓட முடியாது...' அலுப்பாக எண்ணிக் கொண்டாள். ஏனென்றால் அந்த அளவுக்கு அவன் அவளை அவாய்ட் செய்தான்.

"அம்மாடி..., உன் கோபம் போய்டுச்சா...?" மீனாட்சி ஹேமாவின் தோளைத் தொட்டு உலுக்க, சட்டென தன்னை மீட்டுக் கொண்டாள்.

"கங்கிராட்ஸ் ஜீவி..." தோழியை தாவி அணைத்தவள், பாசமாய் அவள் கன்னத்தில் முத்தமிட்டாள்.

"டாக் டூ ஹிம்..." சின்னக் குரலில் தோழியிடம் உரைக்க, "ம்..." மெல்லியதாக முனகினாள்.

மறுநாள் நல்ல நாளாக இல்லாத காரணத்தால், புதன் கிழமை அவர்கள் பெண் பார்க்க வருவதாக முடிவானது. மறுநாள், ஹேமா வாங்கிக் கொடுத்த லெஹங்கா சுடிதாரில் மருத்துவமனைக்கு சென்றவளை, விழுங்கும் பார்வையோடு எதிர்கொண்டான் நட்ராஜ்.

'என்னை அவனுக்கே கொடுத்துடுங்க...' அவள் நேற்று உரைத்த வார்த்தைகள், அவன் செவியைத் தீண்டி, மனதுக்குள் நுழைந்து, இனிய இம்சை செய்ததில், இரவு முழுவதும் அவன் உறங்கவே இல்லை.

"குட் மார்னிங்..." வருடும் குரலில் அவன் உரைக்க, அவஸ்தையாய் உணர்ந்தவள், "இது ஹாஸ்பிட்டல்..." அவனுக்கு நினைவூட்டினாள்.

"அப்படியா...? நான் தாஜ்மஹால்ன்னுல்ல நினைத்தேன்..." உல்லாசமாக அவன் உரைதத்தவன் அவளை நெருங்கி நிற்க, வேகமாக தன் பார்வையை வராண்டாவில் செலுத்தினாள்.

"நட்ராஜ்..., ப்ளீஸ்..." வேகமாக பின்னுக்கு நகர்ந்தவள், "இப்படில்லாம் பண்ணீங்கன்னா நான் உங்ககிட்டே பேசவே மாட்டேன்..." உள்ளுக்குள் எழுந்த படபடப்பை மறைக்க முயன்று தோற்றாள்.

அதை உணர்ந்தவன், "ஒரே ஒரு..." அவன் வார்த்தைகளை முடிக்காமல் இழுத்து நிறுத்த, மூச்சை இழுத்தவள் அதை வெளியேற்ற மறந்து அவனை வெறித்தாள். கூடவே..., சீக்கிரமாக வரச் சொல்லி அவன் அனுப்பிய குறுஞ்செய்திக்கு மதிப்பளித்து வந்த தன்னை, என்ன செய்வது என திட்டிக் கொண்டாள்.

"ஒரே ஒரு..., ஐ லவ் யூ மட்டும் சொல்லு..., நான் போய்டறேன்..." ஒற்றை புருவம் உயர்த்தி, குறும்பு புன்னகையில் அவன் உரைக்க, அப்பொழுதுதான் இழுத்து வைத்திருந்த மூச்சை தாராளமாக வெளியிட்டாள்.

"ம்ஹூம்..." தன்னை விழுங்கவரும் அவன் பார்வையை தவிர்த்தவளாக அவள் முனக, "அப்போ நான் இங்கே

இருந்து போக மாட்டேன்..." கைகளை கட்டிக்கொண்டு அவன் நிற்க, அதுவே சொன்னது..., நிச்சயம் அவன் அங்கே இருந்து நகரப் போவதில்லை என்று.

ஏனோ அவளால் சாதாரணமாக அந்த வார்த்தைகளை உரைக்க முடியவில்லை. அவஸ்தையாக நெளிந்தவள், "நா...ன்... பிறகு சொல்லட்டுமா...?" என்னவோ பள்ளி மாணவி போல் அவள் வினவ, முதல்நாள் ரேகிங் செய்ய அழைத்த பொழுது இருந்த மருண்ட பார்வையை அங்கே கண்டவனுக்கு, உருகிற்று.

"காட்..., யூ ஆர் கில்லிங் மீ..." வேகமாக பின்னடைந்தவன், தலையை அழுத்தமாக கோதிக்கொள்ள, ஓடிபோய் அவன் நெஞ்சில் புதைய அவள் கால்கள் இரண்டும் பரபரத்தது.

தன் நினைப்பைக் கண்டு விதிர்த்துப் போனவள், அவனை அதே பார்வையாய் ஏறிட, "வித்யா..., ரியல்லி ஐ'ம் கெட்டிங் மேட்..." சன்னமாய் முனகியவன், "ஓகே..., நீ போ..., பிரேக்ல கேண்டீன் வந்துடு..." வேகமாக அங்கிருந்து விலகிச் சென்றான்.

அவனது தவிப்பும், விலகலும் புரியாத அளவுக்கு அவள் ஒன்றும் குழந்தை இல்லையே. 'இவர்தான் நாலு மாசம் என்னை லவ் பண்ணிட்டு, பிறகு கல்யாணம் பண்ணிக்க போறாராம்...' மனதுக்குள் அவனுக்கு பழிப்பு காட்டினாள்.

பிரேக் எப்பொழுது வரும் என காத்துக் கொண்டிருந்தவன், அவளுக்கு முன்பாகவே கேண்டீனில் ஆஜராக, அவன் எதிரில் சென்று அமர்ந்தாள்.

சில நொடி மௌனத்துக்குப் பிறகு, "வித்யா..., நீ என்னோட இருந்தால் எவ்வளவு சந்தோஷமா இருக்கறேன் தெரியுமா? என்னவோ எல்லாமே கனவு மாதிரி இருக்கு..., இது கனவு இல்லை தானே...?" ஒரு விடலைப் பையனின் மனநிலையில் இருந்தான்.

அதை அவளாலும் உணர்ந்துகொள்ள முடிந்தது. அமைதியாக, மேஜைமேல், கோர்த்திருந்த தன் கரத்தில் பார்வையைச் செலுத்தியவாறு அவள் அமர்ந்திருக்க,

அவள் கைக்கு எதிரில், தன் கரத்தையும் கொண்டு வைத்தவன், "இந்நேரம் நீ என் கையை கிள்ளியிருக்கணும்..." அவன் உரைக்க, சட்டென அவன் முகம் பார்த்தாள்.

"சினிமாவில் எல்லாம் அப்படித்தான் காட்டுவாங்க..." உரைத்தவன், கோர்த்திருந்த தன் விரங்களை பிரித்தவன், தன் ஆள்காட்டி விரலை நீட்டி, அவள் விரல்களை வருட முயன்றான்.

சாதாரணமாக கை குலுக்குவது, கை கோர்ப்பது என்பது வேறு..., ஆனால் இது..., மனம் முழுவதும் ஒரு மாதிரி நெகிழ்ந்து இருக்கையில், அவன் தன்னை தீண்டப் போகிறான் என்பதே ஒரு மாதிரி உணரச் செய்தது.

தன் கைகளை விலக்கிக் கொள்ளவும் முடியாமல், அவன் தீண்டலுக்கு சம்மதிக்கவும் முடியாமல் அவள் திணற, அவள் முகத்திலேயே கவனமாக இருந்தவன், "நான் போய் டீ வாங்கிட்டு வரேன்..." சட்டென எழுந்து செல்ல, ஒரு பக்கம் ஏமாற்றமாகவும், மறு பக்கம் நிம்மதியாகவும் உணர்ந்தாள் ஜீவித்யா.

# பகுதி - 12

ஜீ வித்யாவும், நட்ராஜும் வாழ்க்கையில் இணையக் காத்திருக்க, பரத்தும் ஹேமாவும் ஒருவரை ஒருவர் அகலத் துவங்கினர். தாயின்மேல் அளவுக்கு அதிகமாக பாசம் வைத்திருக்கும் அவனை, ஆளை வைத்து தன் தாயை கவனிக்க சொன்ன அவளை எப்படி மனமுவந்து மணப்பான்.

அவனது ஒரு மனமோ ஹேமாவே வேண்டும் என்று அடித்துக்கொள்ள, மற்றொரு மனமோ அவள் உன் தாய்க்கு ஏற்றவள் இல்லை என்று சாடியது. இருதலைக்கொள்ளி எறும்பாக துடித்தான் அவன்.

இறுதியில் தனத்தின் மகன் ஜெயிக்க, கொஞ்சம் கொஞ்சமாக ஹேமாவை விலக்க முடிவு செய்தான். முடிவுசெய்வது ரொம்பவே சுலபமாக இருந்தது. அதை செயல்படுத்துவதுதான் ரொம்பவே கடினமாக இருந்தது.

முதல் வேலையாக ஹேமாவுடன் சாப்பிடுவதை தவிர்த்தான். அவளுக்கு தகவல் சொல்லிவிட்டால் அவளும் இவனை தேடுவதில்லை, எனவே அது சுலபமாக போனது. அதைவிட அவளுக்கு பகல் இரவு என ஷிப்ட் வரும். ஆனால் அவனுக்கு பகல் வேலை மட்டுமே.

இதை வைத்தும் அவளை தவிர்த்தான். ஹேமாவும் கொஞ்சம் தன்னை உணர துவங்கி இருந்தாள். அதை உறுதி செய்யத்தான் அவளால் முடியவில்லை. அவன்மேல் இவ்வளவு பித்தாகிப் போனோமா? அவளால் நம்பவே முடியவில்லை.

அவனை சந்தித்தபொழுதும் சரி, அவனோடு பழகிய பொழுதும் சரி..., சட்டென ஒரு ஈர்ப்பு மட்டுமே அவள் காதலுக்கு காரணமாக இருந்தது. ஆனால், அவன் அவளை தவிர்க்க துவங்கிய பிறகுதான், அவனை தான் எவ்வளவு விரும்புகிறோம் என்பதையே உணர்ந்து கொண்டாள்.

ஆனால், கண்டுகொண்ட விஷயத்தால் அவளால் மகிழத்தான் முடியவில்லை. இதுவே லண்டனாக இருந்திருந்தால், ஒரு நொடியில் தன் விருப்பத்தை அவனிடம் சொல்லி, கழுத்தில் தாலியேறவில்லை என்றாலும், அவனோடு ஒன்றாக வாழத் துவங்கி இருப்பார்கள்.

ஆனால் இங்கே..., தன்மேலேயே கோபமாக வந்தது. அதைவிட, பரத்தை கொன்று புதைக்கும் வேகம். கூடவே..., அவனுக்கு வேண்டாம் என்றால் எனக்கு மட்டும் என்ன..., ஆத்திரம்..., செய்யும் வேலையில் கூட கவனம் செலுத்த முடியவில்லை.

இவளை தவிர்த்தவனோ, ஹேமாவை காணாமல் துடித்து போனான். அவளை அறியாமல் அவளை தொடர்ந்தான். அவளை பார்க்காமல் அவனால் இருக்க முடியவில்லை. காதல் கொண்ட மனம் அவளை கண்களில் சிறை பிடித்து இதயத்தில் அடைத்தது.

அதைவிட..., அவள் தானேஷோடு உரையாடுவதைப் பார்த்தாலே அவன் தேகம் பற்றி எரிந்தது. பொறாமை குணம் தலை தூக்க, ஹேமாவை கண்டிக்கும் வேகம் கூட எழுந்தது. ஆனால்..., ஒரு மனமோ..., உனக்குத்தான் அவள் வேண்டாம் என முடிவு செய்து விட்டாயே..., பிறகு என்ன...? அவனைச் சாடியது.

தானேஷோடு வெகு இயல்பாக அவள் பேசுவது..., கேண்டீனில் கூட சில நேரம் அவர்களைப் பார்க்க, அதற்குமேல் அவனால் பொறுமையாக இருக்க முடியவில்லை. அவன் சரியே கிடையாது..., இவகிட்டே சொல்லணும்..., எண்ணியவன் சந்தர்ப்பத்துக்காக காத்திருந்தான்.

ஹேமாவும் சில வேளைகளில் முதுகை துளைக்கும் உணர்வை அனுபவித்தாள். திரும்பி பார்க்கும் வேளைகளில் எதுவும் வித்தியாசமாக தோன்றாது. எனவே அதை அசட்டை செய்தாள்.

இவர்களின் கண்ணாமூச்சி ஆட்டம் தொடர, வேறு வழி இல்லாமல் ஜீவித்யா தலையிட்டாள். அன்று ஹேமாவுக்கு இரவு வேலை ஆகையால் ஒருமுறை ரௌண்ட்ஸ் முடித்துவிட்டு, தூக்கத்தை விரட்ட கான்டீன் சென்றாள்.

அங்கு அவளை தேடி வந்தாள் ஜீவித்யா. "ஜீவி..., வாட் அ சர்ப்பரைஸ்..., என்னையெல்லாம் பாக்க வந்திருக்க...?" கண்களை சிமிட்டி கேட்க, ஜீவித்யாவின் கன்னம் அழகாய் சிவந்தது.

அதை மறைத்து அவளை போலியாக முறைத்தவள், "லூசு..., வீட்டுக்கு வரேன்னு சொல்லிட்டு வரவே இல்லை. அம்மா தேடினாங்க...".

"ஆமா..., அம்மா தானே தேடுவாங்க..., இப்போதான் உனக்கு போனை கீழே வைக்க கூட நேரம் இல்லையே..." தோழியை கேலி செய்வதில் அவளுக்கு அவ்வளவு ஆனந்தம்.

"போடி...", மெல்லியதாக அவள் கரத்தை அடித்தவள், வெட்கப்பட... "ஏய்..., என்னடி..., பேஸ் என்னவோ ரோஸ் பௌடர் போட்ட மாதிரி மாறிடுச்சு..., இது..., இதுதான் வெட்கமா...? ஓ மை காட்..., பியூட்டிபுல்..." தோழியின் முகத்தை ஆசையாய் வருடினாள்.

"சும்மா இருடி..." அவளை அடக்கியவள், "ஏன் ஹேமா உனக்கு எப்பவும் மத்தவங்க மனசைத்தான் புரிஞ்சுக்க முடியுமா. உன் மனசு உனக்கு எப்போ புரியும்", நேரடியாக விஷயத்துக்கு வந்தாள்.

"என்ன விளையாடுறியா, இப்போ என் மனசுக்கு என்ன புரியலை ம்ம்ம்...", அவளைக் கேட்டாள்.

"உன் மனசு உனக்கு ரொம்ப புரியுதா.
என்ன கண்ணாமூச்சி ஆடுறீங்களா?, நானும் எவ்வளவு நாள் பொறுமையா இருக்கிறது?" பொய்யாக அலுத்துக் கொண்டாள்.

"ஜீவி, சொல்ல வந்ததை தெளிவா சொல்லு".

"நான் என்ன சொல்லவரேன்னு உனக்கு நிஜம்மாவே புரியலையா", அவளையே பார்த்தாள்.

"எனக்கே என் மனசு புரியலை...", இந்த ஹேமா புதியவள். எதையுமே நேரடியாக பேசும் ஹேமாவின் தடுமாற்றம் அவளை திகைக்க வைத்தது.

"ஹேமா இப்போதான் நீ பொய் பேசுற. எங்கே என் கண்ணை பாத்து சொல்லு இப்போ உன் மனசில் இருப்பது உனக்கு புரியலன்னு. அன்னைக்கு அவ்வளவு தெளிவா..., ஹி இஸ் மை மேன்..., ஐ லவ் ஹிம்ன்னு அதிரடியா அவிழ்த்து விட்ட, இப்போ என்ன பதுங்குற...?", புன்னகை விரிய கேட்டாள்.

"ஜீவி..., டூ பீ ஃப்ரான்க், உன்கிட்டே சொன்னப்போ கூட நான் அவ்வளவு சீரியஸா இல்லை. ஆனா இப்போ..., ஐ'ம் டெத் sure... ஆனா என்னால் அடுத்த அடியை வைக்க தயக்கமா இருக்கு", சற்று சோகத்தோடு சொன்னாள்.

"உனக்கு என்ன தயக்கம் ஹேமா".

"எனக்கு எப்படி சொல்லன்னு தெரியலை ஜீவி. பரத் என்னை அவாய்ட் பண்ணுறான். முதல்ல என்னை நெருங்கி வந்தவன், ஆர்வமாக பார்த்தவன் இப்போ..., சுத்தமா விலகி போய்ட்டான். அவனுக்கு என்மேல் விருப்பம் இல்லை. அப்படி இருக்கும்போது நான் எப்படி.....", 'இது எனக்கு சரிப்படாது...' என்ற பாவனையும், தயக்கமாக நிறுத்தினாள்.

"எதை வைத்து அவனுக்கு உன்னை பிடிக்கலை, உன்மேல் விருப்பம் இல்லைன்னு நினைக்கிற".

"என் மேல் விருப்பம் இருந்தால் அவனால் என்னை பார்க்காமல் இருக்க முடியாது. எப்படியாவது என்னை பார்க்க முயற்சி செய்வான். அதைவிட என் குரலை கேட்கவேண்டும் என்ற ஆசையாவது அவனுக்கு இருக்கும். மோர் ஓவர்..., ஹீ பீல்ஸ் டு ஹக் மீ..., கிஸ் மீ..., அண்ட்..., சட்டென நிறுத்தியவள், இது எதுவுமே அவனுக்கு இல்லை",

வேகமாக உரைத்தவள், சட்டென நிறுத்தி தன் முன்னால் இருந்த டீ கப்பை வெறித்தாள்.

"அப்போ இதெல்லாம் உனக்கு இருக்குன்னு நான் நினச்சுக்கவா ஹேமா. உனக்கு இவ்வளவு ஆசை இருக்கும்போது நீ ஏன் உன் விருப்பத்தை சொல்லக் கூடாது" காதல் வலியை ஒரு கட்டத்தில் தானும் அனுபவித்து, இப்பொழுது அதன் சுகத்தில் திளைப்பதால், தோழியின் காதலும் ஈடேற வேண்டும் என அவள் உள்ளம் தவித்தது.

கூடவே..., அவளும் பரத்தை கவனித்து வருவதால், அவனுக்காக மட்டுமல்லாது, தோழிக்காகவும் அதைச் சொன்னாள்.

"என்னை தவிர்க்க நினைக்கும் ஒருத்தர் கிட்டே என் விருப்பத்தை நான் எப்படி சொல்ல முடியும் ஜீவி..., தட்ஸ் நாட் ஃபேர்..." திடனாகவே உரைத்தாள். எதையும், எப்பொழுதும் விரட்டிச் சென்று அடைவதில் அவளுக்கு விருப்பம் இருந்தது இல்லையே...

"அவர் உன்னை தவிக்கிறார்ன்னு எப்படி சொல்லுற" கேட்டவள், அவள் முன்னால் இருந்த கப்பை எடுத்துக் கொண்டாள்.

"ஒரு பதினைந்து நாளைக்கு முன்னாடி வரைக்கும் என் கூடவே சாப்பிட்டு, பேசி இருந்த அவன் இப்போ, ஜஸ்ட் ஒரு மெஸ்சேஜ்ல எல்லாத்தையும் முடிச்சுடுறான். நான் அவனை பார்த்தே பதினைந்து நாள் ஆகுது. அவனும் அதேபோல்தான்", கொஞ்சம் சோகம் இழையோடியது அவள் குரலில்.

"அவர் உன்னை பார்த்து பதினைந்து நாள் ஆகுதுன்னு எப்படி சொல்லுற", குறும்பாக கேட்டாள்.

"எப்படி சொல்லுறேன்னா, நானும் அவனை பார்த்து பதினைந்து நாள் ஆகுது அப்படித்தான்" லூசா நீ..., என்பது போன்ற பார்வையை அவள் பக்கம் வீசினாள்.

"அப்படியா அப்போ உடனே போன் எடுத்து பரத்துக்கு கால் பண்ணு. பட் ஒன் கண்டிஷன்...".

"கண்டிஷன்..., வாட்..." தன் அலைபேசியை எடுத்தவாறே கேட்டாள்.

"அவரோட போன் ரிங் ஆனதும் நீ உணர்ச்சிவசப்பட்டு எதையும் செய்யக் கூடாது ஓகேயா?" அவள் கரத்தை பிடித்தாள்.

"இதில் நான் உணர்ச்சிவசப்பட்டு செய்ய என்ன இருக்கு", கேட்டுவிட்டு தன் போனை எடுத்து பரத்தை அழைத்தாள்.

அவள் அழைக்கவும் கால் போகும் நேரத்தை கணக்கிட்டு அவளது காதிலிருந்து அவளது போனை அகற்றினாள் ஜீவித்யா.

"ஒய் ஜீவி...", அவள் பேச்சை தடுத்தது, தூரத்தில் கேட்ட பரத்தின் ரிங்டோன் ஓசை.

திகைத்து ஜீவித்யாவைப் பார்க்க, உதட்டில் உறைந்த புன்னகையுடன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தாள் அவள்.

பரத்தின் ரிங்டோன் ஒரு மூலையிலிருந்து மிக மெதுவாக கேட்க, அதை ஹேமாவின் காது மிக சரியாக கண்டு கொண்டது. திகைப்பும், ஆற்றாமையுமாக அவளைப் பார்க்க, ஜீவித்யாவோ..., உதட்டில் உறைந்த புன்னகையுடன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

சட்டென சத்தம் வந்த திசையில் அவள் பார்வையை செலுத்த அங்கே பரத்தின் முதுகுபுறம் அவள் கண்களில் விழ அவன் எழுந்து செல்வது தெரிந்தது.

அவன் பின்னால் எழுந்து செல்லப் போன அவளை கையை பிடித்து தடுத்து அமர வைத்தாள் ஜீவித்யா. "ஜீவி, இஸ் ஹி பரத்...?", அவன்தானா, என்ற நம்ப முடியாத திகைப்பில் கேட்டாள்.

"உன்னை பாக்க தான் வந்துட்டு போறாங்க", ஜீவித்யா உரைக்க,

"என்ன சொல்லுற ஜீவி...".

"இந்த பதினைந்து நாளா அண்ணா உன்னை இப்படித்தான் பாத்துட்டு போறாங்க...".

"அதுதான் ஏன்".

"ஏன்னா, அவர் வளர்ந்த சூழல் அப்படி".

"அவன் வளர்ந்த சூழலுக்கும், என் காதலுக்கும் என்ன சம்பந்தம்", புரியாமல் கேட்டாள்.

"கண்டிப்பா சம்பந்தம் இருக்கு ஹேமா. ஒரு பொண்ணோட மனசில் பொய்யான ஆசையையும், நம்பிக்கையையும் விதைக்க வேண்டாம்னு நினைக்கறாங்க. கூடவே..., ஒரு பொண்ணோட கண்ணீருக்கு தான் காரணமாகிட கூடாதேன்னும் சேர்த்தே நினைக்கறாங்க அதான்..."

"ஆனா..., அவங்க மனசுக்குள் நீ மட்டும்தான் இருக்கற..., அதை என்னால் உறுதியா சொல்ல முடியும்..." அடித்துப் பேசினாள்.

"சொல்லாத காதலால் யாருக்கு என்ன யூஸ்? என்னை பார்க்கவே தயங்கும் அவன் எப்படி அவனது மனதை திறந்து உண்மையை என்னிடம் சொல்லுவான்? எனக்கு அந்த நம்பிக்கை இல்லை. கூடவே..., இதை வைத்து மட்டும் அவன் மனசில் நான் இருக்கேன்னு சொல்ல முடியாதே...".

"அவங்க வாயால் சொன்னால் நம்புவாயா?" அவள் கேட்க,

"இப்போதானே சொன்னேன்..., ஓடி ஒளியும் இவன் எப்படி காதலை சொல்வான்?"

"உன்கிட்டே  சொல்ல மாட்டாங்க.  ஆனா என்கிட்டே உண்மையை சொல்வாங்க...".

"உன்கிட்ட சொன்னால் எப்படி எனக்கு தெரியும்".

"ஹையோ ஆண்டவா, இந்த காதல் வந்தாலே மூளை மழுங்கிடுமோ", சத்தமாக புலம்பினாள்.

"ஜீவி விளையாடாதே, நான் நிஜமாகவே புரியாமல் தான்கேட்டேன்".

"அது எப்படின்னு நாளைக்கு காலையில் சொல்லுறேன் போதுமா".

"இல்லை எனக்கு இப்போவே தெரியணும்".

"சரி சொல்லுறேன். இப்போ பரத் அண்ணா இங்கே இருப்பதை உனக்கு நானா சொன்னேன், அப்படித்தான்", சொல்லிவிட்டு எழுந்து சென்றுவிட்டாள்.

"ஏய், அவன் இருப்பதை நீதான சொன்ன", அவள் குரல் தொடர,திரும்பி பார்த்து இல்லை என்று தலையை ஆட்டிவிட்டு சென்றாள்.

'இவதானே சொன்னா', யோசனையுடன் அங்கிருந்த போனை எடுத்துவிட்டு அவளும் கிளம்ப, அப்பொழுதுதான் போனை பார்த்தாள்.

உடனே முகம் சிரிப்பில் விரிய, "ஓ..... போன் மூலமாவா", அவளும் தனக்கு தானே கேட்டுவிட்டு, அந்த நேரம்முதல் அவளது போனை எதிர்பார்த்து காத்திருக்க துவங்கினாள்.

ஹேமா காலையில் எழுந்தது முதலே கொஞ்சம் பரபரப்பாகவே இருந்தாள். இந்த பரத்தை இன்னைக்கு என்ன செய்யலாம் என்று யோசனையாகவே இருந்தாள். நேற்று அவன் தன்னை காண, கேண்டீன் வந்திருந்தான் என்னும் நினைப்பே சுகமாய் இருந்தது.

அவனை ஆசையாக சீண்டிப் பார்க்கும் வேகம்..., அவன் இதழ்களில் புதைந்து கொள்ளும் தாகம்..., தனக்கானவனிடம் தன் உணர்வுகளை பகிந்து கொள்ள வேண்டும் என ஒரு கட்டத்தில் முடிவெடுத்தவள், அதன் பிறகு ஆண் நண்பர்களோடு இதழ் முத்தத்தில் சாதாரணமாக கூட பங்கெடுத்தது இல்லை.

இப்பொழுதோ..., பரத் தனக்கானவன் என்பதால்..., தன் உணர்வுகளை வெளிப்படுத்துவதில் அவளுக்கு தயக்கம் இருக்கவில்லை.

வழக்கமாக போடும் சுடிதாரை விடுத்து, லாங் ஸ்கிர்ட், டாப் எடுத்து அணிந்து கொண்டாள். லேசான ஒப்பனையுடன் கிளம்பிவிட்டாள். ஹாஸ்பிட்டலின் பின்னால் வீடு இருந்தாலும் தன் காரில்தான் அவள் வேலைக்கு செல்வாள்.

காரை கிளப்பி ஹாஸ்பிட்டலுக்குள் நுழையும் வேளையில்தான் கவனித்தாள் பரத்தின் கார் வருவதை. தன் வேகத்தை குறைத்து அவன் காருக்கு குறுக்காக கொண்டு நிறுத்தினாள். யாரோ போகிறார்கள் என்று கொஞ்சம் அவன் ஒதுக்க, ஹேமா மேலும் அவனை நெருங்கினாள்.

அப்பொழுதுதான் யாரோ வேண்டுமென்றே செய்கிறார்கள் என்பதை உணர்ந்து கோபமாக நிமிர்ந்து பார்த்தான். அவன் நிமிர்ந்து தன்னை பார்க்கவுமே கண்ணை சிமிட்டி தலையை சாய்த்து, கீழ் உதட்டை லேசாக கடித்தவாறு அதே வழக்கமான புன்னகையை சிந்தினாள் அவள்.

பரத் அவளது புன்னகையில் தலைகீழாக விழுந்தான் என்றுதான் சொல்ல வேண்டும். இமைக்க மறந்து அவளையே விழுங்குவதுபோல் பார்த்தான். அவன் தன்னை இமைக்காமல் பார்ப்பதை உணர்ந்து வெட்கமெல்லாம் படவில்லை அவள்.

'பாருடா நீ இப்போ பாக்காமல் போயிடுவியா, உனக்கு நான் வேண்டாமா. இந்த பார்வைக்கு என்னடா அர்த்தம். லவ் யூ டா. ஐ பீல் லைக் கிஸ்ஸிங் யூ டா', தன் உள் உணர்வுகளை பார்வையாலேயே அவனுக்கு கடத்தினாள்.

பரத்தை சுற்றி இருந்த உலகம் உறைந்து போனது. பார்வையில் அவள் மட்டுமே தெரிந்தாள். அவனின் எண்ணமும் இப்பொழுது ஹேமாவின் எண்ணத்தை

ஒத்திருந்தது. அவளது அருகில் நெருக்கத்தில் அந்த புன்னகையை பார்க்கவேண்டும் என்ற எண்ணம் எழுந்தது.

அதைவிட அவள் முகத்தை கைகளில் ஏந்தி, அவள் பற்களுக்கு இடையில் சிக்கியிருக்கும் அவள் இதழ்களை தன் விரல்களால் விலக்கி விட வேண்டும். அவள் இதழ்களை தான் கவ்விக் கொள்ள வேண்டும் என்ற வேட்கை அவன் நெஞ்சு முழுக்க வேகமாக பரவியது.

அவள் தன் வீட்டுக்கு சரிவர மாட்டாள். பணக்காரி என்பது எல்லாம் மறந்து போனது.

ஹேமா திடமாகவும், பரத் கனவிலும் மிதந்துகொண்டிருக்க இருவரின் மோன நிலையை கலைத்தது சுற்றி இருந்த வாகனங்களில் இருந்து வந்த ஹார்ன் சத்தம். ஹேமா அங்கிருந்து நகராமல் இருக்க, பரத் வேறு வழி இல்லாமல் ஹேமாவின் காரை சுற்றிக்கொண்டு சென்றான்.

ஹேமாவும் அவன் காரை தொடர்ந்து சென்று அவன் காரின் அருகிலேயே பார்க் செய்து இறங்கினாள்.

அவன் அருகில் சென்று அவன் கைகளில் தன் கையை கோர்த்துக் கொண்டாள். "பரத் நேத்து நைட் கேண்டீன் வந்தியா என்ன", சாதாரணமாக கேட்டாள்.

அவள் சாதாரணமாக கேட்க, அவனுக்குதான் குப்பென வியர்த்து போனது. அதை மறைத்தவாறே, "நேற்று நான் சாயங்காலமே வீட்டுக்கு போயிட்டேன். ஏன் கேக்குற ஹேமா", என கேட்டான்.

"இல்ல சும்மாதான் கேட்டேன்", அவனை பார்த்து கண்ணை சிமிட்டியவாறே சொல்லிவிட்டு அவன் கையை பிடித்து இழுத்தவாறே லிப்டுக்குள் சென்றாள்.

அவளிடமிருந்து கையை உருவிக் கொள்ள பார்த்தான். அவளது பிடி மென்மையாக இருந்தது போல் இருந்தாலும் உடும்பு பிடியாக இருந்தது.

லிப்டில் நுழைந்த போது அங்கு இருந்த செவிலிகளை பார்த்தும் கூட அவள் கைகளை விடவில்லை. பரத்தான்

மிகவும் நெளிந்தான்.கைகளை மட்டும் அவள் கோர்த்திருக்கவில்லை, அவளது தேகம், மெல்லிய தென்றலாய் அவன் கைகளை அழுத்திக் கொண்டிருந்தது.

ஒரு ஆண்மகனாய்..., காதலனாய்..., அவன் மனம் அதை ரசிக்கத் தூண்ட, முயன்று தன்னை கட்டுப்படுத்தியவன், "ஹேமா கையை விடேன்", மிகவும் மெதுவாக அவள் காதில் சொன்னான்.

"ஏன் பரத்", எதுவும் புரியாதவள் போல் குழந்தை முகமாக கேட்டவளிடம் எதுவும் சொல்லமுடியாமல் அமைதியானான்.

செவிலிகளின் பார்வையை உணர்ந்து, பரத்தின் சங்கடத்தைப் பார்த்து மனமே இல்லாமல் கைகளை விடுவித்தாள்.

'இன்னைக்கு இது போதும்', மனதுக்குள் எண்ணி சிரித்துக் கொண்டாள்.

# பகுதி - 13.

ஜீவித்யாவின் வீடே களை கட்டியிருந்தது. பெண் பார்த்து சென்றவர்கள், இரண்டே வாரத்தில் நிச்சயம் செய்யவும் வந்துவிட்டார்கள். ஜீவித்யா ஹேமாவின் கேலியில் சிவந்து கொண்டிருக்க, அவளை சிவக்க வைக்க வேண்டியே ஒவ்வொன்றையும் செய்தாள்.

"ஏய்..., போதுண்டி..., விடேன்..." ஜீவித்யா கெஞ்சினாலும் அவள் விடவில்லை.

"ஐ லவ் டூ சீ யுவர் ஃபேஸ்..." அவ்வளவு கூட்டத்திலும், தோழியின் கன்னத்தில் முத்தமிட, சற்று நெளிந்தாலும் தோழியை தடுக்கவில்லை. அவள் தலையில் செல்லமாக முட்டி, தன் நேசத்தை வெளிப்படுத்தினாள்.

பரத்தோ அவர்களையே பார்த்துக் கொண்டிருக்க, "ஏய்..., அண்ணாவுக்கு கொடுக்க வேண்டியதெல்லாம் எனக்கே கொடுக்கறியேன்னு அவர் காதில் புகை வருது பார்..." பரத் இருக்கும் திசையை கண்களால் சுட்டி அவள் உரைக்க,

"நோ..., ஐ வில் கிவ் ஹிம் சம்திங் ஸ்பெஷல்யா..." இமைகளை சிமிட்டி அவள் உரைக்க, 'இவ கையில் பரத் என்ன ஆக போறாங்களோ...' எண்ணியவள், மெல்லியதாக சிரித்துக் கொண்டாள்.

"ஹேமா..., இப்படியெல்லாம் எல்லார்கிட்டேயும் பேசக் கூடாது..." சிறு குரலில் உரைக்க,

"உன்கிட்டே சொல்ல எனக்கு என்ன தயக்கம்?" அவள் திருப்பிக் கேட்க, "லூசு..." தன் தோளைச் சுற்றி அவள் போட்டிருந்த கரத்தை அழுத்திக் கொண்டாள்.

பரத்துக்கோ பொறாமையாக இருந்தது. ஜீவித்யா இருக்கும் இடத்தில் தான் இருக்க வேண்டும் என்ற வேகம்..., முதல் முறையாக பட்டுடுத்தி இருந்த அவள் தோற்றம்..., கண்களால் சிறை செய்தான். அதைவிட, அவள் மேலாக்கு விலகுவதை சட்டை செய்யாமல், தன் போக்கில் அவள்

இருக்க, அவன் பார்வை தன்னை மீறி அவள் மேனியில் நழுவியது.

'ஹையோ..., தப்புடா...' மனம் ஒரு மூலையில் குரல் கொடுத்தாலும், தன்னக்கானவளை, தனக்கு உரிமையானவளை பார்க்கிறோம் என காதல் மனது அவனது செய்கைக்கு துணை போனது.

'ஜீவித்யா சொல்லிக் கொடுக்காமல் என்ன பண்றா...?' மற்றவரின் பார்வை அவள்மேல் பதியுமோ..., என உரிமை கொண்டவனது மனது முரண்டியது.

நட்ராஜோ..., வஞ்சனையே இல்லாமல் ஜொள் ஊற்றிக் கொண்டிருந்தான். அவனை கேலி செய்ய யாரும் இருக்கவில்லை எனவே அது அவனுக்கு வசதியாகப் போயிற்று.

அவர்கள் மோதிரம் மாற்றிக்கொண்ட பொழுதும் சரி, உணவு அருந்தும் இடத்திலும் சரி..., மற்றவர் அறியாத அவனது சீண்டலும், பார்வையும், அவளை தவிக்கச் செய்தது.

"நட்ராஜ்..., சும்மா இருங்க..." அவனிடம் எதையோ பேசும் சாக்கில் அடிக்குரலில் கடிந்துகொண்டாள்.

"சும்மாவே தானே இருக்கேன். இவ்வளவு கூட்டத்துக்கு மத்தியில் என்ன பண்றதாம்?" ஒரு மாதிரி உரைக்க, 'ஆண்டவா...' வேகமாக சற்று விலகிக் கொண்டாள்.

அவர்களுக்கான போட்டோ எடுக்கும் படலம் துவங்க, அந்த கூட்டத்தை விட்டு நகர்ந்து, வீட்டுக்குள் செல்ல முயன்றாள் ஹேமா.

ஜீவித்யாவின் வீட்டுக்கு பின்னால் இருந்த காலி இடத்தில்தான் விழா என்பதால், கூட்டம் மொத்தமும் அங்கேதான் இருந்தது. பந்தலுக்குள் கூட்டம் என்பதால், அதை விட்டு வெளியேறி, சுற்றிக்கொண்டு நடந்தாள்.

பழக்கமில்லாத புடவை வேறு ஒவ்வொரு அடிக்கும் அவளை தடுமாற வைக்க, கூடவே ஹீல்ஸ் சப்பல், ஒழுங்கற்ற நிலம்

என அவளது பாடு சற்று திண்டாட்டமாகத்தான் இருந்தது.

அவள் மீதே கவனமாக இருந்த பரத், அவள் கூட்டத்தை விட்டு விலகவே..., அவள் பின்னாலேயே அவனும் சென்றான். அவள் நடக்க சிரமப்படுவதை உணர்ந்து, வேகமாக நடையை எட்டிப் போட்டான். அவன் அவள் பின்னால் நெருங்கும் நேரம், அவள் கால் தடுமாறி விழப் போக, ஒரே பாய்ச்சலில் அவள் இடையில் கை கோர்த்து அவளை நிறுத்தினான்.

"காட்..." விழப் போகிறோம் என அவள் அலறியிருக்க, "ஹனி..., கூல்..., யூ ஆர் சேஃப்..." உரைத்தவன், அவள் பயத்தை போக்கும் விதமாக, அவளை மென்மையாக அணைத்துக் கொண்டான்.

"தேங்க் காட்..., பரத்..." ஒரு நொடியில் தன்னை சுதாரித்துக் கொண்டாள்.

அவனது இடக்கரம் அவளது சேலை மறைக்காத வெற்றிடத்தில் அழுந்தி இருக்க, மறு கரமோ..., அவள் கழுத்தை வளைத்து பிடித்திருந்தது. அவன் பிடியில் இருந்த அவளுக்கு எதுவும் தோன்றவில்லை. ஆனால்..., அவள் ஸ்பரிசம் உணர்ந்தவனுக்கோ..., குப்பென வியர்த்துப் போனது.

வேகமாக அவள்மேல் இருந்த கைகளை விலக்கிக் கொண்டவன், "சாரி..., எங்கே நீ விழப் போறியோன்னு..., அவசரத்தில்..." எங்கே அவள் தவறாக எண்ணிவிடுவாளோ என்ற தவிப்பில் அவன் விளக்கம் கொடுக்க,

ஹேமாவின் முகம் மெல்லிய கோபத்தை வெளிக்காட்டியது. "இட்ஸ் ஆல் யுவர்ஸ்..., டூ யூ அண்டர்ஸ்டேண்ட்..." கிட்டத்தட்ட கத்தியவள், அவன் சட்டையை கொத்தாக பற்றிக் கொள்ள, சுற்றுப்புறம் அனைத்தும் இருவருக்கும் மறந்து போனது.

"ஹனி..." அவள் உதிர்த்த வார்த்தைகளின் கனம் தாளாமல், அதில் தெறித்த ஏக்கம் தாளாமல், அதில் தெரிந்த உரிமை தாளாமல் சிதறிக் கொண்டிருந்தான் பரத்.

"யூ ஃபூல்..." இன்னும் என்ன சொல்லியிருப்பாளோ..., அந்த பக்கம் சிலர் வரும் ஓசை கேட்கவே அவனை விலக்கிவிட்டு வேகமாக திரும்பி நடந்தாள்.

அவள் பின்னால் ஓடியவன், அவள் ஆடை நெகிழ்ந்திருப்பதைக் கண்டு, "டிரெஸ்ஸை சரி பண்ணிக்கோ..." பார்வையை முயன்று கட்டுப்படுத்தி உரைத்தவன், அவள் தன்னை குனிந்து பார்த்துவிட்டு, எதுவும் புரியாமல் அவனை ஏறிட, எப்படி சொல்வது என ஒரு நொடி தயங்கியவன்,

ஏற்கனவே அவள் சொன்ன வார்த்தைகளில் இருந்து வெளிவர முடியாமல், விரும்பாமல், அவள் தன்னவள் என்ற உரிமை மட்டும் தலை தூக்க, அவள் தேகத்தில் தன் விரல் படாதவாறு, தானே அவள் மேலாக்கை சரி செய்தான்.

"ஓ..., சாரி..., ரியல்லி ஐ'ம் நாட் அவேர் ஒப் திஸ் சச்..." அவள் விளக்கம் சொல்ல முயல, அவள் வாயில் ஒற்றை விரலை வைத்தவன், "போ..." எதுவும் சொல்லாதே எனக்குத் தெரியும் என சொல்லாமல் சொல்ல..., "ஐ பீல் லைக் கிஸ் யூ பரத்..." அந்த நேர தன் உணர்வை தயங்காமல் வெளிப்படுத்தினாள்.

"ஹனி..." சட்டென அவளுக்கு முகத்தை திருப்பிக்கொண்டு செல்ல முடியாமல், அதைச் செய்தால் நொறுங்கிப் போவாள் எனப் புரிய, தங்களைத் தாண்டிச் செல்லும் ஆட்களை பார்த்தவாறே..., "எல்லாரும் வராங்க..., நீ போ" தன்மையாகவே உரைத்தான்.

அவன் இருக்கும் சூழல் கருதி மறுக்கிறான் என அவள் புத்திக்கு உறைத்தாலும், மனதுக்கு புரியாமல் போக..., அதைவிட..., தான் கேட்டு கிடைக்காத அந்த விஷயம் அவளை வெகுவாய் காயப்படுத்தியது. அவள் பார்வை அவன் முகத்திலேயே நிலைக்க, அவளைப் பார்ப்பதை தவிர்த்தவன், "நான் அங்கே போறேன்..." சொல்லிவிட்டு திரும்பி நடந்தான்.

ஏனென்றே தெரியாமல் அவள் கண்கள் கலங்க, ஜீவித்யாவின் அறையில் போய் அமர்ந்துகொண்டாள் ஹேமா. சற்று நேரத்தில் அங்கே வந்த ஜீவித்யா, "ஹேமா..., ஏன் இங்கே வந்து உக்காந்துட்ட? உன்னை அங்கே தேடிட்டு இருந்தேன்..." அவள் எதிரில் அமர்ந்தாள்.

ஹேமாவின் முகத்தை பார்த்தவள் திடுக்கிட்டாள். "ஹனி..., என்ன ஆச்சு? ஏன் ஒரு மாதிரி இருக்க...?" அவளை உலுக்க, அவளது சந்தோஷமான நேரத்தில் எதையும் சொல்லி குழப்ப அவள் தயாராக இருக்கவில்லை. எனவே அமைதியாகவே இருந்தாள்.

"ஹெட்ஏக்..." முனக, "எங்கே..., என்னைப் பாத்து சொல்..." அவள் தாடையைப் பிடித்து நிமிர்த்தி தன் முகம் காண வைத்தாள்.

அவளிடம் இதுவரை இப்படி யாரும் கட்டாயப்படுத்தி கேட்டது இல்லை என்பதால், சட்டென உடைந்தவள், தோழியின் தோளில் தலை சாய்த்து குமுறிவிட்டாள். கூடவே..., நடந்ததை அவளிடம் சொல்ல, இதற்கு என்ன தீர்வு சொல்வது என்றே அவளுக்குத் தெரியவில்லை.

"நான் அப்படி கேட்டிருக்க கூடாதா...?" அழுகை குரலில் அவள் முகம் பார்த்து வினவ, 'இல்லை' என்று எப்படி சொல்வதாம்?

"ம்ச்..., பரத் அண்ணா கிட்டே தானே கேட்ட..., விடு..." அவள் முதுகை வருடினாள். இன்றைக்கே அண்ணாவிடம் பேச வேண்டும்..., முடிவெடுத்தாள்.

"என்மேல் லவ் இருந்திருந்தால் இப்படி செய்திருக்க மாட்டான் தானே..." அவன் விலகலை சுட்டிக்காட்டி அவள் வினவ,

"ஏய்..., இங்கே பப்ளிக்கா ஒரு பொண்ணும் பையனும் பேசவே பயப்படுவாங்க, தயங்குவாங்க. நீ என்னன்னா..., கிஸ் தரலைன்னு குறை சொல்லிட்டு இருக்க? இதெல்லாம் இங்கே ப்யூர் பெர்சனல்..., புரியுதா? அதுவும் உன்

கௌரவத்தை காப்பாத்த தான் அண்ணா விலகி போயிருக்காங்க புரிஞ்சுக்கோ.

"சப்போஸ் அண்ணா உன்னை நெருங்கியிருந்தா..., அவரை குத்தம் சொல்ல மாட்டாங்க. இந்த பொண்ணுக்கு இருக்க தைரியத்தை பாரேன்னு உன்னைத்தான் குறை சொல்வாங்க..., அதான்..., புரிஞ்சுக்கடி..., நான் இன்னைக்கே அண்ணா கிட்டே பேசறேன் சரியா...?" ஜீவித்யா கெஞ்ச, அமைதியாகவே அவளைப் பார்த்திருந்தாள்.

"நான் சொன்னதை கொஞ்சம் நிதானமா யோசி உனக்கே புரியும். அத்தோட..., நீங்க ரெண்டுபேர் மட்டும் தனியா இருக்கும்போது உனக்கு என்ன கேக்கணுமோ கேளு..., புரியுதா..." தோழிக்கு எதார்த்தம், சூழலை புரிய வைக்க முயன்றாள்.

"நிஜமாவே அவனுக்கு என்னை பிடிச்சிருக்கா ஜீவி..." தான் இப்படியாகிப் போனோமே என்ற கழிவிரக்கம் அவளைக் கொன்றது.

"ஹேமா, சரி விடு..., நான் சொன்னால் உனக்கு நம்பிக்கை வராது..., அண்ணா வாயால் கேட்டால் நம்புவாய் தானே..." அவள் கேட்டுக் கொண்டிருக்கையிலேயே...,

"ஜீவி..., மாப்பிள்ளை வீட்டில் எல்லோரும் கிளம்பறாங்களாம்..." வெளியே அண்ணாவின் குரல் கேட்கவே அந்த பேச்சு அப்படியே நின்றது.

அவளிடம் விடைபெற அவளது அறைக்கு வந்தான் நட்ராஜ். அவன் வரவே..., ஹேமா வேகமாக அங்கிருந்து வெளியேறினாள்.

அவள் செய்கையைப் பார்த்தவன், "நல்ல ப்ரண்ட்..." அவளைப் பாராட்ட, "ஆமா..." உடனே அதை ஒத்துக் கொண்டாள்.

அதே நேரம்..., ஹேமா கதவை சாத்திவிட்டுச் செல்ல..., "ரொம்ப நல்ல ப்ரண்ட்" பார்வையை வாசல்பக்கம் செலுத்தி

அவன் உரைக்க, 'ஹையோ..., அத்தனை பேருக்கு மத்தியிலேயே சீண்டினான்..., இப்போ...' கட்டில் அருகில் நின்றிருந்தவள், வேகமாக ஜன்னல் பக்கம் நகர்ந்தாள்.

கூடவே..., "நட்ராஜ்..., எதுவா இருந்தாலும் நாலடி தள்ளி நின்னே பேசுங்க. வர வர உங்க பேச்சு..., பார்வை..., செய்கை..., எதுவுமே சரியில்லை. எப்ப வேண்ணா ஆட்கள் வரலாம்..." அவன் பார்வையின் மாற்றம் அவளை வேகமாக சொல்லத் தூண்டியது.

"நான் உன்னை டச் பண்ண மாட்டேன்..., ஓகேயா...?" கேட்டவன் அவளை நெருங்க, தொடமாட்டேன் எனச் சொல்லவே சற்று நிம்மதியாக உணர்ந்தாள்.

எனவே அவன் நெருங்கும் நேரம், தைரியமாகவே அவனை ஏறிட, "தைரியம் வந்துடுச்சு போல..." சீண்டலாக வினவியவன்..., நாலடி..., மூன்றடி..., இரண்டடி..., ஒரு அடி..., அரையடி..., என தூரத்தை கடக்க, வேகமாக அவனுக்கு முதுகு காட்டி நின்றாள்.

"பைன்..." உரைத்தவன், தன்னை நெருங்குவதை அவன் வாசத்தை வைத்தே உணர்ந்து கொண்டாள்.

"நட்ராஜ்..., யூ ப்ராமிஸ்ட்..." அவன் தீண்டும் முன்பாகவே, மனதில் எழும் பரவசம் அவளை தகிக்கச் செய்ய திணறிப் போனாள்.

அவனோ..., தீண்டாமலே தவிக்க விட்டு, இதழ் குவித்து, அவள் காது மடலில் மெதுவாக ஊதினான். அவன் செய்கையில், சட்டென கை ரோமங்கள் துவங்கி, தேகம் மொத்தமும் சிலிர்க்க, இதயம் படபடக்க, மெல்லியதாக வியர்வை அரும்பியது.

காதுமடல் துவங்கி..., அவள் கழுத்தில் இறங்கி ஊத, ஜன்னல் கம்பியை ஆதாரமாக பற்றிக் கொண்டாள். அவள் கரத்தின் கீழே தன் கரத்தை வைத்தவன், கட்டை விரலால், அவள் விரல்களை மென்மையாக வருடி, பின்னங்கழுத்தில் மூச்சுக்காற்றை செலுத்தினான்.

அவன் மொத்தமாக தொட்டு அணைத்திருந்தால் கூட இப்படி ஒரு உணர்வை அனுபவித்திருக்க மாட்டாளோ என்னவோ..., இது ஒரு ஆனந்த சித்ரவதையாகத்தான் இருந்தது.

அவள் மூளை வேலை நிறுத்தம் செய்வதை நிறுத்த, அவன் செய்கையை தாங்க முடியாமல், பட்டென கையை எடுத்து விட்டு, அவன் பக்கம் திரும்பினாள். இமைகளை அழுந்த மூடிக் கொண்டு, வேகமாக மூச்சுவிட, அவள் நெஞ்சுக்கூடு ஏறி இறங்கிய அழகை இமை கொட்டாமல் ரசித்தான்.

அவனிடம் எதிர்வினை எதுவும் இல்லையே என எண்ணியவள், இமைகளை திறக்க, அவன் பார்வையை உணர்ந்தவள், "சீ..., ப்ராடு..." முகம் சிவக்க, வேகமாக அவன் நெஞ்சில் கை வைத்து தள்ளி விட்டாள்.

"ஏன்..., எனக்கு அந்த உரிமை இல்லையா...?" தள்ளிய அவள் கரத்தை பற்றிக் கொண்டான்.

அவள் எப்படி இல்லை என சொல்வதாம்? அவள் அமைதியாக..., "திவ்யா..., ஜஸ்ட் ஒரே ஒரு நாள்..., லவர்ஸ் மாதிரி இந்த சென்னையை சுத்தி வரணும். என்னோட ரோம்ப நாள் ஆசை..." அவள் கண்களை ஊடுருவ, "ம்ஹும்..." தலையை மறுப்பாக அசைத்தாள்.

"ஏன்...?" அவன் கேட்கையிலேயே, "கண்ணா..." அவனது தாய்..., கிருபாவின் குரல் கேட்க, சட்டென அவனிடமிருந்து விலகி, கதவைத் திறந்தாள்.

அதன் பிறகு அவர்கள் விடைபெற்றுச் செல்ல, நட்ராஜின் கோரிக்கை ஜீவித்யாவை அலைக்கழித்தது.

முயன்று அதை ஒதுக்கியவள், அறையை விட்டு வெளியே வர, "அண்ணா..., ஹேமா எங்கே...?" பார்வையால் வீட்டை அலசியவாறு கேட்டாள்.

"கிளம்பிட்டாளே..., உன்கிட்ட சொல்லலை...?" ஆச்சரியமாக கேட்டவன், தங்கள் அருகில் யாரும் இல்லை என்பதை உறுதி செய்துவிட்டு,

"ஜீவி..., பரத்தும், ஹேமாவும் பழகறாங்களா என்ன? உனக்குத் தெரியுமா?".

"ஏன்ணா திடீர்ன்னு...?".

"இல்ல..., கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி..., பந்தலுக்கு வெளியே அவங்களைப் பாத்தேன்..., அதுவும்..., வேற யாராவது பார்த்திருந்தால் என்ன நினைப்பாங்க..., நம்மளை நம்பி வந்திருக்கா..." அவன் குரலில் கவலை மண்டிக் கிடந்தது.

பரத் குடும்பத்தைப் பற்றி தெரிந்ததாலேயே அவனும் கவலைப் பட்டான்.

"அவங்க ரெண்டுபேருக்கும் ஒருத்தரை ஒருத்தர் பிடிச்சிருக்கு. ஆனா..., பரத் அண்ணா தான்..." தாய் அங்கே வரவே பேச்சை நிறுத்திக் கொண்டாள்.

"ஜீவி..., நகை, புடவை எல்லாம் மாத்தாமல் இன்னும் இங்கே என்னடி பண்ணிட்டு இருக்க? முதல்ல மாத்து போ..." உரைத்துவிட்டு, ஹாலில் இருந்த பொருட்களை ஒதுங்க வைக்கத் துவங்கினார்.

"அண்ணா..., பரத் அண்ணாகிட்டே நான் கொஞ்சம் பேசணும்..., மாடிக்கு வரச் சொல்லுங்க..., நான் ட்ரெஸ் மாத்திட்டு வரேன்..." தன் அறைக்கு விரைந்தாள்.

தன்னிடம் பேச வேண்டும் என அழைத்துவிட்டு, பேசாமல் தன்னையே பார்த்துக் கொண்டிருந்த ஜீவித்யாவை அமைதியாகப் பார்த்திருந்தான் பரத். அவள் பேச வரும் விஷயம் அவனுக்குப் புரியாமல் இல்லை. ஆனால்..., அதை எதிர்கொள்ளத்தான் தயக்கமாக இருந்தது.

"என்னம்மா..., பேசணும்னு சொல்லிட்டு இப்படி அமைதியா இருந்தால் என்ன அர்த்தம்?" அவனே கேட்டான்.

"நான் எதுக்கு கூப்ட்டேன்னு உங்களுக்கு தெரியாதாண்ணா?".

அவள் கேட்க, ஒரு நொடி அமைதியானவன்..., "என்னை தப்பா நினைக்கிறியா ஜீவி...".

"அண்ணா..., நான் உங்களை தப்பா நினைக்கறதா? அவளோட மனசுக்குள்ள என்ன இருக்குன்னு எனக்கு தெரியும். உங்க மனசுக்குள் என்ன இருக்குன்னு எனக்கு தெரியணும் அவ்வளவுதான்...".

"அ...அவ மனசுக்குள் அப்படி என்ன இருக்கு" தடுமாறிப் போனான்.

"நான் இப்போ உங்க மனசுக்குள் என்ன இருக்குன்னு தெரிஞ்சுக்கதான் வரச் சொன்னேண்ணா" அவள் மனதுக்குள் கலவரம்.

"என் மனசுக்குள் எதுவும் இல்லை ஜீவித்யா..." அவன் குரல் மிக மெதுவாக தேய்ந்து போனது.

"எனக்கு உண்மையான பதில் வேணும்ண்ணா. இதே பதிலை ஹேமாகிட்டே உங்களால் சொல்ல முடியுமா?" அவள் கேட்க, அவன் மௌனமாய் நின்றான்.

'அவள் முகத்தைப் பார்த்து..., என் மனதுக்குள் எதுவுமே இல்லை...' என தன்னால் சொல்ல முடியுமா? தனக்குத் தானே கேட்டுக் கொண்டவனுக்கு, சற்று முன்னர்..., 'இட்ஸ் ஆல் யுவர்ஸ்..., டூ யூ அண்டர்ஸ்டேண்ட்...' ஹேமாவின் கோபக் குரல் காதுக்குள் ஒலிக்க, திணறிப் போனான்.

கூடவே..., 'ஐ பீல் லைக் கிஸ் யூ பரத்...' உரிமையாய்..., உணர்வாய்..., தன் மனதை வெளிப்படுத்திய அவள் வார்த்தைகள்..., 'ஓ மை காட்...' அந்த நிமிடம் அவள் ஆசையை நிறைவேற்ற அவன் மனதும், உடலும் தவித்ததை இல்லை என சொல்ல முடியுமா? இதோ..., இந்த நொடி கூட அவள் வார்த்தைகள் காதுக்குள் ரீங்காரமிடுவதை தடுக்க முடியாமல் தானே வெதும்பிக் கொண்டிருக்கிறேன்.

அவனது மௌனமே அவன் மனதை உரைக்க, "எனக்கு எல்லாம் தெரியும். எந்த நேரம் நீங்க எங்கே இருக்கீங்க...,

என்ன பண்றீங்க..., எல்லாம்..., அதை என் வாயால் தெரிந்தபிறகுதான் நீங்க உண்மையை சொல்வீங்கன்னா சொல்லுங்க..., தாராளமா செய்யறேன்..." அவள் இதற்குத்தானே பயந்தாள். பரத் அவன் மனதுக்கு துரோகம் செய்ய மாட்டான். ஆனால்..., தனத்தின் மகன் அப்படி இல்லையே..., ஹேமாவை எண்ணி கலங்கிப் போனாள்.

பரத் முழுதாக ஒரு நிமிடம் எதுவும் பேசவில்லை. "ஜீவித்யா, உனக்கு என்னைப் பற்றி மட்டுமல்ல என் வீட்டை பற்றியும் உனக்கு நன்றாக தெரியும்", அவன் தயங்கினான்.

"அண்ணா... இப்போ நான் உங்க மனசுக்குள்ள என்ன இருக்குன்னு மட்டும் தான் கேட்டேன். உங்க வீட்டைப் பற்றி இல்லை".

"ஆனால் எனக்கு ரெண்டும் வேற இல்லை ஜீவித்யா".

"இப்பவும் நீங்க உண்மையை பேசலை அண்ணா" அவளால் என்ன செய்ய முடியும் என்றே தெரியவில்லை. ஜீவித்யாவின் குரலில் வருத்தத்தைக் கண்டவன்,

"இப்போ உனக்கு என்னதான் தெரியணும் ஜீவித்யா. சரி சொல்லுறேன் கேட்டுக்கோ, எனக்கு ஹேமாவை ரொம்ப பிடிக்கும். அவளை மட்டும்தான் பிடிக்கும், நான் அவளை விரும்புறேன். ஆனால் என்னால் அதை அவ கிட்ட சொல்ல முடியாது".

"ஏன்?" அவளுக்கு ஆத்திரமாக வந்தது.

"நீயும் புரியாமல் பேசாதே ஜீவித்யா. முதலாவது அவளுக்கும் எனக்கும் இருக்க எக்கனாமிக்கல் லெவல், அவ ஆடி கார்ல வரா, நான் ஸ்விப்ட் தான் வச்சு இருக்கேன்" படபடத்தான்.

"ஒரு காரில் உங்க வாழ்க்கையை தீர்மானிக்கறீங்களா" கோபமாக கேட்டாள்.

"ம்ச்... அது மட்டும் இல்லை. அடுத்தது நம்ம குடும்ப சூழல். அவ தனியா சுதந்திரமா இருந்தவ, இங்கே அதேபோல் இருக்க முடியாது. இவை எல்லாம் விட எனக்கு வரப்

போறவள், எனக்கு பிடித்தவளாக இருப்பதை விட, என் அம்மாவுக்கு பிடித்தவளாக இருக்க வேண்டும் என்று நினைக்கிறேன்.

"என் மனைவி என் அம்மாவை நன்றாக பாத்துக்கணும், அவங்களுக்கு பேச்சு துணைக்கு இருக்கணும், வீட்டை நிர்வாகம் செய்யணும் இப்படி நிறைய இருக்கு ஜீவித்யா.....", அவன் பேச்சை முடிக்கவில்லை,

அதற்குமுன் ஜீவித்யா குறுக்கிட்டாள். "நிப்பாட்டுங்கண்ணா..., நீங்க உங்களுக்கு மனைவியை தேடறீங்களா இல்லை வீட்டு நிர்வாகத்துக்கு ஆள் எடுக்கறீங்களா? உங்ககிட்டே இருந்து இதை நான் எதிர் பார்க்கலை. உங்களுக்கு இப்படி ஒரு விருப்பம் இருக்கு என்றால் அதை ஹேமா கிட்டே பேசிப்பாருங்களேன்.

"அவளால் கண்டிப்பாக மாற முடியும். உங்க அன்புக்கு அவளை மாற்றும் சக்தி இருக்குன்னு நீங்க ஏன் புரிஞ்சுக்க மாட்டேங்கறீங்க?" ஆற்றாமையாக கேட்டாள்.

"இல்லை ஜீவித்யா, அவளால் அது முடியாது. உதாரணத்துக்கு அன்னைக்கு என் அம்மாவுக்கு உடம்பு சரியில்லை அவங்க கூட இருந்து கவனிச்சுக்கத்தான் வரலன்னு சொன்னேன். அதுக்கு அவ என்ன சொன்னா, நீங்க ஏன் கவனிக்கணும் ஒரு ஆள் வச்சுக்கலாமேன்னு சொன்னா.

"நான் இதை குறையா சொல்லலை ஜீவித்யா. அது அவளோட இயல்பு, வளர்ந்த சூழல் அப்படி. இப்போ எல்லாத்தையும் புதுசா மாத்தணும்னா அது ரொம்பவே கஷ்டம்...", கொஞ்சம் இடைவெளி விட்டான். அவள் பதில் சொல்லாமல் போகவே தொடர்ந்தான்.

"அவளை கஷ்டப்படுத்த நான் விரும்பலை. அவ என்னை கல்யாணம் செஞ்சுகிட்டா அவ அவளா இருக்க முடியாது. அவளோட அந்த குழந்தைத்தனம் மொத்தமும் தொலைஞ்சு போய்டும். என்னால் அப்படி அவளை பாக்க முடியாது

வேண்டாம்", அவன் சொல்லவே ஜீவித்யா உறுதியாக சொன்னாள்,

"உண்மை காரணம் இது இல்லை. நீங்க உங்க மனசுக்குள் என்ன இருக்கிறது என்று தெளிவா சொல்லுங்க" ஜீவித்யா இப்படி கேட்கவும் ஒரு நிமிடம் பரத் அமைதி ஆனான்.

இறுதியில் ஒரு முடிவுடன் தொடர்ந்தான். "ஆமா... இது மட்டும் காரணம் இல்லை. எனக்கு வரப்போகும் மனைவி வீட்டில் இருந்து என் தாயை கவனிக்க வேண்டும். அவள் வேலைக்கு செல்வதை நான் விரும்பவில்லை. என் சுயநலத்துக்காக ஹேமா ஏன் அவள் படிப்பை வீணாக்க வேண்டும்.

"என்னோட நேசம் எனக்குள்ளே போகட்டும். இதை இத்தோட நிறுத்திக்கலாம் ஜீவித்யா. அவளுக்கு சொல்லி புரியவை. நீ எதையாவது சொல்லி அவளை சம்மாளி ப்ளீஸ்", சொல்லிவிட்டு அவள் பதிலை கூட எதிர்பார்க்காமல் கிளம்பிவிட்டான்.

ஜீவித்யாவின் அலைபேசியில் இருந்த உரையாடல்களை அமைதியாக கேட்டுக் கொண்டு அமர்ந்திருந்த ஹேமாவை பார்த்தாள் ஜீவித்யா. அவள் முகம் குழப்பத்திலும் தெளிவில்லாமலும் இருந்தது. அன்று பேசியவை அனைத்தையும் தன் அலைபேசியில் பதிவு செய்து கொண்டுவந்து ஹேமாவிடம் கொடுத்திருந்தாள்.

அதைத்தான் இவ்வளவு நேரமாக கேட்டுக் கொண்டிருந்தாள் ஹேமா. "அண்ணாவை என்ன செய்யன்னு தெரியலை ஹேமா, அவங்க மனசுக்குள் நீ இருக்க..., ஆனா..." மண்டையை கீறிக் கொண்டாள்.

"நீ எதுவும் செய்ய வேண்டாம். இனிமேல் நான் பாத்துக்கறேன்" ஹேமா தீர்மானமாக சொன்னாள்.

"ஏய் என்ன செய்ய போற...?" கலவரமாகக் கேட்டாள்.

"உன் வேலை முடிஞ்சுது. இனிமேல் எல்லாத்தையும் நான் செய்யிறேன். என்ன செஞ்சால் அவன் என்னை

ஏத்துப்பான்னு எனக்கு தெரியும்.இப்படிச் சொன்ன தோழியை கொஞ்சம் திகிலாகவே பார்த்தாள் ஜீவித்யா.

# பகுதி - 14

ஹேமாவின் ஆட்டம் துவங்கி விட்டது. அதன் முதல் படியாக தினமும் இரவு பணிப் போதுமென்று எம்டியிடம் கேட்டு வாங்கினாள். அவசர சிகிச்சை, ஆப்பரேஷன் கேஸ் இருந்தால், காலையில் வந்து விடுவதாகவும், ஓபியை மாலையில் கவனிப்பதாக உறுதி அளிக்கவே, அவரும் ஒத்துக் கொண்டார்.

"ஹேமா நீ ஏன் தினமும் இரவு வேலை போதும்னு சொல்லுற. ஒரு வாரம் பார்ப்பதே கஷ்டமா இருக்கும்" ஜீவித்யா புரியாமலே கேட்டாள்.

"ஜீவி, பகல்ல எனக்கு நிறைய வேலை இருக்கு" அவள் யோசனையாக உரைக்க,

"பகல்ல நிறைய வேலை இருக்கா. ஹேமா வேண்டாம் பரத்தை ஹாஸ்பிட்டலில் வைத்து ரொம்ப படுத்தாதே.அவருக்கு இங்கே ரொம்ப மரியாதை இருக்கு", தயக்கமாக சொன்னாள்.

"ஹையோ..... நீ நினைக்கிறமாதிரி அவன் கிட்டே எனக்கு எந்த வேலையும் இல்லை. இது வேற, நீ அவனோட அட்ரஸ் கொஞ்சம் சொல்லு", சாதாரணமாக கேட்டாள்.

"ஹேமா அப்போ நீ அவங்க அம்மாவை படுத்த போறியா. வேண்டாம் அவங்க இதெல்லாம் தாங்க மாட்டாங்க. உன் விளையாட்டை எல்லாம் இங்கேயே மூட்டை கட்டி வை",  சீரியஸாக சொன்னாள்.

"அப்போ நீயும் என்னை குடும்ப பொண்ணா நினைக்கலையா ஜீவி" கலக்கமாக கேட்டாள்.

சட்டென எழுந்து அவள் அருகில் வந்தாள். "ஹேமா, இப்படி லூசு மாதிரி உளறக் கூடாதுன்னு உன்கிட்டே தவுசண்ட் டைம் சொல்லிட்டேன். எனக்குமே அண்ணா சொன்னதில் எந்த தப்பும் இருப்பது  மாதிரி தெரியலடி. நான் அவரை சமாதானம் செய்தது உனக்காகத்தானே தவிர எனக்குமே

கொஞ்சம் பயம்மா இருக்குடி" அவள் தலையை தோளை அழுத்தியவாறு சொன்னாள்.

"நான் கேட்டதுக்கும் நீ சொன்னதுக்கும் அப்படி ஒண்ணும் வித்தியாசம் தெரியலையே ஜீவி" இன்னும் அவள் தெளியவில்லை.

"வித்தியாசம் இருக்கு, நானும் அவரோட கருத்தை ஒத்துக்கறேன்னு சொன்னது உன் வசதியை இல்லை. உன் குணத்தை, பழமைவாதியான அவங்களோட, உன்னோட குழந்தைத் தனம் ஒத்துக்குமா. நீ உன் சுயத்தை இழந்துட்டா, என் பயமும் அவனோட பயமும் அதுதான்", தெளிவாக்க முயன்றாள்.

"இல்ல ஜீவி, என்னால் இதை ஒத்துக்க முடியாது. லண்டனில் இருந்த ஹேமாவுக்கும் இங்கே இருக்கும் ஹேமாவுக்கும் உனக்கு வித்தியாசம் தெரியலையா. உன்னோட பேச்சை கேட்டு நான் மாறலையா. எனக்கு அவனோட காதல் கிடைத்தால் கண்டிப்பா என்னால் எல்லாவற்றையும் எதிர் கொள்ள முடியும்..." பிள்ளையென அடம் பிடித்தாள்.

"ஹேமா உனக்கு எப்படி சொல்லி புரிய வைக்கவென்று எனக்கு தெரியலை" அவள் நிஜம்மாகவே குழம்பினாள்.

"உனக்கு நான் ஒரு உறுதிமொழி வேண்ணா தரேன் ஜீவி, என்னால் எல்லாத்தையும் சம்மாளிக்க முடியும். அப்படி என்னால் முடியலன்னா நான் திரும்பவும் லண்டனுக்கே போய்டுறேன்", குரலில் ஏதோ ஒரு உறுதி.

"ஹேமா, உன்னை இனிமேல் நான் லண்டனுக்கு அனுப்புவதாக இல்லை.உன்னால் முடியும்னு நான் நம்புறேன் ஹேமா. உனக்கு என்ன உதவி வேண்ணாலும் நான் செய்யிறேன்" அவளும் அவளுக்கு துணையிருக்க முயன்றாள்.

"அப்படின்னா எனக்கு இப்போ ஒரே ஒரு ஹெல்ப் தான் வேணும்... என்னை எப்படியாவது பரத்தின் வீட்டில் ஏதாவது சொல்லி இன்ட்ரோ பண்ணி விடு, அதுவும் பரத்துக்கு

தெரியாமல்..." ஜீவித்யா, ஹேமாவின் முடிவை மாற்ற முயலவில்லை அவள்.

"என்னால் முடியும் ஹேமா. கண்டிப்பா நான் செய்யிறேன்", அரை மனதாக சம்மதித்தாள்.

அவளது தயக்கம் ஹெமாவுக்குப் புரிந்தது. "ஜீவி, என்னால் பரத்தை தவிர வேறு யாரையும் மனசால் நினைக்க முடியலை. லண்டன்ல இருந்த ஹேமாவால் கண்டிப்பா முடிந்திருக்கும், ஆனா இங்கே இருப்பது புது ஹேமா.

"இங்கே வந்த அன்று நீ சொல்லாமலே அவனை நான் கண்டு பிடித்தேன் என்றால் அவனை எந்த அளவு மனதில் உருவாக படுத்தி வைத்திருக்கிறேன் என்று உனக்கு புரியுதா.அவனிடம் சீண்டி விளையாடுவது, அவனை எதற்கும் எதிர் பார்ப்பது எல்லாம் அதனால் தான். உனக்கு இப்போவாவது என் மனசு புரியுதா ஜீவி..." தன் மனதை திறந்தாள்.

"ஹேமா... இல்லை இதற்குமேல் உன்னை தடுக்க நான் தயாராக இல்லை. ஆனால் ஒன்று, உன் இயல்பை அவங்க முன்னாடி மறைக்காதே. எதுவாக இருந்தாலும் நீ நீயாக இருக்கணும் என்ன நான் சொல்ல வரது உனக்கு புரியுதா" அவள் கேட்க,

"எனக்கு நடிக்க வராது ஜீவி. கண்டிப்பா என்னை அவங்களுக்கு புரிய வைப்பேன்".

"எனக்கு இது போதும். சரி எப்போ அவங்க வீட்டுக்கு போகலாம்.".

"இப்போவே போவதாக இருந்தாலும் எனக்கு ஓகே தான். ஆனால் எனக்கு பரத்தை பார்த்தே ஆகணும். அதனால் நீ உன் வேலையை கொஞ்சம் முடி நாம பிறகு, இல்லை நாளைக்கு அவனோட வீட்டுக்கு போகலாம்" இருக்கையில் இருந்து எழுந்தாள்.

"உன் கிட்ட ஒரே ஒரு விஷயம் மட்டும் சொல்லுறேன். அவங்க முன்னாடி பரத்தை அவன் இவன்னு சொல்லாதே

அவங்க தப்பா நினைக்க போறாங்க".

"அதெல்லாம் முடியாது போ..., எனக்கு எப்படி வருதோ அப்படித்தான் கூப்பிட முடியும்..." சொல்லிவிட்டு அவள் பதிலை கேட்காமல் சென்று விட்டாள்.

இது எங்கே போய் முடியுமென்ற கவலை இருந்தாலும் சரியாக போகவேண்டுமே என்ற பிரார்த்தனையும் இருந்தது அவள் மனதில்.

ஹேமா நேராக பரத்திடம் சென்றாள். முகத்தில் எந்த மாறுதல்களையும் காட்டவில்லை. அவன் பேசியது எதையும் கேட்டதாக சொல்லவும் இல்லை.

"எக்ஸ்கியுஸ்மீ......", கதவை தட்டிவிட்டு அவன் பதில் சொல்லும் முன்பே அவன் அறைக்குள் நுழைந்தாள்.

"வா ஹேமா", அவனும் ரொம்ப இயல்பாக வரவேற்றான்.

"சாப்டியா பரத்", எதற்கு இந்த கேள்வியென்று புரியாமல், "ஆச்சு நீ", சந்தேகமாகவே சொன்னான்.

"நானும் அதெல்லாம் முடிச்சுட்டேன். சரி இப்போ எங்கேயாவது வெளியே போகலாமா...?".

"வெளியே போகவா. உனக்கு டியூட்டி இல்லையா?".

"இல்லை நான் இன்னைக்கு லீவ். வீட்டில் ரொம்ப போர் அடிச்சது அதான் ஜீவியை பாத்துட்டு போகலாம்னு வந்தேன்", அவனையே பார்த்தவாறு சொன்னாள்.

அவன் கொஞ்சம் அதிர்ந்தான். 'நான் பேசியது அனைத்தையும் ஜீவித்யா சொல்லியிருப்பாளோ...' மனதுக்குள் சின்னதாக நெருடல். ஆனாலும் அப்படி கேட்டிருந்தால் இப்படி இயல்பாக அவளால் பேச முடியாது என்று தன்னையே சமாதானம் செய்தான்.

"எனக்கு இன்னைக்கு வேலை இருக்கே", அவன் அவளை தவிர்க்க சொன்னான்.

"அப்போ வர முடியாது. சரி நான் கிளம்புறேன்",. சொல்லிவிட்டு கதவின் அருகில் சென்றாள். அவள் செல்லவும் ஒரு நிம்மதி பெருமூச்சை அவன் வெளியேற்ற, அது பாதியில் நின்றது அவள் சொன்ன வார்த்தையால்.

"ஆனால் உனக்கு இப்போ வேலை முடிஞ்சு வீட்டுக்கு கிளம்புறன்னு எனக்கு தெரியும் பரத். வர விருப்பம் இல்லையென்றால் அதை நேரடியாக சொல். அது எதுவாக இருந்தாலும்", வார்த்தைகளை வீசிவிட்டு அவன் பதிலை எதிர் பார்க்காமல் சென்றாள்.

அவள் பின்னால் போகாதே என்று அவன் மனம் போராட, அதையும் தாண்டி காதல் மனம்  வென்றது. அவளை பின் தொடர்ந்து வெளியில் வந்தான். வந்த பிறகுதான் எடுத்த முடிவு நினைவில் வர திரும்பி அறைக்கு சென்றான்.

சுழல் நாற்காலியில் அமர்ந்தவனின் சிந்தை அவள் சொல்லி சென்ற வார்த்தைகளிலேயே நின்றது. எதுவாக இருந்தாலும் நேரடியாக சொல் என்று சொன்னது காதில் ஒலித்தது. 'அப்படியென்றால் அவளிடம் நேரடியாக பேசிவிட வேண்டியதுதான்'.

தனக்குள் எண்ணினாலும், 'என் அப்பன் குதிருக்குள் இல்லையென்று', என்னால் உன்னை காதலிக்கவோ கல்யாணம் செய்யவோ முடியாது என்று எப்படி சொல்ல. தலை வலியே துவங்கி விட்டது அவனுக்கு.

இன்னும் இங்கேயே இருந்தால் தலை வலிதான் மிச்சமாகும் என்பது புரிய வேகமாக வெளியேறினான்.

ஜீவித்யா, ஹேமாவை அழைத்துக் கொண்டு பரத்தின் வீட்டுக்கு சென்று கொண்டிருந்தாள். ஹேமாவை என்ன சொல்லி அங்கே அறிமுகம் செய்வது எப்படி இவளை அங்கே விடுவது என்பதில் அவனுக்கு பயங்கர குழப்பமே இருந்தது.

தனத்தை இவனுக்கு நன்றாக தெரியும்தான். எவ்வளவோ முறை அவர்கள் வீட்டுக்கும் சென்று இருக்கிறாள்.அவருக்கு

அவள் இன்னொரு மகள்தான். ஆனால்..., இதுவரை தோழி என்று யாரையும் அழைத்து சென்றது கிடையாதே...

இதை இவளிடம் சொன்னால் அடிக்க வருவாளே என்ற யோசனையுடனே காரை செலுத்தினாள். கார் நத்தை வேகத்தில் ஊர்ந்தது. அவள் அருகில் அமர்ந்து ஹேமா பொறுமையை இழந்தாள்.

"ஜீவி..., இந்த சென்னையில் என்னைக்காவது ஒரு நாள்தான் ரோட் ப்ரீயா இருக்கும். அந்த நேரத்தில் கூட காரை இப்படி ஓட்டினால் எப்படி? நான் இங்கே பார்த்த சில கல்யாண ஊர்வலம் கூட இதைவிட பாஸ்ட்டா போச்சு. நீ என்னன்னா, வண்டியை உருட்டிட்டு இருக்க. கொஞ்சம் வேகமாத்தான் போயேன்", அவளை விரட்டினாள்.

'என்னை சிக்கவச்சு வேடிக்கை பார்க்க உனக்கு அவ்வளவு ஆசையா?' மனதுக்குள் எண்ணியவாறே அவளை பார்த்தாள்.

"என்ன அப்படி பாக்குற", புரியாமல் கேட்டாள்.

"உனக்கு கொஞ்சம் கூட பயமே இல்லையா?" இந்த கேள்வியை அவளிடம் கேட்பது எவ்வளவு அபத்தமென்பது அவளுக்கே தெரியும். லண்டன் பிரசிடெண்டாகவே இருந்தாலும், ஹாய் சொல்லி உரையாடும் திறன் படைத்தவள் அவள்.

"நாம என்ன ஸ்மகளிங் பண்ணவா போறோம். அவங்களை மீட் பண்ணத்தானே போறோம் எதுக்கு பயம்" புரியாமல் கேட்டாள்.

"கொள்ளை அடிக்க யாரையும் பாக்க வேண்டாமே", வாய்க்குள் முணுமுணுத்தாள்.

"என்ன சொல்லுற கொஞ்சம் சத்தமாத்தான் சொல்லேன். உன் மனசுக்குள் என்னதான் ஓடுது. ஏன் இப்படி தயங்குற அதை சொல்லு முதல்ல".

"பரத் அண்ணா இல்லாதப்போ அவங்களை போய் பாக்கப் போறோம். அதைவிட இப்போ நீ என் கூட வர, உன்னை

என்னன்னு நான் அறிமுகம் செய்யட்டும். என் ப்ரண்ட்ன்னு சொன்னா கூட, என்ன இதுன்னு அவங்க யோசிக்க மாட்டாங்க?

"நீயோ நானோ வந்த விஷயம் பரத்துக்கு தெரியாமல் இருக்கணும் வேற, இதில் அவங்க ஒத்துழைப்பு இல்லாமல் நம்மால் எதுவும் செய்ய முடியாது. நாம திடீர்ன்னு போய் நின்னு பேசிட்டு, நாங்க வந்ததை பரத் கிட்டே சொல்லாதீங்கன்னு சொன்னால் நம்மை பயித்தியம்னு நினைக்க மாட்டாங்க.

"இதைவிட பெரிய கொடுமை அது ஏன் அப்படின்னு அவங்க கேள்வி கேட்டால் என்ன சொல்லுறது. இதோ இருக்காளே இவ உங்க மகனை லவ் பண்ணுறா, அதுக்கு உங்க மகன் ஒத்துக்க மாட்டேங்கறான்,

"அதான் உங்களை காக்கா புடிக்க வந்திருக்கோம்னு உண்மையை அவங்க கிட்டே சொல்ல முடியுமா", அவள் அடுக்கிக் கொண்டே போக, ஹேமா எவ்வளவு முடியுமோ அவ்வளவு கோபமாக அவளைப் பார்த்தாள். அதை கவனித்தாலும் கண்டு கொள்ளாமல் தொடர்ந்தாள்.

"ஹல்லோ என்ன உண்மையை சொன்னால், என்னை இப்படி முறைச்சு பாத்தால் அது உண்மை இல்லைன்னு ஆயிடுமா. இதில் ஏன் இப்படி கல்யாண ஊர்வலம் போறன்னு என்கிட்டே கேள்வி வேற.

"மண்டையில் கொஞ்சமாவது மூளை இருந்தால் இதையெல்லாம் யோசிக்க தோணும். எங்கே அதான் பரத் பரத் ன்னு ஜெபம் செஞ்சால். அதான் நான் இதையெல்லாம் யோசிச்சுட்டு வரேன் புரியுதா?" விடாமல் சொன்னாள்.

"ஓஹோ..., சரி..., நீ இப்படியே கிளம்பு நான் பாத்துக்கறேன். சரியான தொடை நடுங்கியா இருக்கியே" அவள் கேட்க, "எனக்கென்ன பயம்..., வா போகலாம்..." காரை வேகமாக விரட்டினாள்.

காரை அவன் வீட்டின் முன்னால் நிறுத்திவிட்டு அழைப்பு மணியை ஒலிக்கவிட, சிறிது நேரத்தில் பரத்தின் தாயே

வந்து கதவை திறந்தார்.

ஜீவித்யாவைப் பார்த்தவர், "அம்மாடி..., உள்ளே வா..., என்ன இன்னைக்குதான் இந்த அம்மாவை பாக்க நேரம் கிடைத்ததா? சொல்லிவிட்டு, "நீயும் வாம்மா", ஜீவித்யாவின் பின்னால் நின்ற ஹேமாவையும் அழைத்தார்.

ஹேமா சத்தியமாக இப்படி ஒரு உருவத்தை பரத்தின் தாயாக கற்பனையே செய்யவில்லை. தலை முழுவதும் பால் வெள்ளைமுடி, ஒல்லியான தேகம். அவளை ஒத்த உயரத்தில் இருந்தார். தேகம் முழுவதும் கொஞ்சம் சுருக்கம் கூட விழுந்து இருந்தது.

அவ்வளவு கம்பீரமான பரத்துக்கு இப்படி ஒரு அம்மாவா. உழைத்து ஓடாக தேய்ந்தார் என்று சொன்னபொழுது கூட இப்படி ஒரு உருவத்தை எதிர்பார்க்கவில்லை அவள்.

அந்த திகைபுடனே அவரை இமைக்க மறந்து பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் பார்வையை அவரும் உணர்ந்துகொண்டார்.

"என்னம்மா பரத்தோட அம்மா இவங்களா அப்படின்னு நினைக்கிறியா", அவள் மனதை அறிந்து கேட்டார்.

ஜீவித்யா பதில் சொல்லும் முன்பே, "ஆமாம்மா அவ்வளவு மேன்லியான ஆளோட அம்மா..." முடிக்காமல் ஜீவியைப் பார்க்க அவளோ 'என்னடி இது', என்ற பார்வையை அவளை நோக்கி வீசினாள்.

"உங்க உடம்பை உருக்கி உங்க பையனை உருவாக்கி இருக்கிங்கன்னு எனக்கு புரியுதும்மா", அதையும் சேர்த்தே சொன்னாள்.

அவளது வெளிப்படையான பேச்சை கொஞ்சம் ரசித்தாரோ. புன்னைகை முகமாக அவளை பார்த்தார். ஜீவி இது யாரும்மா...? லண்டன்ல உன்னோட வேலை பாத்தவங்களா? பார்த்தால் வெளிநாட்டு பொண்ணு மாதிரி இருக்கா..." ஜீவித்யாவிடம் கேட்டவர்,

"உன் வாயிலிருந்து வர தமிழ் சின்ன பிள்ளைங்க பேசுறது மாதிரி இருக்கு", அவள் அமர்ந்திருந்த சோபாவின் மறு ஓரம் அமர்ந்தவாறு கேட்டார்.

இதை கேட்டதும் கொஞ்சம் அவள் முகம் வாடியது. "எங்க அப்பா, அம்மா, பாட்டி, தாத்தா எல்லோரும் இந்தியா தான்.நான் பிறந்தது வளர்ந்தது எல்லாம் லண்டன். தமிழ் நல்லா பேசுவேன். உங்களுக்கு என்னை பிடிக்கலையா", திடீரென கேட்டாள்.

'ஹையோ இவ ஏன் இப்படி ஓவர் எமோசனல் ஆகுறா. இது எங்கே போய் நிக்கும்னு தெரியலையே', எண்ணியவாறே கலக்கமாக இருவரையும் பார்த்தவாறே இருந்தாள்.

"இதில் பிடிக்காமல் போக என்னம்மா இருக்கு. எனக்கு உன்னை பார்த்தால் சின்ன பிள்ளை மாதிரிதான் தோணுது. சின்ன பிள்ளைங்களை பிடிக்காதவங்க யாராவது இருப்பாங்களா?" பாசமாக உரைக்க, அவரை நெருங்கி அமர்ந்து கொண்டாள்.

"சரி நீங்க இருங்க நான் காபி எடுத்துட்டு வாறேன்", அவர் உள்ளே செல்ல போனார்.

"அம்மா அதெல்லாம் எதுவும் வேண்டாம். நீங்க உக்காருங்க", என்று சொல்லி அவரை அமர வைத்தாள் ஜீவித்யா.

"சரி..., தண்ணியாவது குடிங்க..." எழுந்து சென்றவர், ஜீவித்யாவை 'வா...' என்பதுபோல் அழைத்துச் சென்றார்.

"ஹேமா..., ஒரு நிமிஷம்..." அவர் பின்னால் ஓடினாள்.

" அம்மா, தனியாவா இருக்கீங்க..." எதையாவது கேட்க வேண்டுமே எனக் கேட்டாள்...

"இல்லம்மா வீட்டு வேலைக்கு ஒரு அம்மா வருவாங்க. ஆனாலும் சமையல் நானே செஞ்சால்தான் எனக்கு திருப்தி அவங்க இன்னைக்கு சீக்கிரமே வந்துட்டு போய்ட்டாங்க. இனிமேல் சாயங்காலம்தான் வருவாங்க. சரி

நீ சொல்லு என்ன விஷயமா வந்து இருக்க. உன் கூட வந்துருக்க பொண்ணு யாரு", கேள்விகளை அடுக்கினார்.

"இல்லமா சும்மாதான்.......", இழுத்தாள்.

"நீ மட்டும் தனியா வந்திருந்தால் நான் இந்த கேள்வியே கேட்டிருக்க மாட்டேன். அதுவும் பரத் இல்லாத நேரம் வந்து இருக்கீங்கன்னா அவனுக்கு தெரியாமல் வந்து இருக்கீங்கன்னு தெரியுது.

"அப்படி சொல்லி இருந்தால் கண்டிப்பா அவன் எனக்கு உடனே போன் செஞ்சு சொல்லி இருப்பான். இப்போ சொல்லு, எனக்கு ஓரளவு புரியுது அது உன் வாயாலேயே வரட்டும்", அவர் சாதாரணமாக கேட்கின்றாரா, இல்லை கோபமாக கேட்கின்றாரா என்பதை அவர் குரலை வைத்தோ முகத்தை வைத்தோ அவளால் கணிக்க முடியவில்லை.

அவருக்கே சந்தேகம் வந்த பிறகு மூடி மறைப்பதில் எந்த பயனும் இருக்க போவதில்லை என்பது அவளுக்கு புரிந்தது. "அம்மா அவ என் குளோஸ் ப்ரண்ட். நான் லண்டன் போயிருந்த அப்போ இருந்து எனக்கு நல்ல பழக்கம். ரொம்ப நல்ல பொண்ணு. நீங்க சொன்ன மாதிரி குழந்தை மாதிரிதான்.

"அவ மகப்பேறு சிறப்பு மருத்துவ படிப்பு முடிச்சு இருக்கா. அவ குழந்தையா இருக்கும்போதே அவளோட அம்மா இறந்துட்டாங்க. பிறகு அவளோட பாட்டிதான் அவளை வளத்தாங்க, இப்படி துவங்கி அவள் அநாதை ஆனது, இந்தியா வந்தது இப்பொழுது தன்னுடன் மருத்துவமனையில் வேலை செய்வது அங்கேயே இருப்பது வரை அனைத்தையும் சொல்லி முடித்தாள்.

"உங்களை பாக்கணும்னு சொன்னா அதான் கூட்டி வந்தேன்", கொஞ்சம் தயக்கமாக சொன்னாள்.

"இதில் நடுவில் எதையோ சொல்லாமல் விட்டுட்ட மாதிரி இருக்கு", அதே புரியாத குரலில் கேட்டார்.

இதை எப்படி சொல்லவென்று அவனுக்கு சத்தியமாக புரியவில்லை. 'இது நான் பேசவேண்டிய விஷயமே கிடையாதே. பரத் சொன்னால்தான் சரியாக இருக்கும். ஆனால் அவன் முடியாது என்று சொல்லிவிட்ட நிலையில் இந்த ஹேமாவின் பேச்சை கேட்டு தான் இங்கு வந்தது சரியா', என்று தனக்குள் புலம்பியவாறு நின்றிருந்தாள்.

"ஆன்டி நான் சொல்லவா அதை", கேட்டவாறு அங்கே வந்து நின்றாள் ஹேமா.

"சொல்லும்மா, யார் சொன்னால் என்ன எனக்கு விஷயம் தெரியணும் அவ்வளவுதான்..., வாங்க ஹாலுக்கு போகலாம்..." ப்ரிஜ்ஜில் இருந்து ஜூசை எடுத்துக் கொடுத்தவாறு, ஹாலுக்கு கூட்டி வந்தார்.

ஹேமாவை ஆதரவாக பார்த்தாள் ஜீவித்யா. ஹேமா தனத்தின் அருகில் சென்று அமர்ந்தாள். "ஆன்டி நான் பரத்தை விரும்புறேன். பரத், உங்ககூட சரிவராதுன்னு சொல்லிட்டான். அவனும் என்னை விரும்புறான் எனக்கு அது நல்லா தெரியும். சாரி நான் சொல்ல வந்ததை சரியா சொன்னேனா என்று தெரியலை", சொல்லிவிட்டு கொஞ்சம் பதட்டமாகவே அவரை பார்த்தாள்.

"என் கூட சரி வராதுன்னு சொன்னானா அது ஏன்", புரியாமல் ஜீவியைப் பார்த்தார்.

"அம்மா இவ உங்களை கவனிச்சுக்க மாட்டா, உதவியா இருக்க மாட்டா, மதிக்க மாட்டான்னு அவன் நினைக்கிறான். அவளோட வசதியும் அவனோட தயக்கத்துக்கு ஒரு காரணம்", விளக்கினாள்.

"என்னை கவனிக்க, உதவி செய்ய என்ன இருக்கு. இது அவனோட வாழ்க்கை. அவனுக்கு பிடிச்சவளோட வாழாமல் என்னை நினைச்சுட்டே இப்படி தனி மரமா நிக்கிறானேன்னு நானும் கவலை படாத நாளே இல்லை.

"இப்போ அவனுக்கு விருப்பம் இருந்தும் நான்தான் அவனுக்கு தடையா இருக்கிறேனா", கவலையாக கேட்டார்.

"ஆன்டி அப்படி சொல்லாதீங், உங்கமேல அவன் இவ்வளவு உயிரா இருக்குறான். அதை நினைத்து சந்தோசப் படாமல் இப்படி சொல்றீங்களே. எனக்கு இந்த பாண்டிங் பாத்து பொறாமையா இருக்கு", அவள் சொல்லவும்,

"இப்படி புரிஞ்சுகிட்ட ஒரு புள்ளையை அவன் ஏன் வேண்டாம்னு சொல்லுறான். நீங்க கவலை படாமல் போங்க நான் பாத்துக்கறேன்", அவர் சம்மதத்தை சொல்லாமல் சொன்னார்.

ஹேமா புரியாமல் நிற்க, "ஹேமா அவங்க உன் கல்யாணத்துக்கு மறைமுகமா சம்மதம் சொல்லிட்டாங்க. நீ ஏன் இப்படி மரம் மாதிரி நிக்கிற", அவள் காதில் கிசு கிசுத்தாள்.

"அப்படியா.?" சந்தோஷமாக கேட்டவள், "தேன்க் யூ ஆன்டி" சொல்லிவிட்டு அவர் கன்னத்தில் முத்தமிட்டு , "ஜீவி..., இஸ் இட் ஓகே...?" சத்தமாக கேட்டாள்.

"அதான் கத்தி, காரியத்தையே கெடுத்தாச்சே. இன்னும் என்ன செய்ய போற..., லூசு...", அவள் இன்னும் அதே குரலில் அமைதியாகவே சொன்னாள்.

கூடவே..., அவள் செய்கையை ஜீவித்யா அதிர்ச்சியாக பார்க்க, தனமோ சாதாரணமாக எடுத்துக் கொண்டார்.

"அம்மா அவளுக்கு என்ன செய்யிறோம்னு தெரியலை", அவள் சங்கடமாக அவருக்கு புரிய வைக்க முயன்றாள்.

"இதில் நீ சங்கட படுற அளவுக்கு ஒண்ணும் இல்லை. இந்த காலத்தில் காதலிச்சுட்டு வீட்டுக்கு தெரியாமல், பெத்தவங்களை மதிக்காமல் எவ்வளவோ கல்யாணங்கள் நடக்குது.

"இதோ இப்போ ஹேமாவையே எடுத்துக்கோ அவளுக்கு இருக்கும் வசதிக்கும் படிப்புக்கும் என் பையன் இப்படி சொன்னதும் சரிதான் போடான்னு சொல்லாமல் என் சம்மதத்தை கேக்க வந்து இருக்காளே.

"எனக்கு இதுதான் பெருசா இருக்கு. அவ அவளாவே இருக்கட்டும். எனக்கு வேண்டி அவளோட இந்த சின்ன சின்ன செய்கைகளை மாத்த ஆரம்பிச்சா சீக்கிரமே சலித்து போய்டும்.

"பரத்தும் இதுக்குதான் பயந்திருப்பான். இவ சின்ன புள்ளை மாதிரி எதையாவது செய்வா அம்மா எப்படி சம்மாளிப்பாங்களோன்னு", அவர் நீளமாக சொல்ல,தாயும் மகனும் எப்படி ஒரே மாதிரி சிந்திக்கிறார்கள் என்ற உணர்வே ஹேமாவுக்கும், ஜீவித்யாவுக்கும் எழுந்தது.

"கண்டிப்பா பரத் பயந்த மாதிரி எதுவும் செய்யமாட்டேன் ஆன்டி. உங்ககிட்டே டெய்லி வந்து சமையல் கத்துக்கறேன். உங்ககூடவே கொஞ்சநாள் பழகுறேன்.இது என்னோட சின்ன ஆசை... அதுவரை நீங்க பரத் கிட்டே நான் இங்கே வரதை நீங்க சொல்ல கூடாது", அவள் கெஞ்சலாக கேட்டாள்.

"எதுக்கும்மா அதெல்லாம். இங்கே சமையலுக்கு ஆள், வீட்டு வேலைக்கு ஆள் எல்லாம் இருக்காங்க. நீங்க உங்களுக்குள் சந்தோசமா இருந்தால் போதும். எனக்கு உடனே ஒரு பேரனோ பேத்தியோ பெத்து கொடுத்துடுங்க. நான் அவங்களை பாத்துப்பேன்", அவர் சாதாரணமாக சொன்னார்.

"இல்ல ஆன்டி பரத் எனக்காக என்னை ஏத்துக்கணும். உங்க வார்த்தைக்கு அவர் கட்டுப் படுவார் எனக்கு அது ரொம்ப நல்லா தெரியும். உங்களுக்கு என் மனசு புரியுதா?" ஒரு பெண்ணுக்கே உரிய நுண்ணிய உணர்வு அது. அதை தனம் சரியாக புரிந்து கொண்டார்.

தன் நேசத்துக்கு உரிய அங்கீகாரம் வேண்டும் என அவள் நினைப்பது புரிய, "உன் உணர்வு எனக்கு புரியாமல் போகுமா. உன் விருப்பம் என்னவோ அது படியே செய்யலாம் சரியா", ஹேமாவுடன் கூட்டணி வைக்க சம்மதித்தார்.

"அம்மா வேண்டாம் இவகூட சேராதீங்க. பிறகு பரத்தை என்ன பாடு படுத்த போறான்னு உங்களுக்கு தெரியாது", ஜீவித்யா இடையில் புகுந்தாள்.

"அதெல்லாம் நாங்க பாத்துக்கறோம் நீ உன் வேலையை பாரு", சலுகையாட தனத்தின் தோளில் சாய்ந்தவாறு அவளுக்கு அழகு காட்டினாள்.

ஜீவித்யாவுக்கு இன்னுமே அங்கே நடப்பதை நம்புவதற்கு கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருந்தது. தனத்தின் அமைதியையும் விலகலையும் நான் தவறாக நினைத்து விட்டேனா. இல்லை ஹேமாவிடம் உரிமை உணர்வு அவருக்கு தோன்றி விட்டதா. எதுவாக இருந்தாலும் ஹேமா நன்றாக இருக்க வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கியது.

அவளது பார்வையில் தனம் என்ன உணர்ந்தாரோ, "என்னம்மா யோசிக்கிற...?", அவளை கலைத்தார்.

"இல்லமா எதுவும் இல்லை", அவள் சொன்ன தோரணையே எதுவோ இருப்பதை உணர்த்தியது.

"இல்ல..., என்னவோ சொல்ல வர..., ஆனா தயங்கற., என்னன்னு சொல்லும்மா..., அம்மாகிட்டே கேக்க என்ன தயக்கம்...?" அவளை தூண்டினார்.

"இல்லம்மா..., உங்களுக்கு வருத்தம் எதுவும் இல்லையே... அவ வெளிநாட்டில் வளந்தவ..." ஹேமாவை வைத்துக்கொண்டே அதை கேட்பது அவளுக்கு சங்கடமாகத்தான் இருந்தது. ஆனால்..., அவளுக்கு நிச்சயம் தெரிய வேண்டி இருந்தது. எனவேதான் கேட்டாள்.

"நேசத்துக்கு ஜாதி, மதம், நாடு, இனம் எல்லாம் தெரியாதுமா. உண்மையான நேசமும், விட்டுக்கொடுக்கும் பக்குவமும் இருந்தால், எந்த திருமணமும் தோல்வியில் முடியாது. இப்போ ஹேமாவை என் மகன் விரும்புவதை விட, இவ அவனை அதிகமாக விரும்புவது எனக்கு தெரியுது. இப்போ என்னோட ஒதுக்காததால் இரண்டு ஜீவன் பாதிக்கப் படும்னா அதை நான் ஏன் செய்யணும்.

"நானும் கொஞ்சம் மாறிக்கலாமேன்னு நினைத்தேன். நான் இவளோட சகஜமா இருந்தால் தானே என் மகன் இவளோட சந்தோசமா இருப்பான் அதனால்தான்", கொஞ்சம் விளக்கினார்.

"எனக்கு ரொம்ப சந்தோசம்மா... நீங்க இவளை ஏத்துக் கிட்டது. சரி அப்போ நாங்க கிளம்புறோம்", அவரிடம் விடை பெற்றாள். அவளுக்கு மருத்துவமனைக்கு செல்ல வேண்டி இருந்ததால் கிளம்ப முயன்றாள்.

"சரி போயிட்டு வாங்க".

"ஜீவி,  நீ காரை எடுத்துட்டு போ. நான் பிறகு வரேன்".

"ஹேய் நான் காரை எடுத்துட்டு போயிட்டால் நீ எப்படி வருவ?" தயங்கினாள்.

"ஆமா..., இந்த ஊரில் கால் டாக்ஸி கிடைப்பது அவ்வளவு கஷ்டமா. நீ போ நான் வந்துடுவேன்" அவளது தைரியம் தனத்துக்கு பிடித்தது.

"சரி", சொல்லிவிட்டு, ஹேமாவின் வாழ்க்கை இனி எந்தவித தடங்கலும் இல்லாமல் போகும் என்ற நம்பிக்கையுடன் வெளியேறினாள்.

# பகுதி - 15

ஹேமாவும் தனமும் தாயாக மகளாக மாறிக் கொண்டிருந்தனர். பரத் ஹாஸ்பிட்டல் வந்த பிறகு ஹேமா அவன் வீட்டுக்கு சென்று விடுவாள். சில வேளைகளில் அவனை ஹாஸ்பிட்டலில் வைத்து சந்தித்துவிட்டே செல்லுவாள்.

அவன் வீட்டுக்கு சென்று சமையல் கற்றுக் கொள்கிறேன் பேர்வழி என்று தனத்தை ஒரு வழி செய்து விடுவாள். அவர் முன்பு நல்ல பிள்ளை போல சரியாக செய்பவள் அவர் அந்த பக்கம் திரும்பியதும் உப்பையோ இல்லை தண்ணீரையோ அதிகமாக கலந்து விடுவாள்.

சாப்பிட அமரும் போது தனம்தான் குழம்பி விடுவார். "எல்லாம் சரியாகத்தானே போட்டோம். வயசாகுதுல அதான் ஒருக்கா போடுறேனா இல்லை ரெண்டு தடவை போடுறேனான்னு தெரிய மாட்டேங்குது" தன் போக்கில் பெரிதாக சிரித்து வைப்பாள்.

கூடவே, பெரிய மனது வைத்து, "விடுங்கம்மா நாம அடுத்த அட்டெம்ட்ல சரியா செஞ்சுக்கலாம்" அவள் அப்பாவியாக முகத்தை வைத்துக் கொண்டு சொல்லும் பொழுது அவரும் அதை அத்தோடு விட்டு விடுவார். ஆனாலும் அவளை கண்களை உருட்டி பார்த்து வைப்பார்.

என்ன குறும்பு செய்தாலும் கிளம்பும் வேளையில் அதை சொல்லிவிடுவாள். "அடிக்கழுத நாளைக்கு வா உன்னை என்ன செய்யிறேன் பாரு" மிரட்டினாலும் அடுத்தநாளும் அவள் செய்யும் வேலையை ரசிக்கவே செய்வார். தனக்கு மகள் இல்லாத குறையை ஹேமாவிடம் தீர்த்துக் கொண்டார் தனம்.

இதுவரை வாழ்க்கையில் துன்பத்தை எதிர்த்து போராடுவதிலும் மகனை வளர்ப்பதிலும் முனைந்திருந்த அவருக்கு சிரிப்பு என்ற ஒன்றே மறந்து, மறைந்து போயிருந்தது. அதை வெளிக் கொண்டு வந்தாள் ஹேமா.

இதைவிட அங்கே வீட்டு வேலை செய்ய வரும் பாட்டியை ஒருவழி செய்தே விடுவாள்.

அவருக்கு BP செக் செய்கிறேன் என்று உக்கார வைத்து சோதனை என்ற பெயரில் அவர் BP யை வேண்டுமென்றே எகிற வைப்பாள். இந்த வயதுக்கு மேல் சர்க்கரை வியாதி வந்துவிடும் என்று சீனி போடாமல் காப்பி கொடுப்பாள். அடுத்தநாள் அவர் வந்தவுடன் "பீ(bee) பாட்டி காபி வேணுமா", என்று கேட்டு அவரை அலற வைப்பாள்.

அவரது சுறுசுறுப்பை பார்த்து பீ (தேனீ ) பாட்டி என்று அவரை கிண்டல் செய்வாள். அதை அவர் கேட்டு முகம் அஷ்ட கோணலாக முகத்தை சுளிப்பார். இவள் சொல்லும் விளக்கத்தை கேட்டாலும், "அப்படி கூப்பிடாதீங்க டாக்டரம்மா நல்லாவே இல்லை. காதால கேக்கவே ஒரு மாதிரி இருக்கு அதென்ன ப்... சீ..... நான் சொல்ல மாட்டேன்", சின்ன பெண் போல் முறுக்கிக் கொள்வார்.

அவளை முதலில் பார்ப்பவர்கள் அவள் கல்லூரி படிக்கும் மாணவி என்றே சொல்லுவார்கள். அவள் டாக்டர் என்று சத்தியம் செய்தால் கூட யாரும் நம்ப மாட்டார்கள். தனத்தின் வீட்டில் அவ்வளவு அட்டகாசம் செய்வாள்.

அந்த வீடு முழுவதும் வலம் வந்தாலும் பரத்தின் அறை பக்கம் கூட போக மாட்டாள். அவன் அறைக்கு போவதாக இருந்தால் அது அவன் கையை பிடித்துக் கொண்டுதான் போகவேண்டும் என்று உறுதியாக இருந்தாள். குழந்தையும் குமரியும் கலந்த கலவை அவள்.

பரத் ஹேமாவுக்கு ஒரு மாதம் முழுவதும் இரவு பணி கொடுக்கப் பட்டிருப்பதை அவனும் அறிந்தே இருந்தான். ஏனென்று அவனுக்கு கேட்க ஆசைதான். அது, அத்தோடு போகாது மேலும் தொடர்ந்துவரும் என்று தோன்றவே கேட்காமல் இருந்தான்.

ஹேமா அவனை வந்து பார்ப்பவள் சும்மா இருக்க மாட்டாள். "பரத் இந்த டெனிம் ஷர்ட் உனக்கு ரொம்ப நல்லா

இருக்கு", அவள் இதழ்கள் மட்டுமல்ல பார்வையும் அதை அவனிடம் தயங்காமல் வெளிப்படுத்தும்.

அந்த வேளையில் அவனுக்குத்தான் அதை சாதரணமாக எடுக்க முடியாமல் மனம் படபடக்கும்.

"பரத்  தலையில் என்ன தூசி", கேட்டவாறே அவன் தட்டிவிட பார்க்கும் முன்னர் இவள் நெருங்கி வந்து தட்டி விடுவாள். அவளது சாதாரண தொடுகையில் இவனுக்கு உள்ளுக்குள் காய்ச்சல் அடிக்கும்.

"பரத் இந்தா இன்னைக்கு கோவிலுக்கு போயிட்டு வந்தேன் பிரசாதம் எடுத்துக்கோ", அவன் எடுக்கும் முன்னர், "இல்லை இரு, நானே வச்சி விடுறேன்", அவன் தடுக்கும் முன்னர் அவளது கைகள் அவன் நெற்றியில் விபூதியை பூசிவிட்டு, அவன் கண்களுக்குமேல் கைகளை குடையாக்கி ஊதும் வேளையில் அவளது மூச்சுக் காற்று அவனை தீண்டும் வேளையில் ஒருநொடி சிலிர்த்து அடங்கும் அவன் தேகம்.

அவனுள் சலனத்தை விதைக்கும் அவளோ அதை உணர்ந்தும், அறியாதவள்போல் தலையை சரித்து, கண்களை சிமிட்டி அவளது புன்னகையை அவனது கண்களுக்கு விருந்தாக்குவாள்.தலையை உதறி அவளது செய்கை தன்னை தாக்காமல் இருக்க போராடுவான் அவன்.

அவனை காலையோ இல்லை மதியமோ அவனது ப்ரீ நேரம் தெரிந்து வந்து அவனை பாடாய் படுத்திவிட்டு அவன் வீட்டுக்கு சென்று விடுவாள். இவனோ அன்றைய நாள் முழுவதும் மந்திரித்துவிட்ட கோழி மாதிரி சுற்றிக் கொண்டிருப்பான்.

ஹேமா அவனது அறைக்கு வந்தாலே அவனுக்கு உதவியாக இருக்கும் செவிலி ஒரு நமுட்டு சிரிப்புடன் வெளியேறி விடுவாள். செவிலி வெளியேறுவதை பார்த்தாலே, அவளிடம் கோபப் படுவான்.

ஆனால் அதை அழகாக சம்மாளிப்பாள் ஹேமா. "உனக்கு மட்டும் ரெஸ்ட் கிடைத்தால் போதுமா அவளுக்கு வேண்டாமா. அதான் அனுப்பிவிட்டேன்", அவள் கூலாக சொல்ல, இவன்தான் தலையிலே அடித்துக் கொள்வான்.

அவனுக்கும் அவளை திட்டி விலக்கிவிடவேண்டும் என்று எண்ணினாலும் அவள் முகத்தை பார்த்தாலே மலரும் முகத்தையும், சிறகடிக்கும் இதயத்தையும் அடக்க வழி தெரியவில்லை. எனவே அவள் செய்கையை தடுக்கவில்லை அவன்.

இருவரின் நெருக்கமும் மருத்துவமனை முழுவதும் கிசுகிசுக்கப் பட்டாலும் யாரும் வரம்பு மீறி பேசுவதில்லை. முதல் காரணம் ஹேமாவின் வெளிப்படையான பேச்சும், தோழமையான நடத்தையுமே. இரண்டாவது பரத் மிகவும் கண்ணியமானவன் என்பதாலும் தான்.

இவைகளை கூட அவன் தாங்கிக் கொள்வான். இதற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் ஒரு விஷயம் நடந்தது. சில நாட்கள்... "பரத், உன்கிட்டே இந்த அக்க்ஷயா பார்மசி விசிடிங் கார்டு இருக்கு? பரத் உன் கிட்டே அந்த பார்மசியின் புக் இருக்கு? பரத் இன்னைக்கு ஒரு கேஸ் அவங்களுக்கு தூங்கும் போது கால் நரம்பு முறுக்கிக்கிதாம் அது எதனால்.

"உன்கிட்டே அது சம்பந்தமா ஏதாவது புக் இருக்கு"  இவை அனைத்தையும் கேட்பவள், இவளுக்கு பதில் சொல்லும் முன்பே அவனை நெருங்கி அவனது மேஜை டிராயரை குடைய துவங்கி விடுவாள்.

அவ்வளவு நெருக்கத்தில் அவளிடமிருந்து வரும் அந்த வாசனை அவன் நாசிக்குள் நுழைந்து அவனை கொந்தளிக்க வைக்கும். அன்றும் இதையே சாக்காக வைத்து அவனது மேஜையை அவள் நோண்டிக் கொண்டிருக்க அவனுக்கு பொறுமை பறந்தது.

"ஏய் ஹேமா நீ என்னதான் மனசில் நினைச்சுட்டு இருக்க. நீ ஒரு டாக்டர் அது ஞாபகம் இருக்கா. இப்படித்தான் ஏதாவது

ஒரு நேரம், தினமும் வந்து என்னை தொல்லை செய்வாயா. ஒரு நாளை மாதிரி இன்னொரு நாள் இருக்காது சொல்லிட்டேன்", தன் ஆத்திரத்தை மறைத்தே பேசினான்.

"இப்போ நான் டாக்டர் என்பதுக்கும் என் செய்கைக்கும் என்ன சம்பந்தம்", அவள் தெரியாதவள்போல் வினவினாள்.

"பின்ன ஒரு டாக்டர் செய்யிற வேலையா இது. வேலை நேரத்தில் என்னை வந்து தொந்தரவு செய்வது".

"உங்களை தொந்தரவு செய்யும் எந்த நேரமாவது உங்க டியூட்டி நேரமாக இருந்து இருக்கா", அவனை பார்த்தவாறே கேட்டாள்.

சட்டென அமைதியானான் அவன். அவள் கேட்பதும் சரிதான், அவள் வரும் நேரங்கள் அனைத்துமே அவனுக்கு பிரேக் கிடைக்கும் நேரங்கள்தான். ஒன்று, அது காலையில் அவன் வேலையை துவங்குவதற்கு முன்பாக இருக்கும். இல்லையா அவனது மதிய சாப்பாட்டு வேளையாக இருக்கும்.

"என்ன இவ்வளவு நேரம் பேசுன. இப்போ பதில் சொல்லு", குறும்பாக கண்களை சிமிட்டி கேட்டாள்.

"உன்னை என்ன செய்யிறேன் பார்", சிரித்த அவளது மயக்கும் புன்னகையில் தன்னை மறந்து, அவள் செய்கையில் கொஞ்சம் தடுமாறி இருந்த அவன் அவள் தோள்களை அழுந்த பிடித்து சுவரோடு அவளை சாய்த்து அவளை நெருங்கினான்.

கண்களை விரித்தவாறு அசையாமல் பார்த்துக் கொண்டிருந்தாள் அவள். 'அப்படி என்ன செய்து விடுவாய்?' அவனுக்கு சவால் விடுக்கும் பார்வை. அந்த பார்வையை அவனால்தான் எதிர்கொள்ள முடியவில்லை.

"இப்போ உன்னை சும்மா விடுறேன். இன்னொருமுறை இப்படி செஞ்ச நான் சும்மா இருக்கமாட்டேன் பாத்துக்கோ".

அவன் சொல்லி முடிக்கவில்லை, அவள் சட்டென அவனை சுவற்றின் பக்கம் தள்ளி, தான் அவன் முன்னால்

நெருக்கமாக நின்றாள். பரத் கொஞ்சம் விலகிதான் நின்றிருந்தான் ஆனால் இவளோ இடைவெளியை சுத்தமாக குறைத்து, இருவருக்கும் இடையில் ஒரு நூல் இடைவெளியே வைத்திருந்தாள்.

பரத்துக்கு வியர்த்து ஊத்தியது. அவள் தெனாவெட்டாக கேட்டாள், "என்ன அப்படி செஞ்சுடுவ, ம்... மிஞ்சி போனால் உன்னால் என்னை என்ன செய்ய முடியும். நீ மிரட்டத்தான் செய்வ, நான் செஞ்சே காட்டிடுவேன். செய்யவா?" இமைகளை சிமிட்டி, மயக்கும் புன்னகையில், இதழ்களை அவன் இதழ்களை நோக்கி நகர்த்தினாள்.

"வே...ண்டாம்... போ...ய்டு..., ஹனி..., சொன்னா கேளு" அவனுக்கு பேச்சு தந்தி அடித்தது. சொல்லப் போனால் அவளை சும்மா  மிரட்டுவதற்காகத்தான் அவன் அப்படி சொன்னான். ஆனால் அவள் அதிரடியில் இறங்கவே அவனுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை.

அவனது தவிப்பும் பேச்சும் ஹேமாவுக்கு சிரிப்பை அளித்தது. ஆனால் சிரித்தால் ரொம்பவே தவித்துவிடுவான் என்று புரிய சிரிப்பை தொண்டைக்குள் புதைத்தாள்.

கொஞ்சநேரம் அவனை தவிக்க விட்டுவிட்டு, ஹேமா சிரித்தவாறே அவனிடமிருந்து விலகினாள். பரத் அவளை இமைக்க மறந்து பார்க்க, அவள் அதே புன்னகையுடன் வெளியேறினாள்.

வெளியேறும் முன்னர் அவள் சொன்ன, "யாருகிட்ட..." என்ற வார்த்தை பரத்தை வந்தடைந்து சிலையாக உறைய செய்தது.

"ச்சே..., ஒரு நிமிஷத்தில் கலங்கடிச்சுட்டா..." வாய் விட்டே புலம்பியவன், கேத்தரின் உள்ளே வர, சட்டென தன்னை மீட்டுக் கொண்டான்.

அதே நேரம்..., ஹேமாவின் பின்னால் சுற்றிக் கொண்டிருந்த தானேஷ்..., சில நாட்களாக அவளைப் பின் தொடராததைக் கண்டவனுக்கு, அவர்களுக்குள் என்னவோ

நடந்திருக்கிறது என்பது புரிந்தது. ஆனால்..., அது என்னவென்று அவனால் தெரிந்து கொள்ள முடியவில்லை. கூடவே, அவளை தொல்லை செய்திருப்பானோ..., என எண்ணுகையிலேயே கை முஷ்ட்டி இறுக கோபம் கொப்பளித்தது.

யாரிடம் கேட்பது...? ஹேமாவிடமே கேட்கலாம் என்றால்..., அவள் அதை எப்படி எடுத்துக் கொள்வாள்..., என புரியாமல் குழம்பிப் போனான். கேத்தரின் தன்னையே பார்ப்பதை உணர்ந்து,தன் சிந்தையை கைவிட்டவன், "கேத்தரின்..., உங்க டியூட்டி டைம்ல நீங்க ஏன் ரூமை விட்டு வெளியே போறீங்க...?" ஹேமா அவனை தனிமையில் வந்து சந்திப்பதை அவள் எப்படி எடுத்துக் கொள்வாளோ என ஒரு பக்கம் உறுத்தியது.

அவள் பதில் சொல்லாமல் போகவே..., "ஹேமா ரொம்ப எதார்த்தமா பழகறா..., நீங்க எதுவும்..." அவள் முகத்தில் புன்னகையைக் காணவே, சட்டென பேச்சை நிறுத்தியவன், 'என்ன...?' என்பதுபோல் அவளைப் பார்த்தான்.

"டாக்டர்..., அவங்களுக்கு யார்கிட்டே எப்படி பேசணும், பழகணும்னு நல்லாவே தெரியும்..., அதனால் நான் அவங்களை தப்பா நினைக்கவே இல்லை. அதே மாதிரி..." வேகமாகத் துவங்கியவள், இதை சொல்வதா வேண்டாமா என்ற குழப்பத்தில் வார்த்தைகளை நிறுத்தினாள்.

"என்னவோ சொல்ல வந்தீங்க...?" அவளைத் தூண்டினான்.

"லாஸ்ட் வீக் எனக்கு நைட் டியூட்டி..., நம்ம ஹேமா மேடத்தோடதான். அப்போ..." சொன்னவளது சிந்தை முழுவதும் அன்றைய நாளுக்குச் சென்றது.

ஹேமாவுக்கு அன்று ஓபி நேரம் முடிய, சற்று ப்ரீ ஆனவள், தன் அலைபேசியை எடுத்து, தானேஷை அழைக்க, அவளுடன் இருந்த கேத்தரின் திடுக்கிட்டாள்.

'ஹையோ..., இந்த மேடம் ஏன் அவனை இங்கே கூப்பிடுறாங்க? அவன் இடத்தை கொடுத்தால் மடத்தை

பிடுங்குற ஆளாச்சே...' கைகளைப் பிசைந்தாள். அவளுக்கு இதை எப்படி ஹேமாவிடம் சொல்வது என்ற தயக்கம்.

அடுத்த ஐந்து நிமிடத்தில் அவன், அவளது அறைக்கு வர, கேத்தரினோ..., அங்கே இருப்பதா? இல்லை..., வெளியே போவதா என குழம்பிப்போய் நிற்க, "கேத்தரின்..., டோர் பக்கத்தில் வெயிட் பண்ணு..., டோரை சாத்த வேண்டாம்..." சாதாரணமாக உரைக்க, தானேஷ் ஒருவித இளிப்போடு ஹேமாவை பார்த்திருந்தான்.

'என்ன இவங்க..., இப்படி சொல்றாங்க...?' குழப்பத்தோடு, அவள் சொன்னதைச் செய்தாள். டோருக்கு பின் பக்கம் அவளது இருக்கை என்பதால்..., அவர்களைக் காண முடியவில்லை என்றாலும், அவர்கள் பேசுவதை அவளால் நிச்சயம் கேட்க முடியும்.

"தானேஷ்..., அன்னைக்கு என்னமோ கேட்டியே..., அதுக்கு பதில் சொல்லத்தான் கூப்ட்டேன்..." உரைத்தவள், இருக்கையில் நன்றாக சாய்ந்து அமர்ந்தாள்.

அவள் கண்களில் தெரிந்த தீவிரத்தில், தானேஷ் சற்று தன் முகபாவத்தை மாற்றினான்.

"என்னோட டேட்டிங் போகணும்னு சொன்னல்ல..." கேட்டவள், சற்று இடைவெளி விட்டு, "எனக்கு இன்ட்ரெஸ்ட் இல்லன்னு உன்கிட்டே தெளிவா சொன்னேன்..., அதுக்குப் பிறகும்..., வாட்ஸ்ஆப் ல தேவையில்லாத இம்மேஜ்..., வீடியோ..., கூடவே..., உன்னோட வாய்ஸ் மெசேஜ்..., இட்ஸ் நாட் குட்..." அவள் குரல் உயரவில்லை என்றாலும், அதில் இருந்த கோபம்..., நிச்சயம் கேத்தரினுக்குப் புரிந்தது.

'அடப்பாவி..., இப்படியெல்லாம் செய்யறானா?' மனதுக்குள் திடுக்கிட்டு நின்றிருந்தாள்.

தானேஷ் அமைதியாக இருக்கவே..., "தட் லாஸ்ட் மெசேஜ்..." உரைத்தவள், தன் அலைபேசியை இயக்கி, அதை ஓட விட்டாள்.

'ஹேமா..., என்ன ரொம்ப சீன் போடுற...? லண்டன்ல நீங்க எல்லாம் ஓப்பன் செக்ஸ் கூட வச்சிருப்பீங்க..., நான் என்ன அப்படியா கேக்கறேன்? ஜஸ்ட் ஒன் டைம்..., மகாபலிபுர ரெசார்ட் போகலாம்..., யாருக்கும் தெரியாமல் விஷயத்தை முடிச்சுட்டு..., நீ உன் வேலையைப் பார்..., நான் என் வேலையைப் பாக்கறேன்..., என்ன சொல்ற...? எனக்கு பதில் தெரிஞ்சே ஆகணும்...' அலைபேசி தன் இயக்கத்தை நிறுத்த, அவனை கூர்மையான விழிகளோடு ஏறிட்டாள்.

"தானேஷ்..., நீ அனுப்பிய பிச்சர்ஸ்..., வீடியோஸ்..., இத்தியாதி எல்லாம் எனக்கு ஒரு பொருட்டே கிடையாது. ஏன்னா..., இதெல்லாம் எனக்கு பதினைந்து வயசிலேயே தெரியும். பட்..., உன்னோட பேச்சு..., ரொம்ப தப்பு. என்னவோ வெளிநாட்டு பெண்கள் எல்லாம் ஓப்பன் செக்ஸ் வச்சுப்பாங்கன்னு சொன்ன பார்...

"ஆமா..., ஒரு விதத்தில் நீ சொன்னது சரி. ஆனா..., அப்படி அவங்க செக்ஸ் வச்சுக்கற ஆண்களை அவங்களுக்கு ஏதாவது ஒரு விதத்திலாவது பிடித்திருக்கும்..." அவள் வார்த்தைகளில் இருந்த மறைபொருள் புரிய, அவன் முகம் பெயறைந்தார் போல் மாறியது.

'நீ என்னை எந்த விதத்திலும் கவரவில்லை...' என்பதை எவ்வளவு நாசூக்காக சொல்லிவிட்டாள்..., அவன் திகைத்துப்போய் பார்த்திருந்தான்.

"அதே மாதிரி..., பிடிக்காத ஆண்மகன் தங்களை நெருங்கினால்..., அவனோட சுவிட்சை எப்படி ஆஃப் பண்றதுன்னு கூட அவங்களுக்குத் தெரியும்..." அவள் விழிகள்  இன்னும் தீவிரமாக அவனைச் சுட, பேனாவால் மேஜையில் தட்டியவாறே அவனை பார்த்திருந்தாள்.

"ஈவன்..., மீ டூ நோ. ஒன் மோர் டைம்..., நீ இப்படி செய்தால்..., ஹாஸ்பிடல் காரிடாரில் வைத்து..., கத்தியில்லாமல்..., உனக்கு பேமிலி பிளானிங் ஆப்பரேஷன் நான் பண்ண தயாரா இருக்கிறேன். ஐ வோண்ட் பாதர் அபவுட் எனி கான்சிகுயன்சாஸ்..., டூ யூ அன்டர்ஸ்டேன்ட்" அவள்

பார்வையும் குரலும், நான் சொன்னதைச் செய்வேன் என அவனுக்கு உணர்த்த, சற்று வியர்த்து போனான்.

கேத்தரினுக்கோ..., அவளது அப்பட்டமான பேச்சு சற்று திகைப்பாக இருந்தாலும், அவளது தைரியத்தைப் பார்த்து கை தட்ட வேண்டும்போல் இருந்தது. ஆனால்..., இருக்கும் இடம் கருதி தன்னை கட்டுப்படுத்திக் கொண்டாள்.

"ஒன் மோர் திங்..., இந்த செல்லில் இருக்கும் எல்லா மெசேஜும் நம்ம எம்டி கிட்டே காட்ட வேண்டாம்னு நினைக்கறேன். நீ என்ன சொல்ற...?" அவள் நிதானமாக கேட்க, அவனுக்கு உள்ளுக்குள் சிறு உதறல்.

அப்படி ஏதாவது நடந்து..., அவன்மேல் ஒழுங்கு நடவடிக்கை எடுத்தால், தன் கெரியரே கேள்விக்குறியாகும் அபாயம் இருப்பதால், சற்று பயந்துதான் போனான்.

'ச்சே..., இவ அமைதியா இருக்கவே..., நமக்கு மடங்கிட்டான்னு நினைத்தால், இப்படி ஆகிடுச்சே...' மனதுக்குள் எண்ணிக் கொண்டான்.

"தானேஷ்..., நான் லண்டன் சிட்டிசன்..., நான் போலீஸ்ல ஒரு கம்ப்ளெயின்ட் கொடுத்தால் என்ன நடக்கும்னு உனக்கு தெரியும்னு நினைக்கறேன்..." அவளது அடுத்த அதிரடியில் அவள் பக்கத்துக்கே ஒரு கும்பிடு போடும் முடிவை எடுத்தான்.

"இதோட ஒரு காப்பி என் மெயில்ல இருக்கு. எப்பொழுதும் நான் இவ்வளவு பொறுமையா இருக்கவும் மாட்டேன்... சோ," அவனுக்கு வியர்த்து ஊற்றியது.

அவனே முதுகெலும்பு இல்லாத ஒரு பூச்சி..., கல் எறிந்து பார்க்கும் ரகம், பயந்தாலோ..., தடுமாறினாலோ எகிறி அடிப்பான். வெட்டி ஜம்பத்தில் இருக்கும் அவனுக்கு, இப்படி எதிர்த்து அடிக்கும் ஆட்களைக் கண்டால் பயம் வராமல் என்ன செய்யும்?

"நான் எதார்த்தமா கேட்டேன்..., முடியாதுன்னா முடியாதுன்னு சொல்லிட்டு போ..., அதை விட்டு..." தன்

பயத்தை சாமர்த்தியமாக மறைக்க முயன்றான்.

"உனக்கு ஒரு முறை சொன்னால் புரியாதுன்னு எனக்கு தெரியாமல் போச்சே..., அதான்..., ஸ்ட்ரெஸ் பண்ணி சொல்ல வேண்டியதா போச்சு. பரவாயில்லை இப்போ புரிஞ்சிருக்கும்னு நினைக்கறேன்..." தோளைக் குலுக்கினாள்.

"ஜஸ்ட் கெட் அவுட்..." வெகு அலட்சியமாய் அவள் உரைக்க, சுண்டிய முகத்தோடு எழுந்து சென்றான்.

அவன் வாசலை நெருங்கவே..., "தானேஷ்..., நான் ரொம்ப தாராளமா நடந்துப்பேன்..., ஆனா..., அது..., எனக்கு பிடிச்சவன் கிட்டே மட்டும்தான்..." அழுத்தி உரைக்க, அவளது அடுத்த பேச்சை கேட்க அவன் அங்கே இருக்கவில்லை.

அனைத்தையும் உரைத்தவள், பரத்தின் முகம் பார்க்க, ஹேமா தன்னிடம் நடந்துகொள்ளும் முறையும், அவளது பேச்சையும் ஒப்பிட்டு பார்த்தவனுக்கு, அவள் தன்னை நேசிக்கும் அளவு புரிய, அந்த காதலை ஏற்க முடியாத தன் நிலையை தானே வெறுத்தான்.

# பகுதி - 16

தனம், பரத்தை கவலையாக பார்த்துக் கொண்டிருந்தார். ஹேமா இங்கே வந்து, தன்னோடு இவ்வளவு பழகி, தன் காதலுக்காக போராட, தன் மனதுக்குள் இருப்பதை, தன்னிடம் சொல்லக் கூட செய்யாமல் இருக்கும் மகனை எண்ணி கவலை கொண்டார்.

'எனக்காக இவனது சந்தோஷத்தையும், வாழ்க்கையையும் பாழாக்கிக் கொள்கிறானே...' அவன் பாசத்தை எண்ணி மகிழ்வதா? இல்லையென்றால் அவனது வாழ்க்கைக்கு தடையாக இருப்பதை எண்ணி கவலை கொள்வதா என்றே அவருக்குத் தெரியவில்லை.

'பரத் ஏதாவது சொன்னானா...?' சில நாட்களாக தன்னிடம் கேட்கும் ஹேமாவிடம், பதில் சொல்ல முடியாமல் தவிப்பது அவருக்கு கவலையை அளித்தது.

கூடவே..., "என்னைப் பார்த்தால் அவ்வளவு பேட் கேளாவா அவனுக்குத் தெரியுது? எனக்கு ஒரு அமைதியான, பாசமான குடும்பம் மட்டுமே வேணும்னு அவனுக்கு ஏன் புரியலை? என்னை இப்படி தவிக்க வைப்பதில் அவனுக்கு என்ன சந்தோசம்...?" நேற்று கலங்கிய குரலில் அவள் சொல்லிச் சென்றிருக்க, மகனிடம் பேச முடிவெடுத்தார்.

எனவேதான்..., இன்று அவனை திருமணத்துக்கு கட்டாயப் படுத்தினார். அவனோ, தாயின் பிடிவாதத்தில் திகைத்துபோய், தாயின் அருகில் தலையில் கையை வைத்தவாறு அமர்ந்திருந்தான். தாய்க்கு என்ன பதில் சொல்லுவதென்று தெரியவில்லை.

"பரத் நான் சொல்லிட்டே இருக்கேன். நீ எதையும் காதுகொடுத்து கேட்காமல் இப்படி உக்காந்து இருந்தால் என்ன அர்த்தம். இத்தனை வருடமாக நான் பொறுமையாக இருந்தேன். இனிமேல் என்னால் பொறுமையாக இருக்க முடியாது. நான் சொன்ன பெண்ணை நீ திருமணம் செய்தே ஆக வேண்டும்", குரல் உயர்த்தி பேசினார்.

தான் பார்க்கும் பெண்ணைத்தான் திருமணம் செய்ய வேண்டும் எனச் சொன்னாலாவது, அவன் தன் மனதுக்குள் இருப்பதை சொல்லிவிட மாட்டானா? தாயுள்ளம் ஏங்கியது. அவரும் தான் சொன்ன பெண் என ஹேமாவைத்தான் சொன்னார். ஆனால் அது அவனுக்குத் தெரியாதே.

இதுவரை தாய் தன்னிடம் தன்மையாக கேட்டு, இவன் வன்மையாக மறுக்கும் வேலையைத்தான் சரியாக செய்துகொண்டிருந்தான். இப்படி அதிரடியாக ஒரு பெண்ணை பார்த்து அவளைத்தான் நீ திருமணம் செய்யவேண்டுமென்று தாய் சொல்வார் என்று அவன் கனவிலும் நினைக்கவில்லை.

ஹேமாவை மனதுக்குள் வைத்துக் கொண்டு வேறொரு பெண்ணை மனதால் நினைக்க கூட முடியவில்லை. அவனது தாய் என்னவென்றால் அவனது வாழ்க்கையையே வேறொரு பெண்ணோடு இணைக்க பார்க்கின்றாரே.

இதை எப்படி தவிர்க்க. ஹேமாவை மனதுக்குள் வரவிடாமல் இருக்க அவன் எவ்வளவோ முயற்சி செய்தான் ஆனால் அது முடியவில்லை. அவளை நினைக்காதே என்று மனதிடம் சொல்லும் வேளையில்தான் இன்னும் அதிகமாக நினைத்தான்.

அவள் உனக்கு, உன் வீட்டுக்கு சரிவர மாட்டாள் என்று நினைக்கும் பொழுது எல்லாம், உன் படுக்கை அறையை அவள் அல்லாத வேறொரு பெண்ணோடு பகிர்ந்துகொள்ள முடியுமா என்று அவன் மனமே அவனுக்கு எதிராக திரும்பி சதிராட்டம் போட்டது.

ஹேமாவைப் பற்றி தாயிடம் சொன்னால் அவளை ஏற்றுக்கொள்ள கண்டிப்பாக தயங்க மாட்டார் என்பது அவனுக்கு தெரியும். ஆனால் தன் சுயநலத்துக்காக ஒரு சுதந்திர பறவையை கூட்டில் அடைக்க அவன் விரும்பவில்லை.

தாயின் மனநிலையை அறியாமல், தாயின் சிக்கனத்தையோ செயலையோ பேச்சையோ எங்கே அவள் இகழ்ந்து விடுவாளோ என்ற பயம் கிளர்ந்து எழுந்து அவன் நாக்கை கட்டி போட்டுவிடும். அவனது இந்த மனநிலை புரியாமல் திருமணத்தை பற்றி பேசினால் பாவம் அவன் என்ன செய்வான்.

ஆர்வமாக கேட்கும் தாயிடம் முகத்தை முறித்ததுபோல் பேசவும் முடியவில்லை அவனால். மறுத்து பேச முடியாததால் மௌனமாக இருந்தான் அவன்.

"பரத் நான் இத்தனை வருடமாக கேட்கின்றேன். உனக்கு இந்த அம்மாவின் ஆசையை நிறைவேற்ற வேண்டுமென்று தோன்றவில்லையா. நான் கண்ணை மூடும் முன்னாடி உன் வாரிசை கையில் ஏந்தவேண்டும் என்ற என் கனவு வெறும் கனவாகவே போய் விடுமா.

"இல்லையென்றால் என் ஆஸ்மா வியாதி உன் மனைவிக்கும் குழந்தைக்கும் வந்துவிடுமென்று பயப்படுகிறாயா", அவன் வாயை திறக்கவைக்க வேறு வழி இல்லாமல், அவன் உள்ளத்தால் சிந்தித்ததுகூட பார்த்தறியாத விஷயத்தை அவனிடம் கேட்டுவிட்டார்.

தாயின் வாயிலிருந்து உதிர்த்த இந்த வார்த்தையை கேட்டவன் துடித்துப் போனான். இதற்குமேல் நடப்பது நடக்கட்டும் என்ற முடிவுக்கு வந்தான். மனதை கட்டுப் படுத்தினான். ஆசையை அடக்கினான்.

"அம்மா நீங்க எந்த பொண்ணை சொல்லுறிங்களோ அவ கழுத்தில் நான் தாலி கட்டுறேன். அவளுக்கு என்னை பிடிக்கவேண்டும் என்ற அவசியம் கூட இல்லை. ஆனால் உங்களை அவள் அனுசரித்து போகவேண்டும் அது மட்டும் போதும் எனக்கு.

"அவள் படித்தவளா, படிக்காதவளா, பணக்காரியா, ஏழையா, நெட்டையா, குட்டையா, கறுப்பா, சிவப்பா, எதுவுமே எனக்கு தெரிய வேண்டாம். இப்போ

சொல்லுறேன் நீங்க காட்டும் பெண் யாராக இருந்தாலும் எனக்கு சம்மதம்", சொல்லிவிட்டு எழுந்து சென்றுவிட்டான்.

அவன் மனதை திறப்பான் என்று எதிர் பார்த்தால், தனக்காக தன் மனதையே பூட்டி வைத்துக் கொண்டானே என்ற கவலைதான் எழுந்தது.

இந்த செய்தி ஹேமாவை அடைந்தது. துடித்துப் போனாள். அவன் மனதில் தான் இருப்பது அவளுக்கு தெரியும். ஆனால் அவன் தன் தாய்க்காக தன்னையே உதற துணிந்தது மிகுந்த வேதனையை அளித்தது.

தனம் அவளுக்கு ஆறுதல் சொன்னார். எந்த ஆறுதல் மொழியும் அவள் செவிகளில் விழவில்லை. தனம் இந்த விஷயத்தை உடனடியாக ஜீவித்யாவுக்கு தெரிய படுத்தினார். அவளுக்குமே இந்த செய்தி கொஞ்சம் கவலையை அளித்தது. உடனடியாக சென்று அவளை பார்ப்பதாக சொல்லி வைத்தாள்.

அடுத்த அரைமணி நேரத்தில், அவள் வீட்டின் முன்னால் நின்று அழைப்புமணியை அழுத்த, அழுது வீங்கிய கண்களோடு அவளை எதிர்கொண்டாள் ஹேமா.

எப்படி இருந்த இவளை காதல் இப்படி மாற்றி விட்டதே. கவலையாக அவளையே பார்த்தவாறு நின்றாள்.

"வா ஜீவி, என்ன திடீர்னு வந்து இருக்க" கேட்டவாறே தன் கண்ணீரை சட்டென துடைத்துவிட்டு சிரிக்க முயன்றாள்.

"அப்போ உன் வீட்டுக்கு வரணும்னா நான் தந்தி அடிச்சுட்டுதான் வரணுமா. சரி அப்போ நான் போயிட்டு வர்றேன்", சோகமாக சொன்னவாறு திரும்பினாள்.

"ஜீவி, என்ன விளையாட்டு இது. நீ உக்காரு நான் முகம் கழுவிட்டு வர்றேன்", சட்டென பாத்ரூமில் புகுந்து கொண்டாள்.

அவளை என்ன சொல்லி தேற்றுவது..., என்ற சிந்தையோடு அமர்ந்திருந்தாள் ஜீவித்யா. முகம் கழுவி வந்தவள், அவள் எதிரில் அமர்ந்தாள்.

அவள் ஏதாவது சொல்கிறாளா என்று அவள் முகத்தை பார்க்க அவள் வேதனையை வெளியே காட்டாமல், விழுங்கிக் கொண்டிருந்தாள். அவளுக்கு இது பழக்கமே, சந்தோசமோ, துக்கமோ எதுவாக இருந்தாலும் அவள் தனியாக எதிர்கொண்டே பழக்கம்.

எனவே இந்த துக்கத்தையும் தன்னோடு வைத்துக் கொள்ளவே விரும்பினாள்."ஏண்டி இப்படி இருக்க...? அப்படி என்னதான் ஆச்சு...?" தோழியின் அருகில் சென்று அமர்ந்தாள்.

"எனக்கு என்ன...? நான் நல்லாதான் இருக்கேன்".

"நல்லா இருக்கேன்னு உன் உதடு சொல்லுது. ஆனால் நல்லாவே இல்லன்னு உன் கண்ணு சொல்லுதே என்ன செய்யட்டும்".

"ஓ....... அப்போ அம்மா உனக்கும் போன் செஞ்சாங்களா", சட்டென கேட்டாள்.

"ஆமா போன் செஞ்சாங்க. அண்ணா கல்யாணத்துக்கு சம்மதிச்சுட்டான்னு சொன்னாங்க", எந்த பெண்ணையும் என்பதை அழகாக தவிர்த்து சொன்னாள்.

"உன் கிட்டே அவ்வளவுதான் சொன்னாங்களா. என் கிட்டே அவங்க பாக்குற பொண்ணை கட்டிக்க சம்மதிச்சுட்டதா சொன்னாங்க", அதே குரலில் சொன்னாள்.

"இதில் நீ இவ்வளவு வருத்தப்பட என்ன இருக்கு?", சாதாரணமாக கேட்டாள்.

"ஆமா நான் வருத்தப்பட என்ன இருக்கு. அது அவங்க ரெண்டு பேருக்குள்ள விஷயம். மூன்றாவது மனுசியான நான் ஏன் கவலை படணும் இல்ல", இதை சொல்லும்போதே எவ்வளவோ முயன்றும் குரல் தழு தழுத்தது.

"ஹேமா நான் அந்த அர்த்தத்தில் சொல்லலை", தவிப்பாக பதில் சொன்னாள். அவளை தோளோடு சாய்த்துக் கொண்டாள்.

"எனக்கும் தெரியும் நீ அந்த அர்த்தத்தில் சொல்லலன்னு. ஆனால் என்னால் வேற யோசிக்க முடியலை. எல்லாம் என் தப்புதான்", இன்னும் மறுகினாள்.

"ஹேமா, நான் பேசி ஒரு முடிவு எடுக்கலாம்னு வந்து இருக்கேன். நீ இப்படியே உக்காந்து மனசுக்குள் புழுங்குவதால் எதையும் மாற்ற முடியாது. ஆனால் முயற்சி செய்தால் கண்டிப்பா மற்ற முடியும்", அவளுக்கு நம்பிக்கை ஓட்ட முயன்றாள்.

"இன்னும் என்ன முயற்சி செய்யணும் ஜீவி? என் மனசை இதுக்கும் மேல அவனுக்கு புரியவைக்க என்னால் முடியாது. எனக்கு அவனைப் பற்றி நல்லா தெரியும். அவன் மனசிலும் நான் இருக்கேன்னு எனக்கு தெளிவா தெரியும்...

"ஆனா, அதை அவன் ஒத்துக்காமல் இப்போ வேற பொண்ணை கல்யாணம் செஞ்சுக்க சம்மதிச்சுருக்கான்னா, இதுக்கும் மேல என்னால் அவன்கிட்டே போய் வெட்கத்தைவிட்டு கெஞ்ச முடியாது", உறுதியாக சொன்னாள்.

தன்மானத்தை இழந்து எதுவும் செய்ய தயாராக இல்லை அவள். அது காதலாகவே இருந்தாலும். அதைவிட தன்மானம் உள்ள எந்த பெண்ணும் அதை விரும்பவும் மாட்டாள். ஆனால் காதலின் முன்னால் எதுவுமே நிற்க முடியாது என்பதை பாவம் அவள் அறியவில்லை.

ஹேமா சொல்வதில் நியாயம் இருந்தாலும், அதை இப்பொழுது சொன்னால் பரத்தின் மீது விழுந்த இடைவெளி இன்னும் அதிகரித்துவிடும் என்பதை அறிந்ததால் அதை தவிர்க்க முயன்றாள்.

"ஹேமா நான் ஒன்றே ஒன்று சொல்லுகிறேன். தயவு செய்து அதை தவறாக நினைக்காமல் நீயும் பரத்தும் சேரவேண்டும் என்ற கண்ணோட்டத்தில் மட்டும் பாரு", சொல்லிவிட்டு அவள் முகத்தை பார்த்தாள்.

அவளும் யோசனையாக அவன் முகத்தையே பார்த்தாள். "ஹேமா....., பரத் அண்ணாஅவங்க அம்மா பாத்த

பொண்ணைத்தான் கல்யாணம் செஞ்சுக்கிறதா சொல்லி இருக்காங்களே. அது ஏன் நீயாக இருக்க கூடாது? கண்டிப்பா அம்மாவும் உன்னை மனசுக்குள் வச்சுட்டுதான் அண்ணாகிட்டே பேசியிருப்பாங்க..., கொஞ்சம் யோசி..." தயங்கியவாறு சொல்லி முடித்துவிட்டாள்.

"ஹும்...... இதுக்கு நீ என்னை திரும்ப லண்டனுக்கே அனுப்பி வைப்பது நல்லா இருக்கும்..." ஏளனமாக சொன்னாள்.தன் நேசத்துக்கு கிடைக்காத அங்கீகாரம் அவளை வெகுவாய் காயப்படுத்தி இருந்தது.

அதை புரிந்துகொண்ட ஜீவித்யாவுக்கு கலக்கமாக இருந்தாலும், அதை மறைத்துக் கொண்டு, "இப்போதான் நான் உன் கிட்டே சொன்னேன். இந்த யோசனையை நீயும் அண்ணாவும் சேர்வதற்காக மட்டும் என்று நீ நினைக்க வேண்டுமென்று. எனக்கு இன்னும் உங்க காதல் மேல் நம்பிக்கை இருக்கு ஹேமா. கண்டிப்பாக உன்னால் முடியும்.

"அவருமே ஒரு வேகத்தில் கல்யாணத்துக்கு சம்மதம் சொல்லிட்டாங்களே தவிர அவரால் வேறு பொண்ணோட கழுத்தில் தாலி கட்ட முடியாது. கடைசி நிமிடத்திலாவது கண்டிப்பா உன்கிட்டே வந்துடுவார்.

"இது நடக்கணும்னா நீ அவரை விட்டு விலகிட கூடாது. அப்படி நீ விலக முயற்சி செய்தால் அவர் தன்னோட மனசை இன்னும் இறுக்க பூட்டி வச்சுப்பார். இந்த வாழ்க்கை முழுவதும் உன் நினைவாவே இருந்துடுவார்.

"அவர் இருந்துட்டு போகட்டும் என்று விட்டாலும், அவருக்கு மனைவியாக வரப் போகும் பெண்ணுக்கு நாமாக அவ்வளவு பெரிய துன்பத்தை கொடுக்க வேண்டாம். உன் ஒருத்தியோட இந்த சின்ன ஈகோவை, இல்லை இல்லை உன்னோட இந்த தன்மான உணர்வை கொஞ்சமே கொஞ்சம் தள்ளி வச்சுட்டு யோசி ஹேமா.

"உன்னோட யோசனையில் தப்பிக்க போவது மூன்றுபேரோட வாழ்க்கை. தயவு செய்து எனக்காக எனக்காக யோசி..." கிட்டத் தட்ட கெஞ்சினாள். இப்படி ஒரு

நிலை வந்துவிடக் கூடாது என்றுதான் துவக்கம் முதல் அவள் போராடினாள். ஆனால்..., விதியை மாற்ற அவளால் முடியுமா என்ன?

"நீ என்னதான் சொன்னாலும் என்னால் இதற்கு ஒத்துக்கவே முடியாது ஜீவி. அவனுக்கு நான் வேண்டாம். என்னை விட்டு அவன் இருந்துடுவான் ஆனால் நான் மட்டும் அவனை விட்டுக் கொடுக்காமல் அவன் பின்னாடியே போகணும். உனக்கே இந்த யோசனை அபத்தமா தெரியலை" இப்பொழுது அவள் முகத்திலும் அலட்சியம் வந்தது.

"நீ இப்போ இருக்க இந்த சூழ்நிலையை மட்டும் மனசில் வச்சு பேசிட்டு இருக்க. நான் இன்னும் வரப்போற உங்க வாழ்க்கை மொத்தத்தையும் நினைத்து பேசிட்டு இருக்கேன். இதை ஏன் நீ புரிஞ்சுக்க மாட்டேங்குற?" சலிப்பாக கேட்டான்.

'இதற்குதான் முதலிலேயே தலைப்பாடா அடிச்சுகிட்டேன்...' கொட்டப்போன வார்த்தைகளை அப்படியே நிறுத்தினாள்.

"நீ என்னதான் சொன்னாலும்" அவள் உரைக்க,

"ஹேமா அவர் அவங்க அம்மாவோட முந்தானையை பிடித்தே வளர்ந்தவர். அவங்களுக்காகவே எல்லாம் செய்யிறவர். நீயே யோசித்து பார். ஐந்து மாத கருவாக அவன் இருக்கும்போது, அவங்க அப்பா இறந்துட்டார். அப்போ அவங்க வயசு இருபத்தி இரண்டுதான்.

"குழந்தையை அழிச்சுட்டு அவங்க தன்னோட வாழ்க்கையை பார்த்து இருக்கலாம். அதை செய்யாமல் இவருக்காக சொந்தம் பந்தம் அனைத்தையும் உதறிட்டு, இட்லி கடை வைத்து இவரை வளர்த்து ஆளாக்கிய தாய் இன்னும் வரும் கொஞ்ச நாளாவது தன்னோட சந்தோசமா இருக்கவேண்டும் என்று அவர் நினைப்பது எப்படி தவறாகும்?.

"அப்படியே தப்பாகவே இருந்தாலும், அப்படி ஒரு தாய் செய்த மிகப் பெரிய தியாகத்துக்காக நீ ஏன் இப்படி ஒரு

சின்ன தியாகம் செய்ய முன்வர கூடாது. நீ இப்படி யோசியேன் அவங்க அம்மாவுக்காக என்றாவது", அவள் சொல்ல இன்னுமே முறைப்பாக அவளைப் பார்த்தாள்.

"எல்லாம் அவங்களுக்காக என்றால் எங்களுக்காக, எனக்காக ஒரு மனசு அதில் ஆசை இதெல்லாம் இருக்க கூடாது என்று சொல்லுறியா", ஆத்திரம் அவள் குரலில் கொப்பளித்தது.

'ஆண்டவா என்னமோ பேசபோய் அது எங்கேயோ வந்து நிக்குதே', மனதுக்குள் நொந்துகொண்டாள்.

"அப்படி சொல்ல வரலை ஹேமா. அப்படி ஒரு காதல் கோழையை வச்சுகிட்டு நான் வேற என்னதான் செய்யட்டும். அவனுக்கு அம்மா பாசம், உனக்கு தன்மானம் நடுவில் கிடந்தது மடிவது உங்கள் காதல். அல்லாடுவது அந்த தாயோட உள்ளம்.

"தன் மகன் விரும்பிய வாழ்க்கையை அமைத்து கொடுக்கணும்னு அவங்க தவிக்கிறது உனக்கு தெரியவே இல்லையா ஹேமா. அதைவிட உன்னை மறுக்க அவர் எவ்வளவு துடிச்சுருப்பான்னு உனக்கு புரியலையா, இல்லை உணர முடியலையா.

"இப்போ நான் சொல்லுவதை நீ நம்புறியா இல்லையான்னு எனக்கு தெரியலை. இப்போ அவங்க அம்மா பாத்திருக்கிறதா சொல்லுற பொண்ணை அவர் தாலிகட்டும் நிமிஷம் வரைக்கும் கண்ணால் பாக்க கூட மாட்டார்ன்னு நான் சொன்னால் நம்புவியா.

"அப்படியே அவர் தாலிகட்ட முடிவு செய்துவிட்டார் என்றால், தன்னோட காதலை உன்கிட்டே சொல்லி, உன்கிட்டே மன்னிப்பு கேட்காமல் அவர் அதை செய்ய மாட்டார். எனக்கு அண்ணாவைப் பற்றி நன்றாக தெரியும்.

"இப்போ என்னோட ஒரே கோரிக்கை எல்லாம் அந்த பொண்ணா நீயே ஏன் இருந்து பாக்கக்கூடாது என்பதுதான்", கோபமாக துவங்கி ஆற்றாமையாக பேசி யாசகத்தில் வந்து முடித்தாள்.

கொஞ்சம் கூட நம்பிக்கையே இல்லாமல் அவளைப் பார்த்தாள் ஹேமா. "நீ சொல்லுறது போகாத ஊருக்கு வழி சொல்லுற மாதிரி இருக்கு ஜீவி...".

"நான் இவ்வளவு சொல்லியும் உன்னால் புரிந்துகொள்ள முடியவில்லை என்றால், வேண்டாம் ஹேமா நிறுத்திடாம். இந்த ஜென்மம் முழுவதும் நீங்க இப்படித்தான் இருக்கணும்னா யாரும் எதுவும் செய்ய முடியாது..." சொல்லிவிட்டு எழுந்தாள்.

ஹேமாவின் பிடிவாதத்தை தளர்த்துவது அவ்வளவு சுலபம் கிடையாது என்பது அவளுக்குத் தெரியும்.

"அவன் கண்டிப்பா தாலி கட்டுறதுக்கு முன்னாடி என்னை பாக்க மாட்டனே. அவனோட காதலை எனக்கு சொல்லிடுவானா", அவள் குரல் அவளுக்கே கேட்காமல் கேட்டாள்.

"அதெல்லாம் உனக்கு எதுக்கு இப்போ..., அதான் நீ முடியாது, லண்டன் கிளம்பறேன்னு சொல்லிட்டியே..." சொல்லிவிட்டு நகர்ந்தாள்.

"ஹேய் என்ன கேட்ட இப்போ. இன்னொருமுறை கேளு", மெல்லிய கூச்சலாக  கேட்டாள்.

"போடி, ஆனால், அப்படி மட்டும் எதுவும் நடக்கல, நான் கல்யாணத்தை அப்படியே நிறுத்திட்டு லண்டன் கிளம்பிடுவேன்" உறுதியாக சொன்னாள்.

ஜீவித்யாவுக்கு அடி வயிற்றில் திகில் மூண்டது. அதை மறைத்துக் கொண்டு, "கண்டிப்பா நடக்கும் பாரேன்", உறுதியாக சொன்னாள்.

பரத் ஏமாற்றுவானா இல்லை வாழ்க்கையை காப்பாற்றுவானா

# பகுதி - 17

அன்று நட்ராஜும், ஜீவித்யாவும் ஹேமா - பரத்துக்கு பார்ட்டி கொடுப்பதாக சொல்லியிருந்தார்கள். எனவே..., அவர்களை ஒரு நாள் அவுட்டிங் அழைத்துச் செல்வதாக ப்ளான். ஹேமா மகாபலிபுரம் பார்க்க வேண்டும் என சொல்லியிருந்ததால், அங்கே இருந்த பீச் ரெஸ்டாரென்ட் போகலாம் என நட்ராஜ் உரைக்க, பரத் வேகமாக ஹேமாவை ஏறிட்டான்.

தானேஷ் சொன்னதன் மன பாதிப்பு ஏதாவது அவளிடம் இருக்கிறதா என அவனுக்கு தெரிந்துகொள்ள வேண்டி இருந்தது. அதைவிட, அவள், அதைப் பற்றி தன்னிடம் ஒரு வார்த்தை கூட சொல்லவில்லையே என்ற மனக் குறை வேறு அவனை அழுத்தியது.

அவளே பிரச்சனையை சம்மாளித்துவிட்டாள் என்றாலும், அவள் தன்னிடம் அனைத்தையும் சொல்ல வேண்டும் என அவன் காதல் கொண்ட மனம் விரும்பியது. தானேஷ் இப்பொழுது லாங் லீவ் எடுத்துவிட்டு சென்றுவிட்டான். கூடவே அவன் வேறு ஹாஸ்பிடல் போய்விட்டான் என்றும் பேசிக் கொண்டார்கள்.

"பரத்..., உங்களுக்கு ஓகேயா...?" நட்ராஜ் அவன் சிந்தையைக் கலைக்க, ஏற்கனவே வேறு பெண்ணை திருமணம் செய்ய சம்மதித்து விட்டாலும், ஹேமாவை மறக்க முடியாத அவன் மனம், அவளோடு இருக்கும் மணித்துளிகளை தவிர்க்க தயாராக இருக்கவில்லை.

எனவே..., "எனக்கு ஓகே..." அவன் சம்மதிக்க, அந்த சண்டே அனைவரும் கிளம்பிச் சென்றார்கள். ஆளுக்கு ஒரு காரை எடுத்துச் செல்வதை விட, இரண்டு காரில் செல்லலாம் என முடிவானது.

நட்ராஜும், ஜீவித்யாவும் அவனது காரில் வருவதாக உரைக்க, பரத் அமைதியாக ஹேமாவை ஏறிட்டான். அவளோ..., "பரத்..., நீ என்னை பிக்கப் பண்ணிக்கோ..."

இயல்பாய் உரைக்க, அவளது அந்த பேச்சு..., 'இவளையா தவிர்க்கிறோம்...?' மனதுக்குள் நொந்து போனான்.

மறுநாள், மகாபலிபுரம் செல்லும் வழியில் இருந்த புலி குகை, குரொக்கொடையில் பார்க்..., மாயாஜால்..., என அவர்களுக்கு நேரம் போனதே தெரியவில்லை. நட்ராஜும், ஜீவித்யாவும் காதலர்களாக சிறகடிக்க, பரத் தான் தவித்துப் போனான்.

அதற்கு காரணம்..., ஹேமா, அவனது கையை கோர்த்தவள் விடவே இல்லை. அவள் எடுத்துக் கொண்ட செல்பிக்களில் எல்லாம் அவன் முகமும் சேர்ந்தே பதிவானது. அவளது அருகாமையில்..., அவன்தான் வெகுவாய் தவித்துப் போனான்.

அதிலும், சில இடங்களைப் பார்க்கையில், நொடிகளில் ஹேமாவின் கண்களில் வந்து போகும் ஒருவித எதிர்பார்ப்பு..., 'ஐ பீல் லைக் கிஸ் யூ...' அன்று அவள் சொன்ன வார்த்தைகள் பல இரவுகளில் அவன் தூக்கத்தை கெடுத்திருக்க, இப்பொழுதோ..., அதன் தாக்கம் அதிகரித்துக் கொண்டிருந்தது.

நட்ராஜோ..., ஜீவித்யாவிடம்..., "வித்யா..., ஒரு நாள், உன் கூட கை கோர்த்துட்டு சுத்தணும்ன என்னோட ஆசை நிறைவேறிடுச்சு. இப்போ இன்னொரு ஆசை..., ப்ளீஸ்..." அவள் இதழ்களில் பார்வையை நிலைக்கவிட்டு அவன் வினவ, மொத்த ரத்தமும் முகத்துக்குப் பாய, காதுமடல் சூடாக, வேகமாய் முகத்தை திருப்பிக் கொண்டாள்.

அப்பொழுது அவர்கள் நின்ற இடம்..., மகாபலிபுர சிற்பங்கள் நிறைந்த மண்டபம். வேகமாக தன் பார்வையை சுழற்றியவள், "நட்ராஜ்..., வேண்டாம்., பப்ளிக் ப்ளேஸ்ல நீங்க இப்படி பேசுறது சரியில்லை..." அவன் பார்வை மாற்றம் அவளை படபடக்கச் செய்தது.

"அங்கே..., பார்..., இந்த உலகத்தையே மறந்து..., எத்தனை பேர்..." தங்களைச் சுற்றிக் காட்ட, சில காதல் ஜோடிகள்

தங்கள் இதழ்களை பூட்டிக்கொண்டு தங்களையே மறந்திருந்தனர்.

ஹேமா கூட பரத்திடம்..., "பரத்..., இஸ் இட் கிஸ்ஸிங் ஸ்பாட்...?" என்ற கேள்வியை கேட்கும் அளவுக்கு இருந்தது. அவன் அமைதியாக இருக்க, விருட்டென அங்கிருந்து சென்றாள். அதன் பிறகு அவளிடம் சிறு விலகல்..., தனியாக நடக்கத் துவங்கினாள்.

ஜீவித்யாவோ..., "அண்ணா..., ஹேமா எல்லாம் இருக்காங்க..., உங்க வாலை சுருட்டி வச்சுட்டு வாங்க..." அவன் கோரிக்கையை ஏற்கும் நிலையில் அவள் இருக்கவில்லை.

அவள் விலகி நடக்க, சற்று முகம் வாடினாலும், தன்னை மீட்டுக் கொண்டவன், அவள் பின்னால் சென்றான். சரியாக ஐந்து முப்பதுக்கு அவர்கள் பீச் ரெஸார்ட் வந்து சேர்ந்திருக்க, கடலைக் கண்ட ஹேமாவுக்கு உடனே கடல் அலைகளில் குளிக்கும் வேகம்.

ஜீவித்யாவை நெருங்கியவள்..., "ஜீவி..., ஐ வாட் டூ ஸ்விம்..." கடல் அலைகளில் அங்கொன்றும் இங்கொன்றுமாக சில காதல் ஜோடிகள் குளித்துக் கொண்டிருக்க, அவள் பார்வையோ கடலையே வெறித்தது.

"இங்கேயா...?" ஜீவித்யா கேட்க,

"இங்கே வந்து ஸ்விம் பண்ணவே இல்லை. ஆசையா இருக்கு..." அவள் கைகளை பற்றிக் கொண்டாள். ஹேமா இப்படியெல்லாம் அனுமதி கேட்கும் ரகமில்லை என்பது அவளுக்குத் தெரியும். அவளுக்கு ஒன்றை செய்யவேண்டும் என்றால், தயங்காமல் செய்பவள்.

இப்பொழுது தன்னிடம் கேட்கிறாள் என்றால்..., 'இதைச் செய்யலாமா? கூடாதா? என்ற அவளது எண்ணத்தாலேயே என்பதை புரிந்து கொண்டாள்.

"ஹேமா..., ஸ்விம் பண்ண வேண்டாம்..., ஜஸ்ட் கால் நனைக்கலாம்..." நட்ராஜும் ஜீவித்யாவை விட்டு விலகி

பரத்தோடு இணைய, இரு பெண்களும் சேர்ந்து கொண்டார்கள்.

"நோ..., ஐ வாட் டூ ஸ்விம் நவ்..." பிடிவாதமாக நின்றாள்.

"ஏய்..., இந்த லாங் ஸ்கர்ட்..., டாப்போட எப்படி ஸ்விம் பண்ணுவ...? வேண்டாம்..." அவளை தடுக்க முயன்றாள். இரு பெண்களும் வழக்காட, தங்கள் கவனம் திரும்பிய ஆண்கள், அவர்களை நெருங்கினர்.

"என்ன...? எதுக்கு சண்டை போட்டுக்கறீங்க...?" பரத் தான் கேட்டான்.

"ஐ வாட் டூ ஸ்விம்..." அவள் சொன்னதையே சொல்லிக் கொண்டிருக்க, ஜீவித்யா சங்கடமாக பரத்தை பார்த்தாள்.

"ஸ்விம் சூட் அங்கே சேல் பண்றாங்க..., பார்த்தேன்..." ஹேமாவின் கண்களில், ஆசையும், ஏக்கமும் சரி விதத்தில் போட்டி போட்டது.

"ஜீவி..., வா அலையில் நிக்கலாம்..." பரத்தே பேசிக் கொள்ளட்டும் என ஜாடை காட்டியவன், அவளை அழைத்துச் சென்றான்.

"ப்ளீஸ் பரத்..., எனக்கு ஸ்விமிங் எவ்வளவு பிடிக்கும் தெரியுமா? இங்கே வந்த இத்தனை மாசத்தில், நான் ரொம்ப மிஸ் பண்ற விஷயம் இதுதான். ப்ளீஸ் அலவ் மீ..." எப்பொழுது அவன் கழுத்தை தன் கரங்களால் மாலையாக கோர்த்துக் கொண்டாள், அவன் எப்பொழுது அவள் இடையை வளைத்துக் கொண்டான்..., எதுவும் தெரியவில்லை.

தன்னிடம் அவள் அனுமதி வேண்டுவது மட்டுமே அவனுக்குப் புரிய, அவளிடம் மறுப்பு தெரிவிப்பது அவனுக்கு கஷ்டமாக இருந்தது. அதைவிட, அவள் முதல் முறையாக தன்னிடம் ஒன்றை கேட்கிறாள். அதை மறுக்க முடியாமல் திண்டாடிப் போனான்.

"ஹனி..., நம்ம வீட்ல பூல் இருக்கு..., உனக்கு வேணும்னா அங்கே வந்து ஸ்விம் பண்ணு..., இங்கே..., இந்த தண்ணீ

உனக்கு ஒத்துக்காமல் போகலாம். அதுவும் நைட் நேரம்..." மறுக்க முடியாமல் தடுமாறி உரைத்தான்.

அவன் வீட்டில் பூல் இருப்பது அவளுக்கும் தெரியும்தான். ஆனால்..., உரிமை உள்ளவளாக மாறாமல், அவன் அழைக்காமல் அங்கே போகக் கூடாது என்பதால், பிடிவாதமாக தன் ஆசையை கட்டுப்படுத்திக் கொண்டிருந்தாள்.

இப்பொழுது அவனே அழைத்துவிட, "ரியல்லி..."

"ம்..."

"ப்ராமிஸ்..." "ப்ராமிஸ்..."

"வாவ்..., தேங்க்ஸ் எ லாட் பரத்..." அவனை இறுக அணைத்துக் கொண்டாள். அப்பொழுதுதான் தாங்கள் நிற்கும் நிலை அவனுக்குப் புரிய, தன் தேகத்தில் உணர்ந்த அவள் மென்மையில் தன்னைத் தொலைத்தான்.

அவன் அதில் திளைக்க, அப்பொழுதுதான்..., தான் அவனை வளைத்திருப்பதை உணர்ந்தவளுக்கு, அவன் அமைதி வித்தியாசமாக இருந்தது.

அவனுக்கோ..., உலகே உறைந்து போன நிலை..., அவன் கரங்கள் தாமாகவே மேலும் அவளை இறுக்க, நம்ப முடியாமல் திகைத்து, அவன் தோளில் இருந்து நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.

ஒரு நொடி தான்..., என்ன நடக்கிறது என அவள் உணரும் முன்பே..., நொடியில் அவள் இதழை தன் இதழால் அழுத்தியவன், கடலில் ஆர்ப்பரிப்பில் நிகழ்வுக்குத் திரும்பி, வேகமாக அவளை விட்டு விலகி நின்றான்.

'நானா இப்படி...?' தனக்குத் தானே அவன் கேட்டுக் கொள்ள..., ஒரு ஆனந்த அதிர்ச்சியில், ஒரு பரவசத்தில் திளைத்தவள், உறைந்து நின்றிருந்த அவன் கரத்தை பற்றி இழுத்துக்கொண்டு அலையில் கால் நனைய நின்றாள்.

அவனோ..., வேறு பெண்ணை மணக்கிறேன் என சொல்லிவிட்டு, இவளிடம் இப்படி நடந்து கொண்டால்...' அவன் மனம் போராட, அதை உணராதவன்..., தன் கைகளால் நீரை வாரி அவன் முகத்தில் மெல்லியதாக தெளித்தவன், அவன் இடக்கரத்தை கோர்த்து, தன் அருகில் இழுத்தாள்.

"ஹனி..." அவள் செய்கையில் தலையை உதறிக் கொண்டவன், சங்கடமாக அழைக்க, "பரத்..., உனக்கு கிஸ் பண்ணவே தெரியலை..." அவன் காதுக்குள் கேலியாக அவள் முனக, எப்படி உணர்ந்தான் என்றே சொல்ல முடியவில்லை.

நிச்சயம் எதிலோ தோற்றுப் போன ஒரு உணர்வு..., ஒரு பெண்ணை திருப்தி படுத்த முடியாமல், தோய்ந்து போகையில் ஒரு ஆண்மகன் எப்படி உணர்வானோ..., அப்படி உணர்ந்தான்.

அவன் முகத்தில் சட்டென கவிழ்ந்த இருளை அவள் கவனிக்கவே இல்லை. அலைகளில் விளையாடுவதில் அவள் மூழ்க, அவனால் அங்கே நிற்க முடியவில்லை.

பெரும் அதிர்வாக, அவள் முகம் நோக்க, அவளோ..., இமைகளை சிமிட்டி, குறும்பு புன்னகையில், குறுகுறுவென அவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் இன்ட்டென்ஷனாக எதையும் சொல்லவில்லை என்பதை உணர்ந்து கொண்டாலும், சட்டென அவனால் தெளிய முடியவில்லை.

"ஹனி..., யூ கேரியான்..." ஒருமாதிரி குரலில் உரைத்தவன், சட்டென விலகி, மணலில் சென்று அமர்ந்து கொண்டான்.

அவன் சென்றதை கவனித்த நட்ராஜ்..., "வித்யா..., நீ ஹேமாவோட போய் விளையாடு. நான் அங்கே போறேன்..." அவனும் பரத்தோடு சென்று அமர்ந்து கொண்டான்.

அவர்கள் இருவரும் அமைதியாக கால் நனைத்துக் கொண்டிருந்தாலும், கவனம் சற்று இவர்களிடமே இருக்க, அங்கே நடந்தவற்றை என்னவென்று உணர்ந்துகொள்ள

முடிந்தாலும், பரத்தின் முகம் இறுக்கமாக இருப்பதை இன்னும் தெளிவாக புரிந்துகொள்ள முடிந்தது.

'இவ என்ன சொல்லி, அவர் என்ன புரிஞ்சுகிட்டார்ன்னே தெரியலையே...' கவலையோடு அவளை நெருங்கினாள்.

அவள் தன்னிடம் வரவே..., "ஜீவி..., ஐ கேன் மேனேஜ்..., யூ கோ..." காதலர்களுக்கு நடுவில் தான் இடைஞ்சலாக இருக்க அவள் விரும்பவில்லை.

"அதை விடு..., அண்ணாகிட்டே என்ன சொன்ன? ஏன் அவங்க முகம் ஒரு மாதிரி ஆகிடுச்சு...?" கவலையாக கேட்டாள்.

"நான்..., தெரியலையே..." உரைத்தவள், பரத்தை திரும்பிப் பார்த்தாள்.

"ஐ வில் ஆஸ்க் ஹிம்..." அவனிடம் செல்லப் போக...,

"நீ ஆணியே..." துவங்கியவள், "உடனே எதையும் செய்ய வேண்டாம்..., பாத்துக்கலாம்..." ஏனோ அதற்குமேல் அவர்களாலும் விளையாட முடியவில்லை.

உடை மொத்தமும் நனைந்திருக்க, "ஹேமா..., நீ போய் கார்ல இருந்து பேகை எடுத்துட்டு வா..., ட்ரெஸ் சேன்ஜ் பண்ணலாம்..." அவளை அனுப்பியவள், நட்ராஜை ஏறிட, அவள் பரத்திடம் பேச விரும்புவதை உணர்ந்து, அவனும் ஹேமாவுடன் சென்றான்.

அவள் பரத்தின் அருகில் அமர்ந்தவள், சில நொடி மௌனத்துக்குப் பிறகு, "அண்ணா..., உங்ககிட்டே ஒரே ஒரு விஷயம் சொல்லணும். ஹேமா எப்பவுமே எதையுமே உள்நோக்கத்தோட சொல்ல மாட்டா. அது அவளுக்கு தெரியாது..., வராது.

"அவ எதையாவது சொன்னால்..., நேரடியா அவகிட்டே கேட்டுடுங்க. அதை அவ கண்டிப்பா ஏத்துப்பா. ஆனா..., மனசுக்குள்ளே வச்சுட்டு புழுங்காதீங்க. அதை அவளால் தாங்கிக்க முடியாது. ப்ளீஸ்..." அவனது கசங்கிய முகம், அவனிடம் உடனே பேசத் தூண்டியது.

"இல்லம்மா..., எனக்குப் புரியுது. இது..., வேற..., நீ போ..." தன்னை சரிப்படுத்திக் கொண்டான்.

அவள் செல்லவே..., 'ச்சே..., அதான் அவ விளையாட்டா சொல்றான்னு தெரியுதே..., பிறகு ஏன்...?' தன்னையே மானசீகமாக கடிந்து கொண்டவன், இயல்பானான்.

அதன் பிறகு..., உடை மாற்றி, உணவருந்திவிட்டு அவர்கள் அங்கிருந்து கிளம்புகையில் நேரம் பத்தை தொட்டிருந்தது. நட்ராஜ் ஜீவித்யாவை அவள் வீட்டில் விட, பரத் ஹேமாவை அவள் வீட்டில் விட்டான். அவன் காரில் இருந்து இறங்கவே..., மென்மையாக அவனை அணைத்து விடுவித்தவள், "குட் நைட் பரத். இட் வாஸ் அ ஒண்டர்புல் டே..." பரவசமாய் உரைக்க, அவள் மகிழ்ச்சியில் கலந்துகொள்ள முடியாமல் சற்று திணறிப் போனான்.

எதையோ இழக்கும் உணர்வு..., அதைவிட, அவளது இயல்பான நடத்தை அவனை மேலும் துவளச் செய்தது. "குட் நைட்..." முனகிவிட்டு கிளம்பிவிட்டான்.

ஹேமாவை தேடி அவள் அறைக்கு வந்துகொண்டிருந்தான் பரத். ஹேமாவை திருமணத்துக்கு அழைத்துவரும் பொறுப்பை பரத்திடம் கொடுத்திருந்தாள் ஜீவித்யா. திருமணம் நட்ராஜின் ஊரில் என்பதால், ஹேமா அவளோடு செல்வதை மறுத்துவிட்டாள். எனவேதான் அவளை தேடி வந்தான்.

ஹேமா இப்பொழுது பகல் டியூட்டி வேண்டுமென்று கேட்டு வாங்கிவிட்டாள். தனத்தை இந்த நான்கு நாட்களாக பார்க்க போகவில்லை. அவரை போனில் அழைத்து பேசினாள். தன் முடிவப் பற்றியும், அவர்கள் திட்டத்தைப் பற்றியும் அவரிடம் சொல்லிவிட்டாள்.

அதாவது பரத்தை திருமணம் செய்ய சம்மதமென்று. எனவே அவள் வீட்டுக்கு வராததைப் பற்றி அவரும் கவலைப் படவில்லை. எப்படியும் நம் வீட்டுக்கு வரப் போகிறாளே என்று திடனாக இருந்தார்.

இதன் இடையில் ஹேமாவின் விருப்பப்படி அவளது போட்டோ ஒன்றும் அவளது அலைபேசி எண்ணும் வைத்த ஒரு கவர் பரத்திடம் கொடுக்கப் பட்டிருந்தது. அதாவது தனம் பார்த்திருக்கும் பெண்ணின் புகைப்படமும் அலைபேசி எண்ணும் என்ற பெயரில்.

அதை அவன் தொட்டுகூட பார்க்கவில்லை. யோசனையோடே வந்தவன் எதையும் யோசிக்காமல், அதாவது அவள் அனுமதி வாங்காமலே அறையை தள்ளிக்கொண்டு நுழைந்தான். அந்த நேரம் ஹேமா வேலையை முடித்துக் கொண்டு சாப்பிட கிளம்பிக் கொண்டிருந்தாள்.

அவளை பார்த்த பிறகே தான் செய்த மடத்தனம் அவனுக்கு உறைத்தது. அவன் பேசாமலாவது கதவை சாற்றியிருக்கலாம். அதை விட்டு, "ஐ'ம் சாரி", என்று சட்டென உளறி கொட்டினான்.

ஹேமாவும் அந்த குரலில் கோபமாக நிமிர்ந்தவள் அவனைப் பார்த்ததும் சட்டென குறும்பு கொப்பளிக்க, "அதான் உள்ளே வந்துட்டியே இன்னும் என்ன சாரி. கதவை முதல்ல மூடு", என்றாள் சாதாரணமாக.

அங்கே நடந்தது இதுதான். அன்று அவள் போட்டிருந்த உடைக்கு ஒரு ஓவர் கோட் வரும். எனவே அதை கழற்றி வைத்துவிட்டு, அந்த மருத்துவமனையின் விதிமுறைக்கு ஏற்ப டாக்டர் கோட் அணிந்திருந்தாள்.

இப்பொழுது வேலை நேரம் முடிந்து வீட்டுக்கு கிளம்புவதால் டாக்டர் கோட்டை கழற்றிவிட்டு அவளது ஓவர் கோட்டை(coat) அணியும் இடைவெளியில்தான் பரத் உள்ளே நுழைந்து அவளை பார்த்தது.

ஹேமா சட்டென அவளது கோட்டை அணிந்து கொண்டாள். ஆனால் அந்த இடையில் அவன் கண்கள் பாய்ந்த இடம் கொஞ்சம் அபாயகரமானதே. அதன் தாக்கத்தில் இருந்து வெளிவரவே அவனுக்கு கொஞ்ச நேரம் ஆனது.

ஹேமாவோ அவன் செய்கையில், மனதுக்குள் சிரித்துக் கொண்டவள், 'மனசுக்குள் இவ்வளவு ஆசையை வச்சுட்டு ஏண்டா உன் காதலை மறைக்கிற...?' மனதுக்குள் அவனிடம் கேட்டவள், அவளது டாக்டர் கோட்டை மடித்து வைக்கும் சாக்கில் திரும்பிக் கொண்டாள். கிடைத்த இடைவெளியில் பரத்தும் தன்னை நிலைப் படுத்திக் கொண்டான்.

"சொல்லு பரத் என்னை தேடி வந்திருக்க. உன்கிட்டே கேக்கணும்னு நினைத்தேன் உனக்கு பொண்ணு பாத்திருக்காங்களாமே", சாதாரணமாக கேட்டாள்.

அங்கிருந்த இனிமையான சூழல் நொடியில் தலைகீழாக மாறியது. "ஆமா அம்மா பார்த்த பொண்ணு", அவனும் அதே குரலில் பதில் சொன்னான்.

"பொண்ணு எப்படி இருக்கா", கொஞ்சம் பதட்டமாகத்தான் இந்த கேள்வியை கேட்டாள். அதாவது அவன் குறும்பாக பதில் சொன்னால் அந்த புகைப்படத்தில் என்னை பார்த்திருக்கிறான் என்று தெரிந்துவிடும். இல்லை என்றால் தன் சந்தோசத்துக்கு இப்போதைக்கு குறை வராது என்று எண்ணினாள்.

'யாருக்கு தெரியும்', மனதுக்குள் நினைத்தாலும், "ம்... ரொம்ப அழகா இருக்கா. எனக்கு புடிச்சுருக்கு", அவள் கேட்காத கேள்விக்கும் பதில் சொன்னான்.

"அப்படியா. அவங்க என்ன செய்யிறாங்க. பொண்ணு வீடு எங்கே. அவங்க கூட பிறந்தவங்க எத்தனைபேர்", குறும்பாக கண்களை சிமிட்டி சிரித்தவாறே கேட்டாள்.

அவனுக்கு தெரிந்தால் தானே பதில் சொல்லுவதற்கு. எதையுமே கேட்காத தன் முட்டாள்த்தனத்தை நொந்தவாறே, தாய் பெண்ணும் மருத்துவர் என்று சொன்னது லேசாக ஞாபகம் வர அதையே சொன்னான்.

"அப்படியா நல்ல விஷயம்.  எந்த.....", அவள் பேச்சை தடுத்தான் அவன்.

"என்னை பிறகு விசாரிக்கலாம். நீ எப்போ கிளம்பற, நான் வந்து உன்னை கூட்டி போகிறேன். அதை சொல்லத்தான் இங்கே வந்தேன். நீ என்னன்னா என்னையவே விசாரிச்சுட்டு இரு", எப்பொழுதும் மயக்கும் அவள் புன்னகை அவன் ஆத்திரத்தை கிளற கோபமாகவே சொன்னான்.

தனக்கு பெண்ணை பிடித்திருக்கிறது என்று சொன்ன பிறகும் அவள் வருத்தப் படாமல் சிரித்தது அவனுக்கு பிடிக்கவில்லை. அவன் எண்ணம் போகும் திசையை உணர்ந்தவன் தன்னையே குட்டிக் கொண்டான்.

'ச்சே......, நான் மட்டும் கல்யாணம் செஞ்சு சந்தோசமா இருக்கணும். அவ கவலை படணுமா. வேண்டாம் அவள் என் காதலை உணராமலே போகட்டும்', என்று எண்ணினான். 'நீ சந்தோசமாக இருப்பாயா?' என்ற மனசட்சியின் குரலை அவள் செவிகொடுத்து கேட்கவே இல்லை.

"இப்போ நான் என்ன கேட்டேன்னு இப்படி கோபப்படுற. வீட்டில் இருந்து ஒரு நாலரை மணிக்கு கிளம்பலாம் என்று நினைக்கின்றேன். அது போதுமா? இல்ல சீக்கிரம் கிளம்பணுமா?" அவள் கேட்க,

"அது போதும்..., சரி அப்போ நீ கிளம்பி ரெடியா இரு. நான் வந்து கூட்டி போறேன்", சொல்லிவிட்டு அவள் பதிலை எதிர் பார்க்காமல் சென்றான்.

"என்னதான் மனசுக்குள் நினைத்தாலும் அதை வெளியில் சொல்ல மாட்டியா. உனக்கு இருக்குடா", வாய் விட்டு புலம்பியவாறு சென்றாள் அவள்.

# பகுதி - 18

பரத்தின் கார் சர்வீசுக்கு சென்றிருக்க, ஹேமாவின் காரை அசுர வேகத்தில் விரட்டிக் கொண்டிருந்தான் பரத். ஹைவேயில் வெண்ணையாய் வழுக்கிய காரின் வேகத்தை ரசித்தவாறே..., பின்னணியில் ஒலித்த இசையின் ரிதத்தில் தன்னை தொலைத்துக் கொண்டிருந்தாள் ஹேமா.

"பரத்..., யுவர் டிரைவிங் சூப்பர்..." அவளது பாராட்டில் மென்மையாய் புன்னகைத்தவன், அவளுடன் இருக்கும் மணித்துளிகளை தன்னை மீறி ரசித்தான்.

அதைவிட..., முழுமையான கல் வேலைப்பாடு மிகுந்த உடையில், தேவதையென ஜொலித்த அவளை, கடைக்கண்ணால் ரசித்தான். 'இந்த அழகு மொத்தமும் எனக்கே வேண்டும்...' ஒரு மனம் தவியாய் தவித்தது.

கார் திண்டிவனம் தாண்டி..., கிளைச் சாலையில் பிரிந்து, ஊருக்குள் ஓட, சாலை சற்று சரியில்லாமல்தான் இருந்தது. அடுத்த அரைமணி நேரத்தில் கார் ஒரு மண்டபத்துக்கு முன்னால் நிற்க, அதன் ஒளி வெள்ளத்தை மிகவும் ரசித்தாள்.

"வாவ்..., பென்டாஸ்டிக்..." காரை அவன் பார்க்கிங்கில் நிறுத்த, அவன் கரத்தை கோர்த்துக் கொண்டவள், அவனுடன் சேர்ந்தே மண்டபத்துக்குள் நுழைந்தாள்.

அவர்கள் உள்ளே வரவே..., சரவணன் வேகமாக வந்து அவர்களை எதிர்கொண்டான். "வாங்க..., என்ன இவ்வளவு நேரம்...? ஜீவி உங்களை கேட்டுட்டே இருந்தா. இப்போதான் மேடை ஏறினாங்க..." அவர்களை அழைத்துச் சென்று இருக்கையில் அமர வைத்தவன், கூல்டிரிங் பாட்டிலை கையில் திணித்தான்.

"சரவணா..., பந்தி எங்கே நடக்குது...? ஏதாவது ஹெல்ப் வேணுமா...?" கேட்டவன் இருக்கையில் இருந்து எழுந்தான்.

"ஏற்கனவே எல்லா ஏற்பாட்டையும் நீதானே செய்தாய்..., இங்கே எல்லாம் பக்காவா இருக்கு. கூடவே மாப்பிள்ளை வீட்டு சொந்தம் எல்லாம் ஆளுக்கு ஒரு வேலையை இழுத்து போட்டு செய்யிறாங்க..., எனக்கே இங்கே வேலை இல்லை..." அவன் முகத்தில் அப்படி ஒரு நிறைவான புன்னகை.

"ஆமா..., இப்படி ஒரு சொந்தம்..., பந்தம்..., உற்றார்..., உறவினர்ன்னு சேர்ந்து நடத்தும் திருமணம் எப்பவும் சிறப்பாவே இருக்கும். அதனால் தானே நாமளும் கல்யாணத்தை இங்கே வச்சுக்க சம்மதிச்சோம். நம்ம ஜீவித்யா ரொம்பவே கொடுத்து வச்சவ..." ஆண்கள் இருவரும் பேச, ஒற்றை ஆளாக நிற்கும் தன்னைப் பார்த்து முதல் முறையாக வருந்தினாள்.

இவர்கள் அளவுக்கு இல்லை என்றாலும், தன் அப்பாவும் அண்ணனும், தனக்கு திருமணம் என்றால், நிச்சயம் மகிழ்ந்திருப்பார்கள் என்பது அவளுக்குத் தெரியும்.

ஜீவித்யா அப்பொழுதுதான் இவர்களைப் பார்க்க, 'மேலே வா...' தோழியை அழைத்தாள்.

"பரத்..., ஜீவி கூப்பிடுறா..." அவனை அழைத்தாள்.

"நீங்களும் போயிட்டு வாங்க..." சரவணன் உரைக்க, "சேர்ந்தே போகலாம்..., வா..." அவனையும் சேர்த்துக் கொண்டான்.

தன் கையில் இருந்த பரிசுப் பொருளோடு மேடை ஏறியவள், அதை அங்கேயே அவர்கள் கையில் கொடுத்து, இருவரையும் அந்த மோதிரங்களை மாற்றிக்கொள்ள சொன்னாள்.

"ஹேமா..., உனக்கு இதே வேலையா போச்சு..." பிளாட்டினம் கப்பிள் ரிங்கில், நடுவில் வைரம் ஜொலிக்க, அதன் விலை எவ்வளவு இருக்கும் என அவர்களுக்குத் தெரியாதா என்ன?

"யூ ஆர் மை பெஸ்ட் ப்ரண்ட்..., சோ..." அதற்குமேல் அவர்களால் தாமதிக்கவோ, விவாதிக்கவோ

முடியவில்லை. பின்னால் கூட்டம் அலை மோத, அவர்கள் மோதிரம் மாற்றி, புகைப்படம் எடுத்தவுடன், கீழே இறங்கினார்கள்.

ஹேமாவை மேடையில் உடன் வைத்துக்கொள்ள ஜீவித்யாவுக்கும் விருப்பம்தான். ஆனால்..., அவளுக்கு கூட்டம் சற்று அலர்ஜி என்பதால் அவளை பரத்தோடு அனுப்பினாள்.

சரவணனை அழைத்தவள், "அண்ணா..., ஹேமா சாப்ட்ட உடனே, என்னோட ரூம்ல விட்டுடு. ஒரு மாதிரி அன் ஈசியா பீல் பண்ணுவா..." அண்ணனிடம் உரைத்தாள்.

பரத்தும், ஹேமாவும் உணவை அருந்த, பரத் சரவணனோடு இணைய, அவளை ஜீவித்யாவின் அறையில் விட்டார்கள். வரவேற்பு அங்கே நிகழ, அனைத்தையும் மேலே இருந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள் ஹேமா.

விடியற்காலையில் முகூர்த்தம் என்பதால், அவள் அங்கேயே தங்குவதாக ஏற்கனவே முடிவு செய்யப் பட்டது. பரத், சரவணனோடு தங்கிக்கொள்ள, ஜீவித்யாவோடு ஹேமா இணைந்தாள்.

வரவேற்பு நள்ளிரவு வரை நடைபெற, அறைக்கு வந்து, உடை மாற்றி, குளித்துவிட்டு படுக்கையில், மேலும் ஒருமணி நேரம் கடந்திருந்தது. ஹேமா அமைதியாக உறங்கிவிட, நட்ராஜ் அலைபேசியில் குறுஞ்செய்தியை அனுப்ப, அவனோடு உரையாடியதில் நேரம் போனதே தெரியவில்லை.

அவள் கண் அயர்ந்த நேரத்தில், "ஜீவி..., எழுந்து தயாராகு..., நேரமாகுது..." தாயின் குரல் கேட்க, இமைகளை பிரிக்கக் கூட அவளால் முடியவில்லை.

சிரமப்பட்டு கண் விழித்தவள், குளித்து கிளம்ப, ஹேமாவையும் தயாராகச் சொன்னார்கள். கூரைப்புடவை அவள் கட்ட, "ஜீவி..., என்ன இது...?" இவ்வளவு சாதாரணமாக உடை உடுத்துகிறாளே எனக் கேட்டாள்.

"இதுதாம்மா கூரைப் புடவை..., கல்யாணம்..., குழந்தையை தொட்டில்ல போடுறதுக்கு..., எல்லாம் இந்த புடவைதான்..., நம்ம பாரம்பரியம்..." ஜீவித்யாவின் அன்னை உரைக்க, புரிந்தும் புரியாமல் தலை அசைத்து கேட்டுக் கொண்டாள்.

நல்ல நேரத்தில், நட்ராஜ் அவள் கழுத்தில் மங்கலநாண் பூட்டி, அவளை தன்னவளாக ஆக்கிக் கொள்ள, தொடர்ந்த சடங்குகளில் இருவரும் ஈடுபட்டார்கள்.

இரவில் சரியாக உறங்காதது, காலையில் சீக்கிரம் எழுந்தது, புகை, சடங்குகள் என ஜீவித்யா அப்பொழுதே சற்று களைப்பாக உணர்ந்தாள். சற்று நேரத்தில் ஓய்வெடுக்கலாம் என அவள் நினைக்க, அதற்கு மாறாக, அவர்கள் குலதெய்வ கோயிலுக்குச் சென்று பொங்கல் போட வேண்டும், அங்கே மீண்டுமாக சில சடங்குகள் இருக்கிறது என உரைக்க, அனைவரும் செல்ல தயார் ஆனார்கள்.

ஹேமா பரத்தை தேட, அவள் தேடல் உணர்ந்து அவள் அருகில் வந்தான். "என்ன ஹனி..., டயடா இருக்கா?" அவன் கேட்க,

"எஸ்..., வான்னா டேக் ரெஸ்ட்..., பீலிங் ஸ்லீப்பி..." அவளுக்குமே இரவில் ஆழ்ந்த உறக்கமில்லை. எனவே அவள் கண்களும் சிவந்து, தடித்திருந்தது.

"நாம கிளம்பலாம்..." அனைவரிடமும் சொல்லிவிட்டு கிளம்பி விட்டார்கள்.

முன்னிருக்கையை நன்றாக சாய்த்து போட்டுக்கொண்டு அவள் படுத்துவிட, காரை சற்று நிதானமாகவே செலுத்தினான்.

இங்கே..., கோவில் அருகில் இருக்கும் என அவள் எதிர்பார்க்க, பயணத்துக்கே இரண்டு மணி நேரம் கடந்தது. காரில் தூங்கலாம் என நினைத்தால், இடையில் வந்த சிறிய கோயில்களில் எல்லாம் வண்டியை நிறுத்தி, தேங்காய் உடைத்து, வணங்கி..., ஒரு வழி ஆகிவிட்டாள்.

தன்னை மீறி சில நேரம் கண்ணயர..., அடுத்த நிமிடங்களில் அவளை எழுப்ப, கொஞ்சமாக இருந்த தலைவலி மண்டையைப் பிளக்கத் துவங்கியது. ஒரு வழியாக பொங்கல் வைத்து, அங்கேயே உண்டு..., வீட்டுக்கு வர மாலை ஐந்து மணிக்குமேல் ஆகி விட்டது.

வீட்டில் விளக்கேற்றி..., குளித்து..., உடை மாற்றி..., மீண்டும் பூஜை அறையில் விளக்கேற்ற..., தலைவலியின் தாக்கத்தில் ஒருமுறை வாந்தியெடுக்கும் அளவுக்கு ஆனது அவள் நிலை.

நட்ராஜோ..., அவள் இருக்கும் இடத்தையே சுற்றிவர, கூடியிருந்த பெண்களின் கேலிக்கு ஆளானாலும், அதை அவன் கண்டுகொள்ளவே இல்லை.

முதலிரவில், அவளை தனிமையில் சந்திக்கும் நொடிகளுக்காக அவன் ஏங்க, அவன் எண்ணம் புரிந்தவளுக்கோ..., தன் உடல்நிலை ஒத்துழைக்க வேண்டுமே என்ற கவலையே பிரதானமாக இருந்தது.

ஆனால்..., அதற்குமேல் அதிகம் அவர்களை சோதிக்க விரும்பாமல், ஏழரை மணிக்கு இரவு உணவை உண்டவர்கள்..., எட்டு மணிக்கு ஜீவித்யாவை பால் டம்ப்ளரோடு அவன் அறைக்கு அனுப்பினார்கள்.

படபடக்கும் இதயத்தோடு, கால்கள் பின்ன, அவன் அறைக்குள் நுழைந்தாள் ஜீவித்யா. அவளை விழுங்கும் பார்வையோடு அவளை எதிர்கொண்ட நட்ராஜ், அறைக்கதவை தாழிட்டுவிட்டு, அவளை ஏறிட்டான்.

அவன் கண்களில் வழிந்த வேட்கை அவளைச் சுட, சட்டென தன் பார்வையை தழைத்துக் கொண்டாள். அவன் பார்வையோ..., அவள் தலைமுதல் கால்வரை வருடிச் சென்றது.

அவன் அமைதியாக, அங்கேயே நிற்க, மெதுவாக அவனை ஏறிட்டவள், அவன் பார்வையின் வேகம் தாளாமல், கையில் இருந்த டம்ப்ளரை அழுந்த பற்றிக் கொண்டாள்.

இதயம் தாறுமாறாக துடிக்க, அதையும் மீறி தலைவலி மண்டையைப் பிளந்தது. உண்ட உணவு அனைத்தும் வெளியேறியிருக்க, தலைவலி மட்டுப்படவே இல்லை. உடல் மொத்தமும் ஓய்வுக்காய் கெஞ்சியது.

ஆனால்..., தன் எதிரில், ஐந்து வருட காத்திருப்பை சுமந்துகொண்டு, ஆர்வத்தோடு காத்திருக்கும் நட்ராஜையும் ஏமாற்ற அவளுக்கு விருப்பமில்லை. சில வேளைகளில், மனம் ஒத்துழைத்தாலும், உடல் ஒத்துழைக்காதே..., அப்படி ஒரு நிலை.

அவன், அடிமேல் அடிவைத்து அவளை நெருங்க, அசையாமல் அப்படியே நின்றிருந்தாள். அவளை நெருங்கியவன், ஒற்றை விரலால் அவள் தாடையை நிமிர்த்த, "பால்..." மெதுவாக முனகியவள், அவன் கையில் கொடுத்தாள்.

மறுக்காமல் வாங்கியவன், பாதி பாலை குடித்துவிட்டு, "வித்யா..." வருடும் குரலில் அழைக்க, அவன் குரலும், நெருக்கமும், அவளை மெதுவாக நிமிர்ந்து பார்க்கத் தூண்டியது.

அவனே மிச்சப் பாலை அவளுக்கு புகட்ட, அவள் அருந்தி முடிக்கவே, அவள் கைப்பிடித்து அழைத்துச் சென்று படுக்கையில் அமர வைத்தவன், டம்ப்ளரை அருகில் இருந்த டீபாயில் வைத்தான்.

அவன் இன்னுமே அமைதியாக இருக்க, அவனை ஏறிட, "டயடா இருக்கா...?" அவள் கரத்தை மென்மையாக பற்றிக் கொண்டு கேட்டான்.

அவனுக்குத் தெரியாதா என்ன...? அதே அலைச்சலை அவனும் உணர்ந்துதானே இருக்கிறான். அவனுக்கு எப்படி அவள் நிலை புரிகிறதோ..., அப்படித்தானே அவன் மனமும் அவளுக்குப் புரியும். எனவே 'ஆம்..., இல்லை...' என தலையை உருட்டினாள்.

அவள் நெற்றியில் மென்மையாக இதழ் ஒற்ற, சட்டென எழுந்தவள், கழிவறைக்குச் சென்று, வாந்தியெடுக்க, அவள்

பின்னால் ஓடியவன், "வித்யா..., பாத்து..." அவள் தலையை பின்னால் இருந்து தாங்கிக் கொண்டான்.

"நீங்க போங்க..., நான் வரேன்..." அவள் சங்கடமாக உரைத்தாள். முதல் இரவில் நிகழும் நிகழ்வா இது? தன்னை நினைத்தே அழுகையாக வந்தது.

"ம்ச்..., நாம பார்க்காத விஷயமா? நீ முதல்ல பேஸ் வாஷ் பண்ணு..." மென்மையாக கடிந்தவன், அவளை அழைத்துக்கொண்டு வந்தான்.

அவள் நெற்றியில் இரண்டு பக்கமும் விரல் வைத்து அழுத்தியவன், "தலைவலி ரொம்ப இருக்கா..." கேட்டவன், ஷெல்பில் இருந்து மாத்திரையும், தண்ணீரையும் எடுத்து கொடுத்து அவளை விழுங்க வைத்தான்.

அவள் கலங்கும் கண்களை சிரமப்பட்டு கட்டுப்படுத்த, "வித்யா, ஜீவல் எல்லாம் கழட்டிட்டு, ட்ரெஸ் மாத்திட்டு படுத்துக்கோ..." அவள் தலையை வருடினான்.

சட்டென அவன் நெஞ்சில் சாய்ந்தவள், "சாரி..." மெல்லியதாக விசும்பினாள். இந்த இரவுக்கான அவனது எதிர்பார்ப்புகள் என்னவென்று அவளுக்குத் தெரியாதா என்ன?

அவளை மென்மையாக அணைத்தவன், "இப்போ எதுக்கு சாரி எல்லாம்..., இந்த ஒரு இரவோடு உலகம் அழியப்போகுதா என்ன? காலம் நமக்கு முன்னாடி விரிந்து கிடக்கு, பிறகு ஏன்...? மனசைப் போட்டு குழப்பிக்காமல் படு..." அவள் கண்ணீர் துடைத்து, அவள் நகைகளை கழட்ட உதவியவன், அவள் உடை மாற்றி படுக்கும் வரைக்கும் அவளையே பார்த்திருந்தான்.

அவன் முகம் பார்க்க முடியாமல், அவனுக்கு மறு பக்கம் சென்று, முதுகு காட்டி படுத்துக் கொண்டாள்.

"குட் நைட்..." அவன் உரைக்க, 'நிச்சயமா இல்லை...' மனதுக்குள் வெதும்பியவள், மெல்லிய தலை அசைப்போடு விழி மூடிக் கொண்டாள்.

கடைவிழியோரம் கண்ணீர் கோடாய் வழிய, களைப்பும், மருந்தின் உதவியோடு அவள் விழிகள் தானாகவே உறக்கத்துக்குச் சென்றது.

நட்ராஜோ..., விளக்கை அணைத்துவிட்டு, அவள் அருகில் படுத்தவன், அவள் முதுகையே பார்த்திருந்தான். அந்த இரவுக்கான ஏக்கமும், எதிர்பார்ப்பும் அதிகம் இருந்தாலும், அவள் உடல்நிலையை மீறி, அவளை கட்டாயப்படுத்த அவன் மனம் விரும்பவில்லை.

அவன் விழிகளும் தானாகவே உறக்கத்துக்குச் சென்றது. நேரம் நள்ளிரவைக் கடந்து இரண்டுமணி நேரம் போயிருக்க, அந்த நேரம், சட்டென ஜீவித்யாவின் உறக்கம் கலைந்து போனது. ஒரு நொடி தான் எங்கே இருக்கிறோம் எனக் குழம்பியவள், இரவு நடந்தவை நினைவுக்கு வர, வேகமாக தன் அருகே பார்த்தாள்.

இடக்கரத்தை தலைக்கு அடியில் வைத்து, காற்றுக்கு முன்சிகை கலைந்தாட, விழி மூடி ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தான் நட்ராஜ். அவள் பார்க்கையிலேயே அவன் சற்று அசைய, வேகமாக விழி மூடிக் கொண்டாள்.

சற்று நேரம் கழித்து, ஓசை எழுப்பாமல், பாத்ரூம் சென்று திரும்பியவள், நீர் அருந்திவிட்டு, படுக்கையில் விழுந்தவள், நட்ராஜின் முகத்தை பார்த்தவாறே படுத்துக் கிடந்தாள்.

தன் தேவை மறந்து, தன்னை அவன் கவனித்த விதம் நெஞ்சை வருட, விடிவிளக்கின் ஒளியில் அவனையே பார்த்திருந்தாள்.

அவள் பார்த்துக்கொண்டிருக்கும் பொழுதே, உறக்கத்தில் தன் கையை நீட்டி எதையோ தேடினான். அவனது தேடல் கைகளுக்கு அகப்பட, வேகமாக தன்னை நோக்கி இழுத்தவன், தன் முகத்தை அழுத்தமாக அதில் புதைத்துக் கொண்டான்.

திடுமென நடந்த விஷயத்தில் முழுதாக அதிர்ந்து கத்தப் போனவள், சட்டென தன்னை மீட்டுக் கொண்டாள். தன் மார்பில் முகம் புதைத்திருந்த அவனை அணைக்கவும்

முடியாமல், விலக்கவும் முடியாமல் சற்று திணறிப் போனாள். நட்ராஜ் நல்ல உறக்கத்தில் இருப்பதை அவளால் உணர்ந்துகொள்ள முடிந்தது.

கூடவே, அவனது தலையணை என, அவன் தன்னை நினைத்திருப்பதும் புரிய, அவஸ்தையாய் உணர்ந்தாள். அவனோ, தன் முகத்தை இன்னும் அழுத்தமாக புதைக்க, அவன் கன்னத்தை அழுத்தமாக உரசியது அவளது இரவு உடையின் ஜிப்.

உறக்கத்திலேயே தன் கன்னத்தை உறுத்தும் பொருளை அவன் விலக்க முயல, 'ஜி...க்...' என்ற சிறு ஒலியோடு இரவு உடையின் ஜிப் விலக, சுத்தமாக இதை எதிர்பாராதவள், திகைத்துப் போனாள்.

ஏற்கனவே அவனது அணைப்பு ஒரு அதிர்ச்சி என்றால், அவன் மார்பில் புதைந்தது, மேலும் அழுத்திக் கொண்டது, இறுதியாக அவன் செய்கையில் நிலை குலைந்து போனாள்.

நேற்றுவரை, தன் கரங்கள் மட்டுமே உணர்ந்த தன் தேகத்தில், முதல் முறையாக அவனது தீண்டல்..., "நட்ராஜ்..." தயக்கமும், திகைப்புமாக அவனை அழைத்தவள், மேலே முன்னேறாதவாறு அவன் கரத்தை பற்றிக் கொண்டாள்.

அவளது அழைப்பில் பட்டென கண் விழித்தவன், தான் இருக்கும் இடம் புரிய, கூடவே..., கனவில் தான் செய்த செய்கையும் நினைவிற்கு வர, வேகமாக எழுந்து அமர்ந்தான். அவன் விலகவே, தன் இடக்கரத்தால் உடையை இழுத்து மறைத்தவள், சிறு தடுமாற்றத்தில் அவனை நோக்கினாள்.

'இப்போ என்ன செய்ய..., ஜிப்பை போடவா..., வேண்டாமா...? ஏதாவது நினைத்துக் கொள்வானோ...?' மூளைக்குள் வேகமாக யோசனை ஓட, அமைதியாக அமர்ந்திருந்தாள்.

"வித்யா..., சாரி..., தூக்கத்தில், வழக்கம்போல் என்னோட பில்லோன்னு நினைச்சுட்டு..., வித்தியாசமே தெரியலையா..., ரொம்ப சாஃப்ட்டா..." சிறு அதிர்ச்சியில் அவனை ஏறிட, தன் வார்த்தைகளை அப்படியே நிறுத்திக் கொண்டான்.

அவள் கரங்கள் இன்னுமே உடையை பற்றிப் பிடித்திருக்க..., "நானே வேண்ணா..." தன் கரத்தை அவள் பக்கம் நீட்டியவன், அவள் கண்கள் இன்னும் அதிர்ச்சியில் விரிய, தன் கரத்தை பின்னால் இழுத்துக் கொண்டான்.

ஒரு மாதிரி அவஸ்தையான சங்கடமான அமைதி அங்கே நிலவ, தன் தலையை அழுந்த கோதிக் கொண்டவன், தன்னை நிதானத்துக்கு கொண்டு வந்தான்.

"தலைவலி இப்போ பரவாயில்லையா...?" அவளிடம் கேட்க,

"ம்..., இப்போ இல்லை..." பார்வையை தழைத்துக் கொண்டாள். வலக்கரம் போர்வையை விரல்களால் சுரண்ட..., இருவரும் எதிரெதிராய் பார்த்துக் கொண்டனர்.

"ஓ..." இரவு விளக்கின் ஒளியில்..., அவள் அமர்ந்திருந்த தோற்றம் அவனை தடுமாறச் செய்ய, அவன் தேகம் மெதுவாய் சூடேறியது. அவளுக்கோ..., தேகமும், மனமும் மெல்லியதாய் நடுங்க, "நான்..., படுத்துக்கவா...?" மெதுவாகக் கேட்டாள்.

முகத்தில் கவிழ்ந்த சிறு ஏமாற்றத்தோடு அவளை நோக்கியவன், "ம்..." முனகினான்.

'படுக்கணுமா...?' எனக் கேட்டிருந்தால் சரியாக இருந்திருக்குமோ...? அவன் மனம் கேள்வி எழுப்ப, அவன் முகத்தை ஒரு நொடி ஏறிட்டவள், 'அதான் தலைவலி இல்லன்னு சொல்லிட்டேனே..., இதுக்கு மேலே நான் என்ன சொல்லட்டும்...?' பார்வையால் வினவியவள், தயக்கமாக, அவனுக்கு முதுகு காட்டி படுத்துக் கொண்டாள்.

அவள் படுக்கவே..., தன் கையால் படுக்கையை ஓங்கி குத்தியவன், அவள் முதுகை வெறித்தான். படுத்தால்,

சத்தியமாக உறக்கம் வராது என்று அவனுக்குப் புரிந்தது. இதற்குமேல் முடியாது எனத் தோன்ற, மெதுவாக அவளை நெருங்கினான்.

அவன் நெருங்கி வருவதை உணர்ந்தவளின் இதயம், படபடப்பாய் அடித்துக் கொண்டது. அவன் தேகம் முழுவதும் அவள் முதுகில் படிய, முகத்தை தலையணையில் புதைத்துக் கொண்டாள்.

அவன் கரம் அவள் இடையில் பதிய, அவள் ரத்தவோட்டம் தாறுமாறாய் எகிறியது. அவனது மூச்சுக்காற்று அவளது பின்னங்கழுத்தில் சுட, கரங்களோ அவள் இடையை அழுத்தமாக பற்றியது.

தன் இதழ்களால் அவள் காதுமடலை வருடியவன், சூடாக தன் இதழைப் புதைத்தான். "தூங்கிட்டியா...?" சீண்டும் குரலில் கேட்டவனது கரங்கள், அழுத்தமாய் அவள் இடையில் இருந்து முன்னேறியது.

"ம்..., ம்ஹூம்..." சிறு தகிப்பும், மறுப்புமாய் அவன் கரத்தை தடுக்க முயன்றாள். ஏதோ மாய இருளுக்குள் தொலைந்து போகும் உணர்வு.

"வித்யா..., அஞ்சு வருஷமா கனவில் மட்டுமே உணர்ந்த விஷயம்..., இப்போ..., இங்கே..., எனக்கு ரியலா..., என் கைகளுக்குள்..., ஐ வான்ட்..." அவள் தன் கரத்தை தடுப்பதை உணர்ந்து..., ஏக்கமாய் உரைத்தான்.

பட்டென தன் கரத்தை விலக்கிக் கொண்டவள், அதே வேகத்தில் அவன் பக்கம் திரும்பி, அவன் நெஞ்சில் புதைந்து கொண்டாள்.

அவள் கன்னம் தாங்கி..., தன் முகம் காண வைத்தவன்..., "வித்யா..." வார்த்தைகளுக்கு வலிக்காமல் அழைக்க, மூடியிருந்த தன் இமைகளை மெதுவாய் திறந்தாள்.

அவள் விழிகளுக்குள் ஊடுருவியவன்..., நெற்றியில் முத்தமிட்டு, கன்னத்தில் இறங்கியவன்..., ஒரு நொடி அவளை விலக்கி, அவள் இதழ்களில் அழுந்த

முத்தமிட்டான். அவளுக்கோ..., சிலிர்ப்பாய் தேகம் நடுங்கியது. அவனோ, நிதானமாய் அவள் இதழ்களை சுவைக்க, தனக்குள் நிகழும் ரசாயன மாற்றத்தில், அதன் தாக்கத்தை தாங்க முடியாமல், குழைந்து போனாள்.

"ம்..., ம்..." அவன் இதழ் தீண்டல் சற்று வேகமெடுக்க, மெல்லியதாக முனகியவள், அவனோடு ஒட்டிகொண்டாள்.

எவ்வளவு நேரம் முத்தமிட்டானோ..., கண்கள் கிறங்க, அவன் முத்தத்தில் அவள் திளைத்திருக்க, அவன் இதழ்கள் அவள் கழுத்தில் புதைந்து, அவள் வாசம் உணர்ந்தான். அவன் உணர்வுகள் ஊசி முனையாய் தகிக்க, அவள்மேல் அழுத்தமாய் படர்ந்து, அவள் மேனியில் இறங்கினான்.

அவனைத் தடுக்கவும் முடியாமல், அவன் அழைத்துச் செல்லும் மாய உலகின் கனம் தாளாமல், அவன் சிகையை அழுத்தமாக பற்றிக் கொண்டாள்.

அவனோ, வெகு நிதானமாக தன் தடைகளை விலக்க, "ஏண்டா என்னை இப்படி கொல்ற...?" தன்னை மீறி முனகினாள்.

"இதற்கேவா...?" சிறு சீண்டலாய் வினவியவனது ஈர இதழ்கள் அவள் தேகம் முழுவதும் பயணிக்க, "நட்ராஜ்..., வேண்டாம்..." அவளது போலியான மறுப்பை அவன் கண்டுகொள்ளவே இல்லை.

முனகிய அவள் இதழ்களை கவ்விக் கொண்டவன், அவளுக்கு நெருக்கமாய் மாற, "ஸ்..." அவன் இதழ்களுக்குள் சன்னமாய் அலறினாள்.

அவனிடம் சிக்கியிருந்த தன் இதழ்களை பிடுங்கிக் கொண்டவள், "மெதுவா..." அவனை இழுத்து அணைத்துக் கொண்டவளது கரம், அவன் வெற்று முதுகில் தன் நகக்கண்களை பதித்தது.

"நட்ராஜ்..., முடியலை..." ஒரு கட்டத்தில், அவளால் முடியாமல் போக, சன்னமாய் முனகினாள்.

"வித்யா..." பிதற்றியவன், முழு மூச்சாய் அவளோடு கலந்தான். அவள் நெற்றியில் இதழ் ஒற்றி, தன் திருப்தியை வெளிப்படுத்தியவன், அவளை தன்மேல் போட்டுக் கொண்டான்.

"சாரிடா..., ரொம்ப கஷ்டப்படுத்திட்டனா...?" கேட்டவன், அவளை இறுக்கிக் கொள்ள,

"பண்றதெல்லாம் பண்ணிட்டு கேள்வி வேறையா...?" அவன் நெஞ்சில் குத்தியவளுக்கு, நிச்சயம் அவன் செய்கையால் எழுந்த கோபம் இருந்ததாகத் தெரியவில்லை.

அவள் கரத்தை பற்றி இதழ் ஒற்றியவன், "இன்னுமே என்னால் நம்ப முடியலை வித்யா. எங்கே தூங்கி எழுந்த உடனே கனவா போய்டுமோன்னு ஒரு பயம்..." அவன் அணைப்பு இறுக, அது..., அவன் பலநாள் அனுபவித்த துன்பத்தை உணர்த்த, அவள் நெஞ்சம் சற்று கலங்கித்தான் போனது.

அதை அடக்கியவள், "இது கனவில்லைன்னு நிரூபிக்கவா?" கேட்டவள், அவன் முகம் முழுக்க முத்தமிட, அங்கே மீண்டும் ஒரு காவியம் அரங்கேறத் துவங்கியது.

# பகுதி - 19

நாட்கள் செல்லச் செல்ல ஹேமாவை தான் இழந்துவிட்டோம் என்ற உணர்வே அவனை ஆட்டி படைத்தது. அவள் நெருங்கும் வேளைகளில் எங்கே, என்னை விட்டு போய் விடாதே. உன்னை இழக்க நான் தயாராக இல்லை என்று தன்னை மீறி உளறி விடுவோமோ என்று பயந்தான் அவன்.

அதற்கு முத்தாய்ப்பாக அந்த விஷயம் நடந்தது. தனக்கு ஸ்விம் பண்ண வேண்டும் என்ற ஆசை இருப்பதாக ஹேமா சொல்லவே..., அவளை வீட்டுக்கு வரச் சொல்லியிருந்தான்.

சில நாட்களாக அவள் சீண்டலும், பேச்சும் அவனை கலவரப்படுத்த, அவளை வீட்டுக்கு அழைப்பது அவனுக்கே சிறு பயத்தை கொடுத்தது. ஏதாவது ஒரு தருணத்தில், அவளை தன்னை மீறி தீண்டி விடுவோமோ என்ற பயம் அவனை ஆட்டிப் படைத்தது.

அந்த ஞாயிற்றுக்கிழமை ஹேமா வீட்டுக்கு வருவதாகச் சொல்லவே, தாயை எப்படி சமாளிப்பது என சற்று தடுமாறித்தான் போனான். ஆனால், அவனுக்கு அந்த துன்பத்தை அளிக்காமல், தாய் திருப்பதி போவதாகச் சொல்லவே..., ஆயிரம் அறிவுரை சொல்லி அனுப்பி வைத்தான்.

காலையில் பத்து மணிக்கு அவளது கார், வீட்டின் போர்டிகோவில் நிற்க, "வா ஹனி..." வாசலுக்குச் சென்று வரவேற்றான்.

'இவளை இப்படியா அழைக்க நினைத்தேன்...?' மனம் தவித்தது.

"வீட்ல யாரும் இல்லையா...? அம்மா எங்கே...?" கேட்டவள் பார்வையை சுழற்றினாள்.

ஏற்கனவே தனம் வெளியே செல்வது அவளுக்கும் தெரியும். ஆனாலும் கேட்டாள்.

"அம்மா..., திருப்பதி போயிருக்காங்க..., ஏதோ வேண்டுதலாம்..." உரைத்தவன், அவளை அழைத்துச் சென்று அமர்த்திவிட்டு கோக் டின்னை எடுத்து வந்து கொடுத்தான்.

"முதல்ல ஸ்விம்..., பிறகுதான் இது..." டின்னை கைகளில் வைத்துக்கொள்ள,

"ஓகே..., வா..." அவளை அழைத்துக் கொண்டு மாடிக்குச் சென்றான்.

அந்த ஃபூலைப் பார்த்து ஒரு நொடி ஆச்சரியப் பட்டுப் போனாள். "வாவ்..., ரியல்லி நைஸ்..." அவள் உரைக்க, மெல்லிய புன்னகையில் கேட்டுக் கொண்டான்.

'எல்லாம் உனக்கு பிடித்த மாதிரிதான் இருக்கிறது..., ஆனால்...' மனம் ஏக்கமாய் முனகியது.

"யூ கேரி ஆன்..." அவன் விலகிச் செல்ல,

"பரத்..., ஜாயின் வித் மீ..." அவன் கரத்தை பற்றி அவள் தடுக்க, சற்று திடுக்கிட்டுத்தான் போனான்.

"ம்ச்..., விளையாடாதே..." உரைத்தவன் அவள் முகத்தைப் பார்க்க, நிச்சயம் அதில் மருந்துக்கும் விளையாட்டுத்தனம் இருக்கவில்லை.

'ஹையோ..., இவளுக்கு எப்படி சொல்லி புரிய வைக்க. இவளது சாதாரண அருகாமையே என்னை செயல் இழக்கச் செய்யும்பொழுது, இது...' மனதுக்குள் சற்று நடுங்கித்தான் போனான்.

அவன் முகத்தில் மறுப்பைக் காணவே..., "என் ப்ரொப்போசலைத்தான்  அக்சப்ட் பண்ணிக்கலை. ஜஸ்ட்..., இதாவது..., ஓ..., உனக்கு வரப்போற வொய்ஃப் இதை ஏத்துக்க மாட்டாங்களோ..." ஒரு மாதிரி குரலில் வினவ, மனதுக்குள் சிதறிக் கொண்டிருந்தான்.

'இது தப்பு...' அவன் புத்தி எடுத்துரைக்க, அவனுக்குள் இருந்த காதலனோ, இந்த வாய்ப்பை நழுவ விடாதே...,

கூக்குரலிட்டுக் கொண்டிருந்தான்.

"வரேன்..." அவன் வாய் அவளுக்கான பதிலை கொடுக்க,

"நான் ட்ரெஸ் மாத்திக்கறேன்..." உரைத்தவள், நொடியில் உடை மாற்றி வந்தாள். அவனுக்காக காத்திருக்க, அவனும் ஒரு நீள ஸ்விம் சூட் அணிந்து வந்தான்.

அடர் சிவப்பு வர்ண ஸ்விமிங் உடையில் அவள் இருக்க, அபாயகரமான அதன் கழுத்து இறக்கமும், அவள் மேனியை இறுக்கமாக பற்றியிருந்த அந்த உடையைப் பார்த்தவனுக்குள், சட்டென ஒரு பிரளயம்.

"கம்..." அவனது தடுமாற்றம் எதுவும் அவளுக்குள் இல்லை. அவன் கரத்தைக் கோர்த்தவள், தண்ணீருக்குள் குதிக்க, தானும் அவளோடு விழுந்தான். நீருக்குள் ஒரு மீனைப்போல் அவள் நீந்த, உடன் அவனும் நீந்தினான்.

சில நேரங்களில் இருவருக்கும் போட்டி நேர, அவனை ஜெயிக்கும் அவள் திறமையைக் கண்டவனுக்கு, அவளுக்கு நீச்சல் எவ்வளவு பிடிக்கும் என்பது புரிந்தது.

எவ்வித சீண்டலோ..., பார்வையோ இல்லாமல் அவள் இயல்பாய் இருக்க, அவனுக்குத்தான் நீர் மொத்தமும் சூடாகிப் போன உணர்வு. பார்வையோ, நொடிக்கொருமுறை அவளைத் தழுவி மீள, அவளது வெண்ணிற மேனியில், அந்த சிவப்பு உடை ஏற்படுத்தும் தாக்கத்தில் மூழ்கிக் கொண்டிருந்தான்.

'ச்சே..., என்னை நம்பி..., என்னோடு இருக்கும் அவளுக்கு, அவள் நம்பிக்கைக்கு துரோகம் செய்கிறேன்...' தன்னையே கடிந்துகொண்டாலும், மனதுக்குள் நிறைந்திருக்கும் அவளை, ரசிப்பதை அவனால் நிறுத்த முடியவில்லை.

"கொஞ்சம் ரெஸ்ட் எடுக்கலாம்..." கிட்டத்தட்ட முக்கால்மணி நேரம் விடாமல் நீந்தியவள், படிகளில் ஏறி, கரையில் அமர்ந்து, தண்ணீருக்குள் கால் போட்டுக் கொண்டாள். அவனும் அவள் அருகில் அமர, அவள் முகத்தில்

பூத்திருக்கும் நீர்த் திவலைகளாக தான் இருக்கக் கூடாதா? அவன் மனம் ஏங்கியது.

அவள் எதையோ பேசிக் கொண்டிருக்க, அவை எதுவும் அவன் காதில் விழுந்ததாகவே தெரியவில்லை. அவள் கன்னத்தில் கோர்த்த நீர்த்துளி, இறங்கி, ஓடி..., அவள் கழுத்தில் இறங்கி..., அவள் மேனியின் அழகின் மத்தியில் ஓடி மறைய, பட்டென பார்வையை திருப்பிக் கொண்டான்.

அவன் மாற்றங்கள் உணர்ந்தாலும், அதை அவள் கண்டுகொள்ளவே இல்லை. 'நான் இவனை அட்ராக்ட் பண்ணவே இல்லையா...?' அவள் மனதுக்குள் எழுந்த வினாவுக்கான பிரதிபலிப்பு அவனிடம் இருக்கவில்லை.

'ஓர விழியால் ரசிக்கிறான்..., அதற்கு மேல்...' அவன் கட்டுப்பாடு அவளை வியக்கச் செய்தது.

அவனோ..., கொந்தளிக்கும் தன் உணர்வுகளுக்கு அணை போட்டவன், நீருக்குள் பாய்ந்தான். மேலும் ஒரு மணி நேரம் கடக்க, உடை மாற்றச் சொன்னவன், தானும் தன் அறைக்கு விரைந்தான்.

பாத்ரூமுக்குள் புகுந்தவன், "ஆண்டவா..., எனக்கு மட்டும் ஏன்...?" கைகளை சுவற்றில் ஓங்கி குத்தினான்.

'அவளை முதல்ல இங்கே இருந்து அனுப்பணும்..." வேகமாக குளித்தவன், உடை மாற்றிவிட்டு மேலே வர, அவளும் ஒரு ஜீன்ஸ் டாப்போடு தயாராக இருந்தாள்.

கீழே அழைத்து வந்தவன், தாய் தயார் செய்து வைத்துவிட்டுப் போன உணவை அவளோடு சேர்ந்து உண்டான். அமைதியாகவே உண்டவள், "நான் கிளம்பறேன்..." உணவை முடித்துவிட்டு உடனே எழுந்து கொண்டாள்.

அவன் போகவேண்டாம் என மறுப்பான் என அவள் எதிர்பார்க்க, "பாய்..." அவன் உரைக்க, கூர்மையான விழிகளோடு அவனை ஏறிட்டாள்.

அவனிடம் எதையும் பேசாமல், தன் பொருட்கள் அடங்கிய பேகை எடுத்துக்கொண்டு காருக்கு விரைந்தாள். அவனும் அவள் பின்னால் வர, காருக்குள் ஏறியவள், "உன் எதிர்பார்ப்புக்கு நான் இல்லை இல்ல..." கேட்டுவிட்டு, அவன் அதிர்ந்த முகத்தைப் பார்த்தவாறே, காரை கிளப்பிக்கொண்டு சென்றுவிட்டாள்.

வாசலிலேயே தன் தலையில் கை வைத்துக்கொண்டு அமர்ந்துவிட்டான். 'என்மேலேயே எனக்கு நம்பிக்கை இல்ல..., அதனால்தான் உன்னை அனுப்பிவிட்டேன்...' மனதுக்குள் புலம்பினான்.

வீட்டில் தாய் சொன்ன பெண்ணுடன் திருமணத்துக்கு சம்மதம் சொன்ன பிறகு இப்படி மனதை அலைபாய விடுவது அதைவிட கொடுமையாக இருந்தது. தாய் தினமும் கேட்கும், "பொண்ணோட பேசினாயா பரத்", என்ற வாசகம் காதில் ஒலித்து கலவரத்தை கிளப்பியது.

திருமணம் இன்னும் ஒரு மாதத்தில் என்று முடிவான பிறகு அவனால் இன்னும் தாங்கமுடியாமல் தான் போனது. பெண் வீட்டிலிருந்து வருகின்றார்கள் என்று தாய் சொல்லும் ஒவ்வொரு முறையும் அவன் வீட்டில் இருந்து தப்பி செல்வதற்கு முதல் காரணமே அவர்களாக இந்த திருமணம் வேண்டாம் என்று மறுத்துவிட மாட்டார்களா என்ற சின்ன ஆசைதான்.

அவனது அந்த சின்ன ஆசை நிறைவேறாமல் திருமண நாளும் குறிக்கப் பட்டு விட்டது.கிட்டத்தட்ட பயித்தியம் போலாகிவிட்டான். ஹேமா அவனிடம் பழகுவதில் எந்த வித்தியாசத்தையும் காட்டவில்லை. அவன்தான் தவித்துக் கொண்டிருந்தான்.

"என்னை எதுக்கு வர சொன்ன ஹனி..." கேட்டவன் அவள் எதிரில் அமர்ந்தான்.

"உனக்குத்தான் கல்யாணம் முடிவு ஆயிருக்கே. அதான் உனக்கு ஒரு சின்ன விருந்து கொடுக்கலாம் என்று டிசைட் பண்ணேன்..., நீ அதுக்கும் முடியாதுன்னு சொல்லிட்ட...,

அதான்..., ஜஸ்ட் பேசலாம்னு வரச் சொன்னேன்..." தன் பொருட்களை ஒதுங்க வைத்தாள்.

பரத்துக்குத்தான் மூச்சு முட்டியது. "அதுக்குதான் வரச் சொன்னியா? வேற எதுவும் இல்லையே..., நான் கிளம்புறேன்..." அவனால் சாதாரணமாக அவளோடு உரையாட முடியவில்லை.

"நான் உன் பியான்சியையும் பாக்கணும்னு சொன்னேன்..." அவள் இழுக்க,

"அவர்கள் வீட்டில் எல்லாம் திருமணத்துக்கு முன் அனுப்ப மாட்டார்கள்", தான் யோசித்து வைத்திருந்ததை சொன்னான்.

"நல்ல பாமிலி இல்ல. அப்போ என்னை மாதிரி, கேட்க, தடுக்க, யாரும் இல்லாத அநாதை இல்லை என்று சொல்லுற".

அவள் இப்படி சொல்லவும் சட்டென இருக்கையை உதறி எழுந்தே விட்டான். "நான் கிளம்புறேன்", சொல்லிவிட்டு இருக்கையில் இருந்து எழுந்தான்.

"பரத் ஏன் இப்போ இவ்வளவு கோபம். நான் சாதாரணமாகத்தான் சொன்னேன். சில விஷயங்கள் எல்லாம் தானா அமையணும். நாமா வலுக்கட்டாயமாக அமைத்துக் கொள்ள வேண்டும் என்று நினைப்பது முட்டாள்த்தனம் தானே, அதைத்தான் சொன்னேன்", அவள் மனதுக்குள் இருக்கும் இறுக்கத்தை அவனிடம் பேசி குறைக்க முயன்றாள்.

அவள் குறைக்க முயல, அவன் மனதில் பாரம் ஏறியது. 'இவளை ஏன் நான் வேண்டாம் என்று சொன்னேன். இவளிடம் என்ன குறை. என் அம்மாவும் புரிந்து கொண்டிருப்பார்கள். பிறகு ஏன் நான் இப்படி சொன்னேன்', கேள்வி அவனை துரத்த கிட்டத்தட்ட துவண்டு போனான்.

"நிஜமாவே உனக்கு என்னை பிடிக்கலையா பரத்...?" அவனிடம் கேட்கவே கூடாது என எண்ணியிருந்த

வார்த்தைகள், அவளை மீறி வெளியேற, அவள் குரலில் இருந்த வருத்தம் அவனை பலமாய் தாக்கியது.

எப்பொழுதும் குறும்பு புன்னகையும், எதையும் அதன் போக்கில் எடுத்துக் கொள்ளும் ஹேமாவையே கண்டிருந்தவனுக்கு, அவளது வருத்தம் நெஞ்சை சுட, தனக்கு அவளை எவ்வளவு பிடிக்கும் என காட்டும் வேகம் வந்தது.

தன் அருகில் நின்றவளை இழுத்து அணைத்தவன், அவள் மென் இதழ்களில், தன் முரட்டு இதழ்களைப் புதைத்தான். 'உனக்கு கிஸ் பண்ணவே தெரியலை...' அன்று அவள் சொன்ன வார்த்தைகளை இன்று திரும்ப பெற்றுவிடும் வேகம்...

அவள் இதழ்களை மொத்தமாய் தனக்குள் உள்வாங்கியவன், முரட்டுத்தனமாய் சுவைக்க, கொஞ்சம் கூட எதிர்ப்பு இல்லாமல், அவன் கைகளைக்குள் சிறை பட்டிருந்தாள் ஹேமா.

ஒரு கட்டத்தில், அவளும் அவனுக்கு பதிலடி கொடுக்க, யார் கொடுத்தார்கள், யார் எடுத்தார்கள்..., என எந்த கணக்கும் இன்றி அந்த முத்த யுத்தம் தொடர்ந்தது. ஒரு கட்டத்தில், மொத்தமாய் அவளை உணர்ந்துவிடும் வேகம்..., அவன் கரங்கள் இரண்டும் அவள் மேனியில் ஊர்வலம் போக, எதிர்ப்பின்றி அவன் தேடலை தொடர விட்டாள்.

முத்தமிட்ட உதடுகள் மரத்துப் போக, அவன் கைகளில் செய்கையில், அவள் மேனி சிவந்து போனது. ஒரு கட்டத்தில், முழுதான தன் உணர்வுகளை அவளிடம் வெளிப்படுத்த, முதல் முறையாக சற்று அதிர்ந்தவள், தன் இதழ்களை அவன் முற்றுகையில் இருந்து பிரித்து அவனைப் பார்த்தாள்.

அப்பொழுதும் அவனைவிட்டு அவள் விலகவில்லை. அவள் சற்று தெளிந்த பிறகுதான் தான் செய்த செயலின் வீரியம் புரிய, வேகமாக அவளை விட்டு விலகி நின்றான்.

"ஹனி..., ரியல்லி..., சாரி..., சாரி..., நான் எது நடக்கக் கூடாதுன்னு பயந்தேனோ..., அது..." அவன் வேகமாக சொல்லிக்கொண்டே போக,

அவன் சட்டை காலரை கொத்தாக பற்றியவள், ஆத்திரமாக அவனை அருகிழுத்து, "லையர்..., லையர்..., லையர்..." ஆங்காரமாக கத்தியவள், அவனை தள்ளிவிட்டு, தன் பேகை எடுத்துக்கொண்டு வெளியேறினாள்.

தோய்ந்துபோய் அவள் அறையில் இருந்து வெளியேறியவனால், வீட்டுக்கு செல்ல முடியவில்லை. கடற்கரைக்கு காரை செலுத்தினான். இறங்கி சென்று கடல் அலையில் கால் பதிய நின்றான்.

ஹேமாவின் கலங்கிய முகமும், நான் அநாதை என்பதால் தான் என்னை வேண்டாம் என்று சொன்னாயா என்று கேட்ட அவள் வார்த்தையும், நான் அதிஷ்டம் இல்லாதவள், ஆசை பட்டிருக்க கூடாது என்பது போன்ற அவளது பேச்சும், அவன் மனதை பிசைந்தது.

'லையர்...' அவள் உரைத்த வார்த்தை..., "ஆமா..., நான் போய்யன்தான்..., என் மனசுக்கே நான் உண்மையா இல்லை" கடற்கரையில் பயித்தியக்காரன் போல் கத்தினான்.

'என்னால் அவள் துன்பத்தை நொடியில் போக்க முடியும் போது, நான் ஏன் அதை செய்ய கூடாது. இப்பொழுதே அம்மாவிடம் பேசிவிட வேண்டும் என்று முடிவு எடுத்த பிறகே அவனால் நிம்மதியாக இருக்க முடிந்தது.

வீட்டுக்கு சென்றவன் தன் தாயை தேடி சென்றான். இரவில் தினமும் தாயை பார்த்த பிறகுதான் அவன் படுக்க செல்வான். இன்றும் அதே போல் தான் வந்திருக்கிறான் என்று நினைத்தார்.

"அம்மா தூங்கலையா", கேட்டவாறு உள்ளே நுழைந்தான்.

"தூங்கத்தான் போறேன் பரத். என்ன ஏதாவது சொல்ல வேண்டுமா", அவன் யோசனையை பார்த்தவாறே கேட்டார்.

"அம்மா நான் ஒன்று சொன்னால் கேட்பீங்களா. எனக்கு....... அதை எப்படி சொல்லன்னு தெரியலை. நான் ஒரு பொண்ணை விரும்புறேன். அவளுக்கு யாரும் இல்லை. அவளும் என்னை விரும்புகிறாள். ஆனால் அவ ரொம்ப வசதியானவ, எங்கே உங்களை மதிக்காமல், உங்கள் மனம் புண்படும்படி நடந்து கொள்வாளோ என்று பயந்து என் காதலை கூட இதுவரை அவளிடம் சொல்லவில்லை.

"ஆனால் இப்போ திருமண நாள் நெருங்க நெருங்க என்னால் எதுவுமே செய்ய முடியவில்லை. எப்பொழுதும் அவள் ஞாபகமாகவே இருக்கும்மா. அவளை நான் கல்யாணம் செய்து கொண்டால் அவளுக்கு ஒரு தாயை கொடுக்க முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கு. நீங்க என்ன சொல்லுறிங்க", எதிபார்ப்பாக அவர் முகத்தை பார்த்தான்.

தனத்துக்குள் சந்தோஷம் குமிழியிட்டது. இதுவரை என்னை நம்பி என் மகன் தன் மனதில் இருப்பதை சொல்லவில்லையே என்று குமுறிக் கொண்டிருந்த தாயின் உள்ளம் குளிர்ந்து.

அதை வெளியே காட்டாமல் சொன்னார், "எடுத்தோம் கவிழ்த்தோம் என்று செய்ய இது என்ன சின்ன பிள்ளைகள் விளையாட்டா பரத். இத்தனை நாள் இல்லாமல் இப்பொழுது திருமண நாளையும் முடிவு செய்த பிறகு எப்படி மாற்ற முடியும்.

இரண்டு குடும்பங்கள் சேர்ந்து முடிவு செய்த விஷயம். அது மட்டும் இல்லை, உனது முழு சம்மதம் கிடைத்த பிறகுதான் இதில் நான் இறங்கினேன். என்னால் கொடுத்த வாக்கை மாற்ற முடியாது. எதைப் பற்றியும் யோசிக்காமல் போய் நிம்மதியாக தூங்கு.

எதுவாக இருந்தாலும் காலையில் பார்த்துக் கொள்ளலாம்", முடிந்த அளவு குரலில் கடுமையை வரவழைத்து பேசினார்.

பரத் அதிர்ந்து விட்டான். தாயிடமிருந்து இப்படி ஒரு பதிலை சத்தியமாக அவன் எதிர் பார்க்கவே இல்லை. அவரது

பேச்சின் அதிர்ச்சியில் இருந்து மீளாமலே, பதில் சொல்லக் கூட முடியாமல் மாடியேறினான்.

# பகுதி - 20

ஹேமா வானத்தில் பறந்தாள். தனம் சொன்ன வார்த்தைகள் அவள் காதின் வழியே வழிந்து இதயத்தை இனிப்பாக்கி வயிற்றை குளிர்வித்தது. தனம் பரத் பேசியதை மட்டும் இல்லாமல், தான் பேசியதையும் சேர்த்தே சொன்னதால் இன்னும் குஷியானாள்.

கண்ணாடியின் முன்னால் நின்றவள், தன் இதழ் பிரித்து சிரித்தவள், இமைகளை மூடிக்கொள்ள, பரத்தின் இதழ் தீண்டலை, அவன் கரங்களின் தேடலை அதே உணர்வோடு அனுபவித்தவளுக்குள், ஒரு ஆனந்த பரவசம்.

"பேட் பெல்லோ..." மெல்லிய குரலில் உரைத்தவள், ஓடிபோய் படுக்கையில் விழுந்து, தலையணையை அணைத்துக் கொண்டாள்.

ஹேமா எவ்வளவு சந்தோசமாக வலம் வந்தாளோ பரத் அதே அளவு கவலையில் துவண்டான். தன் முட்டாள் தனத்துக்கு இப்படித்தான் நடக்கும் என்று வெம்பினான்.

மருத்துவமனையில் தன் துக்கத்தை வெளியே காண்பிக்காமல் நோயாளிகளை கவனிப்பது அவனுக்கு கொஞ்சம் சிரமமாகவே இருந்தது. அவர்களின் வலிகளை கேட்கும் பொழுது தன் வலி சாதாரணமோ என்று கூட சில வேளைகளில் தோன்றியது.

நாட்கள் வாரங்களை கடக்க, அவர்களின் திருமண ஏற்பாடு சிறப்பாகவே நடந்து வந்தது. அனைத்தையும் காண்டிராக்ட் ஆட்களிடம் விட்டுவிட்டான். எதையும் என்னிடம் கேட்காதீர்கள்..., நீங்களே பாத்துக்கோங்க..." அவ்வளவுதான் என் வேலை என்பதுபோல் நடந்து கொண்டான்.

ஜீவித்யா வந்திருக்க, திருமண வேலைகளை அவளும், சரவணன், நட்ராஜ் அனைவரும் பார்த்துக் கொண்டார்கள். ஜீவித்யாவிடம், என் மனம் அறிந்தும் உன்னால் இதை

செய்ய முடிகிறதா என்று கேட்டுவிடலாமா என்று தடுமாறினான்.

ஆனால் தவறு தன்மேல் என்னும் பொழுது பேசாமல் அடங்கினான். அவன் சுய நினைவில் இருந்தால் தானே எதையும் ஆராய்வான். என்னமோ கீ கொடுத்து இயங்கும் பொம்மை போல அனைத்தையும் ஒரு இயந்திர கதியில் செய்தான் அவன்.

இன்னும் இரண்டு நாட்களே இருந்தது ஹேமா, பரத்தின் திருமணத்துக்கு. பரத் யாருக்கும் திருமண அழைப்பிதழ்களை கொடுக்கவே இல்லை. பிறகு தாயின் கட்டாயத்துக்காக, துரத்திய சொந்தங்களை தேடிச் சென்று, தன் தாய் மாமனிடம் மொத்தமாக பத்திரிக்கையை கொடுத்துவிட்டு வந்து விட்டான்.

அவன் பத்திரிக்கையை பார்த்திருந்தாலும் ஹேமாலினி என்ற அவள் பெயரை பார்த்து தெளிந்திருப்பானா என்பதும் சந்தேகமே.

முதலிலேயே ஜீவித்யா கேட்ட பொழுதே கொஞ்சம் யோசித்து இருக்கலாம். காலம் கடந்த ஞானோதையம் என்ன செய்ய.

மருத்துவமனையில் கூட அறிவிப்பு பலகையில் அழைப்பை போட்டது ஹேமாவேதான். பரத் வேண்டா வெறுப்பாக வேறு வழி இல்லாமல் அவன் நண்பர்களுக்கும் மருத்துவ மனையில் அனைவருக்கும் கொடுத்தான். மருத்துவமனையில் அனைவரும் பரத்துக்கு வாழ்த்து சொன்னார்கள்.

"டாக்டர் உங்க மனசுக்கு புடிச்ச மாதிரியே கல்யாணம் நடக்க போகுது வாழ்த்துக்கள்", அவர்களின் வாழ்த்துக்கு பொய்யாக புன்னகை செய்தான். அவர்களின் கேலி கிண்டல் எதுவுமே அவன் காதில் விழுந்தாலும் கருத்தில் பதியவில்லை.

'எனக்கு இவை எதுவும் பிடிக்கவில்லை என்னை தனியாக விடுங்களேன்', என்று கத்தவேண்டும்போல் இருந்தது. தன்

தவறுக்கு அவர்களை குற்றம் சொல்லி என்ன பயன். இன்னும் இங்கே இருந்தால்  அனைவரையும் குத்தி குதறிவிடுவோமோ என்ற எண்ணம் எழவே,அங்கிருந்து அகன்றான்.

இறுதியில் அனைவரின் கேலி அதிகரிக்கவே ஒரு வாரம் விடுப்பு எடுத்துவிட்டு கிளம்பிவிட்டான். ஹேமா அவனது நிலையை உணர்ந்து அவனிடம் விளையாடியது போதும் சொல்லிவிடலாம் என்று முடிவு செய்தாள்.

"பரத் ஐ லவ் யூ. என் கிட்டே இருந்து உன்னால் தப்பிக்கவே முடியாது", அவன் கிளம்பி வெளியே வந்தபொழுது கண்ணை சிமிட்டி புன்னகையுடன் சொன்னாள். அவன் இருந்த மனநிலையில் அவன் அதை கவனிக்கத்தாலும், அவள் புன்னகை தனக்கு சொந்தமில்லை என்ற உணர்வே அவள் பேச்சை கவனிக்க விடவில்லை.

அதைவிட அவள்மேல் கண்மண் தெரியாத கோபமே இப்பொழுது கிளர்ந்தது. 'அனைத்தும் இவளால் வந்தது. என் வாழ்வில் புயல்போல் நுழைந்து என் நிம்மதியை சுழற்றி வெளியே எறிந்துவிட்டாள். இவள் இல்லையென்றால், இவளை நான் காணாமல் இருந்திருந்தால் அனைத்தும் சரியான வழியில் நடந்திருக்கும்.

நானும் எனக்கு வரப்போகும் மனைவியிடம் சரியாக நடந்திருப்பேன். இப்பொழுது எனக்கு பார்த்திருக்கும் பெண்ணின் முகத்தை புகைப்படத்தில் பார்க்கக்கூட மனமில்லாமல் ஓடி ஒளிந்து கொண்டிருக்கின்றேன்.

அவளது நிழலைக் கூட காண அஞ்சும் நான் எப்படி அவள் நிஜத்தை எதிர்கொள்ளப் போகிறேன். எப்படி என் வாழ்க்கையை அவளுடன் வாழப் போகிறேன். ஒரு நாளாவது அவளுடன் என்னால் நிம்மதியாக வாழ முடியுமா', யோசிக்க யோசிக்க தலையை வலித்தது.

அவன், அவள் முகத்தை பார்க்காமல்  உம் என்று செல்லவுமே, "இவன் என்ன இப்படி வாசிக்கிறான்",

யோசித்தவாறே விளையாடாமல் உண்மையை சொல்லிவிடுவோம் என்று கால் செய்தாள்.

அவனிடம் சொல்லும் பொழுது அவன் எப்படி மகிழ்வான் என்பதை அறிய ஆவலாக இருந்தாள். அவனது அலைபேசிக்கு அழைத்தாள். அவனது அலைபேசி அணைத்து வைக்கப் பட்டிருந்தது. கொஞ்சம் கலங்கினாலும் இன்னும் ஒரு நாள்தானே என்று அமைதியானாள்.

அவள் வளர்ந்த விதம் அவளை அதற்குமேல் ரொம்ப யோசிக்க விடவில்லை. அதைவிட சுற்றி இருந்த கூட்டத்தில் அவள் மிதந்து கொண்டிருந்தாள். ஹேமா இப்பொழுது ஜீவித்யாவின் வீட்டுக்கு வந்திருந்தாள்.

ஆனால் இங்கே பரத் தான் மிகவும் சோர்ந்து போனான். கண்முன்னால் விரும்பிய வாழ்க்கையை வைத்துக் கொண்டு அதை உதறிய தன்னை என்ன செய்வது என்று புரியவில்லை. வீடு முழுக்க உறவினர்கள்.

தனம் மிகுந்த மகிழ்ச்சியில் இருந்தார். பரத்தின் வாடிய முகத்தை பார்த்து அவருக்கே துயரமாக போய் விட்டது. இதற்கு மேலும் அவனை துன்பப் பட விடவேண்டாம் என்று முடிவு செய்தார். அவனை அழைத்து பேசினார்.

"பரத் ஏன் இப்படி வருத்தமாவே இருக்க. உன் முகத்தில் கல்யாண மாப்பிள்ளைக்கே உரிய பூரிப்பு இல்லையே. எதையோ பறி கொடுத்தவன் மாதிரி இருக்க", வாஞ்சையாக கேட்டார்.

'அதான் வாழ்க்கையையே பறி கொடுத்துட்டேனே. இன்னும் எதை புதிதாக கொடுக்க', மனதுக்குள்ளே மறுகினான்.

"அதெல்லாம் எதுவும் இல்லம்மா. கொஞ்சம் ஹாஸ்பிட்டலில் வேலை அதிகம் அதான்", தாயை வருத்தப்பட வைக்க அவன் விரும்பவில்லை.

"எனக்கு தெரியும் பரத். உனக்கு விருப்பம் இல்லாததை இந்த அம்மா செய்ய சொல்லுகிறேனே என்று. ஆனால்

உனக்கு விருப்பம் இல்லாததை இந்த அம்மா செய்வேனா. உன் சந்தோசம் தான் எனக்கு முக்கியம். உன் சந்தோசத்துக்காக நீ எதை வேண்டுமென்று கேட்டு செய்தாலும் நான் அதை ஏற்றுக் கொள்ளவே செய்வேன்.

அதே மாதிரி உனக்காக இந்த அம்மா எதை வேண்ணாலும் செய்வேன். உன் வாழ்க்கை உன் மனசுக்கு பிடிச்சவளோடதான் அமையும் சரியா. எதையும் மனசில் போட்டு குழப்பாமல் இனிமேலாவது சந்தோசமா இரு. அந்த..." அவர் சொல்லிகொண்டிருக்க இடையில் யாரோ அழைக்கவே,

"இதோ வரேன்..." குரல் கொடுத்தவர், "பிள்ளைக்கு போன் போட்டு பேசு ராசா", அவன் தலையை தடவி மகிழ்ச்சியாக சொன்னார்.

அவர் ஹேமாவின் பெயரை சொல்லும் முன்னர் எழுந்த குறுக்கீட்டில் அதை மறந்து விட்டு அவர்களுக்கு பதில் சொல்லியவாறே சென்றுவிட்டார். அவரை பெயர் சொல்ல விடாதது விதியின் சதியா.

தாயின் பேச்சில் இன்னும் மன வருத்தமே மிஞ்சியது. இப்படி என் விருப்பத்தை மதிப்பவர்கள் ஏன் என் காதலை சொன்னபோது ஏற்றுக் கொள்ளவில்லை. இல்லையென்றால் எல்லா தாயும் போல என் தாயும் காதலுக்கு எதிரியா.

இன்னும் நடுவில் இருப்பது ஒரே நாள். பரத் அறைக்குள்ளே முடங்கினான். வந்திருக்கும் சொந்தங்களும் அதை பெரிதாக எடுக்கவில்லை. அதன் காரணம் அவன் அவர்கள் மீது கோபத்தில் இருந்ததுதான். நாளை மாலையில் மாப்பிள்ளை அழைப்பு, நலுங்கு அது இது என இப்பொழுதே தனம் அவனை நச்சரிக்க துவங்கி விட்டார்.

இந்த இரவு கடந்துவிட்டால் எல்லாம் முடிந்துவிடும். இதயத்தை பிளக்கும் இந்த காதல் வலியை அணு அணுவாக அனுபவித்தான் பரத். காலையில் தூக்கில் தொங்கப் போகும் கைதி எவ்வாறு இரவு ஒவ்வொரு

நொடியையும் எதிர் கொள்வானோ அதே நிலையில் இருந்தான் அவன்.

இதற்குமேல் பொறுக்க முடியாது. வீட்டில் இருக்கும் உறவினர்கள் அனைவரையும் அடித்து விரட்டும் ஆத்திரம் உடல் முழுக்க பரவியது. கடைசி முறையாக ஹேமாவிடம் பேசி விடலாம் என்று தோன்ற, அணைத்து வைத்திருந்த அலை பேசியை உயிர்பித்தான்.

ஹேமா அவளது அலை பேசியை உடன் கொண்டே நடந்ததால் அதை உடனே எடுத்து பேசினாள். "பரத் ஏன் போனை ஆப் பண்ணி வச்சிருக்க. நான் எவ்வளவு நேரம் கால் செய்வது. உன்கிட்டே ஒரு முக்கியமான விஷயம் சொல்லணும்", உற்சாகம் கரை புரண்டது அவள் பேச்சில்.

"ஹேமா....... ம்க்கும்........", அடைத்த தொண்டையில் இருந்து பேச்சு வரவில்லை.

அவன் குரலிலேயே அவன் சரியாக இல்லை என்பதை நொடியில் புரிந்து கொண்டாள். அங்கிருந்த அனைவரிடமும் ஒரு மன்னிப்பை உதிர்த்துவிட்டு தனக்கு கொடுத்த அறைக்கு விரைந்தாள்.

"பரத், பரத் என்ன ஆச்சு பேசு...", சாதாரணமாகவே கேட்டாள்.

"ஹேமா........, ஐ லவ் யூ....... ஐலவ் யூ....... ஹேமா........., நான் இதுவரை உன்னிடம் சொல்லாமல் இருந்தது தவறுதான். ஆனால் என் நிலை அப்படி. நான் இப்போ சொல்லுகிறேன், நீ வா நாம உடனே எங்கேயாவது போய் கல்யாணம் செஞ்சுக்கலாம். நமக்கு கல்யாணம் முடிஞ்சுட்டா அம்மா கண்டிப்பா உன்னை ஏத்துப்பாங்க. எனக்கு அந்த நம்பிக்கை இருக்கு. என்னால்...... என்னால் இந்த வலியை தாங்கவே முடியலை", மொத்த வலியையும் அலைபேசி வழியே அவளுக்கு கடத்தினான்.

அவன் பேச்சில் இருந்த வலியை நன்றாக உணர்ந்தாள். தான் அவனுக்கு காதலை உணர்த்தவேண்டுமென்று

செய்த செயல் அவன் மனதை இவ்வளவு உருக்குமென்று அவள் எதிர் பார்க்கவில்லை.

அவன் தன் தாயிடம் பேசிய பிறகு கூட எதை சாதிக்க நினைத்து இவ்வளவு வேலை செய்தோம் என்று இப்பொழுது சிந்தித்தாள். உடனடியாக பரத்தை சரி செய்ய வேண்டும். அது மட்டுமே அவள் சிந்தையில் ஓடியது.

"பரத் பரத் ஐ'ம் சோ சாரி. உங்க இந்த கஷ்டத்தை நான் எதிர் பார்க்கவே இல்லை. ஐ'ம் ரியலி சாரி", உண்மையாக சொன்னாள். மரியாதை தன்மையை முயன்று கொண்டு வந்தாள்.

"நீ என்ன தப்பு செஞ்ச, நான்தான் தேவையில்லாமல் எதை எதையோ யோசித்து உன்னை இழந்துட்டேன். ஆனால் இன்னும் தாமதம் ஆகலை. நீ வர வேண்டாம் நான் வறேன்", அலை பேசியை வைக்க போனான்.

"பரத் பரத், இப்போ நான் என் வீட்டில் இல்லை", வேகமாக சொன்னாள்.

"எங்க இருக்க", அவன் குரலில் அவசரம் தெரிந்தது.

"பரத் முதல்ல உங்க அம்மா பொண்ணோட போட்டோ கொடுத்த கவரை எடுத்து பாருங்க", தவிப்பாக சொன்னாள்.

"ம்ச்..... இப்போ எதுக்கு அது. அதை நான்  எங்கே வைத்தேன் என்றே தெரியாது", எரிச்சலாக சொன்னான்.

"அதில்தான் உங்களுக்கு நான் சொல்லவேண்டிய பதில் இருக்கு. நான் இப்படியே வெயிட் பண்ணுறேன். நீங்க பாருங்க ப்ளீஸ்... ப்ளீஸ்", அவள் கெஞ்சினாள்.

சலித்தவாறே அது எங்கே என்று தேடினான். மேசையின் உள்ளே கசங்கி போய் பார்வைக்கு கிடைத்தது அது. வேண்டா வெறுப்பாக பிரித்து உள்ளே இருந்த போட்டோவை அசுவாரசியமாக பார்த்தவன் திகைத்தான்.

அதில் அவனுக்கு பிடித்த கண் சிமிட்டலுடன், அவளது தனிப்பட்ட புன்னகையுடன் இவனை பார்த்து சிரித்துக் கொண்டிருந்தாள் ஹேமா.

சூரியனை கண்ட பனிபோல், மனதில் இருந்த மொத்த பாரமும் நொடியில் மறைய, அந்த இடத்தை ஆக்கிரமித்தது கோபம்.

# பகுதி - 21

கையில் இருந்த புகைப் படத்தை ஒரு நிமிடமே பரவசமாக பார்த்துக் கொண்டிருந்தான். அடுத்த நொடி அதை முன்னை விட அதிகமாக கசக்கி விட்டெறிந்தான். சுவற்றில் மோதி அது எங்கோ போய் விழுந்தது.

அலை பேசியில் ஹேமா அழைக்கும் குரல் கேட்டுக் கொண்டே இருந்தது. ஆத்திரமாக அதை எடுத்து காதில் வைத்தான். "என்னை இப்படி வாட்டியத்தில் உனக்கு திருப்தியா. என் அம்மாமேல் நான் வைத்த பாசத்துக்கா எனக்கு இவ்வளவு பெரிய தண்டனை", கேட்டுவிட்டு முன்பு போலவே அலை பேசியை அணைத்து வைத்தான்.

முன்பு வேதனையில் கசங்கிய மனம் இப்பொழுது கோபத்தில் துடித்தது. 'எத்தனை நாள் ஒரு நாளா இரண்டு நாளா முழுதாக ஒரு மாதம் நான் நடை பிணமாக மாறிய இந்த பதினைந்து நாட்கள்.

அவளால் திரும்ப தர முடியுமா. அதுவும் இன்று காலைமுதல் என் மனம் வேதனையை சுமந்து பாரமாகிப் போன அந்த உணர்வு. கோபம் கோபம் கோபம் யோசிக்க கூட நினைக்காமல் கோபமே அவனை மூழ்கடித்தது.

இப்பொழுது எதிரில் அவள் வந்தால் அவளை கொன்றுவிடும் வேகம் எழுந்தது அவனுக்கு. "ச்சே..... எப்படி முட்டாளாக்கிவிட்டாள் என்னை", யோசிக்க யோசிக்க தலையை வலித்தது.

எழுந்து ஒரு மாத்திரையை போட்டுவிட்டு படுத்துவிட்டான். இங்கே ஹேமாதான் அதிர்ச்சியில் உறைந்து போனாள். அவனிடம் உண்மையை சொன்னவுடன் சந்தோசத்தில் குதிப்பான் என்று பார்த்தால், இப்படி ஒரு விளைவை அவள் எதிர் பார்க்கவில்லை.

மறுபடியும் மறுபடியும் அவனுக்கு அழைக்க, அது அணைத்து வைக்கப் பட்டிருப்பதாகவே சொல்லிக்

கொண்டிருந்தது. 'பரத் நானே செய்தது தப்பென்று உணர்ந்து விட்டேன். என்னை மேலும் தண்டித்து விடாதே. நான் உன் காதலை என்னிடம் சொல்ல வைக்கிறேன் என்று உன்னை காயப் படுத்தி விட்டது புரியுது.

என்னை மன்னிச்சுடு பரத். உன்னோட வலி எப்படி இருந்திருக்கும் என்று இப்போ நான் உணருகிறேன்", கட்டிலில் விழுந்து அழுதாள்.

இரவு உணவை சாப்பிட அழைத்த ஜீவித்யாவிடம் தலைவலி என்று சொல்லி சாப்பாட்டை மறுத்துவிட்டாள். அலைபேசியை மட்டும் வைக்கவே இல்லை. தொடர்ந்து முயன்றுகொண்டே இருந்தாள். பரத் மாத்திரையின் உபயத்தில் ஆழ்ந்த தூக்கத்தில் இருந்தான்.

அதைவிட அவன் நிம்மதியாக தூங்கி நிறைய நாட்கள் ஆகி விட்டதால் இன்று நிம்மதியான தூக்கம். தூக்கத்தில் ஹேமா வந்து தொல்லை கொடுத்தாள்.  முதல் முறையாக ரசித்தான் அவளை.

விடியலை நெருங்கும் வேளையில் விழித்தான் பரத். நேற்றைய நினைவு எழுந்து கொஞ்சம் மனதை அழுத்தினாலும் கோபத்தை விலக்கி வைத்து யோசித்தான். ஹேமா வேண்டுமென்று இதை செய்திருக்க மாட்டாள் என்று அவளுக்காகவும் சிந்தித்தாள்.

பிறகுதான் ஹேமாவின் புகைப்படம் தன் கையில் தாயின் மூலமாக வந்ததை அறிந்தான். அம்மாவுக்கு எப்படி தெரியும், அதுவும் பெண் வீட்டார் வருகிறார்கள் என்று சொல்லும் பொழுது தான் வீட்டில் இல்லாமல் போனதை நினைத்து பார்த்தான்.

ஒரு நாளாவது இருந்திருந்தால் அன்றே தெரிந்திருக்கும். பெண் வீட்டாராக வந்தது ஜீவித்யா வீட்டினர்தான் என்பதில் அவனுக்கு இப்பொழுது எந்த சந்தேகமும் இல்லை. தனக்கு திருமணம் என்று சொன்னதும் அவள் வாழ்த்தியதும், திருமண வேலைகளை செய்ததும் கண்முன் விரிந்தது.

ஹேமா, தனக்கு திருமணம் என்று தெரிந்தும் தன்னிடம் கொஞ்சம் கூட மாற்றமே இல்லாமல் பழகியது இதனால் தானோ என்று இப்பொழுது புரிந்தது.

தன் தவிப்பை அவளிடம் மறைத்து உற்சாகமாக நடித்ததால் அவளுக்கு தன் உணர்வுகள் புரியாமல் போனது என்று இப்பொழுது யோசிக்கும்போது புரிந்தது. அன்று கிளம்பும் வேளையில் அவள் தன்னிடம்  சொன்ன ஐ லவ் யூ வும், அவளிடமிருந்து தப்பிக்க முடியாது என்று சொன்னதும் இப்பொழுது நினைவுக்கு வந்து அவன் முகத்தில் புன்னகையை வர வைத்தது.

தன் அம்மா கூட உண்மையை சொல்லாமல் அவளுடன் சேர்ந்து தன்னை முட்டாளாக்கியது சந்தோசத்தையே அளித்தது. யாருக்கு ஒத்துவராது என்று தான் நினைத்தானோ அவர்களே கூடி தனக்கு எதிராக சதி செய்திருப்பது புரிந்தது.

தாய் இரவில் பேசியதும், தனக்கு ஆறுதல் சொல்லியதும், தனக்கு உண்மையை புரிய வைக்கவே. ஆனால் அதை தான்தான் புரிந்து கொள்ளாமல் வருத்தப் பட்டோம். பிறகு அவளிடம் கோபப் பட்டு என்ன செய்வது.

முதலில் தன் காதலை அவளிடம் சொல்லாமல் அவளை வாட்டியது தவறு தானே. அவளை விடுத்து இன்னொரு பெண்ணை தான் திருமணம் செய்ய தாயிடம் சம்மதம் சொல்லியதும் தவறு. அதை அவள் அறிந்து எவ்வளவு வருத்தப் பட்டிருப்பாள்.

அவளது வருத்தத்துக்கும், தனது வருத்தத்துக்கும் சரியாக போய் விட்டது. மருத்துவமனையில் அனைவரும் தன்னை வாழ்த்தும் பொழுது புரியாதது அனைத்தும் இப்பொழுது யோசிக்கும் பொழுது புரிந்தது.

ஹோசப்பிட்டல் பற்றி யோசித்த பிறகுதான் தனக்கு வாழ்த்து சொல்ல அனைவரும் போன் செய்வார்களே என்ற யோசனை எழுந்தது. அணைத்து வைத்திருந்த அலை

பேசியை ஆன் செய்தான். ஆன் செய்த உடனேயே குறும் செய்தி வந்ததற்கான சத்தம் கேட்டது.

அதை பார்க்கும் முன்பே ஹேமாவின் அழைப்பு வந்தது. நேரம் விடியக்காலை நான்கு மணி. அதுவும், தான் அலைபேசியை உயிர்ப்பித்தவுடனே அழைப்பு வருகிறதென்றால், அவள் இரவு முழுவதும் முயன்று கொண்டிருந்தாளா, தூங்காமலே இருந்தாளா. மனதுக்கு அவளை நினைத்து கவலை எழுந்தது.

இன்று ஒருநாள் அவளும் அனுபவிக்கட்டும் என்று நினைத்தான். அழைப்பை ஏற்காமல் துண்டித்தான். இதைவிட பெரிய அதிர்ச்சி இன்னொன்றும் காத்திருந்தது. அவனது அலை பேசியின் இன்பாக்ஸ் மொத்தமும் நிரம்பி வழிந்தது. அனைத்தும் ஹேமாவிடம் இருந்து வந்த மன்னிப்பு குறுஞ்செய்திகளே.

மீண்டும்அலை பேசியை அணைத்து வைக்க மனமில்லாமல் அதை அமைதியாக்கிவிட்டு கண்களை மூடி படுத்துக் கொண்டான். அலை பேசி அதன் வேலையை தொடர்ந்து கொண்டே இருக்க அதன் ஒளியை, அதில் ஒளிரும் ஹேமாவின் பெயரை ரசித்தவாறே இருந்தான்.

ஹேமா அவன் அலைபேசி உயிர் பெற்றவுடன் தன்னை திட்டுவதற்காகவாவது அலை பேசியை எடுப்பான் என எதிர் பார்க்க அவளை ஏமாற்றினான். அவன் மௌனம் அவன் கோபத்தைவிட கொடியதாக இருந்தது. தற்போதைக்கு அவன் அலைபேசியை ஆன் செய்ததே திருப்தியாக இருக்க நான்குமணிக்கு பிறகு உறங்க முயன்றாள்.

பரத்துக்கு உறக்கம் பிடிக்காமல் முதல்முறையாக் தன் திருமண அழைப்பிதழை ஆர்வமாக ஆசையாக எடுத்து பார்த்தான். தன் பெயரின் அருகில் இருந்த ஹேமாலினி என்ற அவள் பெயரை ஆர்வமாக, ஆசையாக வருடினான்.

நேரம் யாருக்கும் காத்திருக்காமல் அதன் வேலையை சரியாக செய்ய அனைவரும் திருமண மண்டபம் செல்ல

ஆயத்தம் ஆனார்கள். ஹேமா தன் கவலையை மறைத்து அனைவரிடமும் இயல்பாக பேசினாள்.

இரவு மாப்பிள்ளை அழைப்பு, நலுங்கு அனைத்தும் சிறப்பாக நடை பெற்றது. ஆனால் ஹேமா பரத்தின் கண்களை சந்திக்க எவ்வளவோ முயன்றும் முடியாமல் தோல்வியையே தழுவினாள்.

ஜீவித்யாவிடம் மெதுவாக பரத்தின் கோபத்தைப் பற்றி உரைக்க, "அதெல்லாம் அண்ணாவை நீ சம்மாளிப்ப, எனக்கு அந்த நம்பிக்கை இருக்கு. நீ இப்போ சந்தோஷமா இரு..." அவளுக்கு தைரியம் சொன்னவள், பரத்தை தேடிச் சென்றாள்.

அவள் அந்த இரவில் வரவே..., ஹேமா விஷயமாகத்தான் இருக்கும் என்பதை உணர்ந்தவன், அவளை அறைக்குள் அனுமதித்தான். அங்கே நட்ராஜ் ஏற்கனவே இருக்க, நடந்த விஷயத்தை, ஹேமா அவன் தாயோடு பழகியது, சமையல் கற்றது, அவர்கள் நெருக்கம், அவனது திருமண சம்மதம், ஹேமா லண்டன் செல்லத் தயாரானது என அனைத்தையும் உரைக்க, தன் காதலுக்காக அவள் எவ்வளவு போராடி இருக்கிறாள் என்பதை உணர்ந்து கொண்டான்.

அவள் காதல் அளவுக்கு தன் காதல் இல்லையோ என கவலை கொண்டான்.

அதற்கு பிறகு, தாங்கள் சேர்ந்து திட்டம் போட்டது எல்லாம் உரைக்க அமைதியாக கேட்டுக் கொண்டான். தன் வேலை முடிந்தது என ஜீவித்யா கிளம்பிவிட்டாள்.

இரவு முழுவதும் ஒருவித ஏகாந்தத்திலே கழிந்தது அனைவருக்கும். காலையில் வடியும் முன்பே முகூர்த்தம். எனவே ஹேமாவை தாலிகட்டி முடியும் வரை சாப்பிட கூடாது என்று சொல்லி விட்டார்கள்.

காலையில் கொஞ்சம் தெளிவு ஏற்பட்டு இருந்தது ஹேமாவிற்கு. 'அவன் என் பரத் தானே அவனை எப்படி சம்மாளிப்பது என்று எனக்கு தெரியாதா', ஒருவித தைரியத்தை தனக்கு தானே வளர்த்துக் கொண்டாள். மண

மேடைக்கு அவளை அழைக்கவே நிமிர்ந்த நடையுடனே சென்றாள்.

அதை பார்த்து ஜீவித்யா அவள் காதில் சொன்னாள், "ஹேமா கொஞ்சம் தலையை குனிஞ்சு வெக்க பட்டுட்டே வா... எல்லோரும் பாக்குறாங்க..." அவள் உரைக்க,

"கீழே குனிஞ்சுட்டே வந்தால் எப்படி பாதை தெரியும். அதுவும் இப்போ வெக்கப்படுற அளவு என்ன நடந்தது. அது மட்டும் இல்லை எப்படி வெட்கப்படுவது", அவள் முக்கியமான சந்தேகத்தை கேட்டாள்.

ஹேமா கேட்டதும் ஜீவிக்கு சிரிப்புதான் வந்தது. "நீ இப்படியே வா...", வேறு வழி இல்லாமல் அவள்தான் அடங்கினாள்.

அவளை பரத்தின் பக்கத்தில் அமர வைத்தனர். ஹேமா பரத்தையே பார்த்தாள். அவள் பார்வையை உணர்ந்தாலும் அவளை திரும்பியும் பார்க்கவில்லை அவன்.

அவள் எதைப் பற்றியும் கவலைப் படாமல் தன்னையே பார்க்கவும் அவனுக்குத்தான் கொஞ்சம் சங்கடமாக இருந்தது. "ஏய் என்ன என்னையே பார்த்துட்டு இருக்க. வந்திருப்பவர்களையும் கொஞ்சம் பாரு", மாலையை சரி செய்யும் பாவனையில் குனிந்து அவள் காதில் சொன்னான்.

அவன் பேசியதில் இன்னும் மகிழ்ச்சி அடைந்து, அவனை பார்த்து கண்ணை சிமிட்டிவிட்டே வந்தவர்களை கவனித்தாள்.

பரத் இந்த தன் பொக்கிஷத்தை காக்கவேண்டும் என்று எண்ணினான். தன் வாழ்வில் தேவதையாக வந்தவள் இவள், என் தவறான எண்ணங்களை தகர்த்து என்னுள் நுழைந்து வேர்விட்டு விருட்சமானவள். இவளுடன் இணைந்தால் என் வாழ்வு வசந்தமாகும் என்பதில் எனக்கு இப்பொழுது சந்தேகம் இல்லை.

என் தாயிடம் ஒரு மகளாக இவள் அன்பு செலுத்துவாள். என் தாய்க்கு நல்ல மறு-மகளாக இருப்பாள். அதே மனநிலையுடன் அவள் கழுத்தில் மாங்கல்யத்தை சூட்டி அவளை தன்னவள் ஆக்கிக் கொண்டான்.

அடுத்துவந்த அனைத்து சடங்கிலும் ஒரு இனிய மனநிலையுடனே கலந்து கொண்டான். ஆனால் ஹேமாவிடம் மட்டும் பேசவில்லை. சுற்றி இருந்த அனைவரின் கேலியிலும் கிண்டலிலும் சரிக்கு சரியாக வாய் கொடுத்தான்.

ஹேமா சடங்குகளை ஆர்வமாக செய்தாள். அதைவிட பரத்திடம் பேசவேண்டும் என்ற ஆர்வம்தான் அதிகமாக இருந்தது. அன்று மாலையில் நடந்த வரவேற்பிலும் அதே நிலையே தொடர்ந்தது. அவனிடம் பேச அவள் எவ்வளவோ முயன்றும், அவன் முகம் கொடுக்கவே இல்லை.

ஒரு வழியாக ஹேமாவின் மொத்த பொறுமையையும் சோதித்துவிட்டே அவர்களுக்கு தனிமையை கொடுத்தார்கள். முதல் இரவுக்கான ஏற்பாட்டில் ஹேமாவை ஜீவித்யா அலங்காரம் செய்யும் வேளையில் அவளிடமே சண்டை போட்டுவிட்டாள்.

"ஏய் இப்போ என்னை விடப் போறீங்களா இல்லையா. என் பொறுமைக்கும் ஒரு எல்லை இருக்கு. காலையில் இருந்து எங்களை தனியே விடாமல் இப்படி போட்டு வாட்டி எடுக்குறீங்களே", அவள் பேச்சை கேட்டு ஜீவித்யா மட்டுமல்ல சுற்றி இருந்த அனைவருமே சிரித்து விட்டார்கள்.

"இவ இருக்க வேகத்துக்கு பரத் இன்னைக்கு ஒரு வழி ஆயிடுவான் போல இருக்குகே", தனம் கவலையாக சொன்னார்.

அதை கேட்டு இன்னும் அதிகமாக சிரித்தார்கள். "அம்மா நீங்களே சொல்லுங்க நான் கேட்டதில் என்ன தப்பு", அவரிடமே நியாயம் கேட்டாள்.

"நீ கேட்டதில் தப்பே இல்லமா. சரி அவளை அலங்காரம் செய்தது போதும். அவளை கூட்டிபோய் பரத் அறையில் விடுங்க", தனம் சொல்லவே ஜீவித்யாமி ஹேமாவை அழைத்துக் கொண்டு சென்றாள்.

பரத்தின் அறைக்கு வெளியே நின்றுகொண்டு, "ஆமா எனக்கு அவன் ரூமுக்கு போக வழி தெரியாதா நீ எதுக்கு தேவை இல்லாமல். நீ கிளம்பு", பாதி வழியிலே அவளை விரட்டினாள்.

"ஹேமா போற வேகத்தை பார்த்தால் எனக்கே பயம்மா இருக்கு", கிண்டலாக சொன்னாள்.

"ஏய் எதுக்குடி? இப்போ என்கிட்டே நல்லா வாங்க போற. போ நீ", இருக்கும் கோபத்தில் அவள் கேலியை கவனிக்கும் நிலையில் கூட இல்லை.

"முதல்ல நீ போ...", சொல்லிவிட்டு சென்றாள்.

பரத்தின் அறைக்கு வெளியில் நின்று கதவை வேகமாக தட்டினாள். இவளது வரவுக்காக காத்திருந்தவன் திகைத்தான். யார் இந்த நேரத்தில் கதவை தட்டுவது, யோசனையோடே கதவை திறந்தான். வெளியே நின்றவளை பார்த்து திகைத்தான்.

"ஹேய் என்ன இது? கதவை தட்டிட்டு இருக்க, கதவை திறந்து உள்ளே வர வேண்டியது தானே", திகைப்பாய் கேட்டான்.

"ஏன் நீயே வந்து கூட்டி போக மாட்டியா? ம் சொல்லு", அவள் பேச்சு அவனுக்கு புரியவில்லை.

"என்ன சொல்லணும்", "உள்ளே வா என்றுதான்...".

"சொல்லிட்டா போச்சு, உள்ளே வா", அவளை கையை பிடித்து அழைத்துக் கொண்டு உள்ளே சென்றான்.

"பரத் இந்தா பால், அம்மா உன்னிடம் இதை முதலில் தர சொன்னாங்க", சொன்னவாறே அவனிடம் கொடுத்தாள்.

"அம்மா வேற என்ன சொன்னாங்க", அவன் குறும்பாக கேட்டான். அதைவிட அவளது இயல்பான அம்மா என்ற அழைப்பு அவனுக்கு பிடித்தது.

"வேற எதுவும் சொல்லலை. நான்தான் உன்னிடம் பேசவேண்டும் என்று நேற்று இருந்து தவிச்சுட்டு இருக்கேன். ஐ'ம்............" அவள் வாயை மூடினான்.

"வேண்டாம் நீ எதுவும் சொல்லவேண்டாம். நானும் உன்னை அவ்வளவு தவிக்க விட்டிருக்க கூடாது", உண்மையான கவலையில் சொன்னான்.

"நான் சொல்ல வந்ததை சொல்லியே ஆக வேண்டும் பரத். நான் உன்னிடம் உண்மையை சொல்லி இருக்க வேண்டும். உன்னிடம் விளையாட நினைத்துதான், அம்மாவுடன் சேர்ந்து இப்படி செய்துவிட்டேன். ஆனால் நான் சொன்னவை எதையுமே நீ கவனிக்கவில்லை என்று நேற்று போன் செய்த பிறகுதான் தெரியும்.

"உன் குரலில் தெரிந்த வலி என்னை அப்படியே புரட்டி விட்டது. நான் செய்தது ரொம்ப தப்புதான். நீ உன் காதலை சொன்ன விதத்தை விட, வா கல்யாணம் செஞ்சுக்கலாம் என்று சொன்னாயே அந்த நிமிஷம் நான் எப்படி உணர்ந்தேன் தெரியுமா.

"ஆனால் அது உன் மனதை எவ்வளவு காயப் படுத்தி, அந்த வார்த்தையை சொல்லி இருப்பாய் என்று எனக்கு அப்போதே புரிந்தது. எனக்கு அந்த நிமிடம் காதல் உயிர்த்தது தெரிந்தது. நான் எந்த அளவு சந்தோசப் பட்டேனோ, அதே அளவு நீ வருத்த பட்டிருப்பாய் இல்ல", கேட்டவாறு அவன் தோளில் சாய்ந்தாள்.

இந்த அறை, அவன், அவர்களின் முதல் இரவு அனைத்தையுமே ரொம்ப இயல்பாக எடுத்தாள் அவள். பரத்தின் நிலைதான் பரிதாபமாக இருந்தது.

"நீ ரொம்ப கோபமா இருப்பாய் என்று நினைத்தேன். எப்படி உன்னிடம் பேசி புரியவைக்க என்று தெரியாமல் இருந்தேன். ஆனால் நீ..........., நிஜம்மாவே எனக்கு ரொம்ப

சந்தோசமா இருக்கு", அவன் தோளில் கையை கோர்த்து மாலையாக்கி அவன் மூக்கோடு மூக்கை உரசினாள்.

"ரொம்ப கோபமாகத்தான் இருந்தேன். பிறகு அனைத்தையும் உணர்ந்த பிறகு, என் தேவையில்லாத நினைப்பை ஒதுக்கிவிட்டு , அம்மா பாசத்துடன் உன்னையும் நேசிக்க முடியும் என்று உணர்ந்து கொண்டேன். உன்னை விலக்கி வைக்க அவசியமில்லைன்னு நினைத்தேன்..." அவனுக்கே சந்தேகம்தான், தான் சரியாகத்தான் பேசுகின்றோமா என்று.

ஏனென்றால் அவளது இந்த நெருக்கத்தில் அவனுக்கு மூளை வேலை நிறுத்தம் செய்திருந்தது. அவளது தனித் தன்மையான பெர்பியுமின் மணம். அவள் தலையில் சூடி இருந்த மல்லிகையின் மணம், அவனை நிலை தடுமாற செய்தது.

அதைப்பற்றியெல்லாம் அவள் கவலைப் பட்டதாகவே தெரியவில்லை. அவளது எண்ணமெல்லாம் பரத்துக்கு தன்மேல் கோபம் இல்லை என்பதையே சுற்றி வந்தது. பிறகு எதையோ சிந்தித்தவளாக, "பரத் இந்த பட்டு புடவை ரொம்ப அன்ஈஸியா இருக்கு இதை நான் மாத்திக்கவா", ரொம்ப இயல்பாக கேட்டாள்.

"அதுக்கென்ன உனக்கு சிரமமா இருக்கிறது என்றால் மாற்றிக்கொள்", அவன் சொல்லவும் தன் பெட்டியில் இருந்து ஒரு இரவு உடையை எடுத்துக் கொண்டு, அங்கிருந்த நிலைக் கண்ணாடியின் முன் நின்று புடவையை அவிழ்த்தாள்.

பரத் எதை எதிர்பார்த்திருந்தாலும் இதை சத்தியமாக எதிர் பார்க்கவில்லை. அவள் உடையை எடுத்துக் கொண்டு பாத்ரூம் செல்வாள் என்று அவன் எதிர் பார்க்க, அவளோ அங்கு பரத் என்ற ஒரு ஆண்மகன் இருக்கின்றான் என்ற ஒரு எண்ணம் இல்லாதவள் போன்று நிதானமாக தன் ஆடையை மாற்றினாள்.

'கண்ணை திருப்புடா', என்று அவன் புத்தி உரைக்க, 'என் மனைவியை நான் பார்க்கிறேன் உனக்கென்ன', என்று அதை அடக்கினான்.

பரத்துக்கு தன் உணர்வுகள் அவன் வசம் இல்லாமல், அவனை ஆட்டி படைத்தது. முதலிரவு அறைக்குள் இவ்வளவு இயல்பாக நடக்கும் அவளிடம், தன் உணர்வுகளை எப்படி வெளிப்படுத்தவென்று அவனுக்கு புரியவில்லை.

இந்திய பெண்களைப் போன்று நாணி கோணி, வெட்கப்பட்டு இப்படி அவளை எதிர் பார்க்கவில்லைதான். இப்பொழுது அவளது இந்த நிலையே அவனுக்கு மிகுந்த தயக்கத்தை கொடுத்தது. அவள் அருகில் வந்து அவன் தோளை தொடும்வரை அப்படியே நின்றான்.

"பரத் ஏன் என்னவோ மாதிரி இருக்க. ஆர் யூ ஓகே", அவனை குலுக்கினாள்.

"எஸ் ஐ'ம்..........., வா வந்து உட்கார். ரொம்ப டயடா இருக்கா. வேண்ணா படுத்துக்கோ", அந்த சூழ்நிலையை எப்படி சரி செய்யவென்று தெரியாமல் சொன்னான்.

ஒரு நிமிடம் அவனை ஆழ்ந்து பார்த்தாள். பின்னர் எதுவும் சொல்லாமல் கட்டிலில் ஏறி படுத்தாள். அவள் பார்வை அவனையே துளைத்தது. அவள் பார்வையில் இருந்து தப்பிக்க விளக்கை அணைத்துவிட்டு இரவு விளக்கை ஒளிர விட்டான்.

கட்டிலில் சென்று அவனும் படுத்தான். ஹேமா கட்டிலின் நடுவில் படுத்திருந்ததால் அவன் அவளை ஒட்டியே படுத்தான். ஹேமா அவனது இந்த செயலை கொஞ்சம் கூட எதிர் பார்க்கவில்லை என்பது அவள் முகத்திலேயே தெரிந்தது.

பதினைந்து வயதிலேயே ஆண் நண்பர்களுடன் சுதந்திரமாக உறவாடும் கலாச்சாரத்தை பார்த்து வளர்ந்தவள் அவள். ஆனாலும் அவள் பாட்டி அவளை கொஞ்சம் கண்டிப்பாகவே வளர்த்து வந்தார். அவளும்

அப்படியேதான் வளர்ந்தாள். ஆனால் தனக்கானவன் தன் கணவனின் இந்த நடத்தை அவளுக்கு கொஞ்சம் கூட புரியவில்லை.

இங்கே பரத்தின் நிலை அதைவிட மோசமாகிக் கொண்டே சென்றது. அவளது நெருக்கமும், மல்லிகையின் மணமும் அவனது தாபத்தை அதிகரித்தது. இவள் என் மனைவி தானே. தொட்டுவிடலாமா, மனதுக்குள் பட்டிமன்றம் நடத்தினான்.

ஹேமாவிற்கு அந்த தயக்கங்கள் எதுவும் இல்லை. அவன் விலகி இருப்பதற்கு காரணம் தெரிந்தே ஆகவேண்டும் என்று தோன்றியது.

"பரத் டூ யூ லவ் மீ", இந்த கேள்வியை கேட்டதும் வேகமாக எழுந்து அமர்ந்தான். அவனுக்கு அவள் கேட்பதன் அர்த்தம் தெளிவாக புரிந்தது.

"ஹேமா உனக்கு சம்மதமா", அபத்தமாக கேட்டான்.

"ஐ'ம் யுவர்ஸ் பரத். நீ என்ன கேட்கிறாய்", நிஜமாகவே அவனது கேள்வியின் அர்த்தம் அவளுக்கு புரியவில்லை. அவளுக்கு புரியவைக்கும் நிலையில் அவன் இல்லை.

"எஸ் ஐ லவ் யூ ஹேமா", கத்தியவாறு அவள் இதழ்களை கவ்விக் கொண்டான். அழுத்தமான, ஆழமான முத்தம், இருவருக்கும் சிலிர்த்துக் கொண்டன அவர்களின் தேகங்கள். அவளிடமிருந்து இதழ்களை பிரித்தவுடன் அவள் சொன்னாள், "ரொம்ப தேறிட்ட..." இமைகளை சிமிட்டி, பளீர் புன்னகையில் உரைக்க, உனக்கு கிஸ் பண்ணகூட தெரியலை பரத்", கண்களை சிமிட்டி சொன்னாள்.

"அப்படியா..., இல்லையே..., இன்னும் நிறைய கத்துக்கணும்..." மீண்டும் அவள் இதழ்களில் தன் இதழ்களை புதைத்தான்.

இப்பொழுது அவளிடம் இன்னும் பாராட்டு வாங்கிவிடவேண்டும் என்ற வேகம் இருந்தது அவனிடம்.

அவன் செய்கைகளை ரசித்தாள் அவள். தன்னை அவனுக்கு முழுதாக கொடுத்து அவனை எடுத்துக் கொண்டாள். தன் தயக்கங்கள் விலக அவளுக்குள் மூழ்கினான் அவன். எந்தவித தயக்கமும் இல்லாமல் அவனுக்கு இணங்கினாள் அவள்.

பரத்துக்கு நல்ல மனைவியாக, தனத்துக்கு நல்ல மறு - மகளாக கண்டிப்பாக ஹேமா நடந்து கொள்வாள். அவளது குறும்புத்தனம் தொலையாமல் அரவணைத்து செல்வான் பரத். இனிய இல்லறம் அங்கே மலர்ந்தது.

# பகுதி - 22

நாட்கள் வாரங்களைக் கடந்து, மாதங்களாக ஓட, தன் வாழ்வில் நடந்த அனைத்தையும் நினைத்து சிரித்துக் கொண்டான். தான் எவ்வளவு பெரிய பொக்கிஷத்தை இழக்க இருந்தோம் என்பதை இப்பொழுது நினைத்தாலும் கொஞ்சம் சிலிர்த்தது.

தன் மனைவி வீட்டில் இருந்து, தன் அம்மாவை கவனிக்கவேண்டும் என்ற தன் முட்டாள்த்தனமான எண்ணம்..., அதை தாயே விரும்பாத அவர்களின் தெளிவான பதில், அனைத்தும் கண்முன் விரிந்தது.

திருமணம் முடிந்த ஒரு வாரம் கழித்து  இருவருமே மருத்துவமனை கிளம்பும் வேளை, பரத் தயக்கமாக ஹேமாவிடம் கேட்க, "பரத், நான் வீட்டில் இருக்கவா வேண்டாமா என்று நான்தான் முடிவு எடுப்பேன். ஆனால் உனக்காக நான் எதையுமே செய்ய தயார். நான் என் வேலையை ரொம்ப நேசிக்கிறேன்.

"அது என் அடையாளம், என் தன்னம்பிக்கை, உயிர் அனைத்துமாக அதை நான் நினைக்கின்றேன். உன் அம்மாவை நான் என் அம்மாவாக நினைக்கின்றேன். அவர்கள் சொல்லட்டும், நான் வேலைக்கு போகவேண்டாம் என்று......... பிறகு பேசலாம்", அவனிடம் தெளிவாக பேசி அவனை அழைத்துக் கொண்டு அவன் தாயிடம் சென்றாள்.

"அம்மா, உங்க பிள்ளை உங்களிடம் எதையோ சொல்லணுமாம்", சொல்லிவிட்டு எனக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை என்பதுபோல் தோசை வார்த்து சாப்பிட சென்றாள்.

தாயிடம் எப்படி துவங்குவது என்று தெரியாமல் அவன் விழிக்க, "என்ன தம்பி, ஹேமாவை வேலைக்கு அனுப்பவா வேண்டாமா என்று யோசிக்கிறாயா?. அவ கண்டிப்பா வேலைக்கு போயே ஆகணும். உங்களுக்கு தேவையான பணம் உங்களிடம் இருக்கிறது என்று எனக்கு தெரியும்.

"அவளை நான் வேலைக்கு போக சொல்லுவது பணத்துக்காக அல்ல, அவளது தனித்துவத்தை நாம இல்லாமல் ஆக்கக் கூடாது. அவளது தொழில் எவ்வளவு புனிதமென்று நான் சொல்லி உனக்கு தெரியவேண்டியதில்லை, அது உனக்கே புரியும்.

"அவளது படிப்பு பாழாக நான் விடமாட்டேன். அந்த படிப்பு இல்லாமல் நான் அடுப்படியில் வெந்தது எனக்கு தெரியும். என் மகளை அடுப்படியில் கட்டிப்போட நான் தயாராக இல்லை. ஒழுங்கா, அவளை அவளாகவே இருக்கவிடு. என்னை எனக்கு பார்த்துக்கொள்ள தெரியும்.

"எனக்கு ஒரு பேரனோ பேத்தியோ பெத்து தந்துடுங்க, அதுதான் இப்போ உங்க வேலை. சாப்பிட்டு சீக்கிரம் கிளம்புற வழியை பாரு. உன் மனதுக்கு பிடித்தவளோடு நீ வாழவேண்டும் என்று நான் விரும்பித்தான் இந்த திருமணத்தை உனக்கு செய்து வைத்தேன்.

"உனக்கு அடிமையாகவோ, இந்த வீட்டுக்கு வேலைக்காரியாகவோ, காவல் காரியாகவோ அவளை நான் இங்கே கொண்டுவரவில்லை. அவளை அவளாக இருக்கவிடு. இதற்குமேல் நீ ஏதாவது செய்வதாக இருந்தால்.........., என்ன செய்வேன் என்று எனக்கு தெரியாது. நான் உன்னை அப்படி வளர்க்கவில்லை என்று நினைக்கிறேன்", இவ்வளவு தெளிவான முடிவை தாயிடமிருந்து எதிர்பார்க்கவில்லை அவன்.

தாயின் தோளில் ஆதரவாக சாய்ந்து கொண்டான். " நான் உங்களை அம்மாவா அடைய ரொம்ப புண்ணியம் செய்திருக்கணும்மா. எனக்கு என்ன தேவைன்னு என்னைவிட உங்களுக்கு தெரியும்மா. அதை இப்பொழுதும் நிரூபிச்சிட்டிங்க", கண்கள் கலங்க சொன்னான்.

அதன் பிறகு ஹேமா வேலைக்கு சென்றாள். ஆனால் அவன் தாயுடன் நேரம் செலவிட அவள் மறப்பதே இல்லை. அவள் வந்த பிறகு தனத்துக்கு ஆஸ்மா தொந்தரவு கூட குறைந்து விட்டது. சூடு தண்ணீர் எப்பொழுதும் வீட்டில்

இருக்குமாறு பார்த்துக் கொண்டாள், அவருக்கு ஒவ்வாத உணவுகளை தவிர்த்து விட்டாள்,

வேளைக்கு எந்த மருந்து சாப்பிட வேண்டுமென்று அவள் முடிவு செய்தாள், மாதம் ஒருமுறை செய்யும் வழக்கமான பரிசோதனைகளை அவளே முன்னின்று செய்தாள். இப்படி அனைத்துமே அவள் பார்த்துக் கொண்டதால், அவளை பார்ப்பது மட்டுமே பரத்தின் வேலையாகிப் போனது.

ஹேமா தாய்மை அடைந்த வேளையில், தனம் அவளுக்கு பிடித்த வகையில் சமைத்து கொடுத்தார். காலை உபாதைகளால் அவதியுறும் பொழுது அவளை ஒரு தாயாக தாங்கினார். ஒரு நாள் கூட, ஹேமா, தனம் இருவரும் கருத்து வேற்றுமை கொண்டதே இல்லை.

இவை அனைத்தையும் மனதில் ஓட்டியவாறே இருந்ததால், அவன் முன்பு கோபமாக நின்ற ஹேமாவை அவன் கவனிக்கவே இல்லை.

"பரத் நான் என்ன சொல்லிட்டு இருக்கேன். நீ என்ன இப்படி கண்ணை தொறந்துட்டே கனவு கண்டுட்டு இருக்க. இந்த புடவை கட்ட வரல, இதை கட்டிவிடு", அவன் கனவை கலைத்தாள்.

"புடவைதானே............., கட்டி விட்டா போச்சு...........", அவன் குறும்பு விழிகளும், பேச்சும் அவளுக்கு வேறு சங்கதி சொன்னது.

"பரத் இப்போ விளையாடாதே, ஜீவித்யாவோட குழந்தையோட பங்க்ஷன் போகணும்...", அவள் இதழ்கள் சொன்னாலும், அவன் நெஞ்சோடு இழையவே செய்தாள்.

"யாரோ எங்கேயோ, போகணும்னு சொன்னாங்க, இப்போ இப்படி..." அவள் செய்கையைக் கண்டு அவன் கேலி பேச, அவனை பேச விடாமல் மார்பில் குத்தினாள்.

"நானா..........., நீதனடா அப்படி பாத்த, இப்போ என்னை குத்தம் சொல்லுறியா. ஆனாலும் ஐ லவ் யூடா" அவன்

தோளில் கை போட்டு அவனை அருகில் இழுத்து இதழ்களில் அழுந்த முத்தமிட்டாள்.

"ஹேமா......., உன்கிட்டே எனக்கு பிடிச்சதே இந்த முத்தம் தான்", சொன்னவாறு அவளை இறுக்க அணைத்தான்.

"அப்போ வேற எதுவும் பிடிக்காதா?", பொய் கோபமாக அவனை தள்ளிவிட்டாள்.

"எதெல்லாம் பிடிக்காதுன்னு இப்போ காட்டுறேன் பாரு", அவளை அணைத்தவாறே கட்டிலில் சரிந்தான்.

"பரத்..., பாப்பா..., இப்போ வேண்டாம்..., டேய்..., ஜீவி வீட்டுக்கு போகணும்டா..." கைகள் என்னவோ அவனை அணைக்கவே செய்தது, அவள் குரல் போக போக தேய்ந்தது. அதை அவனும் உணர்ந்து கொண்டான்.

"நான் டாக்டர் என்கிட்டயேவா..., போக இன்னும்டைம் இருக்கு ", அவன் வேலையை தொடர்ந்தான். செல்லமாய் சிணுங்கியவள், அவன் தேடலில் இணைந்து கொண்டாள்.

ஹேமா ஜீவித்யாவின் வீட்டுக்குச் செல்ல, அவளை ஆர்வமாய் வரவேற்றாள். தாய்மையின் பூரிப்பில் மிளிர்ந்த ஹேமாவை ஆசையாக அணைத்துக் கொண்டாள்.

"ஏண்டி லேட்..." போலியாக அவளிடம் கோபம் காட்டியவள், "வாங்கண்ணா..." பரத்தையும் அழைத்துவிட்டு உள்ளே சென்றாள்.

"நான் இல்லை..., உங்க அண்ணாதான்..." தோழியின் காதில் ரகசியம் பேச, "அட லூசே..., நீ மாறவே இல்லடி..." ஆர்ப்பாட்டமாக சிரித்தாள். தன் தோழியை இப்படி சந்தோஷமாகவே பார்க்க முடியுமா? என பயந்தவளுக்கு, அந்த பயம் அவசியமே இல்லை என்பதுபோல் பார்த்துக் கொண்டான் பரத்.

"காலேஜ் எப்படி போகுது ஜீவி...? ஏதாவது ஹெல்ப் வேணும்னா என்கிட்டே கேள்..." இப்பொழுது ஜீவித்யா மகப்பேறு மருத்துவம் படித்துக் கொண்டிருந்தாள் எனவேதான் உரைத்தாள்.

"உன்கிட்டே கேட்காமல் யார்கிட்டே கேக்கப் போறேன்..." உரிமையாக கேட்க, தோழிகள் இருவரும் சிரித்துக் கொண்டார்கள்.

குழந்தையை தொட்டிலில் போட, அந்த குடும்ப சூழலில் தானும் ஒருத்தியாக இணைந்து கொண்டாள். தன் காதல் மனைவியை பரத்தின் கண்கள் தேட, இமை சிமிட்டி, தலை சாய்த்து அவனைப் பார்த்து புன்னகைத்தாள்.

அந்த தேவதையின் சிரிப்பில் தன்னைத் தொலைத்தான் பரத். அவர்கள் வாழ்க்கை இன்னும் சந்தோஷமாக மாறும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

நன்றி.